www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தேசியம் ஒரு கற்பிதம்

— தொகுப்பாசிரியர்கள் :

அ. மார்க்ஸ் — ரவிக்குமார்,

வேல்சாமி

விடியல் பதிப்பகம்

கோவை-641015

படிப்பகம்

www.padippakam.com

## நூலைப்பற்றி


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தேசியம் ஒரு கற்பிதம் |
| தொகுப்பாசிரியர்கள் | : | அ. மார்க்ஸ், ரவிக்குமார், வேல்சாமி |
| முதல் பதிப்பு | : | டிசம்பர், 1994 |
| பக்கங்கள் | : | 236+XII |
| அட்டைப்படம் | : | எம். ஜி. ரஃபீக் அகமது |
| வெளியீடு | : | விடியல் பதிப்பகம் |
| | : | 3, மாரியம்மன் கோவில் வீதி உப்பிலிபாளையம் கோவை—641 015 |
| அச்சிட்டோர் | : | அலைகள் அச்சகம் 36, தெற்குச் சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை-600024. |
| **விலை** | : | ரூ. 35-00 |


படிப்பகம்

www.padippakam.com

# நுழை வாயில்

நிறப்பிரிகை முதல் இதழ் (அக்டோபர் 1990) கவனத்தைக் குவித்த முக்கியமான பிரச்சினைகள் இரண்டு. அவை :

1. சோசலிசக் கட்டுமானம்.
2. தேசிய இனப் பிரச்சினை.

உலகெங்கிலும் சோசலிசக் கட்டுமானங்களாக அறியப்பட்டவற்றில் பெரும்பாலானவை சிதறுண்டு கொண்டிருந்த நேரம் அது. தமிழகத்தில் தேசிய இயக்கங்கள் எழுச்சி பெற்றுக் கொண்டிருந்தன. 'சோசலிசக் கட்டுமானங்களின்' சிதைவு நாம் எதிர்பார்த்ததுதான் என்றாலும் நமக்குச் சொல்லொணாத் துயரத்தை அளிக்கவே செய்தன. அகண்ட பாரத தேசியத்தின் வருணாசிரமப் பின்னணியையும், இன ஒடுக்குமுறையையும், ஏகாதிபத்தியச் சார்பையும் தொடர்ந்து எதிர்த்து வந்தவர்கள் என்ற வகையில் மையப்படுத்தப்பட்ட அதிகாரங்களுக்கெதிரான நடவடிக்கைகளாக உருப்பெற்ற தேசிய இன எழுச்சிகள் நமக்கு மகிழ்ச்சியை அளித்தன. அவற்றை வரவேற்று இணைந்து செயற்படக் கூடிய நிலைபாட்டை மேற்கொண்ட நாம், நமது இறுதி இலட்சியம் சமத்துவமான மனித விடுதலையே என்கிற அடிப்படையில் சில நியாயமான அய்யங்களையும் கூடவே எழுப்பினோம். இந்த அய்யங்களின் பிரதான கரிசனம் தேசியத்திற்கும் பாசிசத்திற்குமான தொடர்பைப் பற்றியதாக அமைந்தது. உலகெங்கிலும் பாசிசங்கள் தேசியத்தை முக்கிய கூறாகக் கொண்டிருந்தன என்பதும், தேசிய இன எழுச்சிகளின் அடிப்படையில் விடுதலை பெற்ற பல

# IV

தேசங்கள் பாசிசத் தன்மை மிக்கனவாய் மாறி சாதாரண மக்களுக்கு இன விடுதலைக்கு முந்திக் கிடைத்த அடிப்படை உரிமைகளும் கூட மறுக்கப்படும் அவலமும் நம்மைப் பெரிதும் பாதித்தன. இன அடிப்படையிலான வேறுபடுத்தலும் ஒடுக்கு முறையும் மேற்கொள்ளப்படும் போது அதற்கெதிராக தேசிய இன விடுதலை முழக்கத்தை முன் வைத்து இயங்குவது தவிர்க்க இயலாததாகிறது. ஆனால் அந்த இயக்கம் வெறும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் அமையாமல் அந்த இயக்கத்தின் மூலமான விடுதலை என்பது பண்பாட்டு உரிமைகளை மட்டுமின்றி இதர சிவில்/பொருளாதார உரிமைகளையும் சகல தரப்பு மக்களுக்கும் சமமான முறையில் மீட்டுத் தரத் தக்கதாகவும், உண்மையான சனநாயகமும் அதிகாரப் பரவலும் நிலைநாட்டப்படக்கூடியதாகவும் இருக்க வேண்டுமென்பது நம்முடைய கரிசனமாக இருந்தது. பல்வேறு சாதிகளாகவும், மதங்களாகவும், மொழி பேசுபவர்களாகவும் கூறுபட்டுக் கிடக்கும் மக்கட் பிரிவினர் அருகருகே வசிக்கும் நம்முடைய சமூகத்தில் மேற்குறித்த நமது கரிசனம் மிகவும் அடிப்படையான ஒன்று என்பதை மானுடத்தை நேசிக்கும் யாவரும் ஏற்றுக் கொள்வர்.

இந்தக் கவலையை முன் வைத்து கோட்பாட்டுத் தளத்தில் நாம் விவாதங்களையும் பிரச்சாரங்களையும் மேற்கொண்ட போதும் கோட்பாடு மற்றும் அரசியல் நடைமுறைத் தளங்களில் நமது செயல்பாடுகள் ஈழ விடுதலையையும் இந்தியாவிற்குள் தேசிய இன எழுச்சிகளையும் ஆதரிப்பதாகவே இருந்தன. இதன் விளைவாகவே 'தினமலர்' போன்ற பார்ப்பனீய ஏடுகள் நம்மைத் தீவிரவாதிகளாகச் சித்தரித்தன.

∴ ∴

தேசியம் தொடர்பாக **நிறப்பிரிகை** அழுத்தம் கொடுத்து முன்னிலைப்படுத்திய கருத்தாக்கங்களாகக் கீழ்க்கண்டவற்றைத் தொகுக்கலாம்.

www.padippakam.com

## V

1. **தேசியம் ஒரு கற்பிதம்.** (கவனிக்க : மாயை என்று நாம் சொல்லவில்லை, கற்பிதம் என்றுதான் சொல் கிறோம்). தேசியப் போராட்டம்தான் தேசத்தை உருவாக்குகிறதே யொழிய, ஏற்கெனவே ''இயற்கை யாகவே'' உருப்பெற்ற தேசம் தேசியப் போராட்டத்தை உருவாக்குவதில்லை. அதாவது தேசிய அரசியலுக்கு அப்பால் வெளியேயுள்ள புறநிலை எதார்த்தமாக தேசத்தைப் பார்க்க முடியாது. எல்லா எதார்த்தங்களுமே கட்டமைக்கப்படுபவைதான் என்கிற நவீன சிந்தனை களின் அடிப்படையில் தேசம் என்கிற 'எதார்த்தமும்' கட்டமைக்கப்படுவதுதான் என்பதை விளங்கிக் கொண் டால் மட்டுமே இந்தக் கட்டமைப்பில் செயல்படும் அரசியல்/ வர்க்க/ சாதிய/ ஆணாதிக்க நலன்களை நாம் கணக்கிலெடுக்க முடியும். **எதார்த்தப் படைப்பாக்கம்** என்ற இந்தக் கருத்தையொட்டி தேசிய மரபு, மொழி, பண்பாடு, வரலாறு, இலக்கியப் பாரம்பரியம் என்பவையெல்லாம் ''கண்டு பிடிக்கப்படுகின்றன'' என்கிற மிக முக்கியமான சிந்தனையையும் நாம் முன் வைத்தோம்.

2. பொதுவான மொழி, தேச எல்லை, பொருளா தார வாழ்வு, உளவியல் உருவாக்கம் ஆகிய நான்கையும் தேசமாக உருப்பெறுவதற்கான இறுக்கமான நிபந்தனைக ளாக முன் வைக்கும் **ஸ்டாலினிய வரையறையை நாம் மறுத் தோம்**. இன ஒடுக்குமுறையும் அதற்கெதிரான போராட் டங்களும் இவற்றில் ஏதேனும் ஒன்றையோ இல்லை இவற்றிற்கு அப்பாற்பட்ட ஏதேனும் ஒன்றையோ (எ.டு: மதம்) குவி மையமாகக் கொள்ளலாம். எனவே இந்த அடிப்படையில் கட்டமைக்கப்படும் தேசமும் இவற்றில் ஏதேனும் ஒன்றிரண்டையோ அல்லது இவற்றிற்கு அப்பாற்பட்ட ஒன்றையோ குவி மையமாகக் கொள்ள லாம். ஸ்டாலினிய வரையறை அன்றைய போல்செவிச அரசியலுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டது. **ஆட்டோ பாயரைத் தவிர மார்க்ஸ்—லெனின்** உள்ளிட்ட மார்க்சிய ர்

www.padippakam.com



யாரும் இத்தகைய வரைமுறை முயற்சியில் இறங்கிய தில்லை. இத்தகைய இறுக்கமான வரையறையை நாம் ஏற்றுக்கொண்டால் பொது மொழி இல்லாத நாகர்கள் உள்ளிட்ட மக்கட் சமூகங்களை தேசிய இனமாக அங்கீ கரிக்க இயலாதவர்களாவோம்.

3. தேசியத்தை பிள்ளைப்பிராய முதலாளியம், பொதுச் சந்தை ஆகியவற்றோடு இணைத்துப் பேசும் செவ்வியல் மார்க்சிய அணுகல் முறையின் பொருத்த மின்மையை வலியுறுத்தினோம். மார்க்சிடம் மறையா திருந்த ஹெகலியத் தாக்கம், பொருளாதார வாதம் ஆகிய வற்றின் வெளிபபாடே இது எனச் சுட்டிக் காட்டினோம். இத்தகைய பார்வைகள் லத்தீன் அமெரிக்க தேசங்கள் பல வற்றை அங்கீகரிக்காத நிலைக்கும், சோசலிசக் கட்டு மானத்தில் தேசிய இன உணர்வுகளைக் கணக்கிலெடுக்க வேண்டியதில்லை என்கிற நிலைக்கும் இட்டுச் செல்லும். தேசியம், சனநாயகம் போன்ற கருத்தியற் கூறுகளை எந்த ஒரு வர்க்கத்தின் சொல்லாடலுடனும் ஒருங் கிணைத்துவிட முடியும் என்பதைக் கணக்கிலெடுத்துக் கொண்டால்தான் இவற்றை அடித்தட்டு வர்க்க/சாதி களின் சொல்லாடலுடன் இணைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

4. மேற்குறித்த புரிதல்களின் அடிப்படையில் தமிழ்த் தேசத்தைக் கற்பிதம் செய்யும் போது அதனை அடித்தட்டு வர்க்க/சாதிகளின் நல நோக்கில் மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்தினோம். இதுகாறும் தமிழ்த் தேசிய அரசியலில் தாழ்த்தப்பட்டவர்களையும் சிறு பான்மையினரையும் உள்ளடக்கும் நோக்கமில்லாதிருந்த தைச் சுட்டிக் காட்டினோம். தமிழ்த் தேசிய அரசியலின் பார்ப்பனீய—வெள்ளாள உள்ளடக்கத்தைக் கவனத்தில் எடுக்க வேண்டுமென எச்சரித்தோம்.

மேற்கூறிய கருத்துக்கள் தமிழக அரசியற் சூழலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியதைத் தோழர்

படிப்பகம்

www.padippakam.com



கள் அறிவர். அம்பேத்கர் நூற்றாண்டு,மண்டல் அறிக்கை தொடர்பான அரசியல் விழிப்புணர்வு, பெண்ணியச் சிந்தனைகள் தொடர்பாக ஏற்பட்ட புரிதல்கள் ஆகிய பின்னணிகள் இந்நிலைக்குச் சாதகமாய் அமைந்தன. 1990 நவம்பர் நான்காம் நாள் தஞ்சையில் நடைபெற்ற கூட்டு விவாதத்தில் கலந்து கொண்ட பல தோழர்கள் வேறுபட்ட பல கருத்துக்களை முன் வைத்தபோதும் பெரும்பாலானவர்கள் நிறப்பிரிகை முன்வைத்த மைய மான கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர். என்பதை இத் தொகுப்பிலுள்ள கூட்டு விவாதக் கட்டுரையைப் படிக்கும் போது உணர முடியும்.

தேசிய இயக்கத்தில் தலித்களை உள்ளடக்க வேண்டிய அவசியம், தலித்களுக்குத் தேசிய உணர்வு இல்லை என்ப தாக அலட்சியப் படுத்தும் போக்கிலுள்ள மேட்டிமைத் தனம், தலித் தலைமை, ராஜராஜன், பெரிய கோவில் போன்ற இந்துப் பாரம்பரியத்தைத் தமிழ் மரபாகவும் பண்பாடாகவும் கட்டமைப்பதின் பொருத்தமின்மை ஆகியவை குறித்த விவாதங்கள் பல்வேறு மட்டங்களில் எழுந்தன. தலித் விடுதலை, பெண்விடுதலை இன்றி தமிழ்த் தேசிய விடுதலை பேசுவதில் பொருளில்லை என்பதை இன்று தமிழ்த் தேசிய இயக்கங்கள் பலவும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள் ளது ஒரு வரவேற்கத்த அறிகுறியாகும்.

ஃ ஃ

எனினும் ''தேசியம் ஒரு கற்பிதம்'' என்கிற அடிப் படையான சிந்தனை ஆழமாக விவாதிக்கப்படாதது ஒரு குறைதான். தோழர் **எஸ். வி. ஆர்.** அவர்கள் எழுதிய **''இந்து-இந்தி-இந்தியா''** என்கிற குறிப்பிடத்தக்க நூலில் நிறப்பிரிகைக் கட்டுரையின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டியதோடு தேசியம் ஒரு கற்பிதம் என்கிற கருத்தாக் கத்தையும் வலியுறுத்தியிருந்தது, இங்கே குறிப்பிடத்

www.padippakam.com



தக்கது. எனினும் இக் கருத்தை எஸ். வி. ஆர். அவர்கள் முழுமையாக ஆதரிக்கிறாரா இல்லையா என்கிற மயக்கம் நூலில் வெளிப்படுவதை **தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி**யின் **'தமிழர் கண்ணோட்டம்'** இதழ் சுட்டிக் காட்டிய போது 'தேசியம் ஒரு கற்பிதம்' என்கிற கருத்தை விளக்கி அவர் விரிவான கட்டுரை ஒன்றை மேற்குறித்த இதழில் (ஆகஸ்டு, 94) எழுதினார். விரிவான அக்கட்டுரை தோழர் கள் படிக்கத்தக்க ஒன்று.

'தேசியம் ஒரு கற்பிதம்' என்கிற கருத்தாக்கத்தைக் கண்டு தமிழ்த் தேசியப் போராளிகளும் சரி, மார்க்சியர் களும் சரி விலக வேண்டியதில்லை. தேசியம் ஒரு கற்பிதம் என்பது ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டத்தை மறுப்பதாகாது. ஈழத்தில் தமிழர்கள் மீதான ஒடுக்கு முறை என்பது சிங்களப் பேரினவாதம் என்கிற கட்டமைப் பின் கற்பித்ததின் விளைபொருள் இதற்கெதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் தவிர்க்க இயலாதது. ஆனால் அந்தப் போராட்டத்தின் மூலமான விடுதலை என்பது விடுதலை பெற்ற அனைத்து மக்களுக்கும் அனைத்து உரிமைகளையும் வழங்குவதாக இருக்க வேண்டும். பாசிசத்தில் போய் முடியக் கூடாது என்கிற கரிசனம் இருக்குமானால் அதற்குரிய வகையில் நாம் தேசியத்தைக் கற்பிதம் செய்ய வேண்டும் இதற்கு முதற் படியாக தேசியம் ஒரு கற்பிதம் என்கிற கருத்தாக்கத்தை நாம் புரிந்து கொண்டாக வேண்டும். தேசியப் போராட்டங்கள் மூலமாகத்தான் தேசங்கள் கட்டமைக் கப்படுகின்றன என்பதைப் புரிந்து கொண்டால்தான் இந்தப் போராட்டம் எந்தெந்த வர்க்கங்களை வெளி யேற்றி அவற்றை எதிர்க்க வேண்டிய இலக்காக்கு முடியும் என்பதைச் சிந்திக்க முடியும். எனவே ஒரு சரியான வர்க்க ரீதியான பார்வையுடன் தேசிய இனப் பிரச்சினையைக் கையாள்வதற்கும் இந்தக் கருத்தாக்கம் பயன்படவே செய்யும். Subaltun-தலித்திய கோணத்தி

www.padippakam.com



லிருந்தும், பெண்ணியக் கோணத்திலிருந்தும் தேசிய இனப் பிரச்சினையை அணுகுவதற்கு ஏதுவாகவே **பென் ஆண்டர்சன்** முன் வைத்த **தேசியம் ஒரு கற்பிதம்** என்கிற கோட்பாட்டை நிறப்பிரிகை முன் வைத்தது.

தலித் விடுதலை, பெண்விடுதலை இவற்றைச் சாத்திய மாக்காத தேசிய விடுதலையில் பொருளில்லை என்பதை இன்று அனைவரும் ஏற்றுக் கொண்டாலும் இதனை எப்படிச் சாத்தியமாக்குகிறோம் என்கிற கேள்வி நம்முன் இருக்கத்தான் செய்கிறது. இந்தப் புரிதலின் அடிப்படையில் நாம் எவ்வாறு நமது முழக்கங்களையும், செயற்பாடு களையும், அமைப்புகளையும் மாற்றியமைக்கப் போகிறோம்? இந்தக் கேள்விக்கான பதிலை நாம் அனைவரும் சேர்ந்து சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய முயற்சிக்கு இந்தத் தொகுப்பு உதவுமானால் அதுவே இதனுடைய பயன்பாடாகும். தலித்தியம், பெண்ணியம் புதிய பெரியாரியம் போன்ற சிந்தனைகள் சில தத்து வார்த்தப் பிரச்சினைகளை முன்வைத்துள்ளன. இதுவரை தமிழ் மரபாக நம் முன் வைக்கப்பட்டவை அனைத்தும் பார்ப்பனீயத்தாலும், ஆணாதிக்கத்தாலும் கறை பட்டவை. எனவே இவற்றை மறுதலித்து மீறுதல் தவிர்க்க இயலாது என்பதை இவை வற்புறுத்து கின்றன. இதனைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அதற் குரிய வகையில் நாம் ஒரு ‘புதிய தமிழ் மரபை’க் கற்பிதம் செய்தாக வேண்டியிருக்கிறது. அதிகாரத்தை உருவாக் காத புதிய அமைப்பு வடிவங்களையும், தலைமை வழிபாடில்லாத இயக்கச் செயற்பாடுகளையும் நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

இன வரையறையில் வர்க்க/சாதீய ரீதியான பார்வை யின் முக்கியத்துவம் குறிப்பிடத் தக்கது. இத்தகைய பார்வை இல்லாததன் விளைவாகவே ‘குணா’ போன்ற வர்கள் தமிழ் நாட்டிலுள்ள முப்பது சதத்திற்கும்

www.padippakam.com



மேற்பட்ட மொழிச் சிறுபான்மையினரை ஒட்டுமொத்த மாய் வரையறையிலிருந்து நீக்க வேண்டுமென்கிறார். காலங்காலமாக உயர் சாதியினருக்குச் செருப்புத் தைத்த வர்களையும், உயர் சாதியினரின் மலத்தைத் தலையில் சுமந்தவர்களையும் தமிழர் இல்லை என்கிறார்; அவர் களுக்கு இட ஒதுக்கீடு தேவையில்லை என்கிறார். ''பாம்பை யும் தோட்டியையும் பார்த்தால் தோட்டியை அடி'' என்றொரு புது மொழியை அவர் உருவாக்கினாலும் வியப்படைய வேண்டியதில்லை. தேசியம் தொடங்கும் போதே பாசிசமாகத் தொடங்க இயலும் என்பதகுற் இத்தகைய பார்வைகள் சாட்சியம் பகர்கின்றன.

∴ ∴

டன்மார்க்கில் புலம் பெயர்ந்து வாழ்கிற தமிழர்கள் **'சஞ்சீவி'** என்னும் இதழை நடத்துகின்றனர். இந்தத் தொகுப்பிலுள்ள முதல் இரு கட்டுரைகளைத் தொகுத்து ஒரு சிறு நூல் வடிவில் பிரதிகள் எடுத்து அவற்றை அய்ரோப்பாவில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் சுற்றுக்கு விட்டிருந்தனர். அந்தப் பிரதி ஒன்றைப் பார்த்தபோதுதான் நிறப்பிரிகை கட்டுரை களைத் தொகுத்து வெளியிடும் நோக்கம் எங்களுக்கு வந்தது. நிறப்பிரிகை பழைய இதழ்கள் கையில் இல்லா மையும் **விடியல் சிவா** கொடுத்த உற்சாகமும் இந்தப் பணியைத் துரிதப் படுத்தியது. **சஞ்சீவி**க்கும் **விடியலுக்கும்** எங்கள் நன்றி. நிறப்பிரிகை முதல் ஏழு இதழ்கள் மற்றும் இலக்கிய இணைப்பு—1 ஆகியவற்றில் வந்த தேசியம் தொடர்பான கட்டுரைகள் மூன்று தலைப்புகளில் இங்கே தொகுக்கப்படுகின்றன. தேசியம் தொடர்பான கோட் பாட்டு விவாதங்கள் முதற்பகுதியில் அடங்குகின்றன. தமிழ்த்தேச உருவாக்கத்தில் கவனத்தில் எடுக்க வேண்டிய ஒரு பிரச்சினையாக பார்ப்பன-வெள்ளாள ஆதிக்கத்தை இரண்டாம் பகுதியிலுள்ள இரு கட்டுரைகள் சுட்டிக் காட்டுகின்றன. இவற்றில் ''திராவிடப் பாரம்பரியத்தில்

www.padippakam.com



தமிழர்கள்'' கட்டுரை 'தேசியம் ஒரு கற்பிதம்' என்கிற கருத்தாக்கத்துடன் நேரடியாகத் தொடர்புடையது.

தொகுப்பின் மூன்றாம் பகுதி தேசிய இன ஒடுக்கு முறையின் இருவேறு பரிமாணங்களைத் தொட்டுக்காட்டு கிறது. நேரடியான ராணுவ அடக்குமுறை மற்றும் அதனை எதிர்த்த போராட்டங்கள் தவிர அறிவுத் துறையில் கட்டமைக்கப்படும் ஒடுக்குமுறைகளையும் அதற்கெதிரான விடுதலை நோக்கிலான கட்டவிழ்ப்பு களையும் **எட்வர்ட் சேத்**தின் கட்டுரை விளக்குகிறது. கற்பித நடவடிக்கைகளில் பிரதியியல் ரீதியாக மேற்கொள் ளப்படும் Representational Strategy களைப் புரிந்து கொள்ள இக் கட்டுரை உதவும். பெயர் தெரியாத போஸ்னிய எழுத்தாளர் ஒருவரால் எழுதப்பட்டுள்ள கடைசிக் கட்டுரை அங்கீகரிக்கப்பட்ட வடிவ நெறிமுறை களையெல்லாம் தகர்த்தெறியும் மிக நவீனமான எழுத்து முறைக்கு ஒரு சான்றாக அமைகிறது.

கட்டுரைகளைக் காட்டிலும் புனைவுகள் சுவையாக இருப்பதற்கான காரணங்களில் ஒன்று புனைவுகள் பல குரல்கள் ஒலிக்கும் களமாக விளங்குவது. ஒப்பீட்டளவில் கட்டுரைகளில் கருத்து ரீதியான வன்முறை கூடுதலாக வெளிப்படும் வாய்ப்பிருக்கிறது. கட்டுரைத் தொகுப்பாக இருந்தும்கூட பல குரல்கள் சங்கமித்து அவற்றுக்கே யுரித்தான தனித்துவங்களோடு வெளிப்படும் இத் தொகுப்பு தோழர்களுக்கு சுவையானதாகவும் இருக்கும் என உறுதியாக நம்புகிறோம்.

விடியல் பதிப்பகத்திற்கும் அலைகள் அச்சகத்திற்கும், இத்தொகுப்பில் கருத்துப் பங்களிப்பு செய்தவர்களுக்கும் எங்கள் நன்றிகள். விவாதங்களைத் தொடர்வோம்.

25-12-'94

'நிறப்பிரிகை'

அ.பெ எண்: 192,
பாண்டிச்சேரி-605001.

***ரவிக்குமார்***
***வேல்சாமி***
***அ. மார்க்ஸ்***

www.padippakam.com

# உள்ளே...

பக்கம்

**அ. தேசியம் : புதிய புரிதலை நோக்கி ஒரு விவரம்**

நுழைவாயில் iii

1. மார்க்சியம்—தேசிய இனப் பிரச்சினை—இன்று கவனத்தில் எடுக்க வேண்டிய சில படிப்பினைகள் —அ. மார்க்ஸ் 3

2. தேசிய இனப் பிரச்சினை குறித்த சில அடிப்படையான கேள்விகள் 78 —கூட்டுக் கட்டுரை

3. எதிர் வினையாக இருகடிதங்கள். —சிவா 106

4. தேசியம்—விமர்சன அரங்கு. 111

**ஆ. தமிழ்த் தேசிய உருவாக்கம் : கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினை**

5. திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் தமிழர்கள் —அ. மார்க்ஸ் 125

6. பார்ப்பனரும் வேளாளரும் தமிழகமும் 154 —ராஜ்கௌதமன்

**இ. மொழியாக்கங்கள் : இன ஒடுக்குமுறையும் போராட்டங்களும் வேறுபட்ட உலக அனுபவங்கள்**

7. பாலஸ்தீனப் பிரச்சினையும் அறிவுத் துறை அயோக்கியத்தனமும் 177 —எட்வர்டு சேத்

8. காஸா ''இது கலகமல்ல—ஒரு போர்'' 206 —மக்ரக்கூரி மகூல்

9. டொப்ரிஞ்சா முற்றுகையின் பத்தொன்பதாம் நாள் 217 —பெயர் தெரியாத ஒரு போஸ்னிய எழுத்தாளர்

www.padippakam.com

அ.

# தேசியம் :
# புதிய புரிதலை நோக்கி
# ஒரு விவாதம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# 1. மார்க்சியம்-தேசிய இனப்பிரச்சினை- இன்று கவனத்தில் எடுக்க வேண்டிய படிப்பினைகள்

—அ. மார்க்ஸ்

தமிழகத்தில் தேசிய இன உணர்வு மறுபடியும் சூடு பிடித்திருக்கிறது. தன்னுரிமை மாநாடுகளாகவும், தமிழ் வழிக் கல்வி இயக்கங்களாகவும், தமிழ் வழியில் படித் தோர்க்கே வேலைவாய்ப்பு என்கிற முழக்கங்களாகவும் இது வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. தமிழ் இன உணர்வு அமைப்புகள் பல தங்களின் உறக்க நிலை யிலிருந்து விழித்தெழத் தொடங்கியுள்ளன. மையப் பொதுவுடைமை நீரோட்டத்திலிருந்து பிரிந்து வந்துள்ள **தமிழ்த்தேசியப் பொதுவுடைமைக் கட்சி** போன்றவை வழக்க மான வர்க்கப் போராட்ட முழக்கங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இனவுணர்வு முழக்கங்களை முன்வைத்து மக்களை அணி திரட்டத் தொடங்கியுள்ளன. **பாட்டாளி மக்கள் கட்சி** போன்றவை தமிழ்வழிக் கல்வி போன்ற கோரிக்கைகளைத் தங்களின் போராட்டத் திட்டங்களில் ஒன்றாகவே அறிவிக்கத் தொடங்கியுள்ளன. மக்கள் கல்வி இயக்கம் போன்ற சிறிய நுண் அரசியல் இயக்கங்கள் நடத்துகிற தமிழ் வழிக் கல்வி மாநாடுகளுக்கு நூற்றுக்

படிப்பகம்

www.padippakam.com



கணக்கில் மாணவர்கள், இளைஞர்கள், வேலை இல்லாப் பட்டதாரிகள் திரளுகின்றனர். அதிக அளவில் திரளு வதன்றி இக்கூட்டங்கள் எழுச்சி மிக்கதாய் அமை கின்றன. இந்த எழுச்சி,

- பாராளுமன்றவாதம், ஆட்சிப் பங்கேற்பு, அகில இந்திய நீரோட்டம் ஆகியவற்றில் வெளிறிச் சாயம் வெளுத்துப்போன போலித் தமிழினத் தலைமைகளை யும், அவர்களது கழகங்களையும்,
- அகண்ட பாரத ஒருமைப்பாடு என்கிற அம்சத்தில் அரசினைக் காட்டிலும் அதிக விசுவாசியாக நடந்து கொள்ளும் மைய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சிகளையும் (CPI, CPM),
- சுய நிர்ணய உரிமை என்கிற முழக்கத்தை முன் வைத்து அதனை மக்கள் சனநாயகப் புரட்சியின் உள் அங்கமாய் முன்னிலைப்படுத்தி வருகிற புரட்சிகர நக்சல்பாரி இயக்கங்களையும்,

பின்னுக்குத் தள்ளி மக்களைத் திரட்டிச் செல்லக் கூடிய வாய்ப்பைப் பெருமுதலாளிய - இந்து சனாதன ஆதிக்கச் சக்திகளின் தமிழ்ப் பிரதிநிதிகளும்கூடக் கண்டு கொண்டுள்ளதன் விளைவே தினமலர், துக்ளக் போன்ற பார்ப்பனத் தமிழ் இதழ்கள் சமீப காலங்களில் எழுப்பி வருகிற எச்சரிக்கை ஒலங்கள். இத்தகைய தமிழ் இன உணர்வு எழுச்சியின் பின்புலக் காரணங்களை ஆராய்வது இப்போது நமது நோக்கமில்லையெனினும் ஈழப் போராட்டம், அஸ்ஸாம், பஞ்சாப், காஷ்மீர் மக்களின் தேசிய இன எழுச்சி ஆகியவை இந்த எழுச்சிகளுக்கான புறவயத் தேவைகளுடன் இணைந்த பிரதான தூண்டு கோல்களாக அமைந்துள்ளன என்பதைச் சுட்டிக் காட்டித் தான் ஆக வேண்டும்.

சமச்சீரற்ற வளர்ச்சி, விவசாயிகள் வறுமை மயப் படல், வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகியவற்றிற்குக்

www.padippakam.com



காரணமான ஏகாதிபத்தியக் கொள்ளைக்கு மேலும் வழி வகுக்கிற பெருமுதலாளிய வளர்ச்சி அடிப்படையிலான பொருளாதாரக் கொள்கையானது அதன் உடன் விளைவுகளாக,

- கல்வி/மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகள் புறக்கணிக்கப்படுகிற ராணுவமயமான பொருளாதாரம்,
- அதிகாரங்கள் மையப்படுத்தப்படுதல்,
- மேலும் மேலும் அதிகார வர்க்க மயமாதல்,
- சனநாயக உரிமைகள் மறுக்கப்படுதல்,
- இந்துப் பெருமத உணர்வின் அடிப்படையில் அகில இந்தியத் தேசிய உணர்வைக் கட்டமைத்தல்

ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இத்தகைய பொருளாதார/பண்பாட்டுக் கொள்கைகளின் நிலைக்களனாக விளங்குகிற மையப் படுத்தப்பட்ட இந்திய அரசிற்கு எதிரான சனரஞ்சக சனநாயக எழுச்சி[1] (Popular Democratic upsurge) யானது அஸ்ஸாம், பஞ்சாப், காஷ்மீர் போலவே தமிழகத்திலும் இன உணர்வு எழுச்சியினூடாக உள்வாங்கப்படுவது கவனிக்கத்தக்கது. மக்கள் விரோத இந்திய மைய அரசிற்கு எதிரான வெகுமக்கள் எழுச்சியை இன்றைய தமிழின உணர்வுக் கருத்தினால் கட்டமைப்புதை வரவேற்கிற அதே நேரத்தில் சுமார் எழுபதாண்டுக் காலமாக இங்கேசெயல்பட்டு வருகின்ற பொதுவுடைமைக் கட்சிகளின் பாட்டாளி வர்க்கக் கருத்தியலுக்குள் இந்தச் சனரஞ்சக சனநாயக எழுச்சி உள்வாங்கப்பட இயலாமல் போனமைக்கான காரணங்களை நாம் ஆராய வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். இந்தச் சிந்தனைகளெல்லாம் இன்று நமக்கு ஏன் தேவை எனில்,

(1) இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய மூன்றாம் உலக நாட்டு எழுச்சிகளில் பெரும்பான்மையானவை

www.padippakam.com



தேசிய வடிவத்தையே பெற்றுள்ளன, **கியூபா, அங்கோலா, வியட் நாம், நிகரகுவா** ஆகிய நாடுகளில்எழுந்த சோசலிச எழுச்சிகளும்கூட இதில் அடக்கம். **கினியா பிசாவின்** ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத் தலைவர் **அமில்கார் கப்ரால்** மார்க்சியச் சொல்லாடலுக்குள் செயற்பட்ட தேசியவாதியாகவே வரலாற்றாசிரியர்களால் கணிக்கப் படுகிறார். **பூமடினின் தலைமையிலான அல்ஜீரியாவின்** உருவாக்கத்தில் தேசிய உணர்வின் பங்கு பிரதானமாகக் குறிப்பிடப்படுகிறது. புகழ்மிக்க சர்வதேசவாதியும் சோசலிசப் போராளியுமான **சேகுவாரா, காஸ்ட்ரோவுடன்** தலைமை ஏற்று நடத்திய **கியூபப் புரட்சி,** அடிப்படையில் தேசியப் போராட்ட உள்ளடக்கத்தையே பெற்றிருந்தது என்பர். யுக்கோஸ்லாவியாவின் டிட்டோவைக் கூடச் சோசலிசவாதி என்பதைக் காட்டிலும் தேசியவாதி எனச் சொல்வோருண்டு. **சேகுவாராவின் பாணியில் கட்டமைக்கப் பட்ட லத்தீன் அமெரிக்கப் புரட்சிகர இயக்கங்கள்** அனைத்தும் பின்னாளில் சோசலிச உணர்வுகள் மறைக்கப்படும் அளவிற்குத் தேசிய இன உணர்வுச் சொல்லாடல்களைக் கொண்டிருந்தன. உருகுவேயின் துபமாரோ, அர்ஜென்டினாவின் மக்கள் புரட்சிப்படை ஆகியவை இரு எடுத்துக் காட்டுகள். இவை அனைத்தும் முன்வைத்த முழக்கம், **''தாயகத்தை காப்போம்!'' உருகுவே, அர்ஜென்டினா, சிலி, பொலிவியா** ஆகியவற்றின் புரட்சிகர அமைப்புகளின் ''ஒருங்கிணைப்புக் குழு'' தனது புரட்சிகரப் போராட்டத்தில் பொலிவர், சான் மார்ட்டின், ஆர்டிகாஸ் போன்ற தேசிய வீரர்களை முன்னிலைப் படுத்துவதை முக்கிய நடைமுறையாகக் கொண்டது. இங்கெல்லாம் மக்களைத் திரட்டுவதற்கு வர்க்கச் சொல்லாடலைக் காட்டிலும் தெளிவற்ற தொன்மப்படுத்தப்பட்ட வரலாறு சார்ந்த தேசிய இன உணர்வுக் கருத்தாக்கங்களே பயன்பட்டன. மால்வினாஸ் தீவுகள் அர்ஜென்டினாவால் ஆக்ரமிக்கப்பட்டபோது (1982) அந்த நடவடிக்கையை மேற்கொண்ட இராணுவ சர்வாதிகார அரசைத்

www.padippakam.com



தேசிய உணர்வின் அடிப்படையில் அங்குள்ள இடது சாரிகள் ஆதரிக்கவே செய்தனர். 1967 வரை பெற்ற தோல்விகளின் பின்னணியில் நிகரகுவாவின் இடதுசாரிகள் தங்கள் இயக்கத்தின் தன்மையையே மாற்றியமைத்துத் தேசிய இன உணர்வு அடிப்படையில் சாண்டினிஸ்டாக் களாகத் தங்களை உருமாற்றிக் கொண்டனர், 'தேசிய நாட்டுப் பற்று முன்னணி' (1979) என்ற பெயரிலேயே ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியை அவர்கள் நிகழ்த்த வேண்டி இருந்தது. தேசிய முதலாளிகளையும் உள்ளடக் கிய மாவோவின் ஐக்கிய முன்னணித் தந்திரமும், ஸ்டாலின் காலத்தில் பாசிச எதிர்ப்பின்போது மகா பீட்டர், பயங்கர இவான் உள்ளிட்ட பண்டைய ரசிய விரிவாக்க மன்னர்கள் தேசிய வீரர்களாக உயிர்ப்பிக்கப் பட்டதும் கூடத் தேசிய உணர்வைத் தாண்டி மக்கள் எழுச்சியையும் நாட்டுருவாக்கத்தையும் செய்ய இயலாமற் போனதற்கு எடுத்துக்காட்டுகளாகச் சொல்ல முடியும். ஆக சமீபத்திய வரலாறு முழுமையிலும் தேசிய இன உணர்வும் தேசிய இன எழுச்சியும் பிரதான பங்கு வகித்துள்ளன என்பதோடு, சமயங்களில் சோசலிசக் கருத் தியலைப்பின்னுக்குத் தள்ளி தேசியக்கருத்தியல் முன்னுக்கு வந்துள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

(2) இவ்வாறு தேசிய உணர்வை மையப்படுத்தி மக்கள் எழுச்சிகளை உருவாக்கி விடுதலை பெற்ற நாடுகள் எந்த அளவிற்குச் சனநாயகத் தன்மையுடைய ஏற்றத் தாழ்வுகளற்ற சமூக அமைப்புக்களை நடைமுறையாக் கின? வியட்நாம், கியூபா போன்ற நாடுகள் சோசலிசப் பாதையி்ல் காலடி எடுத்து வைக்க முடிந்ததெனினும்[2] இந் நாடுகளில் பெரும்பாலானவை சனநாயகமற்ற சர்வாதி காரங்களாகவும் மோசமான முதலாளிய நாடுகளாகவும் மாறியுள்ளன என்பதே வரலாறு. புகழ்பெற்ற ஆப்ரிக்கப் புரட்சி எழுத்தாளரான **பிரான்ஸ் பனான்** புரட்சிக்குப் பிந்திய அல்ஜீரியாவைப் பற்றிப் பேச வரும்போது

www.padippakam.com



''அனைத்து மக்களின் உள்ளார்ந்த நம்பிக்கைகளின் வெளிப்பாடாக அமைய வேண்டிய தேசிய உணர்வு ஒரு வெற்றுக் குடுவையாகவே இருந்தது'' எனக் குறிப்பிட்டார். தேசியம் என்பது தீவிர தேசியம் ஆகவும், தேசிய வெறியாகவும், இறுதியில் இன வெறியாகவும் மாறியது எனக் குறிப்பிட்ட அவர், தேசியம் நம்மை ''ஒரு குருட்டுச் சந்திற்கே இட்டுச் செல்லும்'' என்றார். பொன்னான எதிர்காலத்தைக் கூட்டாகக் கட்டமைப்பது என்பதற்குப் பதிலாக கடும் ஒடுக்குமுறை, வறுமை, இனக்குழு வாதத்தின் புத்துயிர்ப்பு ஆகியவையே காலனிக்குப் பிந்திய ஆப்பிரிக்க வரலாறாக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.[3] தான்சானிய நாட்டுச் சிந்தனையாளர் **இஸ்ஸா ஷிவ்ஜி** ''சகோதரத்துவம் சமத்துவம் எனக் குட்டி முதலாளிகள் எழுப்பிய தேசிய இன முழக்கங்கள் விடுதலைக்குப்பின் நகரப் பெரு முதலாளிகளின் கருத்தியலையே எதிரொலித்தன'' என்றார்.[4] ஏகாதிபத்திய எதிர்ப்புக் காலத்தில் முற்போக்கான பாத்திரத்தை வகித்த தேசிய இன உணர்வு, விடுதலைக்குப் பின்னர் வர்க்கப் போராட்டங்களை மறுத்தது. அங்கோலா, மொசாம்பிக் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டுகள்.

அமில்கார் கப்ரால் போன்றோர் நம்பியது போல விடுதலைக்குப் பின் குட்டி முதலாளிகள் தங்களை வர்க்க ரீதியாய் அழித்துக் கொண்டு புரட்சிகரமாக மாறவில்லை. மாறாக எதேச்சாதிகாரமும் சர்வாதிகாரமுமே புத்துயிர்ப்புபெற்றன. கினியா பிசா போன்ற நாடுகள் அதிகார வர்க்க முதலாளிய அரசுகளாக மாறின. தவிரவும் விடுதலைக்குப்பின் இந்நாடுகள் அனைத்தும் புதுக் காலனிகளாகவே மாறின.[5] சோசலிச நாடுகளாகத் தங்களைச் சொல்லிக் கொண்ட சில நாடுகளும் இவற்றில் அடக்கம். இந் நாடுகளில் மா—லெ தத்துவம் என்பது வெறும் நவீனமயமாக்கலுக்கான கருத்தியலாகவே பயன்பட்டது. காலனிய விடுதலைக்குப் பிந்திய இந்நாடுகள் அனைத்

படிப்பகம்

www.padippakam.com



திலும், 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' என்பது பில் வாரன் சொல்வது போலக் கொடுமையான முதலாளியப் பாதைக் கான மூடுதிரையாகவே பயன்பட்டது. பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அவை தங்களை மேலும் மேலும் ஏகாதிபத்தியங்களுக்கு அடிமையாக்கிக் கொண் டன. அர்ஜென்டினா, மெக்சிகோ போன்ற நாடுகளின் தொழிலாளி வர்க்கங்களும் சீர்திருத்தவாதத் தொழிற்சங் கங்களில் தங்களை அடையாளம் காண்பதோடு நிறுத்திக் கொண்டன. உலக அரசியலிலும் மூன்றாம் உலக அரசியல் இயக்கங்ள் பனான், மாவோ போன்றோர் எதிர்பார்த்தது போலப் புரட்சிப் பாத்திரத்தை வகிக்காமல் சீர்திருத்த வாத இயக்கங்களாகவே சீரழிந்தன.[6] மொத்தத்தில் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து புதுக்கலானிய மயமான, சனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட, கொடூரமாக அதிகார வர்க்க மயமான ஏற்றத் தாழ்வு மிக்க, வறுமை நிறைந்த நாடுகளாகவே தேசிய உணர்வை முன் வைத்து 'விடுதலை' தேடிய மூன்றாம் உலக நாடுகள் அனைத்தும் மாறின. மொத்தத்தில் ரொனால்டோ மங்க் சொன்னது போல ''லத்தீன் அமெரிக்காவில் தேசியம் என்பது சோசலிசப் போராட்டத்திற்கான அவசியமான காரணி யாக இருந்திருக்கலாம். ஆனால் அதுவே போதுமான காரணியாக இல்லை''[7]

மேற்கண்ட இரு உண்மைகளையும் ஒரு சேரக் கணக்கி லெடுத்துக் கொண்டு பார்க்கும்போது நமக்குச் சில உண்மைகள் தெளிவாகின்றன. சமீபகால நாட்டு விடு தலைப் போராட்டங்களில் தேசிய இன எழுச்சியின் பங்கு முக்கியமானது. இதனைச் சரியாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளாததன் விளைவாகவே இந்த எழுச்சிகள் அனைத்தும் மா-லெ சிந்தனை வழிகாட்டலுடன் நடை பெறவில்லை. ஆனால் தேசிய இனப் பிரச்சினை குறித்த மா-லெ. தத்துவம் வழங்கியுள்ள வளமான சிந்தனைகளை யும், ஆய்வுகளையும், விவாதங்களையும் எச்சரிக்கைகளை

www.padippakam.com



யும் எளிதாகப் புறக்கணித்த நாடுகளால் சனநாயகத்தையோ, சமத்துவத்தையோ, உண்மையான விடுதலையையோ நிலைநாட்டிவிட முடியவில்லை.

கடந்த முப்பதாண்டுகளில் பல **ஆப்ரிக்க, லத்தீன் அமெரிக்க** நாடுகள் எதிர்கொண்ட ஒரு சூழலை இன்று நாம் சந்தித்துக் கொண்டுள்ள நிலையில் இவற்றிலிருந்து நாம் சில படிப்பினைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதன் முதற்படியாக நாம் மார்க்ஸ்—எங்கல்ஸில் தொடங்கி ஆப்ஸ்பாம், டாம்நாயர்ன், ஜேம்ஸ் ப்ளாட் ஈறான இன்றைய மார்க்சியர் வரை தேசிய இனப் பிரச்சினையை எவ்வாறு அணுகியுள்ளனர் என்கிற மிக நீண்ட வரலாற்றை மிகமிகச் சுருக்கமாகவேனும் காண்பது அவசியம்.

## II

இங்கொன்றைக் குறிப்பிடுவது முக்கியம். மார்க்சியர்களிடையே பல நுண்மையான கருத்து வேறுபாடுகள் இருப்பினும் தேசியப் பிரச்சினை குறித்த மார்க்சிய அணுகல் முறை பற்றிய சில பொதுவான அளவுகோல்களில் அவர்களிடையே கருத்தொற்றுமைகளும் உண்டு. அயர்லாந்து பிரச்சினை பற்றிய மார்க்ஸ்-எங்கல்சின் கருத்துரை, தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை பற்றிய லெனினியக் கோட்பாடு, தேசிய உணர்வை முதலாளியச் சந்தையோடு இணைத்துப் பார்த்தல் ஆகியவற்றை இதன் பிரதான அம்சங்களாகக் கொள்ளலாம். மற்றெல்லா அம்சங்களிலும் மிகக் கடுமையாக ஸ்டாலினை விமர்சிப்பவர்களுங்கூட அவரது தேசம் பற்றிய வரையறையை ஏற்றுக் கொள்வதையும், ஈழ மக்கள் மற்றும் இந்தியக் கூட்டரசிலுள்ள தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைகளை மறுக்கிற மைய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சிகளும்கூட லெனினின் சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை மறுக்காமல்

www.padippakam.com



மழுப்புவதையும் நாம் எதார்த்தமாய்க் காண்கிறோம். எல்லோருமே மார்க்ஸ்—எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரிடமிருந்து விளாவாரியாக மேற்கோள்களை எடுத்து வைத்துக்கொண்டு தங்கள் தங்களின் நேரெதிரான நிலைபாடுகளை நியாயப்படுத்த முயற்சிப்பதையும் காண முடியும். தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படையில் இன்றைய தமிழ் மார்க்சியர்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்திவிட முடியும். அவை:

அ) லெனினின் சுய நிர்ணய உரிமைக் கோட்பாடு காலனிய விடுதலைப் போராட்டக் காலத்திற்கே பொருந்தும். இன்றைய தேசிய இனங்களின் எழுச்சிகள் என்பன தொழிலாளி வர்க்கத்தைப் பிளவு படுத்தும் வெறும் பிரிவினைவாதமே. இன்றைய நிலையில் அகில இந்திய ஒருமைப்பாட்டை உயர்த்திப்பிடிப்பதும் பிரிவினைச் சக்திகளைத் தனிமைப்படுத்தி ஒடுக்கும் அரசு நடவடிக்கைகளை ஆதரிப்பதுமே சரியான மார்க்சிய நிலைபாடாக இருக்க முடியும். இது மைய நீரோட்டப் பொது வுடைமைக் கட்சிகளின் (CPI), (CPM) பார்வை. இவர்களால் முன்னிலைப்படுத்தப்படும் **அமலேந்து குஹா** போன்ற ஆய்வாளர்கள் இங்கே 'அகில இந்தியத் தேசியம்'' ஒன்று உருவாகி வருகிறது என்றும் நம்புகிறார்கள்.[8] இன்றைய தேசிய இன எழுச்சிஅலையில் இக்கட்சியினர் தங்கள் வேர்களை இழந்து ஒடுங்குவது கண்கூடு.

ஆ) இந்தியா என்பது தேசிய இனங்களின் சிறைக்கூடம். சுயநிர்ணய உரிமை என்பது இன்றைய இந்தியச் சூழலுக்குப் பொருத்தமானதே. எனினும் பிரிவினை வாதத்தை நாம் ஆதரிக்க முடியாது. மக்கள் சன நாயகப் புரட்சிக்கு உள்ளடங்கியதே சுய நிர்ணய உரிமைப் போராட்டம். இது நக்சல்பாரிப் பாரம்

www.padippakam.com



பரியத்தில் வருகிற புரட்சிகரக் குழுக்களின் பார்வை. மக்கள் சனநாயகப் புரட்சியை முன் வைக்காது தமிழின உணர்வு பற்றிப் பேசுகிற சக்திகளை இவர்கள் பிரிவினைவாத சக்திகளாகவே பார்த்து ஒதுக்குவது என்பதைச் சனரஞ்சகச் சனநாயக எழுச்சிகளைப் பாட்டாளி வர்க்கக் கருத்தியலுக்குள் ஒருங்கிணைக்க முடியாமல் தனிமைப்படுகிறப் போக்கின் ஓரங்கமாகவே நாம் பார்க்க முடிகிறது.

இ) வர்க்க அரசியலாக அறியப்பட்டவற்றைச் சற்றே பின்னுக்குத் விள்ளி விட்டுத் தன்னுரிமை மற்றும் தமிழுணர்வு முழக்கங்களை முன்னுக்கு வைத்து இதர தமிழ்த் தேசிய இன எழுச்சிச் சக்திகளுடன் தங்களை இணைத்துக் கொள்பவர்கள். **திரு.** பெ. **மணியரசன்** தலைமையிலான தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கட்சியை இதற்கு எடுத்துக் காட்டாய்க் கூறமுடியும். நாம் மேலே குறிப்பிட்ட தேசிய இனப் பிரச்சினை குறித்தான மார்க்சியக் கருத்தாக்கங்களாக அறியப்பட்டவற்றைப் பெரும் பாலும் ஏற்றுக்கொள்ளும் இவர்கள் நடைமுறையில் தேசிய இனப் பிரச்சினை குறித்த மார்க்சியர்களின் வறட்டுப் பொருளாதார வாதத்திற்கு நேரெதி ராகத் தேசிய இனப் பிரச்சினையின் அடிப்படையி லான பண்பாட்டு முதன்மை வாதத்திலும் பொருள் முதலிய மற்ற பார்வையிலும் இவற்றினடிப்படையி லான முழக்கங்களிலும் விழுகிற வாய்ப்பை இனங் காண முடிகிறது.[9]

இன்றைய தேசிய இன எழுச்சிகளைச் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்களாகக் கண்டு ஆதரிப் போரும் பிரிவினைவாதமாகக் கண்டு ஒதுக்குவோரும் மார்க்சியச் சிந்தனைத் திரட்டுகளிலிருந்தே மேற்கோள் களைக் காட்டுவதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. வேறு

www.padippakam.com



பட்ட பல்வேறு சூழல்களிலும் விவாதங்களிலும் சொல்லப் பட்ட கருத்துக்களை வாய்ப்பாடுகளாகத் தூக்கிப் பிடிப் பதைக் காட்டிலும் சரியான மார்க்சிய நடைமுறையாகிய தூலமான சூழல்களுக்கான தூலமான ஆய்வை மேற் கொள்வதே சரியாக இருக்கமுடியும். அத்தகைய ஆய் விற்குப் பொருத்தமான ஒரு மார்க்சிய அணுகல் முறை யைத் தேர்வு செய்வதற்கு இந்த விவாதங்களையும் இந்தக் கருத்துக்கள் பேசப்பட்ட சூழல்களையும் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக மார்க்சிய முன்னோடிகள் இதர சூழல்களில் மூன் வைத்த இதரக் கருத்துக்களையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த நோக்கில் மேற் குறிப் பிட்ட இந்த நெடிய சிந்தனை வரலாற்றின் பிரதானமான அம்சங்களைப் பார்ப்போம்.

## III

### மார்க்ஸ்-எங்கல்ஸ்

பேராசான்கள் இருவரும் தங்கள் வாழ்நாளில் 'தேசம்' என்பதற்கு எந்த ஒரு வரையறையையும் வழங்கும் முயற்சியில் இறங்கியதில்லை. மேலும் பொதுமொழி, பாரம்பரியங்கள், புவியியல் மற்றும் வரலாற்று ஒருமை ஆகியவற்றைத் தேசத்தின் அவசியமான பண்புகளாக அவர்கள் எங்கும் குறிப்பிடவுமில்லை. மாறாக ஒரு குறிப் பிட்ட அளவு சமூகப் பொருளாதார வளர்ச்சியையே தேச உருவாக்கத்தின் முன் தேவையாக அவர்கள் கருதினர். சிறிய நாடுகளைக் காட்டிலும் பெரிய நாடுகளைத் தேச மாய்ப் பாவிப்பதில் முன்னுரிமை காட்டினர். போலந்து மற்றும் அங்கேரி மக்களின் தேசிய இயக்கங்களை ஆதரித்த மார்க்ஸ்—எங்கல்ஸ், செக்குகள் (Czechs) மற்றும் தென் ஸ்லாவியர்களின் தேசிய இயக்கங்களை எதிர்த்ததை ஸ்டாலினும்[10] மற்றவர்களும் அடிக்கடி சுட்டிக்காட்டுவது வழக்கம். ஒட்டுமொத்தமாய்ப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நல நோக்கில் நின்று தேசிய இனப் பிரச்

www.padippakam.com



சினையை அணுகியதன் விளைவே இது என்று குறிப்பிடுவதும் வழக்கம். இது உண்மைதானெனினும் போலந்து மற்றும் அங்கேரி மக்களைப் 'புரட்சிகர மக்கள்' எனவும் செக்குகளையும் தென் ஸ்லாவியர்களையும்'பிற்போக்கான மக்கள்' எனவும் மா—ஏ குறிப்பிடுவதற்குப் பின்னணியாக வேறொரு பார்வை அவர்களிடம் இருந்ததைச் சுட்டிக் காட்டித்தான் ஆக வேண்டும். ஹெகலைத் 'தலைகீழாக மாற்றிப் போட்டு' அதனிலிருந்து விடுபட்டு வந்தவர்தான் மார்க்ஸ். எனினும் ஹெகலியக் கூறுகள் அவரிடம் தொடக்கக் காலத்தில் முற்றிலும் விலகாமல் இருந்ததை இன்று அல்துஸ்ஸர் போன்ற அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அரசுகள் தேசங்கள் முதலியன 'உலக மனத்தின் கருத்து' வளர்ச்சிப் போக்கில் தோன்றுகிற இடைப்பட்ட நிலைகளே என்றும் அத்தகைய வளர்ச்சி நிலைகளை அவர்கள் காலத்தில் எய்தியிருந்த நாடுகளை 'வரலாற்றுத் தகைமையுடைய தேசங்கள் (historic nations)' எனவும் அத்தகைய வளர்ச்சி எல்லையை எய்தாதவற்றை 'வரலாற்றுத் தகைமையற்ற தேசங்கள் (Non-historic nations)' எனவும் ஹெகல் பிரித்ததையொட்டி மார்க்ஸ்-எங்கல்சும் ஜெர்மனி, போலந்து, அங்கேரி, இத்தாலி போன்றவற்றை 'மாபெரும் வரலாற்று நாடுகள்' எனவும் தென் ஸ்லாவியர்கள், செக்குகள், ஸ்லோவக்குகள், செர்பியன்கள், குரோட்கள் ஆகியோரை வரலாறற்றவர்கள் எனவும் வகைப்படுத்தினர்.[11]

இத்தகைய வகைப்படுத்தலுக்கு முதலாளிய வளர்ச்சியை ஒரு அளவுகோலாகவும்அவர்கள் மேற்கொண்டனர். இந்த அடிப்படையில் ஃப்ளாண்டர்ஸ், லோர்ரேன் அல்சேஸ் ஆகியவற்றைப் பிரான்ஸ் கைப்பற்றியதையும் ஷ்லெஸ்விக்கைச் செர்மனி கைப்பற்றியதையும் காட்டுமிராண்டித் தனத்திற்கெதிரான 'நாகரிகத்தின் உரிமை' என மார்க்ஸ் கூறினார். இவ்வாறு தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பது. தேசங்களை அடிமைப் படுத்து

www.padippakam.com



வதற்கான 'நாகரிகத்தின் உரிமை' யாகத் தலைகீழானது. இது பிற்காலத்தில் தேசிய இனப் பிரச்சினை குறித்த மார்க்சியக் கருத்தாக்கம் உருவாவதில், **குறிப்பாகத் தேசிய இன உணர்வை முதலாளியத்துடன் இணைத்துப் பார்க்கும் கருத்துருவாக்கத்தில் மிகுந்த செல்வாக்கு வகித்ததை நாம் மறந்துவிடக் கூடாது.** இந்த நோக்கிலேயே 1845—47இல் அமெரிக்கா மெக்சிகோவை ஆக்ரமித்ததையும்.[13] பிரான்ஸ் அல்ஜீரியாவை விழுங்கியதை எங்கல்ஸ் ஆதரித்ததையும் நாம் பார்க்க வேண்டும். லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை வீரனாகிய சைமன் பொலிவரைப் பற்றிய 'அதிகார வெறியன்' என்கிற கருத்துப்பட்ட மார்க்சின் விமரிசனம் உண்மையான போதும் அதன் பின்னணி இது தான்.[15] இந்தியாவைப் பற்றிய அவரது எழுத்துக்களின் அடிப்படையில் அவர் ஏகாதிபத்தியம் உருவாக்கிய மாற்றங்களை வரவேற்றாரா இல்லையா என்பது குறித்த ஒரு மயக்கம் வெளிப்படுவதும்கூட இந்தப் பின்னணியில் தான்.

தேசிய இனப் பிரச்சினை குறித்த மார்க்ஸ், எங்கல்சின் சிந்தனைப் போக்கில் ஒரு வரவேற்கத் தக்கத் திருப்பமாய் அயர்லாந்து பிரச்சினையைக் குறிப்பிடுவது வழக்கம். இதனை 'ஐரிஷ் திருப்பம்' என்பர். 'இங்கிலாந்திலிருந்து அயர்லாந்து பிரிவதைச் சாத்தியமில்லை என முன்பு நினைத்தேன். எனினும் அது தவிர்க்க முடியாதது என்றும், பிரிவினைக்குப் பிறகு அவை ஒரு கூட்டாட்சியை அமைக்கலாம் என்றும் இப்போது நான் நினைக்கிறேன்.[16] என்றும், 'இன்னொரு நாட்டை ஒடுக்குகிற எந்த நாடும் தனது விலங்குகளைத் தானே சூட்டிக் கொள்கிறது''[17] என்றும் தேசிய இனப் பிரச்சினை குறித்த தனது புகழ் பெற்ற கருத்தாக்கங்களை மார்க்ஸ் முன் வைத்தது இப்போதுதான் (1:67). முதல் பொதுவுடைமைஅகிலத்தின் பொதுக்குழுவில் பிரித்தானியக்கிளையின் கீழ் அயர்லாந்து பிரிவைக் கொண்டு வந்தால் போதும் என்ற கருத்தை

www.padippakam.com



ஆங்கிலப் பிரதிநிதிகள் முன்வைத்தபோது அதனை எங்கல்ஸ் எதிர்த்தார். அயர்லாந்து போன்ற ஒடுக்கப் பட்ட தேசிய இனங்களின் பிரதிநிதிகள் சமமாக நடத்தப் படவேண்டியதைச் சுட்டிக் காட்டிய எங்கல்ஸ்,[18] 1882இல் காவுட்ஸ்கிக்கு எழுதிய கடிதம் ஒன்றில், 'அயர்லாந்து மற்றும் போலந்து மக்கள் சர்வதேசவாதிகளாக இருப் பதற்கு முன்னால் தேசியவாதிகளாக இருப்பதற்கான உரிமை மட்டுமல்ல, கடமையும் கொண்டிருக்கிறார்கள்'' எனவும் குறிப்பிட்டார்.[19] ஒடுக்கப்பட்ட போலந்து மக்கள் தங்களின் 'ஒடுக்குமுறைக் கெதிரான தொடர்ச்சி யான வீரஞ்செறிந்த போராட்டத்தின் மூலம் தேசியச் சுயாட்சிக்கும், சுயநிர்ணய உரிமைக்குமான தங்களின் வரலாற்று உரிமையை நிறுவியுள்ளனர். எனவே உலகத் தொழிலாளி வர்க்க இயக்கம் இதனை ஆதரிக்க வேண்டும் எனவும் மார்க்ஸ் குறிப்பிட்டார்.[20] 'அயர்லாந்தின் நிலப் பிரச்சினை என்பது வெறும் பொருளாதாரப் பிரச்சினை அல்ல; அது ஒரு தேசிய இனப் பிரச்சினையுங்கூட'' என மார்க்ஸ் கூறிய போது தேசிய இனப் பிரச்சினைக்கும் வர்க்கப் பிரச்சினைக்குமான தொடர்பையும் அவர் வலியுறுத்தினார்.[21] தவிரவும் 'அயர்லாந்தின் தேசிய விடுதலை என்பது வெறும் பொருளாதாரப் பிரச்சினை அல்லது மனிதாபிமானப் பிரச்சினை அல்ல. இங்கிலாந்தின் சமூக விடுதலைக்கே அயர்லாந்தின் விடுதலை முன் நிபந்தனையாகிறது' என மார்க்ஸ் கூறியபோது[22] அயர் லாந்துத் தேசிய இனப்பிரச்சினையை அய்ரோப்பியப் புரட்சியோடு அவர் இணைத்துப் பார்த்ததும் புரிகிறது.

பொதுவுடைமை அறிக்கையில் மார்க்ஸ்-எங்கல்ஸ், பாட்டாளிகளின் சர்வதேச உணர்வு பற்றியும் பாட்டாளி களுக்கு நாடு இல்லை என்றும் உற்பத்தி சர்வதேசமய மாகிக் கொண்டு போவதன் விளைவாகத் தேசங்களுக் கிடையேயான வேறுபாடுகள் படிப்படியாகக் குறைந்து போகின்றன எனக் குறிப்பிட்டுள்ளதும் இங்கு நினைவு

www.padippakam.com



படுத்திக்கொள்ள வேண்டிய ஒன்றாகும். எனினும் அதே பகுதியில் அரசியல்முதன்மையைப் பெறும் முயற்சியில் தொழிலாளி வர்க்கம் தேசத்தின் தலைமை வர்க்கமாக இருக்க வேண்டும் எனவும், தேசமாக அது தன்னை உருவமைத்துக் கொள்ள வேண்டும் எனவும் இந்த அம்சத்தில் அது தேசியத் தன்மையுடையதாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளதும் சிந்தனைக்குரியதாகும். அறிக்கையின் முதல் செர்மானியப் பதிப்பில் தொழிலாளி வர்க்கத்தைத் 'தேசியவர்க்கம்' என்றே மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரிகிறது.[23]

ஒட்டுமொத்தமாய்ப் பார்க்கும் போது பேராசான்கள் இருவரும் சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாட்டிற்கு ஆதரவாக இருந்தார்களா இல்லையா என்கிற கேள்விக்கு 'ஆம், 'இல்லை' என்கிற வடிவில் பதில் சொல்வது வறட்டு வாதத்திற்கே இட்டுச் செல்லும் என்பது விளங்குகிறது. ஜார்ஜ் ஹாப்ட் சொல்வது போல[24] அயர்லாந்து பிரச்சினையில் ஒடுக்கும் தேசம்- ஒடுக்கப்படும் தேசம் ஆகியவற்றிற்கிடையேயான உறவுகளின் அடிப்படையில் ஒரு தீர்மானகரமான கோட்பாட்டு முடிவை மார்க்ஸ்-ஏங்கல்ஸ் வந்தடைந்த போதிலும் இதனை அவர்கள் பொதுமைப் படுத்த விரும்பாததும் புரட்சி பற்றிய கோட்பாட்டுருவாக்கத்தில் தேசிய உணர்வை நிபந்தனையின்றி ஒருங்கிணைக்காததும் கவனிக்கத்தக்கன. மொத்தத்தில், தேசங்களை 'வரலாற்று ரீதியற்றவை.' எனப் பிரிப்பதில்ஹெகலியத் தாக்கம் தென்பட்ட போதிலும்—

தேசியப் பிரச்சினையின் அரசியல் முக்கியத்துவத்தைச் சற்றே பின்னுக்குத் தள்ளி, 'தேசம்' என்பதை முதலாளியப் பொருளாதார எழுச்சியோடு இணைத்துப் பார்க்கிற அம்சத்தில் பொருளாதாரவாதத் தன்மைக்குக் காரணமாக இருந்த போதிலும்—

தே—2

படிப்பகம்

www.padippakam.com



தேசிய உருவாக்கத்திற்குப் பிரான்சை ஒரு மாதிரி யாகக் கொண்டு தேசத்தையும் தேச அரசையும் ஒன்றாக்கிப் பார்த்ததில் சிறிது ஐரோப்பிய மையவாதம் (Eurocentric) தலைகாட்டிய போதிலும்—

தேசிய இனப்பிரச்சினையை அதற்குரிய தனித்துவமான முக்கியத்துவத்துடன் அணுகாமல் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நோக்கிலேயே அதனை அணுகியிருந்த போதிலும்—

அவர்களுக்குப் பிந்திய வரலாற்றுச் சூழலில் தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாடு முன்னுக்குக் கொண்டு வரப்பட்டு ஏற்கப்பட வேண்டியதற்கான ஊற்றுக் கண்களையும் மூலாதாரங்களையும் மார்க்ஸ்-ஏங்கல்சில் நம்மால் பார்க்க முடிகிறது.

## ஆட்டோ பாயர், கார்ல் ரென்னர், ஜேம்ஸ் கன்னோலி

இரண்டாம் அகிலத்தின் தொடக்கக் கட்டத்தில் தேசிய இனப்பிரச்சினை என்பது பல தேசிய இன நாடுகளுக்குள் இன ஒடுக்குமுறை மற்றும் அதிலிருந்து விடுதலை என்கிற அடிப்படையிலேயே இருந்தது. லெனின் தான் தேசிய இனப்பிரச்சினை என்பதைக் காலனிய விடுதலை என்கிற கட்டத்திற்கு உயர்த்தியவர். இரண்டாம் அகிலத்தின் பிரதான புள்ளியாகிய **காவுட்ஸ்கி**, சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாட்டை வந்தடையாத போதிலும் ஆஸ்திரிய-ஸ்லாவியர்களை வரலாற்றுத் தகைமையற்றவர்கள் என வகைப்படுத்தியதை எதிர்த்தே வந்தார். தேசிய இனப்பிரச்சினையை வெறும் பொருளாதாரப் பிரச்சினையாகப் பார்க்காமல் அதில் பண்பாட்டு அம்சங்களுக்குரிய முக்கியத்துவத்தை முதன் முதலில் வலியுறுத்தியவர்களில் காவுட்ஸ்கி ஒருவர். காவுட்ஸ்கியின் கருத்துக்களால் உந்தப்பட்டு உருவான ‘ப்ரன் திட்டம்’ (Brunn programme-1899) தேசங்களின் சனநாயகக் கூட்ட

www.padippakam.com



மைப்பாக ஆஸ்திரியா உருவாக்கப்பட வேண்டும் என முன்மொழிந்தது. கூட்டமைப்பில் அடங்குகிற எந்த ஒரு தேசிய இனத்திற்கும் முன்னுரிமை அளிப்பதை எதிர்த்தது.

எனினும் ஏகாதிபத்தியக் கால கட்டத்தில் அய்ரோப்பிய தேசிய அரசுகள் மூன்றாம் உலக நாடுகளைக் காலனிகளாக்கி அரசியல்/பண்பாட்டு ஒடுக்குமுறைக்கும், பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஆளாக்கியபோது அவற்றின் விடுதலைப் போராட்டங்களை ஆதரிக்க இரண்டாம் அகிலப் பொதுவுடைமைத் தலைவர்கள் முன்வரவில்லை. **எடுவர்ட் பெர்ன்ஸ்டைன்** போன்றோர் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் எல்லாவற்றையும் ஆதரித்து விட முடியாது என்றனர். டட்ச் நாட்டுச் சமூகச் சனநாயகவாதியாகிய **வான் கோல்** காலனியத்தை ஆதரித்துப் பேசி தன்னை ஒரு சமூக ஏகாதிபத்தியவாதியாக வெளிப்படையாகக் காட்டிக் கொண்டார். லெனினால் ஏகாதிபத்தியப் போராக வரையறுக்கப்பட்ட முதல் உலகப் போரில் அய்ரோப்பிய நாடுகளின் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் அனைவரும் 'தேசப் பாதுகாப்பு' என்ற பெயரில் தத்தம் நாட்டு ஆக்ரமிப்புப்போரை ஆதரிக்கத் தொடங்கியதோடு இரண்டாம் அகிலம் சிதைந்தது. **லெனின்** மட்டுமே இந்தப் போரை ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகக் கருத முடியாது எனத் தொடர்ந்து வற்புறுத்தியவர். இந்தக் கால கட்டத்தில் தேசிய இனப் பிரச்சினை குறித்த மார்க்சியச் சிந்தனைக்கு வளம் சேர்த்தவர்களாக **ஆட்டோ பாயர், கார்ல் ரென்னர்** போன்ற ஆஸ்திரிய மார்க்சியர்களைச் சொல்லலாம். தேசிய இனப் பிரச்சினை குறித்த ஆஸ்திரிய-மார்க்சியச் சிந்தனைக்கு எதிராகவே **ஸ்டாலினது** புகழ்பெற்ற கட்டுரைகள் எழுதப் பட்டன என்பதும் லெனின், பாயரின் கருத்துக்களைக் கடுமையாக விமரிசித்துள்ளார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கன.

தேசிய இனப் பிரச்சினையில் பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றின் முக்கிய பங்கை வலியுறுத்தியதில் பாயர்

www.padippakam.com



ரென்னர் ஆகியோரின் பங்கு பிரதானமானது. பாயனை விமரிசித்தே ஸ்டாலினின் தேசம் பற்றிய வரையறை உருவாக்கப்பட்ட போதும் அதற்கு முன்னோடியாக, ''ஒரு பொது வரலாற்று நியதி (destiny) யால் கட்டுப் பட்ட மனிதர்களின் இணைவு ஒரு குறிப்பிட்ட பண்பு நலன் வாய்ந்த சமூகமாக மலர்வதே தேசம்'' என்கின்ற பாயரின் வரையறைதான் அமைந்தது என்பர்.[25] ஆக, மார்க்சியச் சொல்லாடலுக்குள் தேசியப் பிரச்சினையின் ''ஒப்பீட்டுரீதியான சுயேச்சைத் தன்மையை'' உள்ளடக் கியதில் பாயரின் பங்கு முக்கியமானது. தவிரவும் வரலாற் றுத் தகைமையற்ற நாடுகளின் எழுச்சிபற்றியும் மிக விரி வாக எழுதி அத்தகைய நோக்கில் தேசியப் பிரச்சினை யைப் பார்ப்பது தவறு என முற்றுப்புள்ளி வைத்ததிலும் பாயரின் பங்கு குறிப்பிடத்தக்கது. இறுதியாக, ''தேசிய வெறுப்பு என்பது வர்க்க வெறுப்பின் மாற்று வடிவமே'' என்கிற கருத்தை முதன்முதலில் வலியுறுத்தியதும் பாயரே யாகும்.

லெனினாலும் ஸ்டாலினாலும் எதிர்க்கப்பட்ட பாய ரின் ''தேசியப் பண்பாட்டுச் சுயாட்சி'' என்கிற கோட் பாட்டைப் பற்றியும் சொல்லியாக வேண்டும். ஒரு கூட்டு அரசிலுள்ள பல்வேறு தேசிய இனங்கள் நாட்டெல்லை (teritory) அடிப்படையில் சுய நிர்ணய உரிமை கோராமல் தங்கள் தங்களின் பண்பாட்டையும் மொழிச் சுதந்திரத் தையும் பேணும் வகையில் பண்பாட்டு ரீதியான சுயாட்சி பெற வேண்டும் என்கிற கோட்பாடு பாயர்-ரென்னரால் முன் வைக்கப்பட்டது. தனித்தனிப் பள்ளிக் கூடங்களும், பொதுவுடைமைக் கட்சிகளும் கூட இத்தகைய சுயாட்சித் தன்மையுடன் கட்டமைக்கப்பட வேண்டும் என்கிற கருத் தும் அவர்களால் முன்வைக்கப்பட்டது. நாட்டெல்லை அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைச் சுட்டிக் காட்ட இயலாத ரசிய யூதர்கள் ('பண்ட்' கட்சியினர்) போன்றோர் இந்தப் 'பண்பாட்டுச் சுயாட்சி'க் கோரிக்

www.padippakam.com



கையை ஆதரித்ததில் வியப்பில்லை. ரசியப் பொதுவுடைமைக் கட்சிக்குள் 'பண்ட்'கள் தங்கள் பண்பாட்டு ரீதியான சுயாட்சியுடன் இயங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். ஜார் அரசை எதிர்த்து இராணுவப் பாணியிலான மையப்படுத்தப்பட்ட கட்சி அமைப்பை வலியுறுத்தி வந்த லெனின்/ஸ்டாலின் ஆகியோர் இதனைக் கடுமையாக எதிர்த்ததில் வியப்பில்லை. கட்சியமைப்பில் கூட்டாட்சி (federalism) என்பது சாத்தியமேயில்லை எனவும் பண்பாட்டுச் சுயாட்சி என்பது கடைசியில் மையப்படுத்தப்பட்ட கட்சியின் சிதைவிற்கே இட்டுச் செல்லும் என்றும் கடுமையாகக் கண்டித்தார் ஸ்டாலின்.[26] தவிரவும் தேசங்களின் சுய நிர்ணய உரிமை என்கிற லெனினியக் கோட்பாடு பாயருடையதைக் காட்டிலும் சனநாயகத் தன்மையுடையதாக இருந்தாலும், வரலாற்றுப் பொருள் முதலிய நோக்கிலும், ரசிய எதார்த்தத்தின் அடிப்படையிலும் புரட்சிகரமானதாக இருந்தாலும், பாயரின் பண்பாட்டுச் சுயாட்சிக் கோட்பாடு கால வெள்ளத்தில் ஒதுக்கப்படுதலைத் தவிர்க்க இயலாததாகியது. பண்பாட்டு அம்சங்களைப் புறக்கணிக்கிற வறட்டுப் பொருளாதார வாதத்திற்கெதிரான நிலைபாடுகள் நேரெதிரான பண்பாட்டு முதன்மை வாதத்திற்கு இட்டுச் சென்று விட முடியும் என்பதற்குப் பாயர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. 1917 வாக்கில் பாயரே, லெனினியச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டார் எனவும் தெரிகிறது[27]

லெனினால் ஆதரிக்கப்பட்ட 'ஈஸ்டர் எழுச்சியை' (1916) முன்னின்று நடத்தியவர் அயர்லாந்து விடுதலைப் போராளியும் சோசலிஸ்டுமான **ஜேம்ஸ் கன்னோலி** தேசிய விடுதலையைப் பொருளாதார விடுதலையோடு இணைத்துப் பார்த்த கன்னோலி, அயர்லாந்தின் விடுதலைக்கும் தொழில் வளர்ச்சிக்கும் முன் நிபந்தனையாகச் சோசலிசத்தை வைத்தார். அந்த வகையில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமே சோசலிசப் போராட்ட

www.padippakam.com



மாகவும் அமைய முடியும் என்கிற கருத்தின் முன்னோடியாகக் கன்னோலியைச் சொல்லலாம். "சோசலிசம் இல்லாத தேசியம் என்பது அப்பட்டமான பிற்போக்குத் தனமே" என்ற கன்னோலி[28] 1916 இல் ஆங்கிலேய அரசால் மரண தண்டனை விதிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உக்ரேனிய சோசலிஸ்டாகிய **பெர்பெரோசோவ்** உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகிய கருத்தாக்கங்களோடு "உற்பத்தி நிபந்தனைகள்" என்கிற கருத்தாக்கத்தையும் இணைத்துத் தேசிய இனப் பிரச்சினை குறித்த ஒரு வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கோட்பாட்டுருவாக்கத்திற்கு முயற்சித்தார். உற்பத்தி நடைபெறும் சூழலிலுள்ள புவியியல், மானுடவியல் மற்றும் வரலாற்றியல் நிபந்தனைகளின் (காரணிகளின்) ஒட்டுமொத்தத்தை உற்பத்தி நிபந்தனைகள் என்றார் பொரோசோவ். வளர்ந்துவரும் உற்பத்தி சக்திகளுக்கும் நிலவுகிற உற்பத்தி உறவுகளுக்கு மிடையேயான முரண்பாடுகளின் விளைவாக சமூகப் போராட்டங்கள் தோன்றுகின்றன என்றால் வளர்ந்து வரும் உற்பத்திச் சக்திகளுக்கும் நிலவுகிற உற்பத்தி நிபந்தனைகளுக்குமிடையேயான முரண்பாடுகளின் விளைவாகத் தேசியப் போராட்டங்கள் வெடிக்கின்றன. வர்க்க உணர்வுக்கும் தேசிய உணர்வுக்குமிடையே ஒரு முரண் நிலவுகிறது. ஒன்று மற்றொன்றைப் பலவீனப் படுத்துகிறது. உற்பத்தி நிபந்தனைகள் பிறழ்வுறும்போது —எ-டு: தேச எல்லையின் ஒரு பகுதி பிறர் வசத்தில் இருக்கும்போது—தேசிய உணர்வு பலமடைகிறது. தேசச் சொத்தில் ஒவ்வொரு வர்க்கமும் வெவ்வேறு விதமான ஆர்வங்கள் கொண்டிருக்கும் என்கிற வகையில் ஒரு தேசத்திற்குள்ளேயே முதலாளியத் தேசியமும் பாட்டாளி வர்க்கத் தேசியமும் வெவ்வேறு தன்மையுடையதாக இருக்கும் என்கிற கருத்தை முன்மொழிநதவரும் பொரோசோவ்தான்.[29]

www.padippakam.com



**ரோசா லக்சம்பர்க்**

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் மற்றும் தேசிய இனப் பிரச்சினை குறித்து ரோசா லெனினுடன் புரிந்த விவாதங்கள் புகழ் பெற்றவை. ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களின் பின்னணியில் ரோசாவின் பா.வ. சர்வாதிகாரம் பற்றிய கருத்துக்கள் மீண்டும் முக்கியம் பெற்றுள்ள போதிலும், சுய நிர்ணய உரிமை என்கிற மார்க்சியக் கோட்பாட்டை மறுத்தவர் என்கிற அழியா இகழ் ரோசாவுக்குண்டு.

போலந்துத் தேசியத்தை ரோசா எதிர்த்தபோதிலும் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டிற்குக் கடைசி வரை எதிராக இருந்த போதிலும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் போராட்டங்களை அவர் முற்றும் எதிர்த்தவரில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. துருக்கிப் பேரரசின் ஒடுக்குமுறைக்கு எதிராகக் க்ரீட் தீவைச் சேர்ந்த கிரேக்கர்கள் போராடியபோது அதனை முழுமையாக ஆதரித்தார் ரோசா. இரண்டாம் அகிலத்தைச் சேர்ந்த எல்லாப் பொதுவுடைமையாளரையும் போலவே ரோசாவும் பொருளாதார வாத நோக்கில் பிரச்சினையை அணுகியதே அவரது தவறுதல்களுக்குக் காரணமாக அமைந்தது. போலந்துக்கும் ரசியாவுக்குமுள்ள பொருளாதார இணைப்பு தானாகவே அரசியல் இணைப்பாகவும் மாறிவிடும் என்றார்.[30] தொழில் வளர்ச்சி என்பது போலந்து மற்றும் ரசியத் தேசிய இனத் தொழிலாளர்களுக்கிடையேயான எல்லைக் கோட்டை மழுங்கடித்துவிடும் என்றும் சொன்னார்.[31] தவிரவும் தேசிய இனப் பிரச்சினை குறித்த மார்க்ஸ்-ஏங்கல்சின் ஹெகலியத் தாக்கமிக்க கருத்துக்கள் ரோசாவின் மீது அதிகச் செல்வாக்கு வகித்தன. வரலாற்றுத் தகைமையற்ற தேசங்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரியன அல்ல என்கிற கருத்து அவரிடமிருந்தது.[32] போல்செவிக்குகள் வழங்கிய சுயநிர்ணய

www.padippakam.com



உரிமையே உக்ரேனில் தேசியப் பிரச்சினையைக் கிளப்பி விட்டது என்றார். தேசியப் போராட்டம் என்பது இறுதியில் ஒரு வர்க்கப்போராட்டமே என்கிற கருத்தில் உறுதியாக இருந்த ரோசா, ஆனால் அது முதலாளிய வர்க்கத்தின் அதிலும் தொடக்ககால முதலாளிய வர்க்கத்தின் வர்க்கப் போராட்டமே என்றுரைத்தார்.[33] தொடக்ககால முதலாளியச் சகாப்தம் இப்போது ஓய்ந்துவிட்டது. முதலாளியத்தில் இனி எந்தவிதமான முற்போக்கான அம்சங்களையும் பார்க்க முடியாது. எனவே தேசிய இனப் போராட்டம் என்பதும் தொடக்க கால முதலாளியம் போலவே காலங்கடந்துவிட்டது.[34] எனவே தொழிலாளி வர்க்கம் இதனை ஆதரிக்கக்கூடாது.

போலந்துத் தேசிய இனப் பிரச்சினையில் ரோசாவின் நிலைபாட்டை லெனின் முற்றாக மறுத்துவிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ''போலந்துப் பிரிவினைக்கு எதிராக அங்குள்ள சமூகச் சனநாயகவாதிகள் இருப்பதை ரசிய மார்க்சியர்கள் எதிர்க்க வில்லை. ஆனால் ரசிய மார்க்சியர்களின் திட்டத்தில் சுயநிர்ணய உரிமையை இணைப்பதை எதிர்க்கும் போதுதான் ரோசா போன்றோர் தவறு செய்கின்றனர்'' என்றார் லெனின்.[35] ஆனால் ''ரோசாவின் சுயநிர்ணயஉரிமைஆதரவு என்பது சர்வதேசப் பதாகையின் கீழ்த் தேசிய நிலைபாட்டைத் திருட்டுத்தனமாக முன் வைப்பது தான்'' என்றும் கடிந்தார்.[36]

1916 வாக்கில் ரோசாவின் நிலைப்பாட்டில் ஒரு திருப்பம் இருந்தது என்பர்.[37] சம உரிமையுள்ள சுதந்திரமான தேசங்கள் என்கிற கோட்பாட்டைச் சர்வதேசச் சோசலிசம் ஏற்றுக் கொள்கிறது எனக்குறிப்பிட்ட ரோசா ''ஆனால் சோசலிசம்தான் இந்தநாட்டு மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத் தரமுடியும்'' என்றார்.[38] முதலாளியத்தின் கீழ்த் தேசியப் போர்கள் சாத்தியமில்லை.

www.padippakam.com



என்கிற ரோசாவின் கருத்தை வன்மையாய் மறுத்த லெனின் ''ஏகாதிபத்திய சகாப்தத்தில் காலனி மற்றும் அரைக் காலனிகளில் தேசியப்போர்கள் என்பன சாத்தியம் மட்டுமல்ல, தவிர்க்க இயாலததுமாகும்'' என்றார்.[39] 1918 வாக்கில் மறுபடியும் சுய நிர்ணய உரிமைக்கு எதிரான கருத்துக்களைப் புரட்சிக்குப் பிந்திய ரசியச் சூழலில் முன் வைத்தார் ரோசா. சுயநிர்ணய உரிமை ரசியாவின் சிதைவுக்கு வழிவகுக்கும் என்றார். மிகவும் இறுக்கமான மையப்படுத்தப்பட்ட கட்சி அமைப்பு பற்றிய கோட்பாடுகளைக் கொண்டுள்ள லெனினும் அவரது தோழர்களும் சுய நிர்ணய உரிமை முழக்கத்தை வைப்பதைக் கேலி செய்தார் ரோசா.[40]

மொத்தத்தில் மார்க்ஸ்-எங்கல்சிடமிருந்த தேசிய இனப் பிரச்சினை குறித்த முரண்பட்ட பார்வைகள் ரோசாவிடமும் வெளிப்பட்டது எனலாம். அன்றைய சகாப்தத்திற்கான சரியான முழக்கமாகிய சுய நிர்ணய உரிமை என்பதை முன் வைப்பதில் லெனினை ரோசாவால் எட்ட முடியவில்லை என்பதை நாம் இனப் பிரச்சினை குறித்த பல பொருளாதார வாதக் கருத்துக்கள் தொடர்ச்சியாய் மார்க்சியத்தில்— குறிப்பாக ஸ்டாலினியப் பாரம் பரியத்தில் பின்பற்றப்பட்டு வருவதைக் கொஞ்சம் யோசித்தால் உணர முடியும்.

**லெனின்:** தேசிய இனப் பிரச்சினை குறித்த மார்க்சியச் சிந்தனைக்குச் சுய நிர்ணய உரிமை என்கிற கோட்பாட்டின் மூலம் பங்களிப்புச் செய்த லெனினின் கருத்துக்களுங்கூட அப்படி ஒன்றும் முரண்பாடுகளே இல்லாதவை என்று சொல்லி விட முடியாது. ரசியப்புரட்சியின் புகழ் பாடிய அறிஞர் **ஈ.எச்.கார்,** லெனினது தேசிய இனப் பிரச்சினை பற்றிய கொள்கை சற்றே தெளிவற்றதுதான் எனக் குறிப்பிட்டுள்ளது கவனத்திற்குரியது.[41] ''சோவியத் ஒன்றியத்தின் எதிர்காலம் எப்படி இருந்த போதிலும்

www.padippakam.com



லெனினது தேசியக்கொள்கை என்றென்றைக்குமாய் மனித குலத்திற்குக் கிடைத்த மகத்தான அறிவுச்செல்வம்'' என **டிராட்ஸ்கி** கூறியுள்ளதையும் சொல்லித்தான் ஆக வேண்டும்.[42]

ரசியச் சமூக சனநாயகக் கட்சியின் முதல் பேராயம் (1898) தேசிய இனப் பிரச்சினை குறித்து ஒன்றும் பேச வில்லை. எனினும் இரண்டாவது பேராயத்தில் (1903) வரையப்பட்ட கட்சித் திட்டத்தில் புகழ்பெற்ற 9ஆம் பிரிவின் கீழ் தேசங்களின் சுய நிர்ணய உரிமை வலியுறுத் தப்பட்டது. இரண்டாம் அகிலத்தின் வறட்டுப் பொருளா தார வாதம் மற்றும் சமூக ஏகாதிபத்தியச் சிந்தனை களிலிருந்து லெனின் பெரிதும் வேறுபட்டு நின்றதை முன்பே குறிப்பிட்டோம். எனினும் 1915 வரை தேசங் களின் தோற்றம் பற்றிய லெனினது சிந்தனையில் தொடக்ககால முதலாளிய எழுச்சியோடு தேசியத்தை இயந்திரகதியில் இணைத்துப் பார்க்கிற போக்கு வெளிப் படுகிறது. இந்த அம்சத்தில் லெனின், ஸ்டாலின், லக்சம் பர்க், காவுட்ஸ்கி ஆகியோரிடம் வியக்கத்தக்க கருத் தொருமிப்பு உள்ளது.[43] எனினும் இந்த அடிப்படையில் முதலாளியத் தோற்றம் என்பது காலம் கடந்துபோன தால் இனி தேசிய இனப் போராட்டங்களுக்குத் தேவை இல்லை என ரோசா வாதிட்டதை லெனின் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் முன்பே பார்த்தோம். கிழக்கு அய்ரோப்பாவில் முதலாளியம் இன்னும் தொடக்க நிலையில்தான் இருக்கிறது எனச் சுட்டிக் காட்டிய லெனின், புதிய தேசிய அரசுகள் உருவாவதற்கு அங்கே இன்னமும் வாய்ப்புகள் இருக்கின்றன என்றார். ரசியா வில் இருந்த தேசிய இன ஒடுக்குமுறையையும் சுட்டிக் காட்டினார். தவிரவும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் இயக்கங்கள் மற்றும் முதலாளியத் தோற்றத்தோடு எழுச்சி கொள்ளும் தேசிய இயக்கங்கள் ஆகியவை தவிர ''பெருத்தேசத்தேசியம்'' என்கிற ஒரு கருத்தாக்கத்தையும் லெனின் முன் வைத்தார்.[44] தேசிய இயக்கங்களின் இயங்

படிப்பகம்

www.padippakam.com



கியல் எதிர்மறையாக அவர் இதனைப் பார்த்தார். இந்தப் பின்னணியில் அவர் தொடர்ந்து தனது இன்னொரு மகத்தான பங்களிப்பாகிய ஏகாதிபத்தியம் பற்றியக் கோட்பாட்டை முன் வைத்தார். ஏகாதிபத்திய கால கட்டத்தில் லெனின் மூன்றாகப் பிரித்தார் எனலாம்[45]. அவை,

அ) **மேற்கு அய்ரோப்பா** மற்றும் அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில் தேசிய இயக்கங்கள் என்பன முற்றுப் பெற்றுவிட்டன. இன்று அது பழைய கதை.

ஆ) **கிழக்கு அய்ரோப்பிய நாடுகள், ஆஸ்திரியா, ரசியா, பால்கன்கள்** போன்ற பல்தேசிய இனப்பேரரசுகளில் தேசிய இயக்கங்கள் இன்றும் பொருந்தும். இந்த நாடுகளில் வர்க்கப் போராட்டம் என்பது தேசியச் சுய நிர்ணய உரிமை என்கிற சனநாயகக் கடமையுடன் இணைந்தே இருக்கிறது.

இ) **காலனிய மற்றும் அரைக் காலனிய நாடுகள்**, இங்கே சனநாயக இயக்கங்கள் இப்போதுதான் தோன்றியுள்ளன. தேச விடுதலைக்கான இந்தப் போராட்டங்களைச் சோசலிஸ்டுகள் ஆதரித்துத்தான் ஆக வேண்டும்.

ஆக தேசிய இயக்கம் என்பது வளர்ந்து வரும் முதலாளியக் காலகட்டத்திற்கு மட்டுமே உரியது என்கிற கருத்திலிருந்து மார்க்சியத்தை விடுதலை செய்தார் லெனின். இந்தக் காலகட்டத்திலிருந்து அதாவது முதலாவது உலகப் போருக்குப் பின்பு (1915-16) லெனின், காலனிய விடுதலைப் போராட்டங்களைச் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டங்களாகவே பார்க்கத் தொடங்கினார்.[46] தேசியம் என்பது வெறும் முதலாளிய நிகழ்வு அல்ல. காலனிய, அரைக் காலனிய நாடுகளில் தேசியப் போராட்டங்கள் என்பன தொழிலாளர், விவசாயிகள்

www.padippakam.com



மற்றும் தோன்றி வரும் முதலாளிகள்[47] ஆகியோரால் நடத்தப் படலாம். சரியான சூழல்களில் சரியான அரசியலையும் போர்த்தந்திரங்களையும் கடைப்பிடித்தால் தொழிலாளர்; விவசாயிகள் இதற்கு தலைமை தாங்க முடியும். ஜேம்ஸ் கன்னோலி முன்வைத்த இக்கருத்து இவ்வாறு மார்க்சிய ஏற்புப் பெறுவதற்கும் லெனினே காரணமாகிறார்.

தனது இறுதிக் காலம் வரை நூற்றுக்கணக்கான கட்டுரைகள் மற்றும் உரைகள் வாயிலாக ஒடுக்கப்பட்ட தேசங்கள் மற்றும் காலனிய நாடுகளின் விடுதலையை ஆதரித்துக் கருத்துரைத்துள்ள **லெனின், இவற்றில் எங்கும் ஸ்டாலினின் 'தேசம்' பற்றிய வரையறையைக் கைக்கொள் ளாததும் கவனிக்கத்தக்கது.**

சுய நிர்ணய உரிமையை வற்புறுத்தியபோதும் இது பிரிவினைக் கோரிக்கைக்குச் சமமாகாது' என்பதையும் லெனின் தேவைக்கதிகமாகவே வற்புறுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. ரோசாவை மறுக்கும்போது கூடப் "போலந்து பிரிந்து போகக்கூடாது என்கிற கூற்றை" ஆதரிக்கிறேன். ஆனால் அதற்காகச் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையே கூடாது என்பதைத்தான் மறுக்கிறேன்". எனக் கூறியுள்ளதை முன்பே குறிப் பிட்டோம்.

பண்பாட்டுத் தேசியம் என்கிற கோரிக்கையை முன் வைத்த 'பண்ட்' கட்சியினர் 1906இல் சமூக சனநாயகக் கட்சியில் இணைய வந்தபோது பிரிவினைக் கோரிக்கை யைக் கைவிட வேண்டும் என்கிற நிபந்தனையை சமூக சனநாயகக் கட்சி முன் வைத்ததை லெனின் பிற்பாடும் ஆதரிதது எழுதினார்.[47] "எந்தத் தேசத்திற்கும் எந்த உத்திரவாதத்தையும் அளிக்காமலேயே சுய நிர்ணய உரிமைக்கான எதிர்மறைக் கோரிக்கையோடு பாட்டாளி

www.padippakam.com



வர்க்கம் தன்னை நிறுத்திக் கொள்கிறது'' என்றும்[48] காலனிய ஆக்ரமிப்பிற்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கும் போது சிறிய நாடுகளிலுள்ள சமூக சனநாயகவாதிகள் ''சிறிய தேசியக் குறுகிய சிந்தனைக்கும் ஒதுக்கத்திற்கும் எதிராகப் போராடவேண்டும்'' என்றும் குறிப்பிடுகிறார்.[49] பெருந்தேசத்திலுள்ள சோசலிஸ்டுகள் சுய நிர்ணய உரிமைப் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும் எனவும் சிறு தேச சோசலிஸ்டுகள் ஒருமைப்பாட்டை ஆதரிக்க வேண்டும் எனவும் இங்குப் பொருளாகிறது. லெனினைப் பொறுத்தமட்டில் 'பிரியும் உரிமையும்' 'ஒருமைப்படும் உரிமையும்' வேறு வேறானதல்ல என மங்க் போன்றோர் குறிப்பிடுவது.[50] இந்தப் பின்னணியில் தான். ஆனால் இவை அனைத்தும் ரசியாவின் அன்றைய நிலைமையின் பின்னணியில் சொல்லப்பட்டவை என்பது கவனிக்கத்தக்கது. மையப்படுத்தப்பட்ட உருக்கு போன்ற பொதுவுடைமைக் கட்சி ஒன்றின் தேவையோடு முரண் படுகின்ற பண்ட் கட்சி போன்றவற்றை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒன்று வெற்றி பெறக்கூடிய நிலையில் அதனை இந்தப் 'பிரிவினைக்' கோரிக்கை அழித்துவிடக் கூடாதே என்ற கவலையோடு இக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதனைத் தூலமான வரலாற்றுச் சூழலிலிருந்து பிரித்து என்றென்றைக்குமான கோட்பாட்டு மேற்கோள்களாகச் சுருக்குவது ஆபத்தானது. தேசிய இனப் பிரச்சினை குறித்த லெனினது கருத்துக்கள் ரொம்பவும் நடைமுறை சார்ந்தது (pragmatism) என்ற குற்றச்சாட்டு வைக்கப்படுவதுண்டு. கூர்ந்து கவனித்துப் பார்த்தால் நடைமுறை சார்ந்தது என்பதைக் காட்டிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தேசிய இனப் பிரச்சினையில் லெனின், வர்க்கப் புரட்சியின் நல நோக்கிலேயே அணுகியுள்ளார் என்கிற உண்மை புரியும்.

www.padippakam.com



ஏகாதிபத்தியத்தின் கீழ் தேசிய ஒடுக்குமுறை அதிகரிக்கும்போது தேசங்களின் பிரிந்து போகும் உரிமைக்கான போராட்டங்களைச் சமூக சனநாயக வாதிகள் ஆதரிக்கக் கூடாது எனப் பொருளல்ல எனத் தொடங்கி "இந்தக் காலத்தில் உதயமாகும் போராட்டங்களைச் சமூக சனநாயகவாதிகள் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். மக்கள் திரள் நடவடிக்கைக்கான களனாகவும் முதலாளியத்திற்கு எதிரான புரட்சிகரத் தாக்குதலுக்கும் இதனைப் பயன்படுத்த வேண்டும்" என்றும் அவர் கூறும்போது[51] இது தெளிவாகிறது. எனினும் 'பிரிந்து போகாமல் சுயநிர்ணயஉரிமை' என்ற கருத்தை வற்புறுத்தி வந்ததையும் புரட்சிக்குப் பிந்திய ரசியச் சூழலில் லெனின் கண் முன்னாலேயே சுய நிர்ணய உரிமைக் குரல்கள் நெறிக்கப்பட்டதையும் வைத்துக்கொண்டுதான் **ஸ்மல் ஸ்டாகி** போன்ற லெனின் எதிர்ப்பாளர்கள் அவரது சுயநிர்ணய உரிமை முழக்கத்தை "ரசியர் அல்லாத தேசத்தவர்களை ஏமாற்றி விரைவாக அவர்களது தேச உணர்வுகளை அழிப்பதற்கான ரொம்பவும் தந்திரமான பிரச்சாரம்" என வசை பாடியுள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது.[52]

**ஸ்டாலின் :** மார்க்சியப் பாரம்பரியத்தில் தேசிய இனப் பிரச்சினை குறித்து அதிகம் எழுதியவர் ஸ்டாலின். அவரது எழுத்துக்களில் பாதி இப்பிரச்சினை குறித்தது என்பர்.

ரசிய ஜாரிய அரசுக்கு எதிரான தேசிய இனப் போராட்டங்களை ஊக்குவிக்கும் அதே நேரத்தில் அவை மையப்படுத்தப்பட்ட கட்சியைப் பலவீனப்படுத்திவிடக் கூடாது என்பதில் போல்செவிக்குகள் குறியாய் இருந்தனர் என்பதை பலமுறை குறிப்பிட்டோம். 1905 புரட்சியின் தோல்விக்குப் பின்னர் போல்செவிக்குகள் தவிர இதர பல சோசலிச அமைப்புகள் சற்றே சீர்திருத்தவாதப் போக்கு

www.padippakam.com



களைக் கடைப்பிடிக்கத் தொடங்கின. ஆஸ்திரிய பாணியி லான பண்பாட்டுச் சுயாட்சி உரிமை பெற்ற சனநாயகக் குடியரசாக ரசியாவும் மாறினால் போதும் என்கிற கருத்து வலுப்படத் தொடங்கியது. இதனைக் கடுமை யாய் எதிர்த்துக் கருத்துப்போரை நடத்திய லெனின், தேசிய பிரச்சினை குறித்த ஸ்டாலினின் புகழ் பெற்ற நூலை எழுதுவதற்கு ஊக்குவிப்பும் அளித்தார்.

மார்க்சியப் பாரம்பரியத்தில் **ஆட்டோ பாயரைத்** தவிர ஸ்டாலின் மட்டுமே தேசத்திற்கான ஒரு வரையறையை அளித்தவர். ஒரே மொழி, தேச எல்லை, பொதுவான பொருளாதார வாழ்வு, பொதுவான உளவியல் உருவாக் கம் ஆகியவற்றை நிபந்தனையாக விதித்ததோடன்றித் தேசியம் என்பது வளர்ந்து வரும் முதலாளியம் என்கிற ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தின் வரலாற்று வகையினமே என்பதையும் ஸ்டாலின் வற்புறுத்தினார்.[53] கூடவே தேசங்களுக்குத் தங்களது பிரச்சினைகளைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை என்பதற்கு, ''தேசங்கள் எனப்படும் கேடுபயக்கும் நிறுவனங்களையும் மற்றும் தேசங்களின் தகாத கோரிக்கைகளையும் சமூக சனநாயக வாதிகள் எதிர்த்துப் போராடாமல் இருக்க வேண்டும் எனப் பொருளில்லை'' என்பதையும் வலியுறுத்தவே செய்தார்.[54] தேசம் என ஏற்பதற்கு இத்தகைய நிபந்த னையை வற்புறுத்தியதன் மூலம் ஒரு குறிப்பிட்ட நில எல்லை. இல்லாமலேயே பண்பாட்டுச் சுயாட்சி உரிமை கோரிய 'பண்ட்'களை 'நீங்கள் ஒரு தேசிய இனமே இல்லை' என ஒதுக்குவதும் தேசம் என்பது தொடக்ககால முதலாளியமே என வற்புறுத்துவதன் மூலம் சோசலிச ரசியாவில் தேசிய இனக் கோரிக்கைக்கு உரிமையில்லை என மறுப்பதும் போல்செவிக்குகளுக்குச் சாத்திய மாயிற்று.

1904 இல் எழுதிய கட்டுரையொன்றில் ஸ்டாலின், ''உயர் பண்பாட்டுப் பொது நீரோட்டத்தில் பிற்பட்ட

www.padippakam.com



தேசங்களையும் மக்களையும் இழுக்கும்போதே காகேசியர்களின் தேசிய இனப் பிரச்சினை திரும்'' எனக்குறிப்பிட்டுள்ளார்.[55] இந்தக் கருத்தில் வெளிப்படும் ஹெகலியத் தாக்கம் கவனத்திற்குரியது.

லெனினைப் போல ஏகாதிபத்தியக் கட்டத்திற்கான தேசிய இனக் கோட்பாடு எதையும் ஸ்டாலின் தராத போதும் 1918இல் எழுதிய கட்டுரையொன்றில் ரசியப் புரட்சியானது தேசிய இனப் புரட்சியின் எல்லையை ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து காலனி, அரைக் காலனி நாடுகளின் விடுதலை என்கிற அளவிற்கு உயர்த்தியுள்ளது என ஏற்றுக் கொள்கிறார்.[56] இதே கருத்தைப் பின்னால் (1924) லெனினியத்தின் அடிப்படை அம்சங்களைவிளக்கும் போதும் முன் வைக்கிறார். தனது 1913ஆம் ஆண்டு வரையறை என்பது உலகத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமேயான, ஒரு சகாப்தத்திற்கு மட்டுமே பொருந்தக் கூடிய ஒன்று என ஸ்டாலினே பின்னால் உணர்ந்து கொண்டார் என்கிற முடிவை மேற்கண்ட அடிப்படையில் வந்தடைகிறார் ப்ளாட்.[57]

புரட்சிக்குப் பிந்திய ரசியாவில் தேசிய இன உரிமைக் குரல்கள் நெறிக்கப்பட்டதில் ஸ்டாலினது பங்கை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். ''பைலோருசிய மைய சோவியத்தின் கலைப்பு, டிரான்ஸ் காகேசியாவில் முயற்சிக்கப் பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு. உக்ரேனியப் படையெடுப்பு, குகந்த், கிரிமியா, பஷ்கிர் குடியரசு ஆகியவற்றின் முஸ்லீம் அரசுகளை ஒடுக்கியது என்பதெல்லாம் தேசங்களின் சுய நிர்ணய உரிமை என்கிற கோட்பாட்டை முழுமையாக மீறிய செயல்களாகும்'' என்பார் பைப்ஸ்.[58]

புரட்சிக்குப் பின் உக்ரேனிய மைய சோவியத் (ராடா), போல்செவிக்குகள் ஆதிக்கம் வகித்த நகர சோவியத்துகளுடன் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொண்டது. தங்களது தேசியப் பண்பாடு, நாட்டார் இலக்கியம்,

www.padippakam.com



மொழி ஆகியவற்றை உயர்த்திப் பிடித்தனர் உக்ரேனியத் தேசியவாதிகள். தொடர்ந்து தேசியவாதிகளுக்கும் போல்செவிக்குகளுக்குமிடையில் பிரச்சினைகள் இருந்து வந்தன. இறுதியில் லெனினது ஒப்புதல் இல்லாமலேயே உக்ரேன் மீது படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. எட்டாவது கட்சிப் பேராயத்தில் இதனை லெனின் 'ரசியப் பெருந்தேசிய வெறி' எனக் கண்டித்தார்.[59] தாதர் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் 1918 இல் ஸ்டாலினது தேசிய இன அமைச்சரவையில் பங்கு பெற்றவருமான **சுல்தான் காலியவ்** போன்றவர்கள் சோசலிசப் புரட்சி மூலம் தேசிய விடுதலை என்பது சாத்தியமில்லையோ என அச்சத்தை வெளிப்படுத்துகிற அளவிற்கு அன்றைய நிகழ்ச்சிகள் இருந்தன. வளர்ச்சியடைந்த நாடுகளின் மீது காலனி மற்றும் அரைக் காலனிகளின் சர்வாதிகாரத்தை நிறுவும் போதுதான் மனித குலம் விடுதலை அடையும் என்பது போன்ற ஒரு கோட்பாட்டை முன் வைத்த காலியவ் 1923இல் கைது செய்யப்பட்டார். ஸ்டாலினது ஆரம்பப் பலிகளில் அவரும் ஒருவர் என்பர்.[66] ஜார்ஜிய மென்செவிக் ஆட்சிக்கெதிரான இராணுவ நடவடிக்கையையும் லெனின் விரும்பவில்லை. எனினும் 1921 இல் சோவியத் படைகள் ஜார்ஜியாவுக்குள் நுழையத்தான் செய்தன. இந்த நடவடிக்கைக்குப் பொறுப்பேற்றிருந்தார் **ஆர்ழனி கோவ்.** ஏற்கெனவே அர்மீனியாவில் மேற்கொண்ட நடவடிக்கையால் கசப்புற்றிருந்த லெனின் ''நெளிவு சுழிவுகளுடன் பிரச்சினையைக் கையாளுங்கள், ஜார்ஜியத் தேசிய இனத்திற்குச் சலுகைகள் வழங்குவதன் மூலம் நம்பிக்கையைப் பெற முயற்சியுங்கள்'' என்பது போல வேண்டிக்கொண்டும் பயனில்லை.[61] 1922இல் ஜார்ஜியா, அர்மீனியா, அஜர்பெய்ஜான் ஆகிய மூன்று தேசங்களையும் இணைத்து டிரான்ஸ் காகேசியக் கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியை



படிப்பகம்

www.padippakam.com



ஆர்ழனிக்கோவ் மேற்கொண்டபோது ஜார்ஜிய சோவி யத்துக்களின் பேராயம் தேசிய விடுதலையின் தவிர்க்க இயலாமையைப் பிரகடனப்படுத்த வேண்டியதாயிற்று. ஜார்ஜியப் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக்குழு முழு மையும், பதவி விலகியது. புதிதாய் உருவாக்கப்பட்ட சோவியத் சோசலிசக் குடியரசிற்கு அரசியல் சட்டம் வகுக் கும் பொறுப்பு ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டபோது அதி காரங்களை மையப்படுத்துகிற நடைமுறையில் மிகவும் அவசரம் காட்டுவதாக லெனின் அவரைக் குற்றம் சாட்டி னார். பதிலுக்குத் 'தேசியத் தாராளவாதி' என லெனினை ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.[62] லெனினது இறுதிச் சாசனம் எனச் சொல்லப்படுகிற பன்னிரண்டாவது பேராயத்திற்கு அவர் எழுதிய கடிதத்தில் (டிசம்பர் 1922) தேசியப் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் அளித்திருந்தார். ஸ்டாலினையும் ரசியப் பெருந்தேச வெறியையும் கடுமையாய்ச் சாடினார். பன்னிரண்டா வது கட்சிப் பேராயத்தில் கலந்துகொள்ள இயலாத வாறு உடல்நலம் சீர்கெட்டிருந்த லெனின், பேராயத்தில் ஜார்ஜியப் பிரசசினையைப்பற்றிப் பேசுமாறு டிராட்ஸ் கியை வேண்டிக் கொண்டார். ஆனால் தேசிய இனப் பிரச்சினைகளிலும் சுயநிர்ணய உரிமையிலும் முழுமை யான அக்கறையற்ற டிராட்ஸ்கி, சோவியத் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசு சுய நிர்ணய உரிமைக் கோரிக் கையைப் புறக்கணித்தது பற்றிப் போல்செவிக் அதிருப்தி யாளர்கள் விவாதித்தபோது வாய்திறக்கவில்லை. டிராட்ஸ்கியை விதந்து எழுதும் டட்சர் கூட அவரது இந்தச் செயலை ஆதரிக்க இயலாமற் போவது குறிப்பி டத்தக்கது.[63]

**சம காலச் சிந்தனைகள்**

கடந்த இரண்டு மூன்று பத்தாண்டுகளில் தேசிய இனப் போராட்டங்கள் புதிய பரிமாணங்களை எடுத்

www.padippakam.com



துள்ள சூழலில் 1970களுக்குப் பின் மார்க்சியர்களிடையே தேசிய இனப்பிரச்சினை குறித்துப புதிய விவாதங்கள் எழுந்துள்ளன. அவை முழுவதையும் இங்கே விரிவாய்ப் பேசுவதற்குச் சாத்தியமில்லாத போதும் சில போக்கு களையேனும் சுட்டிக காட்டுவது அவசியம்.

i) வளர்ச்சியின் பிரச்சினையாகத் தேசியத்தை அணுகும் சிந்தனைகள்: டாம் நாய்ரன், எர்னஸ்ட் கெல்னர் ஆகியோ ரின் கோட்பாடுகளை நாம் இதற்குள் அடக்க முயற்சிக்க லாம். தேசிய இனப்பிரச்சினை குறித்த மரபு வழிப்பட்ட மார்க்சிய அணுகல் முறையை மாபெரும் வரலாற்றுத் தோல்வி என ஒதுக்கும் நாய்ரன், தேசிய அரசு, தேசியம் போன்ற கருத்துக்கள் எல்லாம் விடுதலை (Freedom) என்கிற கருத்தைப் போலவே கடந்த இரு நூற்றாண்டு களாக பிரான்சு மற்றும் ஆங்கிலேயச் சமூகங்களிலிருந்து உலகின் பல பாகங்களுக்கும் பரவி வருவதாகப் பார்ப் பார். "அய்ரோப்பிய மைய விரவல் கொள்கை,, (Eurocentric Diffusion) யின் ஓரங்கமாய் இதனை ஒதுக்குவார் ப்ளாட்.[64] நவீனத்துவம் மற்றும் உலக முதலாளியத்தின் விளைவான சமச்சீரற்ற வளர்ச்சி தர்க்க விரோதமான ஒரு கண்ணோட்டத்தைப் பின்தங்கிய பகுதி மக்கட் சமூகங்களின் மத்தியில் ஏற்படுத்துகிறது.. நிறைவேற்றப் படாத எதிர்பார்ப்புக்கள், பொறாமை, ஆத்திரம், வெறுப்பு ஆகியவற்றை அம்மக்களின் உளவியலில் ஏற் படுத்துகிறது. இது பின் தங்கிய தேசங்களில் தேசியக் கருத்தியலாகவும் தேசிய இயக்கங்களாகவும் வெளிப்படு கிறது. பின்தங்கிய பகுதிகளிலுள்ள மேல்தட்டினரே இத் தகைய உணர்வுக்கு முதன்முதலில் ஆளாவதோடு அவர் களே தேசிய இயக்கங்களை முன்னெடுவுதுச் செல்கின் றனர் என்பன நாய்ரனின் கருத்துக்கள் எனலாம்.[66] சமச்சீரற்ற வளர்ச்சி தேசிய உணர்வுக்குக் காரணமாகும் என்பது சரிதான். ஆனால் அது பின்தங்கிய நாடுகளில் மட்டுந்தான் தேசியஉணர்வை ஏற்படுத்தும் என்பதில்லை.

www.padippakam.com



சமச்சீரற்ற வளர்ச்சியின் எதிர்முனையாகிய வளர்ச்சியடைந்த பகுதிகளிலும் தனித்துவத்தை நிலைநாட்டும் உளப்பாங்காக இது வெளிப்படும்; தேசிய உணர்வுக்குக் காரணமாகும். ஸ்பெயினிலேயே மிகவும் வளர்ச்சியடைந்த பகுதியாகிய பாஸ்க்தேசம் பிரிவினை கோரியதும், யுகோஸ்லாவியாவிலேயே மிகவும் வளர்ச்சியடைந்த பகுதிகளில் ஒன்றாகிய க்ரோஷியா பிரிவினை கோரியதும் இதற்கு எடுத்துக்காட்டுக்கள்.[66] பொருளாதார வளர்ச்சி மற்றும் நவீனமயப்பாட்டுடன் தேசியத்தை இணைத்துப் பார்க்கும் இன்னொரு சிந்தனையாளராகிய **எர்னஸ்ட் கல்னர்**, ''தேசியம் என்பது மறைந்து கிடக்கும் உறக்க நிலையில் இருக்கும் ஒரு பழைய ஆற்றல் விழித்துக் கொள்வதல்ல. ஆனால் அது அப்படித்தான் தோன்றுகிறது. ஆழமான, அகவயமான, கல்வி சார்ந்த உயர் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமூக ஒழுங்கமைப்பின் பின் விளைவே அது''[67] என்கிற கருத்துப்பட மொழிவதும் கவனிக்கத்தக்கது. பழமையிலிருந்து ஆற்றலைப் பெற்றுக்கொண்டு புதிய பொருளாதார வளர்ச்சிக்கு உரமாகும் சக்தியாகத் தேசியத்தைப் பார்க்கும் நாயர்ன், அதனை முன்புறம் ஒரு முகமும் பின்புறத்தை நோக்கி ஒரு முகமும் உள்ள ரோமானியக் கடவுளாகிய ஜேனசுடன் ஒப்பிடுவார்.[68]

சுரண்டல், ஒடுக்குமுறை, ஏகாதிபத்தியம் ஆகிய கருத்தாக்கங்கள் நாயர்னின் தேசியம் பற்றிய சிந்தனையில் புறக்கணிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டும் ப்ளாட், தேசியப் போராட்டத்தில் சாதாரண மக்களுக்கு வெறும் செயலூக்கமற்ற பங்கையே இக்கோட்பாடு அளிக்கிறது என்பதையும் குறிப்பிடுவார் மார்க்ஸ் எங்கல்சிடமே அய்ரோப்பிய மைய விரவல் கொள்கையின் கூறுகள் இருந்ததை இங்கு நினைவூட்டிக் கொள்வது பொருத்தம். ஆனால் அவர்கள் எந்நாளும் சுரண்டலையும் வர்க்கப் போராட்டத்தையும் தங்கள் வரையறையிலிருந்து கைவிட்டதில்லை என்பதும் சிந்திக்கத்தக்கது.

www.padippakam.com



**(ii) தேசியத்தைச் சுயேச்சையான ஒரு ஆற்றலாக அணுகும் சிந்தனைகள் :** செவ்வியல் மார்க்சியம் தேசியப் போராட்டத்தை ஒரு வர்க்கப் போராட்டமாக அணுகுகிறது. எனினும் ''சமூக வளர்ச்சிப் போக்கில் உருவாகும் வர்க்கப் பிரச்சினைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்ததே தேசியப் பிரச்சினை'' என மார்க்சிய-லெனினியக் கல்வி நிறுவனம் போன்றவை வலியுறுத்தும்போது [69] தேசியப் பிரச்சினையின் ஒப்பீட்டளவிலான சுயேச்சைத் தன்மை முற்றாக மறுக்கப்பட்டு ஒருவகை வறட்டு வர்க்கவாதத்திற்கு இட்டுச் செல்லும் ஆபத்து குறிப்பிடத்தக்கது. இத்தகையப் போக்கிற்கு நேரெதிராக எல்லாவிதமான **வர்க்கப்** பகுப்பாய்விற்கும் அப்பாற்பட்ட சுயேச்சைச் சக்தியாகத் தேசியத்தைப் பார்க்கிற சிந்தனைப் போக்குகளும் சமீப காலத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. **ஆட்டோ பாயர், கார்ல் ரென்னர்** போன்றோரின் சிந்தனைகளில் இக்கருத்து செல்வாக்கு வகித்ததை முன்பே குறிப்பிட்டோம்.[70] புகழ் பெற்ற மார்க்சிய அறிஞர் **நிகோஸ் பவுலன்ட்சாஸ்**, வர்க்க நடைமுறைகளிலிருந்து சுதந்திரமாய் வரலாற்றில் செயல்படுகிற சுயேச்சையான சக்தியாகத் தேசியத்தைப் பார்க்கிறார்.[71] சமச்சீரற்ற வளர்ச்சி நோக்கில் தேசியத்தைக் காணும் நாயர்னின் கோட்பாட்டிலும் வர்க்கப் போராட்டத்தைத் தவிர்த்துத் தேசியத்தைச் சுயேச்சையான சக்தியாக அணுகும் பார்வை இருப்பதும் கவனிக்கத்தக்கது. இத்தகைய போக்கு இறுதியில் தென் ஆப்பிரிக்க வெள்ளையர், இஸ்ரேலியர் மற்றும் வட அயர்லாந்து புராட்டஸ்டன்ட் மதத்தினர் ஆகியோரின் தேசியத்திற்கும் கூட வக்காலத்து வாங்கும் போக்கிற்கு நாயர்னை இட்டுச் செல்கிறது என்பார் ப்ளாட்.[72] இது குறித்துப் பின்னர் விரிவாய்ப் பார்ப்போம்.

**(iii) தேசியத்தைத் தர்க்கபூர்வமற்றதாகவும் பாசிசத்துடனும் இணைத்துப் பார்க்கும் சிந்தனைகள் :** தேசப் பரப்பு, நிலைத்திருப்பதற்கான அரசியல் சாத்தியம்

படிப்பகம்

www.padippakam.com



ஆகியவற்றைப் பற்றிக் கவலைப் படாமல் தன்னுடைய கலாச்சார சமூகத்திற்கு ஒரு சுதந்திர அரசை உருவாக்க நினைக்கும் தேசியமானது குருட்டுத்தனமான தர்க்கபூர்வ மற்ற ஒரு கருத்தியலாகவும் குடிமை மதமாகவும் பார்ப் பார் அறிஞர் **ஆப்ஸ்பாம்.** இத்தகைய அரசியல் கருத்திய லும் இயக்கமுமான தேசியம் சமயங்களில் முதலாளிய அரசுருவாக்க முயற்சியுடன் இணைகிறது. அப்போது அது தர்க்கபூர்வமானதாகவும் நியாயபூர்வமானதாகவும் இருக் கிறது. இன்று இத்தகைய வரலாற்றுப் பூர்வமான இயல் பான முதலாளிய வளர்ச்சி என்பது கிடையாது. எனவே இன்றைய காலகட்டத் தேசியம் அனைத்தும் சிதைவு போக்கிற்கான தேசியமேயாகும் (Fissiparous, Nationa -lism). இது தர்க்கபூர்வமானதல்ல (irrational). முதலா ளியப் பொருளாதாரம் சர்வதேசியமயப்பட்டு வரும் பின்புலத்தில் (பன்னாட்டு நிறுவனம் உலக வங்கி போன்ற வற்றின் மூலமாக) இறைமையுடைய தனி அரசுகளின் முக்கியத்துவம் அழிந்து வருகிறது எனக் கூறும் ஆப்ஸ் பாம், இதே அடிப்படையில் அத்தகைய அரசிறைமைக் கான தேசியப் போராட்டங்கள் நடத்துவதையும் தர்க்க பூர்வமற்ற செயலாகக் குறிப்பிடுகிறார்.[73] தேசியத்தை முதலாளியத்துடன் நேராகப் பொருத்திப் பார்ப்பதி லுள்ள சிக்கலை முன்பே குறிப்பிட்டோம். மூலதனம் சர்வ தேசமயமாதல் என்பது அரசுகளின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தனது பன்னாட்டு நிறுவனக் கொள்ளைக்குச் சாதகமாக ஏகாதிபத்தியங்கள் இன்றைய மூன்றாம் உலக நாட்டு அரசுகளை இராணுவ ரீதியில் வலிமைப்படுத்தி வருவதையே பார்க்கிறோம். தவிரவும் ஆப்ஸ்பாம் கருது வது போலக்காலனியமய நீக்குப் போக்கு (decolonisation) என்பது தேசங்கள் சிதறுண்டு போவதற்கு வழிவகுக்கும் என்பதற்கு ஆதாரமில்லை எனவும் ப்ளாட் போன்றோர் கருதுகின்றனர்.[74]

www.padippakam.com



ஆப்ஸ்பாம் போலன்றி இன்றைய பிரிவினைப் போராட்டங்களை **வரவேற்கத்தக்க**தாகவே அணுகிய போதும் **நாய்ர்ன் பாசிசத்தைத் தேசியத்தின் தொன்ம மாதிரியாகக்** (Archetype) குறிப்பிடுவார். தீவிரமான தேசியமே பாசிசமாகிறது என்றும், தேசியத்தின் தர்க்க பூர்வமான முடிவு பாசிசமே என்றும் அவர் குறிப்பிடு வார்.[75] பெரும்பாலும் பாசிச நாடுகளில் தேசியம் பிரதானமான ஓரம்சமாக விளங்கியதென்னலோ உண்மைதான். ஆனால் எல்லாப் பாசிச நாடுகளும் எல்லாக் காலங்களிலும் தேசிய வெறியுடன் விரிவாக்க முயிற்சிகளை மேற்கொண்டதில்லை. **பிராங்கோ**வின் ஸ்பெயினும் **சலாசரி**ன் போர்த்துக்கலும் இதற்கு எடுத்துக் காட்டுகள். தவிரவும் விரிவாக்க முயற்சி என்பது ஏசாதி பத்தியங்களின் பொதுவான பண்புதானேயொழிய அதனைப் பாசிசத்திற்கு மட்டுமே உரித்தானதாகவும் பார்த்துவிட முடியாது. காலனியத்தின் கருத்தியலடிப் படையே காலனியப்படுத்தப்பட்ட மக்களை இழிவாகப் பார்ப்பதுதான். தேசிய இயக்கங்கள் என்பன முதலாளியச் சனநாயகத் தன்மையுடையதாகவும், பாசிசத் தன்மை யுடையனவாகவும், வியட்நாம் போன்ற நாடுகளில் சோசலிசத் தன்மையுடையனவாகவும் கூட இருந்திருக் கின்றன. அதனைப் பாசிசத்துடன் மட்டுமே இணைத்துப் பார்ப்பது ஏற்க இயலாத ஒன்றாகும்.

(iv) **தேசியப் போராட்டத்தைப் புறவயவர்க்கப் போராட்ட மாகப் பார்க்கும் சிந்தனைகள் :** வர்க்கப் போராட்டம், சுரண்டல் ஆகியவற்றிற்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு என்கிறார் **ஜேம்ஸ்ப்ளாட்**.[76] ஒன்று, உள்நாட்டு வர்க்கப் போராட்டம் மற்றும் உள்நாட்டுச் சுரண்டல். மற்றது புறவயமானது. தொடக்ககால வர்க்கமற்ற இனக்குழு சமூகங்களில் சுரண்டல் இருந்ததில்லை. சுரண்டல் என்பது முதன்முதலாக ஒரு அன்னியச் சமூகத்தை அடிமைகொள்வது அல்லது அதனிடம்

www.padippakam.com



இருந்து கப்பம் வசூலிப்பது என்பதில் தொடங்குகிறது என்கிறார் ப்ளாட். இதனை அந்நியச் சுரண்டல் அல்லது புறவயச் சுரண்டல் எனலாம். வர்க்க சமூகமாக உருப் பெறும்போது ஒரு சமூகத்தின் ஆளும் வர்க்கம் என்பது உள்நாட்டு உற்பத்தியாளரையும் சுரண்டுகிறது; வெளி நாட்டு உற்பத்தியாளரையும் சுரண்டுகிறது. சுரண்டப் படும் சமூகம் என்பது வெளிநாட்டு ஆளும் வர்க்கத்தா லும் சுரண்டப்படுகிறது. சமயங்களில் கூடவே உள்நாட்டு ஆளும் வர்க்கத்தாலும் சுரண்டப்படுகிறது. வரலாறு பூராவும் புறவயச் சுரண்டல் இருந்து வந்ததெனினும் காலனிய / நவகாலனிய சகாப்தத்தில் இது உச்சத்தை அடைகிறது. ஒரு சமூகத்திற்குள் நடைபெறும் சுரண்டல் என்பது அடிமட்ட உற்பத்தியாளரின் குறைந்தபட்ச உயிர் வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்கிறது. ஆட்சியாள ருக்கும் உற்பத்தியாளருக்கும் இடையேயான பொதுவான பண்பாடு மற்றும் சமூக விதிகள் மூலம் இந்த உத்தர வாதம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இத்தகைய பொது விதி, பண்பாடு மூலம் தொடர்பில்லாத, கட்டுப் படுத்தப்படாத புறவயச்சுரண்டல் மிகவும் கொடுமையாக வும் கொடூரமானதாகவும் இருக்கிறது. எனவே புறவயச் சுரண்டலுக்கெதிரான புறவய வர்க்கப் போராட்டமும் உள்நாட்டு வர்க்கப் போராட்டத்தைக் காட்டிலும் வித்தியாசமானதாகவும் நேரடியான அரசதிகாரத்திற் கான போராட்டமாகவும் வெளிப்படுகிறது. சுரண்டலை ஒழிப்பதற்கான அவசியமான நிபந்தனையாக அன்னிய ஆதிக்கத்தை ஒழிப்பதென்பது இருந்த போதிலும் அதுவே போதுமான நிபந்தனையாக இருப்பதில்லை என்பது கவனிக்கத்தக்கது. உள்நாட்டு ஆளும் வர்க்கம், உள்நாட்டு உழைக்கும் வர்க்கம், வெளிநாட்டு ஆளும் வர்க்கம் வெளி நாட்டு உழைக்கும் வர்க்கம் ஆகிய நான்கிற்குமிடையே யான உறவு எல்லாச் சூழல்களிலும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. தேசியப் போராட்டங்களின் சிக்கலின் அடிப்படை இதுவே.

www.padippakam.com



ஸ்டாலினுடைய வரையறையை ஏற்றுக் கொள்ளாமை, தேசிய உணர்வை முதலாளியத்துடன் நேரடியாக இணைத்துப் பார்ப்பதைக் கடுமையாக மறுப்பது ஆகியவற்றில் மரபு வழி மார்க்சியத்திலிருந்து விலகி நிற்கிற ப்ளாட், தேசியப் போராட்டம் என்பது அடிப்படையில் வர்க்கப் போராட்டமே என்கிற மார்க்சிய- லெனினிய நிலைப்பாட்டை வலியுறுத்துவதே தன் நோக்கம் என்கிறார். எனினும் 'சோசலிச நாடுகளுக்கிடையேயான தேசியப் போராட்டங்களை' ப்ளாட்டால் விளக்க இயலாமற்போவதைச் சுட்டிக் காட்டும் **மங்க்**, ப்ளாட்டின் கொள்கை தேசிய உணர்வின் ஒப்பீட்டு ரீதியான சுயேச்சைத் தன்மையை முற்றாக மறுப்பதால் ''தேசியப் போராட்டம் என்பது வர்க்கப் போராட்டமே'' எனச் சொல்லத்தான் முடிகிறதே யொழிய அதனை விளக்க முடியாமற் போகிறது என்கிறார்.[76]

மிக மிக மிகச் சுருக்கமாகவே இந்தச் சிந்தனைப் போக்குகள் இங்கே அறிமுகப்படுத்தபட்டுள்ளன. மிகவும் ஆழமான, சிந்தனை வளத்துடன் கூடிய இக் கருத்துகளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு இவை தொடர்பான நூற்களை விரிவாகப் படிப்பதே நல்லது, இந்தச் சிந்தனைப் போக்குகள் வழங்கியுள்ள மேலும் சில முக்கிய பங்களிப்புகளை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்வது மிகவும் அவசியம்.

முதலாளியத் தோற்றம் மற்றும் வளர்ச்சிப் போக்கு ஆகியவற்றுடன் இவர்களில் சிலர் தேசியத்தை இணைத்த போதும் இவர்கள் யாரும் தேசம் பற்றிய இறுக்கமான வரையறை எதையும் கைக்கொள்ளவில்லை என்பதும் அதற்கான முயற்சிகளிலும் இறங்கியதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கன. **''தேசியம் தான் தேசத்தை உருவாக்குகிறதேயொழிய தேசம் தேசியத்தை உருவாக்கவில்லை''** என்கிற **கெல்னரின்** கூற்று மிக மிக முக்கியமானதாகும்.

www.padippakam.com



எல்லாவற்றையும் கடந்த முழுமையான, நிரந்தரமான வரலாற்றுக்கப்பாற்பட்ட தேசம் என்கிற கருத்தாக்கத்திலிருந்து தேசிய உணர்வு, தேசிய இயக்கங்கள் தோன்றுகின்றன என்கிற கருத்து இங்கே முறியடிக்கப்படுகிறது. இதனையே **பென்ஆண்டர்சன் ''தேசம் என்பது ஒரு கற்பிதம் செய்து கொள்ளப்பட்ட சமுதாயம்''** என்பார்[77] தேசியம் என்பது பல்வேறுபட்ட சூழல்களில் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாய்க் கட்டமைக்கப்படுகிறது. முதலாளிய எழுச்சியோடு கட்டமைக்கப்பட்ட தேசியம் உண்டு. பாசிசக் கட்டமைப்புக்குப் பயன்பட்ட தேசியம் உண்டு. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட தேசியம் உண்டு. உட்பட்ட தேசிய இனங்களை ஒடுக்கி, மையப்படுத்தப்பட்ட அரசுருவாக்கத்திற்காக மக்களை ஒருங்கிணைக்கக் கற்பிக்கப்படும் தேசியம் உண்டு (எ-டு. இன்றைய இந்தியத் தேசியம்) நிலவும் அமைப்பு ஒன்றிலிருந்து உடைத்துக் கொண்டு ஒரு புதிய அரசதிகாரத்தை நிறுவ முயலும் சக்திகள் உருவாக்கும் தேசியம் உண்டு. ''தனது தேசியப் போராட்டத்தின் மூலமாகவும் தேசிய இயக்கத்தின் மூலமாகவுமே கினியாபிசா தேசம் என்கிற நிலையை அடைந்தது'' என்பார் **அமில்கார் கப்ராவ்.**[78] ''லத்தின் அமெரிக்காவின் தேசிய உருவாக்கங்கள் என்பன சந்தை உருவாக்கத்தால் கட்டமைக்கப்படவில்லை. தூலமான அரசியற் களத்தில் அது கட்டமைக்கப்பட்டது'' என்பார் **டெர்ரா ரிவாஸ்.**[79] ''புதிய அரசுகளின் தேச உருவாக்கக் கொள்கைகளில் நேர்மையான வெகுசனரஞ்சகமான தேசிய உற்சாகத்தையும் காணமுடியும். திட்டமிட்டு, சமயத்தில் மாக்கிய வெல்லித்தனமான தந்திரமான முறையிலும் தேசியக் கருத்தியலை ஊட்டுவதும் உண்டு'' என்பார் **பென் ஆண்டர்சன்.**[80]

நவீன தேசம் என்பது முதலாளிகளின் படைப்பு அல்ல எனக் கூறும் **பவுலன்ட்சாஸ்,** ''அது உண்மையில் நவீன சமூக வர்க்கங்களுக் கிடையேயான சக்திகளின்

படிப்பகம்

www.padippakam.com



உறவின் வெளிப்பாடேயாகும்'' என்பார்.[81] அந்த நவீன சமூக வர்க்கங்கள் என்பன வெவ்வேறு அரசியற்சூழலில் வெவ்வேறாக இருக்கும். தேசியத்தை இரட்டை நிகழ்வாகக் காண்பார் **ஆப்ஸ்பாம்.** முதலாளிய எழுச்சி, காலனியச் சுரண்டல் போன்ற சமூக மாற்றங்களை எதிர் கொள்ளும் வழி முறையாக ஒன்று. நவீன மத்தியப்படுத்தப்பட்ட அரசின் குடிமை மதமாக இன்னொன்று. தேசியத்தின் இரு பணிகளாக **ஜான் ப்ரூய்லி** குறிப்பிடுவது கிட்டத்தட்ட இத்துடன் பொருந்தும்.[82] அவை (1) அரசு அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஒரு குறிப்பிட்டக் காலகட்டத்தில் மக்களை இறுக்கி இணைத்தல். (2) யாரை அது கட்டுப்படுத்துகிறதோ அந்த மக்களுக்கு நியாயபூர்வமாகத் தோற்றமளிக்க ஒரு குறிப்பிட்ட அரசுக்குப் பயன்படல். தேசியம் என்பது அரசியல்ரீதியாய் நியாயப்படுத்திக் கொள்ளப் பயன்படும் கொள்கை எனக் **கெல்னர்** கூறுவதும் தங்களுக்குரிய ஒரு அரசைக் கைப்பற்றவும் தக்கவைக்கவும் உருவாக்கப்படும் செயல்பாடுகள், கருத்தியல் மற்றும் இயக்கங்களைத் தேசியம் என்கிறோம் எனப் **பீட்டர் ஓர்ஸ்லி** குறிப்பிடுவதும்[83] இத்துடன் இணைத்துப் பார்க்கத் தக்கன. ஆக அரசு அதிகாரங்களைக் கைப்பற்றுவது மற்றும் தக்கவைப்பது என்கிற இரட்டைப் பணிகளுடனும் தேசியம் தொடர்புடையதாகிறது. ஒடுக்கப்படுவது இதற்குக் காரணமாக இருக்கலாம். அதே சமயத்தில் ஒடுக்குகிற நோக்கமும் தேசியத்திற்குக் காரணமாகலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நோக்கில் தேசியம் கட்டமைக்கப்படும்போது அதற்குரிய வகையில் ஒரு பண்பாட்டுப் பாரம்பரியம் கண்டுபிடிக்கப்படுகிறது என்பார் ஆப்ஸ்பாம்.[84] ஒரு திட்டமிட்டக் கற்பிதமான சமூகப் பொறியியலின் விளைபொருளே தேசம் என்றும் அவர் குறிப்பிடுவார். பிரெஞ்சுப் புரட்சிதான் பிரெஞ்சு தேசத்தை[85] உருவாக்

www.padippakam.com



கியது. ஏகாதிபத்தியத்திற்கெதிரான இந்திய சுதந்திரப் போராட்டந்தான் இந்திய தேசியத்தைக் கற்பித்தது. தேச உருவாக்கத்தில் வரலாற்றின் பங்கையும் நாம் இந்த நோக்கிலேயே பார்க்க வேண்டும். இன்றைய அரசியல் நோக்கில் ஒரு தெரிவு செய்யப்பட்ட வரலாற்றை ஒவ்வொரு தேசியஇயக்கமும் உருவாக்குகிறது. பண்டைய அரசர்களின் கொடிய சுரண்டல், ஒடுக்குமுறை எல்லாம் மறைக்கப்பட்டு அவர்கள் தேசிய வீரர்களாக உருவாக்கப் படுகிறார்கள். பாதி தொன்மமாகவும் பாதி புராணிக மாகவும் இது உருவாக்கப்படுகிறது.பண்டார வன்னியன், விஜயன், சிவாஜி எல்லாம் இப்படித்தான் உருவாக்கப் பட்டார்கள். முதலாளியத் தேசிய அரசுகள் உருவாகிற போது அரசையும் மக்களையும் இணைத்த அரச விசுவாசம், மத நிறுவனம் ஆகியவை சிதறுண்டு போகும் போது இவற்றின் மீதான விசுவாசங்கள் தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றிற்கு மாற்றீடு செய்யப்படுகிறது. குறியீடுகளின் தளத்தில் விசுவாசம் செயல்படுகிறது.

ஆக தேசம் என்பது அரசியல் ரீதியாக வரையறுக் கப்படுவது. அது வரலாற்றைத் தாண்டியதல்ல; மாறாக வரலாற்றுக்குட்பட்டது. வரலாற்று ரீதியாக வரையறுக் கப்படக்கூடியது. தேசப் போராட்டத்தை வெறும் வர்க்கப் போராட்டமாகச் சுருக்க முடியாது. ஆனால் அதே சமயத்தில் அது வர்க்க ஆய்வுகட்கு அப்பாற்பட்டது மல்ல.

## III

தேசிய இனப் பிரச்சினை குறித்த மார்க்சியச் சிந்தனை வரலாற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது, இன்றைய சூழலின் பின்னணியில் நாம் கவனம் குவிக்க வேண்டிய புள்ளிகளாகக் கீழ்க் கண்டவை நம் கண்ணில் படுகின்றன. அவை:

www.padippakam.com



(1) ஈழப் பிரச்சினை மற்றும் இந்திய ஒன்றியத்திலுள்ள தேசிய இனப்பிரச்சினைகள் குறித்துக் கருத்துக்கள் விவாதங்கள் மேற்கொள்ளும்போதும் இங்குள்ள மார்க்சியர்கள், "பிரான்சிலிருந்து அல்சேஸ் பிரிந்து போகும் பிரச்சினை வந்தபோது மார்க்ஸ் சொன்னது போல" அல்லது "போலந்துப் பிரச்சினையை லெனின் அணுகியதுபோல" என்கிற பாணியில் பேசுவது வழக்கம். வரலாற்றுச் சூழலும், உலக அரசியலும், உலக முதலாளியப் பொருளாதாரக் கட்டமைப்பும் முற்றிலும் வேறுபட்டுள்ள இன்றைய சூழலில் இத்தகைய அணுகல் முறை உதவாது. ஒப்பிட்டுப் பேசுவதற்கு எல்லா விதங்களிலும் பொருந்தி வரக் கூடிய என்றென்றைக்குமான மாதிரிகள் (Classical Models) ஏதும் கிடையாது. தேசிய இனப் புதிருக்கான சர்வரோக நிவாரணியான மாதிரிகளோ, மேற்கோள்களோ, அறிவுரைகளோ கிடையாது. இன்றைய தேசிய இன உணர்வு அடிப்படையிலான இயக்கங்கள் லெனின் வரையறுத்த மூன்று பிரிவினைகளுக்குள் அடங்காது. நம்முடைய பிரச்சினையை மேற்கு அய்ரோப்பா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் தேசிய இனப் பிரச்சினையுடனோ, இல்லை லெனின் காலத்திய கிழக்கு அய்ரோப்பிய நாடுகளைப்போல வளர்ந்துவரும் முதலாளியக் காலகட்டத்தின் தேசியத்துடனோ இல்லை ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை கோரும் காலனியப் பிரச்சினையோடோ ஒப்பிட முடியாது. லெனினது வகைப்பாட்டில் இரண்டாவது பிரிவில் அடங்கக்கூடிய அன்றைய ரசியா, ஆஸ்திரியா போன்ற பல்தேசிய இன நாடுகளின் பிரச்சினையோடு ஒப்பிடலாம். என்றால் கூட இரண்டு பெரும் வேறுபாடுகள் கவனத்திற்குரியவை. (I) இங்கேயுள்ள எந்தத் தேசிய இனப் பிரச்சினையும் வளர்ந்துவரும் முற்போக்கான முதலாளிய வர்க்கத்தால் கட்டமைக்கப் படுவதாகக் கொள்ள முடியாது. ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து வளரும் இன்றைய முதலாளியம், எந்த வகையிலும்

www.padippakam.com



தொடக்க கால முதலாளியத்தைப் போல எந்த ஒரு அம்சத்திலும் முற்போக்காக இல்லை. (2) ரசியாவில், ரசியத் தேசிய இனம் ஒடுக்கும் இனமாகவும் மற்றவை ஒடுக்கப்படும் இனங்களாகவும் இருந்தது போல இங்கே எந்த ஒரு தேசிய இனத்தையும் ஒடுக்கும் தேசிய இனமாகச்சுட்டிக் காட்ட முடியாது. மூலதனம், தொழில் நுட்பம், சந்தை ஆகிய மூன்றிலும் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்கும் இந்தியப் பெரு முதலாளிகள் எந்த ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்திற்குள்ளும் தங்கள் செயல் பாட்டை முடக்கிக் கொள்ளவில்லை. தமிழகத்திலுள்ள செட்டியார் அல்லது அய்யங்கார் அல்லது கவுண்டர் மூல தனங்கள் உட்பட அகில இந்திய அளவிலேயே தங்களது செயல் பாட்டையும் சந்தையையும் கொண்டிருக்கின்றன. ஒட்டு மொத்தத்தில் பார்சி, பனியா முதலாளிகளின் செல் வாக்கு அதிகமாக இருந்த போதிலும் அவற்றை ஒடுக்கும் இனமாகப் பார்க்க முடியாது. இந்தி பேசும் மக்களவை வரிடமும் அகில இந்தியத் தேசிய உணர்வு மிகுந்திருந்த போதிலும் அவர்கள் அனைவரும் ஒரு தேசமாக உருப் பெற்றிருக்கின்றனர் எனவும் சொல்ல முடியாது. இப் பெருமுதலாளிகள் செல்வாக்கு வகிக்கிற, அதிகாரங்கள் அனைத்தும் மத்தியில் குவிக்கப் பட்ட இந்து மயமான மத்திய அரசிற்கும் தேசிய இனங்களுக்குமிடையேதான் தேசிய இன முரண்பாட்டைப் பார்க்கிறோம். இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தய நவ காலனியச் சூழலின் பிரதானமான இந்த வேறுபாடுகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டே நாம் பார்க்க வேண்டும். நவ/அரை காலனியச் சூழல்களில் தேசியத் தன்மையுடன் கூடிய தொழில் வளர்ச்சி சாத்தியமேயில்லை எனச் **சமிர் அமின்** போன்ற மார்க்சியப் பொருளியல் அறிஞர்கள் குறிப்பிடு வது கவனிக்கத்தக்கது. தவிரவும் பிரதானமாய் ஒரு தேசிய இனமே இருக்கக்கூடிய ஒரு காலனிய/அரைக் காலனிய அரசமைவில் **மாவோ** போன்றவர்கள் வரைய றுத்த தேசிய முதலாளிகள் என்ற கருத்தாக்கத்தைப்

www.padippakam.com



பல்தேசிய இனஅரசாகிய இந்தியாவின்தேசிய இனமுரண் பாடுகளை விளங்கி கொள்ளப் பயன்படுத்துவதில் சிக்கல் இருக்கிறது. இன்றைய சூழலில் தேசிய ஒடுக்குமுறையின் பின்புலமாகத் தான் பெரு முதலாளிகள் இருக்க முடியுமே யொழிய தேசிய இன எழுச்சியை வழி நடத்தவோ, தலைமை தாங்கவோ அவர்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை.

(2) பொதுவான மொழி, தேச எல்லை, உளப்பாங்கு, பொருளாதார வாழ்வு என்பன போன்ற இறுக்கமான நிபந்தனைகளின் அடிப்படையிலான தேசிய இனங்களுக் கான வரையறையும் இன்று பொருந்தாது. ஸ்டாலின் காலததிலேயேகூட இவ் வரையறை எந்தப் பின்னணியில் உருவாக்கப்பட்டது என்பதை முன்பே விளக்கியுள்ளோம். பொதுமொழி என ஒன்று இல்லையாகையால் அகில இந்தியத் தேசியம் என ஒன்று கிடையாது எனச் சொல் வதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியம் பேசுகிற நாம் மேற்கண்ட வரையறையைத் தூக்கிப் பிடிப்பது வெறும் சந்தர்ப்பவாதமாகவே முடியும். ஏனெனில் இந்த வரையறையை நாம் வற்புறுத்தினால் பதினாறு தனித்தனி இனக்குழுக்கள் இணைந்து உருவாகி யுள்ள பொதுமொழி எனச் சொல்வதற்கு ஒன்றுமில்லாத நாகர்களை ஒரு தேசிய இனம் இல்லை என மறுப்பவர் களாகவும் அவர்களது சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் நியாயமற்றது எனச் சொல்பவர்களாகவும் ஆவோம். தவிரவும் பலமொழிகளைப் பேசிய பல நாடு களைச் சேர்ந்த யூதர்கள், 'இஸ்ரேல்' என்கிற ஒரு நாட்டை உருவாக்கி தொடர்பு விட்டுப்போன 'ஈப்ரு' மொழியை மீண்டும் பொதுமொழியாகப் புத்துருவாக்கம் செய்யும்போது நாம் ஏன் அதிகம் பேர் பேசுகிற 'இந்தி' மொழியைப் பொது மொழியாக உருவாக்கிக் கொள்ள முடியாது என்கிற அகில இந்தியத் தேசிய வெறியர்களின் வாதத்தையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருப்-

www.padippakam.com



போம். மேலும் மேற்கூறிய நிபந்தனைகளில் பெரும் பான்மை பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் கூட, குறிப்பாக ஒரே மொழி பேசுபவர்களாக இருந்தும்கூட இன்று பஞ்சாபிகளும் காஷ்மீரிகளும் மத அடிப்படையில் இரு இரு தேசிய இனங்களாகப் பிரிந்து கிடப்பதையும் பார்க்கி றோம்.

அதே சமயத்தில் ஒரே மதத்தினராக இருந்தும்கூட மேற்குப் பாகிஸ்தானியரும் கிழக்கு வங்கத்தினரும் ஒரு தேசிய இனமாக உருப்பெற இயலாமற் போனமையையும் ஒத்திணைத்துப் பார்க்கும்போதுதான் ''தேசம் என்பது ஒரு கற்பிதம் செய்யப்பட்ட சமூகம்; ஒரு தேசத்தின் பாரம்பரியம், வரலாறு என்பவை திட்டமிட்டு உருவாக் கப்பட்டவை; தேசிய இனப் போராட்டங்கள் தான் தேசங்களை உருவாக்குகின்றனவேயொழிய தேசங்கள் தேசிய இன உணர்வுப் போராட்டங்களை உருவாக்கு வதில்லை'' என்பன போன்ற தேசம் பற்றிய நவீன சிந்த னைகளின் முக்கியத்துவம் புரிகிறது. அரசு போலவே தேசமும் எல்லாக்காலங்களிலும் என்றென்றைக்கும் நிரந் தரமாய் இருந்து வந்ததில்லை. தேசம் என்பது ஓர் அரசியல் வரையறை.

இனக்குழுக்களாக மக்கள் சமூகங்கள் சிதறுண்டு கிடந் தபோது அவற்றிற்குள் வர்க்கங்கள் இருந்ததில்லை. ஒடுக் குமுறைக் கருவியான அரசும் இருந்ததில்லை. இரத்த உறவுகளின் அடிப்படையில் சமூகம் இயங்கியது; உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது நில எல்லை உணர்வு (territorial conciousness), மொழி உணர்வு போன்றவை அச் சமூகங் களில் இருந்ததில்லை. சமூகங்கள் வர்க்கங்களாக உருப் பெறும் போது அரசுகள் தோன்றுகின்றன. நில எல்லை உணர்வு வருகிறது. இத்தகைய சமூக மயமாக்கல் முயற்சி யினூடாகப் பிற இனக் குழுக்கள் கொடுமையாக ஒடுக்கப் பட்டு, அவர்களது நம்பிக்கைகள், மொழி, பண்பாடு

www.padippakam.com



எல்லாம் இரக்கமேயில்லாமல் நசுக்கப்பட்டுத் தன்வயப் படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. வளர்ச்சிய டைந்த உற்பத்தி முறை என்பது இம்முயற்சியில் பேருதவி புரிகின்றது. இக்கால கட்டத்தை இனக்குழுக்கள் விவசாய மயமாகும் (Peasantisation) காலம் எனலாம். இப்போது நில எல்லையின் அடிப்படையிலான மொழி உணர்வுகள் கட்டமைக்கப்படுகின்றன. "வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகத்து" என்கிற தொல்காப் பியப் பாயிரம் இந்தச் சூழலின் வெளிப்பாடேயாகும். நில எல்லையும், மொழியும் வியக்கத்தக்க அளவிற்கு இணைத்துப் பாடப்படுவது குறிப்பிடத்தக்கது. இத்த கைய மொழி-எல்லை உணர்வென்பது தேசிய இன உணர் வின் ஒரு தொன்ம மாதிரியேயாகும். பல்வேறு இனக் குழுக்களின் தனித்துவங்கள், தல மொழி, பண்பாட்டு வேறுபாடுகள் எல்லாம் நசுங்கிச் சிதையும் சோக ஓலங் களையெல்லாம் உள்ஒடுக்கி இந்த அகண்ட தமிழ்க் குரல் ஒலிப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே தேசிய இன உணர்வு என்பதையே முதலாளியக் கால கட்டத்தின் மேற்கட்டுமானமாகப் பார்ப்பது ஏற்புடையதல்ல. முதலா ளியக் கட்டத்தில் ஒரு தேசிய இனம் தன்னைத் தேசமாக அரசியல் ரீதியில் வரையறுத்துக் கொண்டு தேசிய அரசாக உருப்பெறுகிறது. நிலம், மொழி, அரசு என்கிற மூன்றும் ஒருங்கிணைவு பெறுகிறது. நாம் மேற்குறிப்பிட்ட சங்க காலச் சூழலில் நில எல்லை, மொழி ஆகியவை ஒருங்கிணைந்து உணரப்பட்டபோதிலும் இவை ஒற்றை அரசுடன் இணைத்துப்பார்க்கப்படாமல் மூவேந்தர் களுடன் இணைத்துப் பார்க்கப்படுவதற்கு நாம் ஏராள மான எடுத்துக் காட்டுகள் சொல்ல முடியும்.[26] முதலா ளியக் கட்டத்திலேயே முதன் முதலாக ஒரு வர்க்கம் (முதலாளிய வர்க்கம்) தன்னைத் தேசிய அடிப்படையில் வரையறுத்துக் கொள்கிறது. பண்டப் பொருளாதாரமும் சந்தையும் இந்தத் தேவையை அந்த வர்க்கத்திற்கு

தே—4.

www.padippakam.com



ஏற்படுத்துகிறது. தேசிய அரசின் தோற்றத்தை ஒரு தேதி குறிப்பிட்டு நாம் சொல்லிவிட முடியும். தேசிய இன உணர்வு மற்றும் தேசிய இனத்தின் தோற்றத்திற்கு நாம் அப்படி ஒரு தேதியைச் சொல்லிவிட முடியாது. தேசிய அரசு, தேசம், தேசிய இனம் ஆகிய அனைத்தையும் துல்லியமாக வேறுபடுத்தித் தேசிய அரசை மட்டுமே முதலாளியத்துடன் இணைத்துப் பார்க்காமல் எல்லாவற்றையும் ஒன்றாகவும் முதலாளியத்தின் வெளிப்பாடாகவும் பார்க்கும் தவறு எப்போதுமே நடந்து வந்திருக்கிறது.

இந்தக் கருத்தின் இன்னொரு வெளிப்பாடு சோசலிசக் கட்டத்தில் தேசிய உணர்வு இருக்காது என்பதும் தேசியப் போராட்டங்கள் நியாயமற்றவை, ஒடுக்கப்பட வேண்டியவை என்கிற வாதமுமாகும். இது எத்தனை தூரம் பொய்யானது, தவறானது என்பதற்கு இன்றைய ரசிய மற்றும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகளின் வரலாறு நமக்குச் சான்று பகர்கிறது. இதையெல்லாம் சொல்வதால் தேசிய இன உணர்வு உருவாக்கத்தில் மொழி, நில எல்லை, வரலாறு, பண்பாடு ஆகியவற்றிற்குப் பங்கே இல்லை என்பதல்ல. திட்டமிட்டு உருவாக்கப்படும் தேசிய உணர்வு என்பது இவற்றின் அடிப்படையில்தான் உருவாக்கப்படுகிறது. ஆனால் இவற்றை வறட்டுத் தனமாய் அவசிய நிபந்தனைகளில் ஒன்றாய்க் கொள்ள வேண்டியதில்லை என்பதுதான். தவிரவும் தேசிய உணர்வுக் கட்டமைப்பில் இந்த நிபந்தனைகளில் எந்த ஒன்று குவிமையமாக மாறுகிறது என்பது அந்தந்த அரசியற் சூழலில் வேறுபடுகின்றது. பஞ்சாபில் மதமும் எழுத்தும் வடிவமும் ('குர்முகி') குவி மையமாகிறது. கிழக்கு வங்கத்தில் மரபினம் குவி மையமாகிறது. தமிழக வரலாற்றைப் பொறுத்த மட்டில் வடமொழி ஆதிக்கத்திற்கெதிரான எதிர்ப்புக் குரல் தமிழுணர்வாக[87] வெளிப்பட்டு வந்திருக்கிறது. எனவே தமிழ்த் தேசிய உணர்வுக் கட்டமைப்பில் மொழியைக் குவி மையமாகப்படுத்துவது

www.padippakam.com



எளிதாகிறது. இந்த நோக்கில் இங்கே தமிழக வரலாறும் கட்டமைக்கப்பட்டது.

(3) அப்படியானால் அகில இந்தியத் தேசியம் ஒன்றையும் இப்படிக் கற்பிதமாக கட்டமைத்துவிட முடியுந்தானே? அப்படித்தான் ஆங்கே மையஅரசும் பின்னணியிலுள்ள பெரு முதலாளிகளும் ஏகாதிபத்தியங்களும் முயல்கின்றன.[88] 1947க்கு முன்பு காலனியச் சூழலில் இதற்கொரு நியாயமும் இருந்தது. ஒட்டுமொத்தமாய் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராய் மக்களைத் திரட்டுவது அன்று அவசியமாய்இருந்தது. அந்த நோக்கில் இங்கே அகில இந்தியத் தேசிய உணர்வு கட்டமைக்கப்பட்டது. தேசிய வரலாறு எழுதப்பட்டது. தேசிய வீரர்கள் உருவாக்கப்பட்டனர்.[89] வளமான வரலாறு, பண்பாடு, மொழி ஆகியவற்றின் அடிப்படையிலும் தேசிய இன உருவாக்கங்களின் அடிப்படையிலும் பிளவுண்டு கிடந்த இந்தியாவில் அகில இந்தியத் தேசிய உணர்வைக் கட்டமைக்க இந்து மதம் பெரிய அளவில் பயன்பட்டது. 'பாரதம்' 'ஆரிய சம்பத்து' போன்ற விடுதலைப் போராட்ட காலச் சொல்லாட்சிகள் கவனிக்கத்தக்கன. ஏகாதிபத்தியத்திற்கெதிராக இருந்த போதிலும் இந்த அடிப்படையில் இந்திய முஸ்லிம்களும், சீக்கியர்களும் தனியாகத் தங்களை மதரீதியில் அடையாளம் கண்டு கொள்ளும் நிலையும் ஏற்பட்டது. எனினும் சனரஞ்சகச் சனநாயக உணர்வான ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது இந்துமத அடிப்படையிலான அகில இந்தியத் தேசிய உணர்வுடன் ஒருங்கிணைக்கப் பட்டு அன்றைய விடுதலைப் போராட்டக் கருத்தியல் உருவாக்கப்பட்டது[90] இந்த அகில இந்திய உணர்வின் எச்ச சொச்சம் இன்னும் கூட மக்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்குடன் இருப்பதையும் மறுத்துவிட முடியாது.[91] மேலும் மேலும் இந்துமத வெறியைத் தூண்டி விடுவதன் மூலமும், இந்திய ஒருமைப்பாடு என்பதையும் இந்து நலம் என்பதையும் ஒன்றாகக்

www.padippakam.com



காட்டி இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்பது இந்து நலனிற்கு எதிரானது என்கிற அடிப்படையில், இன்றைய ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்கும் பெரு முதலாளிகள், அதிகாரவர்க்கம், மதவாத சக்திகள் முதலியன அகில இந்தியத் தேசிய உணர்வைக் கட்டமைக்க முயல்கின்றன.

ஆனால் ஒரு அரை/நவ காலனியச் சூழலில் ஒரு பல் தேசிய இன நாட்டிற்குள் இன்று அகண்ட தேசியம் என்பது சாத்தியமேயில்லை. இந்த நாடுகள் அனைத்தும் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்த ஒரு வளர்ச்சிப் பாதையை மேற்கொள்கின்றன. இது கடுமையான ஏற்றத்தாழ்வான வளர்ச்சிக்கும் போராட்டங்களுக்கும் ஒடுக்குமுறைக்கும் சனநாயக உரிமைகள் பறிக்கப்படுவதற்கும் மையப்படுத்தப் படுதலுக்கும் பெருந் தேசிய/பெரு மத/பெரு இன வெறிகளுக்கும் காரணமாகின்றது. எனவே ஒரு பல தேசிய இன-நவ/அரைக்காலனிய நாட்டில் இந்த வெறிக்கும் இந்த வெறியை ஆதாரமாகக் கொண்டிருக்கும் மைய அரசிற்கும் எதிராகத் தேசிய இனங்களின் எழுச்சி தவிர்க்க இயலாததாகிறது.[92] இந்தப் பொருளாதாரச் சுரண்டல்களுக்கெல்லாம் பின்புலமாக ஏகாதிபத்தியம் இருந்தபோதிலும் முழுமையான காலனி ஆட்சியின்போது அது வெளிப்படையாக மக்கள் முன் நின்றது போல இப்போது நிற்கவில்லை. தவிரவும் இன்றைய சனநாயக, இன ஒடுக்குமுறைகளில் ஏகாதிபத்தியங்களின் பங்கு எள்ளளவும் நேரிடையாக இல்லை. எனவே ஏகாதிபத்தியத்திற்கெதிரான அரசியல் விடுதலை என்கிற முழக்கத்தின் கீழ் அகில இந்தியத் தேசியம் கட்டமைக்கப்படுவதும் இன்று சாத்தியமில்லை. இன்றைய சமூக/அரசமைவின் மூலம் பெரும் பலன்களைக் குவித்துக் கொள்ளும் ஆளும் வர்க்கம் தனக்கும் மக்களுக்குமிடையேயான இடைவெளியை இட்டு நிரப்பும் பாலமாகவே அகில இந்தியத் தேசிய

www.padippakam.com



உணர்வு மற்றும் இந்து மத வெறியைப் பயன்படுத்துகிறது.

பெரும்பான்மையான மக்களுடன் ஒப்பிடும்போது இன்றைய அமைப்பிற்குள் பொருளாதாரப் பலன்களை ஒப்பீட்டளவில் அதிகமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய இன்னொரு வர்க்கம் அமைப்பு ரீதியாய்த் திரட்டப்பட்ட இந்தியத் தொழிலாளி வர்க்கத்தின் மேற்பகுதி மற்றும் மத்தியதர வர்க்கமாகும்.[93] ஏகாதிபத்தியங்களிலுள்ள 'பிரபுத்துவத் தொழிலாளர் (Labour Aristocracy)' என லெனினால் வரையறுக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் மூன்றாம் உலகப் பிம்பங்களாகிய இவர்களின் பிரதிநிதிகளாக விளங்குவோர் இடது/வலது மைய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சியினர். தேசிய ஒருமைப்பாடு குறித்து இவர்கள் பெரு முதலாளிகளையும் மதவாத சக்திகளையும் காட்டிலும் அதிகக் கூச்சல் போடுவது கவனிக்கத்தக்கது. சுயநிர்ணய உரிமை முழக்கமானது பாட்டாளி வர்க்கத்தைத் தேசிய இன அடிப்படையில் பிளவு இவர்கள் படுத்துவதாகும் என்கிற வாதத்தின் அடிப்படையில் இந்தத் தரகு வேலையைச் செய்கின்றனர். ஆனால் பிரச்சினை இனி பிளவுண்டு போவதல்ல. ஏற்செனவே பிளவுண்டு கிடப்பதுதான் பிரச்சினையே. தேசிய இன ஒடுக்குமுறை இதற்குக் காரணமாகியுள்ளது. இதனை ஒழிப்பதும் சுயநிர்ணய உரிமைமூலம் உரிய நம்பிக்கையை ஒடுக்கப்பட்டத் தேசிய இனங்களுக்கு அளிப்பதும் மட்டுமே தேசிய இன அடிப்படையில் தொழிலாளர் பிளவுறுவதைத் தடுக்க ஒரே வழி என்பதை இவர்கள் சிந்திப்பதில்லை.

(4) தேசிய அரசு உருவாக்கத்தில் தொடக்க கால முதலாளியத்தின் பங்கை வலியுறுத்தும் மார்க்சியத்தைக் **கன்னோலி, லெனின்** போன்றோர் காலனிய விடுதலைக் காலத்தில் பாட்டாளி வர்க்கமும் கூட தேசிய விடுதலைப்

www.padippakam.com



போராட்டத்திற்குத் தலைமை தாங்க முடியும் என விரிவு படுத்தினார். லெனினுக்குப் பிந்திய காலங்களில் பாசிசமும் கூடத் தேசியஇன உணர்வைப் பயன்படுத்தமுடியும் எனப் பார்த்தோம். எனவே தேசிய இனஉணர்வு, சனநாயக உணர்வு போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உணர்வாகப் பார்ப்பதில் பொருளில்லை என்பது புரிகிறது.[94] அப்படியானால் தேசியம் போன்ற உணர்வு எப்படி வெவ்வேறு வர்க்க நலன்களோடு இணைகிறது என்கிற கேள்வி முக்கியமாகிறது. இதனைச் சற்று விளக்குவோம்.

சமூக ஆய்வில் உற்பத்தி முறை/ சமூக உருவாக்கம் என்கிற இரு கருத்தாக்கங்களைப் பயன்படுத்துவது வழக்கம். தூலமாக வெளிப்படும் ஒரு சமூக உருவாக்கத்தில் நுண்மையாகப் பல உற்பத்தி முறைகள் வெளிப்படும். இவற்றில் ஒன்று ஆதிக்க உற்பத்தி முறையாக இருக்கும். இந்த ஒவ்வொரு உற்பத்தி முறைகளிலும் பல்வேறு வர்க்கங்கள் ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்கின்றன. தூலமான சமூக உருவாக்க மட்டத்தில் இது ஆளும் குழுமம் X மக்கள் என வெளிப்படுகிறது.

சமூக நெருக்கடிகள் முற்றாத நிலையான காலகட்டங்களில் சமூக உருவாக்கம் என்பது அதற்குள்ளுள்ள உற்பத்தி உறவுகளை வழக்கமான வழிமுறைகளில் மறுஉற்பத்தி செய்து வருகிறது. ஆளும் குழுமத்திற்கும் மக்களுக்குமிடையேயான முரண்பாடுகள் கருத்தியல் மட்டத்தில் சமனப்படுத்தப்படுகின்றன அதாவது 'மக்கள்' என்கிற வகையில் தன்னை ஒடுக்கும் ஆளும் குழுமத்துடன் தனக்குள்ள முரண்பாடுகளின் அடிப்படையிலான **சனரஞ்சகச் சனநாயகக் கருத்தியல்** (Popular Democratic Ideology)[95] என்பது ஆளும் கருத்தியலுடன் ஒருங்கிணைக்கப்படுகிறது. இரண்டிற்குமிடையேயான ஒருமை ஒத்திசைந்த ஒருமையாக (hormonious unity)

www.padippakam.com



இருக்கிறது. சிதைந்த ஒருமையாக (ruptural unity) மாறவில்லை.[96]

வர்க்கப் போராட்டங்களின் விளைவாய் இந்தச் செயலூக்குமுள்ள ஒருங்கிணைவு (articulation) அதாவது ஒத்திசைந்த ஒருமை சிதைகிறது. இப்போது சனரஞ்சகச் சனநாயகக் கருத்தியல் ஒப்பீட்டளவில் சுயேச்சையாக நிற்கிறது. இந்தச்சந்தர்ப்பத்தில் சமூகத்தில் நிலவும் பல்வேறு வர்க்கங்களும் தங்கள் தங்களது வர்க்கக் கருத்தியலுடன் சனரஞ்சகச் சனநாயகக் கருத்தியலை ஒருங்கிணைக்க முயலும். ஒருங்கிணைக்க முயலும் எந்த ஒரு வர்க்கத்தின் கருத்தியலும் தன்னை அன்றைய ஆளும் குழுமத்துடனும் அதன் கருத்தியலுடனும் தீவிரமாய் முரண்பட்டு நிற்பதாய்க் காட்டிக் கொள்ளும். இவ்வாறு பல்வேறு வர்க்கக் கருத்தியல்களும் தங்களது வர்க்கக் கருத்தியற் சொல்லாடலுக்குள் சனரஞ்சகச் சனநாயக கருத்தியலை ஒருங்கிணைக்க முயலுவதையே கருத்தியல் மட்டத்தில் நடக்கும் வர்க்கப் போராட்டம் என்கிறோம். உற்பத்திமுறை என்கிற மட்டத்தில் இது பொருளாதார வர்க்கப் போராட்டங்களாக நடக்கும். இந்தப் போராட்டத்தில் எந்த ஒரு வர்க்கமாவது தனது கருத்தியற் சொல்லாடலுக்குள் சனரஞ்சகச் சனநாயகக் கருத்தியலை வெற்றிகரமாக இணைக்கும்போது அதன் மேலாண்மை (hegemony] சமூகத்தில் நிறுவப்பட்டுள்ளதாகக் கொள்கிறோம். இனி அவ்வர்க்கம் அரசியலதிகாரத் துணையுடன் தனது பொருளாதார நலன்களை மேலும் வன்மையாக நிலைநிறுத்திக் கொள்ளும்.[97]

ஆக தேசியம் போன்ற ஒரு சனரஞ்சகச் சனநாயக கருத்தியற் கூறு (ideological element) தன்னளவில் ஒரு வர்க்க உள்ளடக்கத்தைப் பெற்றிருக்கிறது எனச் சொல்ல முடியாது. தூலமான ஒரு கருத்தியற் சொல்லாடலுடன் ஒருங்கிணைக்கப்படும்போதே அது வர்க்க உட்பொருளைப் பெறுகிறது. வியட்நாமிலும் கியூபாவிலும் நிகர

www.padippakam.com



குவாவிலும் தேசிய உணர்வு என்கிற கருத்தியற்கூறு இடதுசாரிச் சோசலிசக் கருத்தியற் சொல்லாடலுக்குள் ஒருங்கிணைக்கப்பட்டது. ரீகன் தனது விரிவாக்க நடவடிக்கைகளின் போதும், தாட்சர் ஃபாக்லந்துத் தீவுகளைக் கைப்பற்றிய போதும் தேசிய உணர்வை ஏகாதிபத்தியக் கருத்தியற் சொல்லாடலுக்குள் கொண்டுவந்தது குறிப்பிடத் தக்கது.

பாசிசம் தோன்றிய வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்போது அது ஏகபோக முதலாளியத்தால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதல்ல என்பது தெரிகிறது. பல சந்தர்ப்பங்களில் ஏகபோக முதலாளியம் தொடக்கத்தில் பாசிசத்துடன் ஒத்துப்போகவில்லை என்பதையும் ஏகபோக முதலாளியம் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள எல்லா நாடுகளிலும் பாசிச நாசிச வடிவங்களையே எடுத்ததில்லை என்பதையும் **லக்லாவ், பவுலன்ட்சாஸ்** போன்றோர் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத் தக்கது.[98] முதல் உலகப்போர், வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் ஆகியவற்றைத் தொடர்ந்து அன்றைய செர்மனியில் கடும் நெருக்கடிகள் ஏற்பட்டன. ஒரு பக்கம் அன்றைய ஆளும் குழுமத்தில் இடம் பெற இயலாத ஏகபோக முதலாளிய வர்க்கம் எப்படியாவது தனது மேலாண்மையைச் சாதிக்க முயற்சித்துக் கொண்டிருந்தது. நெருக்கடியின் விளைவாக அன்றைய ஆளும் கருத்தியற் சொல்லாடலின் பிடியிலிருந்து விடுபட்டுச் சனரஞ்சகச் சனநாயகக் கருத்தியலில் சுயேச்சையாகவும் தீவிரமாகவும் இயங்கியது. இந்தச் சூழலில் அங்கே வளர்ந்து வந்துகொண்டிருந்த பாசிசம் அன்றைய செர்மானிய மக்களை இனம், தேசிய உணர்வு, யூத வெறுப்பு, பாராளுமன்ற ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் திரட்டியது. பாசிசம் தன்னிலிருந்து முற்றாக விலக்கிக் கொண்ட ஒரே கருத்தியல் பாட்டாளி வர்க்கத்தினுடையதுதான். மா-லெ கருத்துக்

www.padippakam.com



களை எந்த விதத்திலும் தன்னுள் அனுமதிக்காததோடு யூத எதிர்ப்பிற்கு இணையாக மார்க்சிய எதிர்ப்பையும் முன் வைத்தது.

அன்றைய செர்மானியன் ஒரு ஆரியனாக விளிக்கப் பட்டான். ஏற்கெனவே அங்கு மிகவும் வளர்ச்சி பெற்றிருந்த பாட்டாளி வர்க்கக் கட்சிகள் தங்களது மார்க்சிய லெனினியக் கருத்துக்களை வர்க்கத் தூய்மை கெடாமல் பேணும் முயற்சியில் அன்றைய சனரஞ்சகச் சனநாயகக் கருத்தியலுடன் தங்களது பாட்டாளி வர்க்கக் கருத்தியலை ஒருங்கிணைக்க முடியாமல் தோற்றனர். அதே சமயத்தில் இந்த ஒருங்கிணைப்பைப் பாசிசம் மிகச் சரியாகவும் நுணுக்கமாகவும் செய்து முடித்தது. பாசிசச் சொல்லாடலுடன் சனரஞ்சகச் சனநாயகச் கருத்தியல் இணைக்கப்பட்டவுடன் அதுவரை ஆளும் குழுமத்தில் இடம்பெற இயலாமலிருந்து வந்த ஏகபோக முதலாளியம் மார்க்சிய எதிர்ப்பைக் கடைப்பிடித்து வந்த பாசிசத்துடன் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டது. கிட்டத்தட்ட 1940 களுக்குப் பின்பு தமிழகத்தில் திராவிட இயக்கங்கள் வளர்ச்சி பெற்றதையும் பொதுவுடைமைக் கட்சிகள் தங்கள் பிடிமானங்களை இழந்ததையும் இத்துடன் ஒப்பிடலாம். பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் போன்ற இடங்களில் இன்று பொதுவுடைமையாளர் தங்கள் வேர்களை இழந்து நிற்பதுங்கூட இப்படித்தான்.

காங்கிரஸ் கட்சியின் தோற்றத்தைக்கூட நாம் இப்படித்தான் பார்க்க வேண்டும். தரகு முதலாளிகள் அல்லது தேசிய முதலாளிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாக நாம் அதனைப் பார்க்க வேண்டியதில்லை. ஏகாதிபத்திய ஆட்சியாளருடன் முரண்பட்டிருந்த மக்களின் சனரஞ்சகச் சனநாயக கருத்தியலுக்கு அன்றைய காங்கிரஸ்கட்சி வடிவு கொடுத்தது.[10] வருணா

www.padippakam.com



சிரமம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை ஏற்றுக் கொண்டு இந்து சனாதனப் பின்னணியில் அகில இந்தியத் தேசியத்தைக் கட்டமைத்தது. பாட்டாளி வர்க்கக் கருத்தியலிலிருந்து தன்னை முழுமையாக விலக்கிக் காட்டிக் கொண்டது. பெரும்பாலும், குறிப்பாக காந்திக்குப் பின் அது தன்னை ஒரு மிதவாத அமைப்பாகவே நிலைநிறுத்திக் கொண்டது. இந்த அடிப்படையில் மத்திய தர வர்க்கம், உயர்சாதிப்படிப்பாளிகள், விவசாயிகள் ஆகியோரை உள்ளடக்கிய சனரஞ்சகச் சனநாயகக் கட்சியாக அது பரிணமித்தது. வளர்ந்து வந்த மக்கள் எதிர்ப்புகளைக் கவலையோடு கவனித்து வந்த, அகில இந்தியச் சந்தையில் குறியானத் **தரகு முதலாளியம்** விடுதலை என்பதுத் தவிர்க்க இயலாதுபோகும் பட்சத்தில் காங்கிரஸ் கட்சியிடம் ஆதிக்கம் இடம் பெயர்வதே தனது நலனுக்கு ஆபத்தில்லாத ஒன்று என்பதால் ஆங்கில ஆட்சியுடனும் காங்கிரஸ் கட்சியுடனும் ஒரே சமயத்தில் சமரசமான உறவைக் கடைப்பிடித்து வந்தது. நெருக்கடி அதிகமாக அதிகமாகக் குறிப்பாக விவசாய, தொழிலாளர் எழுச்சி வளர வளரத் தரகு முதலாளியம் தன்னை முழுமையாகக் காங்கிரசுடன் இணைத்துக் கொண்டது. 1947 ஆட்சி மாற்றத்தோடு இந்த ஒருமை முழுமை அடைந்தது.

தமிழகத்துத் **'திராவிட'** **இயக்கங்கள்**, ஆந்திரத்துத் **தெலுங்குதேசம், அஸ்ஸாம் கணபரிஷத்** போன்றக் கட்சிகளையும்கூட நாம் இப்படித்தான் அணுக வேண்டும். தல முதலாளி வர்க்கங்களால் தலைமை தாங்கப்பட்டு அல்லது அவர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கட்சிகளாக இவற்றைப் பார்ப்பதில் சிக்கல் இருக்கிறது. மேலும் மேலும் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து தரகுத் தன்மை அடைந்துகொண்டும் அகில இந்தியச் சந்தையை அடிப்படையாகக் கொண்டும்செயல்பட்டுவரும் இப் பெரு முதலாளிகள் இத்தகைய தேசிய உணர்வுகளை

www.padippakam.com



ஊக்குவிப்பர்என எதிர்பார்க்க இயலாது. வளர்ந்து வரும் பெரு விவசாயச் சக்திகள், மத்தியதர வர்க்கம், வேலை இல்லாத இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோரே இந்தத் தேசிய இன எழுச்சிகளில் முன்னோடியாக இருந்து வருகின்றனர். எனினும் இக் கட்சிகளுக்குத் தலைமை தாங்கிய சக்திகள் ஆளும் வர்க்கங்களுக்கு ஆபத்தில் லாத கவர்ச்சிவாத (Populist) சக்திகளாகவும் பாட் டாளி வர்க்கக் கருத்தியலை முற்றாக ஒதுக்கியவர்களாக வும் இருந்த சூழலில், ஒட்டுமொத்தமான மக்கள் எழுச்சி களின் வடிகால்களாக இருந்த இந்தக் கட்சிகளைப் பெரு முதலாளியின் வர்க்கம் பெரிய எதிரியாகப் பார்க்கவில்லை. தவிரவும் தலைமை தாங்கிய சக்திகள் மாநில ஆட்சி களில் பங்கேற்று ஆட்சி என்பதையே மூலதனம் திரட்டும் கருவியாக ஆக்கிக் கொண்ட பின்னர் மேலும் மேலும் தங்கள் தேசியத் தன்மையை இழந்து மைய ஆட்சிக்குக் கட்டுப்பட்டுப் போகப் போகப் பெரு முதலாளி வர்க்கம் இவர்களை முற்றிலும் ஆபத்தற்றவர்களாக ஏற்கத் தொடங்கிவிட்டது. தேசிய இன எழுச்சியின் பாது காப்பான வடிகால்களாகவும் இவர்களைப் பயன்படுத்தத் தொடங்கியது. இந்த நிலையில் இன்று தேசிய இன உணர்வு அடிப்படையில் இங்கெல்லாம் ஒரு மாற்று அணி கள் தோன்றத் தொடங்கியுள்ளன. அஸ்ஸாமில் அய்க்கிய விடுதலை முன்னணி (ULFA), பஞ்சாபில் தீவிர இயக்கங் கள், தமிழகத்தில் நெடுமாறன், மணியரசன், பெருஞ்சித் திரனார் போன்றோரின் இயக்கங்கள் ஆகியவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாய்ச் சொல்லலாம்.

5) தேசிய இனப் பிரச்சினை குறித்த வறட்டுத்தன மான வர்க்க வாதத்திற்கு எதிரானக் கலாச்சார முதன் மைக் கருத்து முசலிய ஆபத்திற்குள் விழுந்துவிடலா காது என்பதை முன்பே வலியுறுத்தினோம். தேசம் என்பது ஒரு அரசியல் ரீதியான வரையறை. தேசிய இனத் தின் தொன்மை வடிவத்தை அடைவதற்கு முன்பான

www.padippakam.com



இனக்குழுச் சமூகங்கள் வர்க்கமற்ற ரத்த உறவுச் சமூகங்களாக இருந்தன. வர்க்கமாக உருப்பெறும்போதுதான் நில எல்லை சார்ந்த மொழி அல்லது மத அடிப்படைகளில் தேசிய இனங்களின் தொன்ம மாதிரிகள் தோன்றுகின்றன என்பதையும் மீண்டும் நினைவுறுத்திக் கொள்வோம். எனவே வர்க்க உணர்வுகளிலிருந்து ஒப்பீட்டளவில் தேசிய உணர்வு சுதந்திரமாக இருப்பதென்பது வர்க்கப் போராட்டத்தில் தேசிய இனம் நடுநிலையாக இருக்கிறது என்கிற பொருளிலல்ல. ''தேசிய இனப்பிரச்சினை என்பது ஒப்பீட்டளவு சுதந்திரமும் இல்லாமல் **முற்று முழுதாய்** வர்க்கப் பிரச்சினைக்குக் கீழ்ப்படிந்தது'' என்கிற கூற்றில்[100] தொனிக்கும் வறட்டுத்தனத்ததை மறுப்பதென்பது தேசியப்பிரச்சினை வர்க்கப் பகுப்பாய்விற்கே அப்பாற்பட்டது எனச்சொல்வதல்ல. தேசிய வரையறையில் வரலாறு, பண்பாடு என்பன திட்டமிட்டுக் கட்டமைக்கப் படுவதுதான் எனச்சொல்வது தேசியம் என்பது வரலாற்றுக்கு அப்பாற்பட்டது (Transhistorical) எனச் சொல்வதற் கொப்பல்ல. மாறாகத் தூலமாக வரலாற்றுப் பின்னணியில் வரையறுக்கப்பட்ட வர்க்கச் சேர்க்கையிலேயே தேசியம் கட்டமைக்கப்படுகிறது. அரசதிகாரத்திற்கான போராட்டத்துடன் அது இணைநதது. அரசியலதிகாரத்திற் கெதிரான ஒவ்வொரு தேசிய இனப் போராட்டத்தின் போதும் தேசம் என்பது வெறும் இனம் சார்ந்து வரையறுக்கப்பட்டதில்லை. மாறாக அது அரசியல் ரீதியாகவே வரையறுக்கப்பட்டிருக்கிறது. முதல் தேசிய இன அரசுருவாக்கப் போராட்டமான பிரெஞ்சுப் புரட்சியில் பிரான்சு தேசம் அட்படித்தான் வரையறுக்கப் பட்டது. பிரெஞ்சு மொழி பேசும் பிரெஞ்சு இனம்என்கிற அடிப்படையில் பிரான்சு தேசம் வரையறுக்கப்படவில்லை மாறாகப் பிரெஞ்சு அரசக் குழுமமும், நிலப்பிரபு வர்க்கமும் நீக்கப்பட்டு அங்கே பிரெஞ்சுத் தேசிய இனம் வரையறுக்கப்பட்டது. எனவே தேசிய இன வரையறையில் எந்தெந்த வர்க்கங்களை நீக்குகிறோம் எநதெந்த

www.padippakam.com



வர்க்கங்களை உள்ளடக்குகிறோம் என்பது மிக மிக முக்கியமாகும். எனவே தேசிய இன உணர்வை முன்னெடுத்துச் செல்வோர் வர்க்க ரீதியாய் நீக்கவேண்டியவர்களையும் உள்ளடக்கப்படவேண்டியவர்களையும் வரையறுத்துக் கொண்டு பயணத்தைத் தொடங்குவது அவசியம். அந்த வகையில் இன்றைய மூன்றாம் உலக நவ/அரைக் காலனியச் சூழலில் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்கும் தரகுத்தன்மை மிகுந்து வரும் பெரு முதலாளிகள் தேசிய இன வரையறையிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்கள். இந்தியச் சூழலில் தேசிய இனங்களை ஒடுக்குகிற அகில இந்தியத் தேசிய உணர்வைக் கட்ட இந்து மதப் பின்னணியைப் பயன்படுத்துகிற இந்துப் பெருமத வாதச் சக்திகளும் நமது வரையறையிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்களேயாகும். விவசாயிகள், சிறு முதலாளிகள், மத்தியதர வர்க்கம், வேலை இல்லாதோர், மாணவர்கள், மதச் சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோர் நமது வரையறையில் உள்ளடக்கப்பட வேண்டியவர்கள்.[101] தாழ்த்தப்பட்டவர்களுக்கும் சிறுபான்மையினருக்கும் இங்கே தேசிய இன உணர்வு குறைவாக இருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.[102] இப்படிக் குற்றம் சுமத்தி ஒதுக்குவதைக் காட்டிலும் அதற்கானத் தூலமானக் காரணங்களை ஆராய்வது முக்கியம். அகில இந்திய தேசியம் போலவே இங்கே தமிழ்த் தேசியமும் உயர் சாதியினராலேயே கட்டமைக்கப்பட்டு வந்திருக்கிறது. பார்ப்பன— வெள்ளாள முரண்பாடுகளின் அடிப்படையில் இங்கே நூறாண்டுகளாகத் தமிழ்த் தேசியம் கட்டமைக்கப்பட்டுள்ளது பற்றியும் இந்த இயக்கங்களின் உயர் சாதித் தலைமை குறித்தும் **பேராசிரியர் சிவத்தம்பி** போன்றோர் கூறியுள்ளக் கருத்துக்கள் முற்றிலும் புறக்கணிக்கத் தக்கதல்ல.[103] தொடக்கத்தில் தமிழ்த் தேசிய இனம் அகில இந்தியத் தேசியம் போலவே ஒரு இந்து மதப் பின்னணியில்— ஆனால் பார்ப்பனரை மட்டும் விலக்கிக் கட்டமைக்கப்பட்டதும்

www.padippakam.com



கவனிக்கத்தக்கது. தந்தை பெரியார் இதற்கொரு விதி விலக்கெனினும் இது இன்றுவரை தொடரவே செய்கிறது.[104] எனவே இத்தகைய நிலைகளைத் தவிர்த்துத் தாழ்த்தப்பட்டவர் மற்றும் சிறுபான்மையினரின் நம்பிக்கையைப் பெறும் வண்ணம் தேசிய இனப் போராட்டங்களில் முழக்கங்கள் முன் வைக்கப்படுவதும்[105] நம்பிக்கையூட்டும் வகைகளில் அவர்கள் இயக்க நடவடிக்கைகளில் பங்கேற்கும் சூழலை ஏற்படுத்துவதும் முக்கியமாகும். இந்த வகையில் நாம் நம்மை வர்க்கரீதியாய் வரையறுத்துக் கொண்டு அதற்குரியக் கருத்தியலைத் தேசிய உணர்வுடன் ஒருங்கிணைத்து கருத்தியற் சொல்லாடலை உருவாக்கும்போதே இன்றையத் தேசிய இன உணர்வு அடிப்படையிலான போராட்டங்கள் சனநாயகப் போராட்டங்களாகவும் சமத்துவத்தை நோக்கிய முயற்சியாகவும் அமையும். இல்லையேல் வேறு பல மூன்றாம் உலக நாட்டுத் தேசிய இயக்கங்களைப் போலவே இன்றுள்ள நிலையைக் காட்டிலும் கொடிய சனநாயக மற்ற பாசிச உருவாக்கததிற்கும் அதற்கான நியாயப் பாட்டிற்கும் மட்டுமே வழிவகுக்கும். □

## மேற்கோள்கள்

1. கட்டுரைப் போக்கில் பின்னர் இது விரிவாய் விளக்கப் படுகிறது.
2. எந்த அளவிற்கு இந்நாடுகள் சோசலிச அமைப்புக்களாக உள்ளன, சனநாயக உரிமைகளை வழங்கியுள்ளன என்கிற விவாதத்தை இப்போது ஒத்தி வைப்போம்.
3. Quoted in RONALDO MUNCK, the Difficult Diologue, OUP, 1986, PP. 110, 111.

www.padippakam.com



4. MUNCK, P. 112.

5. புதுக் காலனியம் மற்றும் அரைக் காலனியத்திற்கிடையேயான நுண்மையான வேறுபாடுகள் இக்கட்டுரையில் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவில்லை.

6. எ—டு. : கூட்டுச் சேரா நாடுகளின் பாண்டுங் மாநாடு (1955).

7. MUNCK, P. 117.

8. Amalendu Guha, The Indian National Question A conceptual frame, EPW, July 3, 82.

Amalendu Guha, Pan Indian and Regional in a Historical Perspective, Social Scientist, Feb. 84.

இன்றைய சூழலில் லெனினது சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைக் காட்டிலும் அதை மறுத்த ரோசா லக்சம்பர்க்கின் கருத்தே ஏற்புடையது என்கிறார் குகா.

9. சென்ற ஆகஸ்டு 11, 1990 அன்று திண்டிவனத்தில் நடைபெற்ற மக்கள் கல்வி இயக்கத்தின் தமிழ் வழிக் கல்வி மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய திரு. மணியரசன், மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவியே என்கிற வறட்டுச் சனாதன மார்க்சியப் பார்வையை மறுத்து "மொழி என்பது ஒரு கலாச்சார இனத்தின் ஆன்மா' என்கிற கருத்துபடப் பேசியது குறிப்பிடத்தக்கது. வறட்டுப் பொருளியல் பார்வைக்கு எதிரான பண்பாட்டு முதன்மை வாதமும் ஆபத்தானதே. 'மொழி என்பதை வர்க்கப் போராட்டத்தின் களன்களில் ஒன்றாகப் பார்ப்பதே சரியாக இருக்க முடியும். 'இதனைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விளக்கமாய்ப் பார்ப்போம். மேலும் தொழிலாளர் போராட்டங்களின் போது 'பாடுபடும் தொழி

www.padippakam.com



லாளிக்கு இனமில்லை மொழியில்லை' என முழக்கம் வைக்கப்படுவதைக் கேலி செய்து மணியரசன் தொழி லாளிக்கு இனமும் மொழியும் எப்படி இல்லாமல் போகும் என்றார். போராட்டங்களில் முன் வைக்கப் படும் இன்னொரு முழக்கமாகிய ''பாடுபடும் தொழி லாளிக்குச் சாதியில்லை மதமில்லை'' என்கிற முழக் கத்தைக் குறித்து அவர் ஒன்றும் சொல்லவில்லை. ராசராசன் ராசேந்திரன் போன்ற மாமன்னர்களின் காலங்களை நாம் விமர்சனம் செய்த போதும் அவர் களது வீரப் பாரம்பரியத்தை உரிமை கொண்டாட வேண்டும் என்கிற கருத்துப்பட அவர் பேசியது குறிப் பிடத்தக்கது.

10. J.V. Stalin, Foundations of Leninism, N.B.A. P. 80.
11. MARX & ENGLES, Collected works, Progress, Publishers, 1975, Vol 8, PP. 234. 356.
12. M & E, CW, Vol 7, P. 323.
13. M & E, CW, Vol 8, P, 365
14. MUNCK, P. 14.
15. M & E, CW, Vol 18, PP. 514, 515.
16. M & E, Ireland & Irish Question, Progress Publishers, 1971, P. 143.
17. Ibid, P. 163.
18. M & E, Ireland and Irish Qn., P. 303.
19. Ibid, P. 832.
20. MUNCK, P. 16.
21. M & E, Ireland and Irish Qn.. P. 281.
22. Ibid, P. 294.

படிப்பகம்

www.padippakam.com



23. MUNCK, P. 24.
24. MUNCK, p. 18.
26. J. V. STALIN, Marxism and the Nati nal Qn, Mass5 Publications, 1976, P. 79.
27. MUNCK, P. 141.
28. MU CK, P. 141.
29. MUNCK, PP. 42–44
30. M. LOWY, Marxism and National Qn, N. L. R. 96. 1976.
31. MUNCK, P. 5.
32. MUNCK, P. 55.
33. 34, James M.BLAUT, The National Qn- Decolonising theory of Nationalism, Zen Books, 1987, P.61.
35. V.I. LENIN, Colletcd works, Progress Publishers' 1977, Vol 20, P. 430.
36. MUNCK, P.52.
37. MUNCK, P.58.
38. Ibid, P. 38
39. LENIN, CW, Vol. 22, p 310.
40. MUNCK, p. 54.
41. E. H. CARR, Bolshevik Revolution Penguin 1971, Vol I, p. 435.
42 LEON TRUTSKY, The History of Russian Revolution Sphere Books, 1967. p. 62
43. ''தேசிய இயக்கங்களின் தன்மை தேசிய அரசுகளை உருவாக்குவதே. இதன் மூலமே நவீன முதலாளியத்தின்



படிப்பகம்

www.padippakam.com



தேவைகள் சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்படும்'' LENiN, CW. Vol. 20 p. 396. ''மாபெரும் மையப்படுத்தப்பட்ட அரசு என்பது மத்திய கால ஒற்றுமையற்ற தன்மையிலிருந்து எதிர்காலத்திய உலக முழுமையின் சோசலிச ஒருமைப்பாட்டை நோக்கி வரலாற்றுப் பாதையில் முன்னோக்கி எடுத்து வைக்கப்படும் ஒரு அடியாகும். (முதலாளித்துவத்துடன் பிரிக்கவே முடியாமல் இணைந்துள்ள) இத்தகைய அரசு வழியாகவே சோசலிசத்திற்கான எந்தப் பாதையும் இருக்க முடியும்'' Ibid p. 46. இன்றளவும் சுயநிர்ணய உரிமைக் கெதிராகப் பேசுவதற்கு இந்தியாவிலுள்ள மைய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சிகளால் பெரிதும் சுட்டிக்காட்டப்படும் மேற்கோள் இது. எ—டு. (i) B. T. RANADIVE, Marxism and Nationa-lity Qn. in India, The Marxist Oct.—Dec. 1983 (ii) SUNEETCHOPRA, Marxism and National Qn— An overview, Social Scientist, Jan'84. கவனிக்க: இந்தியாவில் தேசப் பிரச்சனை (National Qn) என ரணதிவே சொல்லவில்லை. தேசிய இனப் பிரச்சினை என்றே (Nationality Qn) குறிப்பிடுகிறார். இந்திய மைய அரசு ஒரு தேசிய அரசு (Nation State). மைய அரசிற்கு உள்ளடங்கித் தேசிய இனங்கள் இருக்கின்றனவேயொழிய இவை தேசங்களாக உருப்பெறவில்லை என்பது மார்க்ஸிட்கட்சியின் உள்ளார்ந்த கருத்து. ரணதிவேயின் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள அக்கட்சியின் அதிகார பூர்வமான குறிப்பு, இந்திய ஒன்றியத்திற்குள்ளான தேசியப் போராட்டங்களை ''வேறுபட்ட மொழி அல்லது உப தேசிய நீரோட்டங்கள்'' எனக் கூறுவதும் கவனிக்கத் தக்கது.

தேசிய இன எழுச்சிகளை ஆதரித்துப் பேசுபவர்களும்கூடத் தேசியப் போராட்டங்களை முதலாளியத்

www.padippakam.com



துடன் இணைத்துப் பார்ப்பதையும் காணலாம். எ—டு: பேயன். மார்க்சியமும் நாட்டின் விடுதலையும், சிந்தனையாளன், 26. 11.83.

லெனின் மேலும் கூறுவார். "வளர்ந்து வரும் முதலாளியம் தேசியப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் இரு வரலாற்றுப் போக்குகளைக் கொண்டுள்ளது. முதலாவது தேசிய வாழ்வு மற்றும் தேசிய இயக்கங்களின் விழிப்பு. தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், தேசிய அரசுகளின் உருவாக்கம் ஆகியவை. இரண்டாவது, எல்லா வடிவங்களிலும் சர்வதேசிய ஒருமைப்பாட்டின் வளர்ச்சி, தேசங்களுக்கிடையேயான தளைகள் நீக்கப்படுதல்; மூலதனம் மற்றும் பொதுவான பொருளாதார வாழ்வின் சர்வதேச ஒருமை...CW, Vol. 20. p.27.

44. BLAUT, p. 127.

45. The Right of Nations to self Determination மற்றும் The Social Revolution and The Right of Nations to Self Determination— Thesis ஆகிய கட்டுரைகளில் (CW. Vol. 22) அவை வெளிப்படுவதை காணலாம்.

46. தேசிய இனப் பிரச்சினையில் மார்க்சிஸ்ட் கட்சியின் (CPM) போலித்தனத்தைச் சரியாகவே தோலுரிக்கும் திரு. பெ. மணியரசன் (இந்தியாவில் தேசிய இனங்கள், மார்க்சிய பொதுவுடைமைக்கட்சி வெளியீடு, 1985), தனக்கு மறுப்பாக அக்கட்சி நாளிதழில் வெளியிடப்பட்ட கட்டுரையொன்றில் மார்க்சிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ நிலைபாடாக "19+7 இல் சு.நி. உரிமை மற்றும் அரசியல் சுதந்திரம் அதாவது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசிடமிருந்து பிரிந்துபோதல் என்ற கோரிக்கை வெல்லப்பட்டது. ஆகவே இக்கோரிக்கை இனி அரசியல் ஜனநாயகக் கோரிக்கை வளையத்துக்குள் இடம் பெறாது" (Note on Nationality Qn.

படிப்பகம்

www.padippakam.com



P. 97) எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதை மறுக்க வரும்போது—இந்த உண்மையையும் கணக்கிலெடுத்துக்கொண்டிருக்க வேண்டும். ''ஏகாதிபத்தியத்திடமிருந்து நாடுகள் விடுதலை அடைவதும் தேசிய இனங்களுக்குச் சு. நி. உரிமை வழங்குவதும் ஒன்றுதானா? சுயநிர்ணய உரிமைகோருவது முழுக்க முழுக்கப் பிரிந்து போவதற்கான போராட்டமா? சு. நி. உரிமை என்பது ஒருகட்டத்தில் வழங்கப்படும் உரிமை இல்லையா'' என மணியரசன் கேட்கும்போது (பக்.51) இதனைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லையோ எனத் தோன்றுகிறது. காலனிய விடுதலைப் போராட்டத்தையும் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் நுணுக்கமாக வேறுபடுத்திச் சில சந்தர்ப்பங்களில் லெனின் எழுதியுள்ள போதிலும் (Report on the NI. & Colonial Qns at II Congress of International, Cw Vol 31. P. 145. 240,) காலனிய விடுதலையையும் சுயநிர்ணய உரிமைக்குள் கொண்டு வருவதை லெனினியம் அனுமதிக்கிறது. மணியரசன், ''அப்படி என்றால் ஆங்கில தேசிய இனம் இந்தியாவின் தேசிய இனங்களுக்கு சு. நி. உரிமை வழங்கியிருந்தால் இங்கிலாந்தோடு இந்தியாவும் கூட்டரசில் பங்கு கொண்டிருக்குமா?'' எனக் கேட்பது (முன் குறிப்பிட்ட நூல். பக்.52) நியாயந்தான். இந்தப் பிரச்சினையை வெறும் மேற்கோள் யுத்தத்தின் மூலம் தீர்த்துவிடமுடியாது. லெனினே சொல்வது போல, ''ஏகாதிபத்தியக் காலக்கட்டத்தில் தூலமான எதார்த்தத்திலிருந்து தொடங்குவதே சரியாக இருக்க முடியும். கருத்துருவமான எடுகோள் என்பன காலனிய மற்றும் தேசிய இனப் பிரச்சினைகளுக்குப் பயன்படாது'' (CW, Vol 31, p. 240) லெனினியத்தில் காணப்படும் இந்த 'மயக்கத்தை'ச் சாதகமாய்ப் பயன்படுத்தி லெனினியத்திற்கு முற்றிலும் விரோதமான ஒரு கருத்தை மார்க்சிஸ்ட் கட்சி (எ.டு.; மேற்படி மேற்

படிப்பகம்

www.padippakam.com



கோளில் இரண்டாம் வாக்கியம்) மக்கள் முன் வைப்பது அறிவு நாணயமற்ற செயலாகும்.

47. LENIN, CW, Vol 19, p.87.

48 Ibid Vol 20, p. 410.

49 Ibid Vol 22, p. 347.

50 MUNCK. p. 50.

51 LENIN, CW, Vol 22, p. 146.

52 MUNCK, p. 33.

53 J. V STALIN; Marxism and National Qn., Mass Publications, 1976, p. 13, 20.

54 Ibid p 71.

55 MUNCK, P. 55.

56 BLAUT, p.147.

57 BLAUT p.147.

58 MUNCK p.80.

59 Ibid p 81.

60 Ibid p.82.

61 Ibid. 82.

62 Ibid, p.83.

63 I. DUETCSHER, The Prophet Armed, Trotsky: 1921-1929, OUP.1970. p.49.

64 BLAUT p. 65

65 Ibid, p.65.

படிப்பகம்

www.padippakam.com



66. MUNCK p.146-147

67. Ibid, p.144

68. T. NAIRN, The Modern Janus. NLR, No. 94, 1975.

69 MUNCK, P. 165 (அழுத்தம் நம்முடையது)

70 பண்பாட்டு அம்சங்களுக்கு அதீத முக்கியத்துவம் அளித்தபோதிலும் இவர்கள் முற்றாக வர்க்கப் பகுப்பாய்வின் பங்கை மறுத்தவர்களல்ல என்பது குறிப்பிடத் தக்கது.

71 BLAUT. P. 63.

72 BLAUT, P. 66.

73 BLAUT, P. 113.

74 Ibid, P. 116.

75. Ibid, P. 84.

76. Ibid. Pp. 178-190.

77. BLAUT, p. 147.

78. Ibid, p. 199.

79. MUNCK, p. 158.

80. Ibid, p. 148.

81. MUNCK, P. 148.

82. MUNCK, P. 153.

83. MUNCK, P.P. 152, 153

84. MUNCK, p. 166.

www.padippakam.com



85. பிரெஞ்சு மக்கள் ஒரு தேசிய இனமாக இருந்திருக்கலாம். அவர்கள் தேசமாக உருவாவதென்பது பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்பே, தேசமாக உருவான பிறகே அங்கு ஒரு தேசிய அரசு உருவாகிறது. இந்த இடத்தில் இவற்றுக்கிடையேயான வேறுபாடுகளை வரையறுத்துவிடுவது உசிதம்.

**தேசியம் இனம்** (Nationality): ஒரு மக்கள் சமுதாயம். வரலாற்றுப் பூர்வமாகவும் அரசியற் களத்தில் அதன் செயற்பாடு மூலமாகவும் அது வரையறுக்கப்படுகிறது. **தேசம்** (Nation): ஒரு தேசிய இனத்தால் நிறுவப்படும் அரசியல் சமூகம்.

**தேச அரசு** (Nation State): முதலாளியப் புரட்சிக் கட்டத்தில் தேசத்திற்கும் அதன் அரசிற்கும் இடையே நிறுவப்படும் ஒருமை முதலாளியத்திற்கு முந்திய காலங்களில் தேசிய இனங்கள் இருந்திருக்கலாம். சமயங்களில் தேசமாகவும் அச் சமூகம் உருப் பெற்றிருக்கலாம். ஆனால் முதலாளியக் கட்டத்திலேயே தேச அரசு உருவாகிறது.

**தேசியம்** (Nationalism): தேசமாகவோ தேச அரசாகவோ உருவாகும் முயற்சியிலோ இன்னொன்றின் ஆதிக்கத்திலிருந்து விடுபடும் முயற்சியிலோ ஒரு தேசிய இனம் உருவாக்கும் அரசியல் இயக்கம்.

**தேசியப் பிரச்சினை** (Nationality Question): மேலே குறிப்பிட்ட எல்லா நிகழ்வுகள் மற்றும் சோசலிசத்தின் கீழ் இவற்றைத் தீர்ப்பது ஆகியவை குறித்த மார்க்சின் ஆய்வுக்களன்.

86 ''தமிழ் கெழு மூவர்' —அகம்—31:14.

87 இதனை மொழிக் களத்தில் நடைபெற்று வந்த வர்க்கப் போராட்டம் எனலாம்.

88 ஏகாதிபத்தியங்களைப் பொறுத்தமட்டில் பெரிய சந்தை மற்றும் கொள்ளைக்கு 'இந்தியா', 'பிரேசில்'

www.padippakam.com



போல நாடுகள் பெரிதாக இருப்பதே வசதியாக இருக்கிறது. நாடுகள் சிறிதாகச் சிறிதாக மையத்தை நோக்கியப் பொருளாதாரக் குவியல் குறைகிறது எனப் பொருளியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே பொருளியல் நோக்கில் ஏகாதிபத்தியங்கள் நாடுகளைத் துண்டாடுவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளன என்பதில் பொருளில்லை. இதன் பொருள் நாடுகளைப் பெரிதாக வைத்திருப்பதுதான் ஏகாதிபத்தியத்தின் பண்பு என்பதுமல்ல. ஏகாதி பத்தியங்கள் ஒரு தேசிய இனக் கிளர்ச்சிக்கு ஆதரவாக இருக்கின்றனவா இல்லையா என்பது அங்குள்ள புவியியற்சூழல், படைபல நோக்கு, இராணுவ நலன், ஆயுத விற்பனை, பொருளியல் நல நோக்கு என்பன போன்ற இராணுவ, அரசியல் நலன்களின் அடிப் படையில் தூலமாகத் தீர்மானிக்கப்படுகின்றது.

89 பார்க்க: மா. வளவன் என்ற பெயரில் நான் திரு பெ. மணியரசனுடன் இணைந்து எழுதியுள்ள 'பாரதி-ஒரு சமூகவியல் பார்வை' (கார்க்கி நூலகம், 1983) என்ற நூலில் உள்ள 'காலமும் களமும், என்னும் கட்டுரை.

90 **கருத்தியல் விளிப்பின்** மூலம் (Ideological Interpellation) மனிதர்கள் "Subject" களாக உருவாக்கப்படுகின்ற னர் என்பார் **அல்துஸ்ஸர்**. இங்கே மக்கள் "இந்தியர்" என்கிற Subject களாக உருவாக்கப்பட்டனர்.

91 இந்திய ஒன்றியத்தின் கீழ் ஒன்றுபட்டு நிற்பதா இல்லை பிரிந்து போவதா என வாக்கெடுப்பு நடத்தி னால் இந்தியாவிலுள்ள பெரும்பாலான தேசிய இனங்கள் பிரிந்து போவதற்கு எதிராகக்கூட வாக்களிக்கலாம். இன்றைய சூழலில் இது சாத்தியந் தானா இல்லையா என்பது போன்ற பல்வேறு சிந்தனைகளை உள்ளடக்கி இக் கருத்து உருவாகிறது. இதுவே நேரெதிரான ஒரு கருத்தாக உடனடியாக

www.padippakam.com



மாறக்கூடிய வாய்ப்பு இல்லை என்று சொல்லிவிட முடியாது. 'பிரான்சிலிருந்து, அல்ஜீரியா' பிரிந்து போவது குறித்து வாக்கெடுப்பு நடத்தியபோது 97 சதம் பேர் பிரிந்து போவதற்கெதிராக வாக்களித்தனர். மிகச் சில காலத்திற்குப்பின்பு, 'பிரான்சு' தோற்ற பிறகு, போராட்டம் வெற்றிபெற்ற சூழலில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது 97 சதம் பேர் பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்தனர். பார்க்க. BLAUT, P. 193.

92 இந்திய அரசின் கீழ் இன்று பல்வேறு தேசங்களாக உருப்பெற்றுள்ள மக்கள் அன்று ஆங்கில ஆட்சியின் கீழ் வந்தபோது பல்வேறு மட்டங்களில் தேசிய இன வளர்ச்சி பெற்றிருந்தனர். தல அரசியல், வர்க்கப் போராட்டம், ஆங்கில அரசுக்கு எதிராக மக்களைத் திரட்டும் பணியில் மொழிவாரியாக மக்களைத் திரட்ட வேண்டிய கட்டாயம் ஆகியவற்றின் பின்னணியில் மொழிவாரி மாநிலங்களாக (1947க்குப் பின்) மாறியபோது அவை முழுமையான தேசங்களாயின. மொழிவாரி மாநிலங்கள் அமைப்பதற்கான போராட்டங்களும் இயக்கங்களும் இத்தகையத் தேசிய உருவாக்கத்தில் பெரும் பங்கு வகித்தன.

93 வங்கி ஊழியர், பொதுத்துறை ஊழியர், யு. ஜி. சி. ஊதியம் பெறுவோர் போன்றோர்.

94 ''ஒவ்வொரு கருத்துக்கும் / சொல்லுக்கும் பின்னால் ஒரு வர்க்கம் இருக்கிறது'' என நாம் அடிக்கடி சொல்வது வழக்கம். இதன் பொருள், ஒவ்வொரு சொல்லையும் / கருத்தையும் ''இது இந்த வர்க்கத்தின் சொல், அது அந்த வர்க்கத்தின் கருத்து'' என நேரடியாய்ப் பொருத்திப் பார்க்க வேண்டும் என்பதல்ல. எடுத்துக்காட்டாய் ' திறன் மிகுந்த எந்திரம் நன்றாகவும் வேகமாகவும் வேலை செய்யும்'' என்கிற கருத்தை

www.padippakam.com



எடுத்துக் கொள்வோம். இது எந்த வர்க்கத்தின் கருத்து எனக் கேட்டுக் கொண்டிருப்பதில் பொருளில்லை. ஆனால் இந்தக் கருத்து ஏற்றத் தாழ்வு மிக்க இன்றைய சமூகத்தில் முன்னேறியுள்ளவர்கள் எல்லோரும் திறமையானவர்கள், பின்தங்கி இருப்பவர்கள்/வறுமை வயப்பட்டவர்கள் எல்லோரும் அத்தகைய நிலையை அடைந்ததற்கு அவர்களது திறமைக் குறைவே காரணம் என்கிற ஒரு நியாயப்பாட்டிற்கு ஆளும் வர்க்கங்களால் பயன்படுத்தப்படும்போது 'தகுதி/திறமை' என்பதெல்லாம் ஆளும் வர்க்கத்தின் சொல்லாடலாக மாறி விடுகிறது. ஒரு வர்க்கத்தின் கருத்தாக உருப்பெறுகிறது. ''ஒவ்வொரு சொல்லுக்கும் பின்னால் ஒரு வர்க்கம் இருக்கிறது' என்பதைக் காட்டிலும், ''ஒவ்வொரு சொல்லாடலுக்கும் பின்னால் ஒரு வர்க்கம் இருக்கிறது'' எனச் சொல்வது மேலும் பொருத்தமாய் இருக்கும்.

95 Populism வேறு popular வேறு. முன்னதற்குக் 'கவர்ச்சி வாதம்' என்ற சொல்லாட்சிப்பயன்படுத்தப்படுகிறது. இக்கட்டுரை முழுவதும் 'சனரஞ்சகம்' எனக் குறிப்பிடப்படுவது 'Popular' என்பதைத்தான்.

96 இதன் பொருள், இரண்டு கருத்தியலும் ஒன்றாகவே ஆகிவிட்டது என்பதல்ல. எந்தக் காலத்திலும் அப்படி ஒன்றில் ஒன்று கலந்துவிடுவதில்லை. அன்றாட நடைமுறையின் அடிப்படையில் உருவாகும் மக்களின் உணர்வுகள் அவ்வளவு எளிதில் முற்றாகத் தனது முரண்பட்டக் கருத்தியலை அழித்துக் கொள்ள விடுவதில்லை. இந்த இடத்தில் கருத்தியலுக்கும் மக்களுக்குமிடையேயான உறவு குறித்த அல்துஸ்ஸரின் கோட்பாட்டை நினைவூட்டிக் கொள்வது பொருத்தம். கருத்தியல் மனிதனை Subject ஆக உணரவைக்கிறது. இதனைத் தனது விளிப்பு நடவடிக்கையின் மூலமாகக் கருத்தியல் செயல்படுத்துகிறது. இதற்கு ஒரு எடுத்துக்

www.padippakam.com



காட்டையும் அல்துஸ்ஸர் குறிப்பிடுவார். நம்மை நோக்கி ஒரு போலீஸ்காரன் "ஏய், நீ இங்கேயா இருக்கே!" என விளிப்பதற்குக் கருத்தியல் விளிப்பை ஒப்பிடுவார் அல்துஸ்ஸர். இதன் மூலம் Subject ஆக்கப் பட்டவன் தன் அடையாளத்தைப் பெறுகிறான். செர்மானியப் பாசிசத்தால் Subject ஆக்கப்பட்டவன் தன்னை ஒரு 'ஆரியனாக' அடையாளம் கண்டான். விடுதலைப் போராட்டக் கால இந்தியத் தேசியக் கருத்தியலின் விளிம்பில் பாரதி தன்னை ஆரிய சம்பத்துக்களின் சொந்தக்காரனாக, பாரத தேசத்தவனாக அடையாளம் கண்டான். தமிழ்த் தேசிய விளிம்பில் பாரதிதாசன் தமிழனாக அடையாளம் கண்டு கொண்டான். ஆளும் கருத்தியலின் விளிப்பில் பாரதிதாசன் தமிழனாக அடையாளம் கண்டு கொண்டான். ஆளும் கருத்தியலின் விளிப்பில் அதற்குட்பட்ட ஒரு மனிதன் தன்னை ஒரு 'குடிமகனாக' (Citizen) அடையாளம் கண்டுணர்கிறான். இவ்வாறு Subject ஆக மாறும்போது தங்கள் மீது நிர்ப்பந்தமாய்த் திணிக்கப்படும் உற்பத்தி உறவுகளைத் தாங்களே உருவாக்கிக் கொண்டதாகவும் அதனை நிர்ணயிப்பதில் தங்களுக்கு சுயேச்சையானப் பங்கிருப்பதாகவும் ஒரு மாயையான உணர்வையும் பெறுகிறான்.

பார்க்க L. ALTHUSSER, Lenin and Philosophy and other Essays, NLB, p. 160.

97 E. LACLAU, Politics and Ideology in Marxis Theory' NLB, 1977, p. 100-101.

98 N. POULANTZAS, Fascism and Dictatorship, Verso, 1974, p. 17-25.

99 BIPAN CHANDRA and others, The Communists the Congress and the Anti Colonial movement

www.padippakam.com



EPW, July7 1984. இக்கட்டுரையில் காணப்படும் கருத்துக்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டுவிட முடியாது.

100 Lenin and National question progress, 1977 p.57. (அழுத்தம் நம்முடையது.)

101. 'சட்டிஸ்காரி' தேசிய இனப் பிரச்சினைக் குறித்து எழுத வந்த **சங்கர் குகா நியோகி**, சட்டிஸ்காரி தேசிய இன வரையறை பற்றிச் சொல்வது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. அவர் கூறுவார். "இந்த தேசிய இன உணர்வுப் பிரச்சாரம் என்பது தீவிரவாதத் தேசிய வெறியாக மாறாமல் இருப்பதற்கு 'சட்டிஸ் காரி என்பவன் யார்?' என்கிற கேள்விக்கு விடைய ளிப்பதும் அந்த விடையைப் போராட்டம் முழுமை யும் நினைவிற் கொள்வதும் முக்கியம். சட்டிஸ்காரி கள் என்போர் சட்டிஸ்கார் புவியியல் எல்லைக்குள் வசிப்போர்; நேர்மையான உழைப்பின் மூலம் தங்கள் வாழ்வைக் கழிப்போர். சட்டிஸ்கார் மக்களின் விடுதலைக்காக வாழ்வை அர்ப்பணிக்கத் தயாரானோர்; பொருளாதார ரீதியாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற் கான விஞ்ஞானபூர்வமான எந்த வரையறைக் குள்ளும் அடங்காதோர்; முதலாளிய உறவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புவோர்; சனநாயகச் சக்திகளின் வளர்ச்சிக்குக் குந்தகமாக இல்லதோர்; உலகப் பாட்டாளி வர்க்கத்துடன் சகோதர உணர்வை உடையோர் எவரோ அவரே சட்டிஸ்காரி யாவார்." S.G. NIYOGI, Chat'igarh and National Qn, Seminar papers on Nationality Qn. in Indin, APRSV,1982, p.116.

102 "தமிழ்நாட்டில் மதச் சிறுபான்மையினருக்கும் தாழ்த் தப்பட்டவர்களுக்கும் தமிழன் என்ற உணர்வு வர

www.padippakam.com



வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்களுக்குத் தமிழன் என்ற உணர்வு வரவில்லை.''

—பழ. நெடுமாறன் பேச்சு. தினமலர், ஏப்ரல் 23, 1990, ப. 4.

103. கா. **சிவத்தம்பி,** தனித்தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி சென்னை புக்ஹவுஸ், 1979.

104. சமீபத்தில் 'தமிழர் தேசிய இயக்கம்' தஞ்சையில் நடத்த இருந்தத் தன்னுரிமை பிரகடன மாநாடுதடை செய்யப்பட்டு அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த கண்காட்சியும் மூடப்பட்டுப் பலர் கைது செய்யப் பட்டதும் நினைவிருக்கலாம். அக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்த காட்சிகள் பலவற்றில் கீழ்க் கண்டவையும் உள்ளடக்கம். அது குறித்தக் கட்டுரை ஒன்று கூறுகிறது. ''தமிழர் சமய வரலாற்றில் சில காட்சிகள்: இறைவனுடன் இரண்டறக் கலந்த ஆண்டாள், நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம் (திருநாவுக்கரசர்), ராமானுசர் கோபுரத் தில் நின்று அரிஜன்களை அந்தணராக்குதல், தில்லை நடராசரைத் தரிசிக்க வரும் நந்தனாரை நந்தி மறைத்தல், இராஜராஜன் வெற்றியின் சின்னமாக எழுப்பியக் தஞ்சைப் பெரிய கோயில்...'' **சாந்தன்,** 'பேருந்து நிலையத்தை ஒட்டி...', பாலம், ஜூலை 1990. கிறிஸ்தவர் தமிழ்த்தொண்டு, இசுலாமியர் தொண்டு என்றெல்லாம் இத்தோடு இணைக்கப் படுவது மட்டும் இதனை ஈடுகட்டிவிடாது.

105. எ.டு: இடஒதுக்கீடு ஆதரிப்பு, இந்துப் பெருமத வெறி எதிர்ப்பு முழக்கம் முதலியன.

—**நிறப்பிரிகை**

www.padippakam.com

# 2. தேசிய இனப்பிரச்சினை குறித்த சில அடிப்படையான கேள்விகள்

## கூட்டுக் கட்டுரை

**விவாத விவரம்:**

'தேசிய இனப் பிரச்சினை' குறித்த அ. மார்க்சின் கட்டுரையைப் படித்திருப்பீர்கள். விவாதம் அதில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகளின் அடிப்படையிலும் அதைத் தாண்டியும் அமையலாம். எனினும் சில கேள்விகள் இங்கே தொகுக்கப்படுகின்றன.

* தேசிய இனத்திற்கு என்றென்றைக்குமான இறுக்கமான ஒரு வரையறை அவசியந்தானா? ஸ்டாலினின் வரையறை இன்று பொருந்துமா?
* தேசிய இன உணர்வு, தேசியம் ஆகியவற்றை முதலாளியம் மற்றும் சந்தைத் தேவை ஆகியவற்றுடன் நேரடியாகப் பொருத்திப் பார்ப்பது சரிதானா?
* தேசியத்தை வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு சுயேச்சையான சக்தியாகப் பார்ப்பது சரிதானா?
* தேசியம் என்பது தவிர்க்க இயலாமல் பாசிசத்திற்கே இட்டுச் செல்லும் என்பது உண்மைதானா?

படிப்பகம்

www.padippakam.com



* தேசிய இனத்தை வர்க்கரீதியாய் வரையறுக்க வேண்டும் என்பது சரிதானா? என்றால் உள்ளடக்கப் பட வேண்டிய வர்க்கங்களும் விலக்கப்பட வேண்டிய வையும் யாவை?

* தேசிய முதலாளிகள் என்போர் யார்? தமிழ்த்தேசிய முதலாளிகள் இருக்கிறார்களா? யார்?

* தேசியத்தை மார்க்சியச் சொல்லாடலுடன் இணைக் கும்போது கவனிக்க வேண்டிய எச்சரிக்கைகள் யாவை? இந்த அடிப்படையில் இன்று தமிழகத்தில் முன் வைக்கப்படும் முழக்கங்கள் என்னவாக இருக்க முடியும்?

* இன்றைய தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்விற்கு நேரடியாகப் பொருத்தி விளங்கக்கூடிய செவ்வியல் மாதிரி எதையும் மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் எழுத் துக்களிலிருந்து பெறமுடியுமா?

* அகில இந்தியத் தேசியம் ஒன்று உருப்பெற்று வருகிறதா? இன்று இந்தியாவில் நடைபெறும் தேசிய இனப் போராட்டங்களைச் சுயநிர்ணய உரிமைக் கான போராட்டங்கள் என்பதா இல்லை வெறும் பிரிவினை வாதப் போராட்டங்கள் என ஒதுக்குவதா? சுயநிர்ணய உரிமைக்கும் பிரிவினைவாதத்திற்கும் என்ன வேறுபாடு?

* சுயநிர்ணய உரிமை ரசியாவில் எந்நாளும் சரியாக வழங்கப்பட்டதுண்டா? இன்றைய பிரச்சினைகட்கு என்ன காரணம்?

மார்க்ஸ்-ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் படைப்புகள் தவிர வேறு சில நூல்களும் மேற்குறிப்பிட்ட கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. ஈழப் பிரச்சினையை

படிப்பகம்

www.padippakam.com



ஒட்டித் தமிழகத்தில் பல்வேறு இடதுசாரி அமைப்புகளும் தங்கள் நிலைபாடுகளைச் சிறு நூல்களாக வெளியிட்டுள்ளன. இவை தவிர H. B. Davis, Towards A Marxist Theory of National sm (MR 1978), E. Geliner Nations and Nationalism (Basil Blackwell 1983) J Breviily, Nationalism and the State. (Manchester University Press 1912). T. Nairn, The Break up of Britain, Crisis and Neo Nationolism (NIB 1977), E Hobsbawm Some Reflections on The Break up of Britain (NLB No. 105) ஆகிய நூல்கள்/கட்டுரைகள் கிடைத்தால் படிக்கலாம். குணா எழுதியவை மற்றும் சில தமிழ்த் தேசிய இயக்க வெளியீடுகளும் படிக்கத்தக்கவை.

நாள் : 4-11-90 ஞாயிறு.

இடம் : தஞ்சை யூனியன் கிளப் மாடி.

பங்கு பெற்றோர்: நிறப்பிரிகை ஆசிரியர் குழு, தமிழ் இன விடுதலைக் கழகத் தலைவர் வழக்குரைஞர் இராமதாசு, திருச்சிப் பெரியார் மையம் சார்பில் திரு. மணிவேலன் மற்றும் இரு தோழர்கள், தமிழ்நாடு இளைஞர் பேரவை சார்பில் சுகுமாரன், மக்கள் கல்வி இயக்கத்தின் அமைப்பாளர் பா. கல்யாணி, செயற்குழு உறுப்பினர் சே. கோச்சடை, திருத்துறைப்பூண்டி பிரிட்டோ, 'மனுசங்க' இதழ் சார்பாக உஞ்சை ராசன், காளிமுத்து, சென்னையிலிருந்து எழுத்தாளர் சாரு நிவேதிதா, பாண்டியிலிருந்து பிரேம், அருணன், நெய்வேலி வேர்கள் சார்பாக சிவப்பிரகாசம், சுந்தரவினாயகம், திருச்சி ராஜன், மற்றும் இரு தோழர்கள்,

படிப்பகம்

www.padippakam.com



தஞ்சைப் பேராசிரியர் டாக்டர் இராம. சுந்தரம், தோழர் அறிவுறுவோன், விவாதத்தில் கலந்து கொள்ளாமல் தஞ்சைப் பேராசிரியர் டாக்டர் மதிவாணன், எம் டி. முத்துக்குமாரசாமி, இரத்தினகிரி மற்றும் சில தஞ்சை தோழர்களும் பங்கேற்றனர். காஞ்சியிலிருந்து தமிழ்நாடு மக்கள் இயக்கத் தோழர்கள் கருத்துகளை எழுதி அனுப்பியிருந்தனர்.

## விவாதத்தின்போது முன்வைக்கபபட்ட கருத்துகள்

1. **நிறப்பிரிகை** : மார்க்சியம் வலியுறுத்துகிற சர்வதேசிய உணர்வும் மக்களிடம் பொதிக்கப்பட்டுள்ள தேசிய உணர்வும் அடிப்படையில் முரண்பாடு கொண்டிருக்கின்றன. தேசிய உணர்வைக் கடந்து யாவரும் தம்மைத் தாய்நாடற்றவர்களாக உணரச் செய்வது என்பது எளிதான காரியமில்லைதான். சோசலிசத்தை நிர்மாணிப்பதற்கென இதுவரையில் நடத்தப்பட்ட புரட்சிகள் யாவும் ஆதாரமாகத் தேசியத்தன்மை கொண்டு விளங்குவதை நாம் காணமுடிகிறது. சர்வதேசியமே தமக்கானது என உணர்ந்திருந்தாலுங்கூடத் தவிர்க்க இயலாமல் தேசியத்தைத் தமது சொல்லாடல்களுடன் பிணைக்க வேண்டியது இங்கெல்லாம் அவசியமாகிப் போனதை நாம் காண்கிறோம். தேசிய இனப் பிரச்சினைகள் குறித்துச் சிந்திக்கும்போது தேசிய உணர்வை ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திற்குக் கீழ்ப்படிந்ததெனக் கறாராக வரையறுப்பது சாத்தியம் எனத் தோன்றவில்லை. தேசம் என்பது ஒரு கற்பிதம் செய்து கொள்ளப்பட்ட சமூகமே



படிப்பகம்

www.padippakam.com



யாகும். தேசியம்தான் தேசத்தை உருவாக்குகிறதே யொழிய தேசம் தேசியத்தை உருவாக்குவதில்லை.

தனது அரசியல் நோக்கில் ஒரு தேர்வு செய்யப்பட்ட வரலாற்றை ஒவ்வொரு தேசிய இயக்கமும் உருவாக்கு கிறது. பண்டைய அரசர்களின் கொடிய சுரண்டல் ஒடுக்குமுறை விரிவாக்க நடவடிக்கை யாவும் மறைக்கப் பட்டு அவர்கள் தேசிய வீரர்களாக உருவாக்கப்படுகிறார் கள். தமது மொழியே பிற மொழிகளைக் காட்டிலும் உயர்ந்தது, தொன்மையானது என்கிற வெறி ஊட்டப் படுகிறது. முதலாளியத் தேசிய அரசு உருவாகும்போது அரசோடு மக்களை இணைத்த அரசு விசுவாசம், மத நிறுவனப்பிடிப்பு ஆகியன சிதறுண்டு போகும்போது இவற்றின் மீதான விசுவாசங்கள் தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவற்றிற்கு மாற்றீடு செய்யப்படுகின்றது. தேசம் என்பது வரலாற்று ரீதியாக வரையறுக்கப்படுவது தான் என்பதையும், அது வரலாற்றை மீறியதல்ல என்பதையும் வெறுமனே வர்க்கத்துக்கு உட்பட்டதாக மட்டுமே சுருக்கிவிட முடியாத அதை வர்க்க ஆய்வுக்கு அப்பாற்பட்டதாகக் காணமுடியாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

உலக முதலாளியக் கட்டமைப்பு முற்றிலும் வேறு பட்டுள்ள இன்றைய சூழலில் ஒப்பிட்டுப் பேசுவதற்கு எல்லாவிதங்களிலும் என்றென்றைக்கும் பொருந்தி வரக் கூடிய மாதிரிகள் ஏதும் கிடையாது. இங்கே எந்த ஒரு தேசிய இனத்தையும் ஒடுக்கும் தேசிய இனமாகச் சுட்டிக் காட்ட முடியாது. மூலதனம், தொழில் நுட்பம், சந்தை ஆகிய மூன்றிலும் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்கும் இந்தியப் பெருமுதலாளிகள் எந்த ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்திற்குள்ளும் தங்கள் செயல்பாட்டை முடக்கிக் கொள்வதில்லை. இவர்கள் செல்வாக்கு வகிக்கிற அதிகா ரங்கள் அனைத்தும் மத்தியில் குவிக்கப்பட்ட இந்து

www.padippakam.com



மயமான மத்திய அரசிற்கும் தேசிய இனங்களுக்கு மிடையேதான் தேசிய இன முரண்பாட்டைப் பார்க்கிறோம்.

தேசிய இன உணர்வு என்பதை முதலாளியக் காலகட்டத்தின் மேற்கட்டுமானமாகப் பார்ப்பது சரியானதல்ல. தேசிய அரசின் தோற்றத்தை நாம் தேதி குறிப்பிட்டுச் சொல்லிவிட முடியும். ஆனால் தேசிய இனஉணர்வு மற்றும் தேசிய இனத்தின் தோற்றத்தை நாம் இப்படிக் கூறிவிடமுடியாது. தேசிய அரசை மட்டுமே முதலாளியத்துடன் இணைத்துப் பார்க்காமல் எல்லாவற்றையும் ஒன்றாகவும் முதலாளியத்தின் வெளிப்பாடாகவும் பார்க்கும் தவறு எப்போதுமே நடந்துவிடுகிறது. சனரஞ்சகச் சனநாயகக் கருத்தியற் கூறான தேசியமானது தன்னளவில் ஒரு வர்க்க உள்ளடக்கத்தைப் பெற்றிருக்கிறது எனச் சொல்ல முடியாது. சரியான ஒரு கருத்தியற் சொல்லாடலுடன் அது ஒருங்கிணைக்கப் படும்போதே அது வர்க்க உட்பொருளைப் பெறுகிறது.

தூலமான வரலாற்றுப் பின்னணியில் வரையறுக்கப் பட்ட வர்க்கச் சேர்க்கையிலேயே தேசியம் கட்டமைக்கப் படுகிறது. அரசதிகாரத்திற்கான போராட்டத்துடன் அது இணைந்தது. அரசியலதிகாரத்திற்கெதிரான ஒவ்வொரு தேசிய இனப் போராட்டத்தின்போதும் தேசம் என்பது வெறும் இனம் சார்ந்து வரையறுக்கப்பட்டதில்லை. மாறாக அது அரசியல் ரீதியாக, வர்க்க ரீதியாகவே வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய-நவ/அரைக் காலனியச் சூழலில் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்கும் தரகுத் தன்மை மிகுந்து வரும் பெரு முதலாளிகள் தேசியஇன வரையறையிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்கள். இந்தியச் சூழலில் தேசிய இனங்களை ஒடுக்குகிற அகில இந்தியத் தேசியஉணர்வைக்

www.padippakam.com



கட்ட இந்து மதப் பின்னணியைப் பயன்படுத்துகிற இந்துப் பெருமதவாதச் சக்திகளும் நமது வரையறை யிலிருந்து நீக்கப்படவேண்டியவர்களேயாகும். விவசாயி கள், சிறு முதலாளிகள், மத்தியதரவர்க்கம், வேலை இல்லாதோர், மாணவர்கள், மதச் சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோர் நமது வரையறையில் உள்ளடக்கப்படவேண்டியவர்கள்.

இந்த வகையில் நாம் நம்மை வர்க்க ரீதியாய் வரையறுத்துக்கொண்டு அதற்குரிய கருத்தியலைத் தேசிய உணர்வுடன் ஒருங்கிணைத்துக் கருத்தியற் சொல்லாடலை உருவாக்கும்போதே இன்றைய தேசிய இன உணர்வு அடிப்படையிலான போராட்டங்கள் சனநாயகப் போராட்டங்களாகவும் சமத்துவத்தை நோக்கிய முயற்சி யாகவும் அமையும். இல்லையேல் வேறு பல மூன்றாம் உலக நாட்டுத் தேசிய இயக்கங்களைப் போலவே இன்றுள்ள நிலையைக் காட்டிலும் கொடிய பாசிச உருவாக்கத்திற்கும் அதற்கான நியாயப்பாட்டிற்கும் மட்டுமே வழிவகுக்கும்.

நான்கு இறுக்கமான பண்புகளோடு வளர்ந்து வரும் முதலாளியக் கட்டத்தோடு தேசியத்தை இணைத்துப் பார்க்கும் ஸ்டாலினிய வரையறை இன்றைக்குப் பொருந் தாது. தேசிய முதலாளிகள் தமிழ்த் தேசிய முதலாளிகள் என்றெல்லாம் பெரும் முதலாளிகளில் யாரையும் அடை யாளம் காட்டமுடியாது. தாழ்த்தப்பட்டோர், சிறு பான்மையினர் மற்றும் இதரத் தேசிய வர்க்கங்களை ஈர்க்கக்கூடிய முழக்கங்களே இன்றைய தேவை. தேசியம் தவிர்க்க இயலாமற் பாசிசத்திற்கே இட்டுச் செல்லும் என்பதை ஏற்க முடியாததெனினும் அத்தகைய ஆபத்தை நோக்கி இட்டுச் செல்லும் முழக்கங்களைத் தவிர்ப்பது அவசியம். இன்றைய சூழலில் அகில இந்தியத் தேசியம் என்கிற கற்பிதம் சாத்தியமேயில்லை. தவிரவும் அத்தகைய

www.padippakam.com



கற்பிதம் ஒடுக்குமுறைக்கானதாகவே அமையும். புரட்சிக்குப்பிந்திய ரசியாவில் சுய நிர்ணய உரிமை சரியாக வழங்கப்பட்டதில்லை. தவிரவும் சகல துறைகளிலும் சனநாயகம் மறுக்கப்பட்ட நிலை என்பதும் இன்றைய தேசிய இன அடிப்படையிலான போராட்டங்களுக்குக் காரணமாகியுள்ளது.

2. **இராமதாசு (தமிழ் இன விடுதலைக் கழகம்):** பெரும்பாலும் நிறப்பிரிகையின் கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறேன். ஸ்டாலின் வரையறை இன்றும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான். எனினும் ஸ்டாலின் குறிப்பிடும் நான்கு பண்புகளில் ஏதும் ஒன்று இல்லை என்பதற்காக ஒன்றைத் தேசிய இனம் இல்லை என மறுக்க வேண்டியதில்லை.பழம் நாயகர்களைத் தேசிய வீரர்களாக உருவாக்காமல் இருக்க முடியாது. குறைகளோடு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்தியாவில் மொழியின் அடிப்படையில்தான் தேசிய இன உருவாக்கம் சாத்தியம். ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றிணைக்க எது சாத்தியக் கூறோ அதை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவில் அது மொழிதான், தவிரவும் மொழி அழியும் போது அந்த இனம் அழிகிறது. மொழி உணர்வு இல்லாமையால் தான் தமிழினம் தாழ்ந்திருக்கிறது. இந்து மதம் இங்கே அடக்குமுறைக்கும் சுரண்டலுக்குமே பயன்பட்டிருக்கிறது. மொழி உணர்வைக் கட்டமைக்கும் போது நாம் சில பாரம்பரியங்களை உயர்த்திப் பிடிப்பது தவிர்க்க இயலாதது. பக்தி இலக்கியங்கள் தமிழுணர்வை முன் வைத்தன.

தேசியம் முதலாளியக் காலகட்டத்தில்தான் சாத்தியம் என்பதை நாங்கள் மறுக்கிறோம். எனினும் வர்க்கப் போராட்டம் தேசியமாகாது. மார்க்ஸ் சொன்ன பாட்டாளி வர்க்கம் என்பது இந்திய மக்கள் தொகையில் எட்டுசதம்தான்; இவர்களை வைத்துப் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாத்தியமில்லை. தமிழ்நாட்டு முதலாளி

www.padippakam.com



கள் தரகு முதலாளிகளே. இவர்களும் இந்துமத சக்தி களும் ஒதுக்கப்பட வேண்டியவர்களே. இந்தியத் தேசிய காங்கிரசை இங்கே பார்ப்பனர்களே கட்டியமைக்கிறார் கள். அவர்களே அகில இந்தியத் தேசியத்தைக் கட்டமைக்க முயல்கிறார்கள். சுய நிர்ணய உரிமையையும் பிரிவினை வாதத்தையும் தனித்தனியாகப் பார்க்க வேண்டியதில்லை. பிரிந்து போகாத சுய நிர்ணய உரிமை என மார்க்சிய முன்னோடிகள் குறிப்பிட்டது கட்சி பிரிந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதை மனத்திற் கொண்டுதான். நாட்டுப் பிரிவினையை அவர்கள் எதிர்க்கவில்லை. ரசியா வில் எந்நாளும் சுயநிர்ணய உரிமை சரியாக வழங்கப் பட்டதில்லை என்பதற்கு இன்று நிரூபணம் கிடைத் துள்ளது.

3. **தமிழக மக்கள் இயக்கம்** : (கட்டுரைச் சுருக்கம்) : தேசத்திற்கு என்றென்றைக்குமான இறுக்கமான வரை யறை என்பது இயங்கியலுக்கு எதிரானது. ஸ்டாலின் குறிப்பிடும் நான்கு பண்புகளில் அனைத்துமோ, அவசிய மானவையோ தேசிய உருவாக்கத்தில் பங்கு பெறக் கூடும். தேசிய உணர்வு, தேசியம், தேசிய இயக்கம் ஆகியன வற்றை முதலாளியத்தோடு நேரடியாகப் பொருத்திப் பார்ப்பது தவறு. எனினும் தேச அரசுகளின் உருவாக்கம் முதலாளியத்தோடு இணைந்ததுதான். முற்றுடைமை மூலதனத்தின் முழுமையான வலைப்பின்னலின் கால கட்டமாகிய புதுக் காலனியத்தில் தேசியம், தேசிய விடுதலை இயக்கங்கள் புதிய பரிமாணங்களைப் பெறு கின்றன. இன்று தேசிய முதலாளியத்திற்குச் சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது. புதிய குடியாட்சிப் புரட்சிக்கான நம் ஐக்கிய முன்னணியில் இல்லாத தேசிய முதலாளியத் திற்கு இனி இடமில்லை. மூன்றாம் உலக நாட்டுத் தேசிய இயக்கங்கள் முழுமையான ஏகாதிபத்திய எதிர்ப்பு, நில வுடைமை எதிர்ப்புப் போராட்டமாக இல்லாதபோது குட்டி முதலாளியத்தால் தோற்றுவிக்கப்பட்டதானாலும்

www.padippakam.com



கூட விரைவில் தரகுமுதலாளிகளின் கைககு மாறி ஏகாதி பாத்தியங்களின் ஆதரவையும் பெற்று விடுகின்றன. வெறும் பிரிதலை மட்டுமே மையப்படுத்தும் இவ் இயக்கங்கள் பாசிசத்திற்கு இட்டுச் செல்லும். இத்தகைய நிலை அல்லது எதிர்மாறாகப் பாட்டாளியத் தலைமையினூடே புதிய குடியாட்சி புரட்சி மூலம் சோசலிசத்திற்கு இட்டுச் செல்லுதல் என்கிற இரு நிலைகளினூடே இன்றைய தேசிய இயக்கங்கள் ஊசலாடுகின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்பு. தரகு அதிகார வர்க்க முதலாளிய எதிர்ப்பு, நிலவுடைமை எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, இந்து இந்திய அடிப்படையிலான போலி இந்தியத் தேசிய எதிர்ப்பு ஆகியவற்றுடன் நமது தேசிய இயக்கம் உழைக்கும் வர்க்கங்களின் ஒடுக்கப்பட்ட தேசங்களின் அடிப்படை முழக்கங்களை இணைக்க வேண்டும். அகில இந்தியத் தேசியம் ஏதும் இங்கே இல்லை. சுய நிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லும் உரிமையாகும். பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சு. நி. உரிமை எனத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை. இன்றைய தேசிய இனப் பிரச்சினைகட்கான தீர்விற்கு முன்னோடிகளின் எழுத்துக்களில் செவ்வியல் மாதிரிகளைப்பெற முடியாது. சோவியத் யூனியனில் தேசியச் சிக்கல் சரியாகத் தீர்க்கப் படவில்லை. எனினும் அவை குறித்தும், இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய தேசிய விடுதலைப் போராட்டங்கள் குறிந்த மாவோவியர்கள் அணுகுமுறை குறித்தும் தமிழ்த் தேசிய வரலாறு குறித்தும் சரியான ஆதாரங்களின் அடிப்படையில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

4. **சுந்தர வினாயகம்** : இறுக்கமான வரையறை தேவையில்லைதான். ஆனால் வரையறையையோ முற்றாகப் புறக்கணித்துவிட முடியாது. மொழி ஓர் அடிப்படையான அவசியம். நிலப்பரப்பு/ பண்பாடு ஏதாவதொன்று மிகுந்த முக்கியத்துவம் பெறலாம். கறார் வரையறை சரியாகாது என்பது போலவே முதலாளித்

www.padippakam.com



துவத்துடன். நேரடியாகப் பொருத்திப் பார்க்கவும் முடியாது. ஆனால் முதலாளியக் காலக்கட்டத்தின் உணர்வு வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டதல்ல. தேசியம் பாசிசத்திற்கே இட்டுச் செல்லும் என்பது தவறு. வர்க்க ரீதியாய்த் தேசியத்தை வரையறுக்க வேண்டுமென்னும் போது மாவோவின் வரையறையே சரி. புரட்சியின் எதிரிகளாகிய ஏகாதிபத்தியம், தரகு முதலாளிகள், நிலப்பிரபு ஆகியோர் விலக்கப்பட வேண்டியவர்கள். புரட்சியின் நண்பர்களாகிய தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், தேசிய முதலாளிகள் ஆகியோர் உள்ளடக்கப்பட வேண்டியவர்கள். அப்படியே பின்பற்றத்தக்க செவ்வியல் மாதிரிகள் கிடையாது. எனினும் பேராசான்களிடமிருந்து படிப்பினைகள், வழிகாட்டும் நெறிகளை எடுத்துக் கொள்ளலாம். எத்தகைய முழக்கங்கள் முன் வைக்கப்பட வேண்டும் என்பது குறித்துக் கருத்துக்கள் இல்லை. அகில இந்தியத் தேசியம் இல்லை. பஞ்சாப், காஷ்மீர் போராட்டங்களில் சு. நி. உரிமைச் சனநாயகக் கூறுகள் உள்ளன. ஆனால் பெரும் பகுதி பிரிவினைவாத சக்திகளாகவே உள்ளதால் ஆதரிக்க முடியாது. ஈழப் போராட்டத்தை ஆதரிக்கலாம். காலிஸ்தான் போராட்டத்தை ஆதரிக்க முடியாது. ரசியாவில் சு. நி. உரிமை குறித்துக் கருத்துச் சொல்ல போதிய தகவல் இல்லை. ராஜராஜன் போன்ற பாரம்பரியங்களை உயர்த்திப் பிடிக்க முடியாது. அவர்கள் மக்களின் விரோதிகள். இதனால் மரபிலிருந்து எதையுமே எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதல்ல.

5. **சாரு நிவேதிதா :** நிறப்பிரிகையின் கருத்துக்களை ஏற்கிறேன்.

6. **திருச்சி ராஜன் மற்றும் தோழர்கள் :** நிறப்பிரிகையின் கருத்துக்களோடு உடன்படுகிறோம்.

7. **கல்யாணி :** நிறப்பிரிகை முதல் இதழில் வெளியாகியுள்ள அ. மா. வின் கட்டுரையிலிருந்து தொடங்கலாம். வரையறைகளையே மறுக்கும் ஒரு போக்கு கட்டு

www.padippakam.com



ரையில் உள்ளது. பொதுத் தன்மையே இல்லை என்கிற கருத்தாக்கம் வந்து விடுகிறது. பழைய வரையறைகளைச் சூழலில் வைத்துப் பொருத்திப் பார்க்க வேண்டும் என்பது தான் சரி. தேசியம் என்பது கற்பிதம் செய்து கொள்ளப் பட்ட சமூகம் என்கிற கருத்திலும் எனக்கு உடன்பாடு இல்லை.* எனினும் கட்டுரையின் முடிவுகளோடு நான் உடன்படுகிறேன். முதலாளியத்துடன் தேசியத்தை நேரடி யாகப் பொருத்திப் பார்க்க முடியாது. தொடர்பும் இல்லை என்றும் சொல்லிவிட முடியாது. சனநாயகத்தைச் சுயேச்சையாகப் பார்க்கலாம் என்கிற கருத்தில் எனக்கு உடன்பாடுண்டு. தேசியம் தவிர்க்க இயலாமல் பாசிசத்தில் முடியும் எனச் சொல்லி விடமுடியாது. ஆட்சி மொழி, பயிற்று மொழி போன்ற குறிப்பான முழக்கங்களின் அடிப்படையில் மக்களைத் திரட்ட வேண்டும். மார்க்சியப் பொது உடைமைக் கட்சி (MCPI) இதில் முன்னோடி யாகச் சில முழக்கங்களை வைத்துள்ளது குறிப்பிடத் தக்கது. ராஜராஜன், ராஜேந்திரன் போன்ற பாரம்பரியங் களை முன்னெடுப்பது நிச்சயமாகப் பாசிசத்திற்குத்தான் இட்டுச் செல்லும். பேராசான்களின் செல்வியல் மாதிரி களை நேரடியாகப் பொருத்திப் பார்க்க முடியாது.

---

* ஆழமாக யோசித்துப் பார்க்கும்போது தேசியம் என்பது கற்பிதம் செய்யப்பட்ட சமூகம் என்கிற கருத்து சரியானதாகவே தோன்றுகிறது என ஒரு வாரத்தின் பின்பு எழுதிய கடிதத்தில் தோழர் கல்யாணி குறிப்பிடுகிறார். சென்ற 18-11-90 அன்று பாண்டியில் நடைபெற்ற 'நிறப்பிரிகை' விமர்சனக் கூட்டத்திலும் இதனை அவர் குறிப்பிட்டார். எனினும் தேசிய இன அடிப்படையிலான ஒடுக்கு முறை கற்பிதம் இல்லையே, எதார்த்தமாகத்தானே இருக்கிறது. இது இன்னும் ஆழமாக யோசிக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



மேற்கோள் யுத்தம் சாத்தியமில்லை. அகில இந்தியத் தேசியம்/தமிழ்த் தேசியம் என இரண்டு தேசியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தப் பகுதிகளில் அகில இந்தியத் தேசியம் வலுப் பெறுகிறது. ஒரே மாதிரியாக இந்தியா முழுவதையும் பார்க்கத் தேவையில்லை

8. **சே. கோச்சடை:** வரையறை என்பதெல்லாம் சில குறிப்பிட்ட பண்புகளை முதன்மைப்படுத்தி அவற்றை உள்ளடக்கிய பொருள்களுக்கு உண்டானதே ஆகும். பொருள்கள் பண்பு மாற்றம் பெறும்போது வரையறை யோடு பெயரும் மாற வேண்டும். வரையறையை மட்டும் மாற்றுவது சரியல்ல. பண்பு மாற்றத்தை ஆராய வேண்டும். தேசியக் குணம் என்ற கருத்தியல் ஒரு குறிப் பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் உருப்பெறுவதே ஆகும். மனித இனம் தொடங்கி எல்லாக் காலத்திற்கும் சமூகமோ இயற்கையோ மாறாமல் இருப்பதில்லை. மக்கள் முதலில் இனக் குழுக்களாகவும் (Tribes) பிறகு வர்ண இனமாகவும் (Race). பின்னர் தேசிய இனமாகவும் (Nation) திரண்ட னர். இது போல முதலாளியம் வளர்ச்சியடைந்து ஏகாதி பத்தியமாக மாறி, ஏகாதிபத்தியமே முதிர்ச்சி அடைந் துள்ள இந்தக் காலகட்டத்தில் மக்கள் ஸ்டாலின் வரையறுத்த தேசிய இனமாக இருக்கிறார்களா என்று ஆராய்வதைவிட, தங்களுக்குள் எந்த அடையாளத்தைக் கண்டு ஒன்றுபட்டுப் போகின்றார்கள் என்று ஆராய்வதே பொருத்தமாக இருக்கமுடியும். மொழி, மதம், பண்பாடு, நாட்டெல்லை, பொருளியல் நலன்கள் இவற்றில் ஒன்றி ரண்டுகூட ஒடுக்கு முறையாளர்களை எதிர்ப்பதற்கு ஒன்றுசேர ஆதாரமாகஅமைகின்றன. தேசிய இனங்களின் போராட்டம் என்று நாம் பார்க்கும்போதே எந்தெந்த வர்க்கங்களை ஒன்றிணைப்பது என்று பார்க்கிறோம். எனவே இன்றைக்கு ஒடுக்கும் வர்க்கங்கள், ஒடுக்கப்படும் வர்க்கங்கள் எவை என ஆராய்வதும் சமூக இயக்க விதிகளைப் புரிந்து கொள்வதும் நமது நோக்கமாக இருக் கும்பட்சத்தில், அப்படி ஒடுக்கப்படும் வர்க்கங்களின்

www.padippakam.com



பொதுவான பண்புகளை ஆராய்ந்து, புதிய வரையறையும், புதிய பெயரும் வைப்பதே சரியாக இருக்கும்.

தேசிய இனப் பிரச்சினை மட்டுமில்லை. எந்தப் பிரச்சினையுமே தவறான தலைமையால் தவறாகக் கையாளப்பட்டால் பாசிசமாகவும், மனித இனத்துக்கு எதிரானதாகவும் மாறிவிடும். தேசியம் என்பது தவிர்க்க இயலாமல் பாசிசத்திற்கு இட்டுச் செல்லும் என்பது தவறு. அப்படி இருந்தால் மார்க்சியர்கள் அதை உயர்த்திப் பிடிக்க முடியாது. இதுவரையில் மார்க்சியர்கள் அதைச் சரியானபடி கையாளாமல் போயிருக்கலாம் ரசியா இதற்கு உதாரணம். ஒரு புதிய எந்திரத்தை வடிவமைப்பதில் உள்ள குறைநிறைகளைப் போலவே ஒரு புதிய சமுதாயத்தைச் கட்டியமைப்பதில் தவறு நேர்ந்துள்ளது. தவறுகளைச் சரி செய்யும் நோக்கில் அவற்றை ஆராயலாம்.

தேசிய முதலாளிகள் என்ற வர்க்கம் உண்டா இல்லையா என்பதை உலகளாவிய அளவில் தீர்த்துக் கொண்ட பிறகே தமிழகத்தில் பொருத்திப் பார்க்க முடியும். என்னைப் பொறுத்த மட்டில் குட்டி முதலாளிகளுக்கும், தரகு முதலாளிகளுக்கும் இடைப்பட்ட வர்க்கம் ஒன்று தமிழகத்தில் உள்ளது. தமிழக உழைக்கும் மக்கள் போராட்டதின் போதே அவர்களை அடையாளம் காண முடியும். பெரு நாட்டில் மக்கள் போர் நடத்துகிற பொதுவுடைமைக் கட்சி அங்கே தேசிய முதலாளி வர்க்கம் இருப்பதாக ஒப்புக் கொண்டு அவர்களது நலன்களையும் உள்ளடக்கிப் போராடுகின்றது. ஆனால் இப்போதைக்கு தேசிய முதலாளிகள் அவர்களோடு இல்லை. இங்குள்ள குறிப்பான சுரண்டல் வடிவங்களைக் கவித்துவமுடைய முழக்கங்களாக மாற்ற வேண்டும்.

மேற்கோள் போர் நடத்தப்படுவதாகக் குறிப்பிடும் அ. மார்க்ஸ் கட்டுரையிலும் மேற்கோள்களே காட்டப்படு

www.padippakam.com



கின்றன. அவர் சமூக ஆய்விலிருந்து முடிவுக்கு வருவது சரியாக இருக்கும். மேற்கோள்களைக் களத்தையும் காலத்தையும் பார்த்துச் சரியான முறையில் கையாள வேண்டும் என்றே லெனின் திரும்பத் திரும்பக் கூறுகிறார். எனவே இன்றைய தேசிய இனப்பிரச்சினைக்கு நேரடி யாகப் பொருத்திப் பார்க்கக் கூடிய செவ்வியல் மாதிரியை அவர்களிடம் எதிர்பார்ப்பது தவறு. மார்க்சிய இயங்கியல் என்கிற ஆய்வுக் கருவியையே அவர்களிட மிருந்து எடுக்க வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்த மட்டில் சாதி, மதம் இவை களை மீறி தேசியம் வளர்ந்துவிட முடியாது. தேசிய இன உருவாக்கத்தினுடைய நிபந்தனையாகவும் சாதி ஒழிப்பை நாம் மேற்கொள்ள வேண்டுமா என்பதையும் யோசிக்க வேண்டும்.

அகில இந்தியத் தேசியம் என்ற ஒன்று இங்குள்ள தேசிய இனங்களுக்கு முரணற்ற சனநாயகம் வழங்குவதன் மூலம் உருவாக வேண்டும் என்பது என் விருப்பம்.

9. **சிவப்பிரகாசம் (வேர்கள் — நெய்வேலி):** ஸ்டாலின் வரையறை இறுக்கமானதுதான். பொது வரையறையை இந்தியச் சூழலுக்குத்தக வளர்த்தெடுக்க வேண்டும். முதலாளியத்துடன் தான் தேசியம் பூரணமாய் வளர்ச்சி யடைகிறது. தேசியம் வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட சக்தி யல்ல. பயன்படுத்தும் சக்திகளைப் பொறுத்தே பாசிசமா இல்லையா எனச் சொல்ல முடியும். வர்க்கரீதியான வரையறை என்கிற கேள்வியே தேசியத்தைப் பொறுத்த மட்டில் தவறு செயலூக்கமான போராட்டங்கள் வேண்டும். எதற்குமே மாதிரிகள் தேவையில்லை. அகில இந்தியத் தேசியம் மேலிருந்து திணிக்கப்படுகிறது. சோசலிசத்திலும் தேசிய இனப்பிரச்சினை உள்ளது.

10. **டாக்டர் இராம. சுந்தரம் (தமிழ்ப் பல்கலைக்கழகம்):** தேசிய இனப் பிரச்சினை, அதன் வரையறை ஆகிய

www.padippakam.com



வற்றிற்கு ஒரு வரலாறு இருக்கிறது. பண்பு மாற்றங்களின் அடிப்படையில் புது வரையறைகள் தேவை தான். எனினும் பழைய வரையறையை முற்றாகத் தூக்கி எறிய வேண்டியதில்லை. ஏதோ ஒரு வகையில் மதம் என்பது தேசிய உணர்வுடன் தொடர்புடையதாகவே இருக்கிறது. மேற்கோள் யுத்தமென்பதெல்லாம் சரி. அ. மார்க்ஸ் கட்டுரையிலும் மேற்கோள்கள் இருக்கத்தானே செய்கின்றன ராஜராஜன் போன்றோரை தேசிய வீரர்களாகப் பார்க்க வேண்டியதில்லை. இளைஞர்களைக் கவர்வதற்காக இப்படிச் செய்யப்படுகிறது. தேசிய முதலாளிகள் இன்று இருக்கிறார்களா? இருந்தால் நட்புச் சக்திகளா? இல்லை முரண் சக்திகளா? பிராமணர்களை ஆரியர்கள் என ஒதுக்குவது சரியா?

**11. அறிவுறுவோன்:** தேசியம் வர்க்கம் சார்ந்ததே, மதம் தேசியத்தைக் கையாளும்போது பாசிசமாகிறது. ஸ்டாலின் வரையறை எப்போதும் பொருந்தும். கரையார்களின் இயக்கமாக மட்டுமே இருப்பதால்தான் புலிகள் இயக்கம் பாசிசத் தன்மையோடு இருக்கிறதா? ராஜராஜன் போன்ற பாரம்பரியங்கள் ஆபத்தானது. செவ்வியல் மாதிரிகள் தேவையில்லை. ஆனால் வழிகாட்டல் தேவையே. அகில் இந்தியத் தேசியம் தேய்மானத்தில் இருக்கிறது. தமிழ்த் தேசியமும் அப்படியே.

**12. சுகுமாரன் (தமிழ்நாடு இளைஞர் பேரவை):** இறுக்கமான வரையறை சாத்தியமில்லை. சூழலுக்குத் தகுந்தாற் போல மாறும். முதலாளியத்துடன் நேரடியாகப் பொருத்திப் பார்ப்பது தவறு. அடித்தட்டு உழைக்கும் மக்களின் விடுதலையோடு தேசியத்தை இணைக்கவேண்டும். அண்மைக் காலத்தில் தேசியம் பாசிசத்திற்குத்தான் போயிருக்கிறது. எச்சரிக்கை தேவை. தேசிய முதலாளிகள் இருக்கின்றனர். நட்புச் சக்திகளாகவே அவர்களைப் பார்க்க வேண்டும். தமிழகச் சூழலில் தேசியம் பேசும்

படிப்பகம்

www.padippakam.com



இயக்கங்களை மூன்றாகப் பிரிக்கலாம். (1) மாநில சுயாட்சி அளவிலான தன்னுரிமை இயக்கங்கள் (2) பிரிந்து போகும் சுய நிர்ணய உரிமை (3) தமிழக விடுதலைக்கான இயக்கங்கள். முதலாவது தேக்கத்திற்கே இட்டுச் செல்கிறது. மற்ற இரண்டையும் பின்னுக்குத் தள்ளுகிறது. தி.மு.க.வின் இடத்தைப் பிடிக்க முயலும் சட்டமன்றக் கோரிக்கையே இது. எனவே ஆயுதப் போராட்டத்துடன் இணைத்துப்பார்ப்பதே சரி. வர்க்க வரையறையில் தரகு முதலாளிகள் நிலப் பிரபுக்களோடு பார்ப்பனர்களையும் விலக்க வேண்டும். மேல்சாதிச் சனநாயகச் சக்திகள் அனுமதிக்கப்படலாம். ஆனால் தலைமை அவர்களுக்கில்லை. ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களையும் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்து மதம் மாறியவர்களையும் முன்னுரிமை கொடுத்து இணைக்க வேண்டும். விடுதலையடைந்த நாடுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டும். செவ்வியல் மாதிரிகள் கிடையாது. வடிவங்கள் செழுமைப் படுத்தப்பட வேண்டும். அகில இந்தியத் தேசியம் ஒடுக்குதலுக்கானதே. தேய்ந்து வருவதே. ரசியாவில் சு.நி. உரிமை சரியாக வழங்கப்பட்டதில்லை.

13. **மணிவேலன் (பெரியார் மையம்):** ஸ்டாலின் வரையறை இன்றும் பொருந்தும். முதலாளியத்துடன் நேரடியாகப் பொருத்திப் பார்க்க முடியாது. தேசியம் இங்கே முதலாளியத்திற்கு முன்பேவந்துவிட்டது. அந்நிய சக்திக்கு ஆட்படாமல் தேசிய இனப்போராட்டத்தை வளர்த்தெடுத்தால் பாசிசம் சாத்திய மில்லை. வர்க்கமோ, வர்க்க ஒடுக்கு முறையோ இங்கு இல்லை. வருண அடிப்படையிலேயே இங்கு ஒடுக்குமுறை நிலவுகிறது. தமிழ்த் தேசியத்தின் முதல் எதிரி பார்ப்பனர். அடுத்து பார்சி பனியாமுதலானோர். மூன்றாவது பன்னாட்டுச் சக்திகள். இறுதியில் பார்ப்பன இந்தியதேசிய அடி வருடிச் சக்திகள். இவர்கள் விலக்கப்பட வேண்டியவர்கள். இந்தியாவில் தேசியமுதலாளிகளுமில்லை. தமிழ்த்தேசிய முதலாளிகளும்

www.padippakam.com



இல்லை. ஒடுக்கும் தேசியத்தின் அடிப்படையிலேயே மார்க்சியம், தேசிய ஒடுக்குமுறை விடுதலை ஆகியவற்றை வரையறுக்கிறது. இங்கே ஒடுக்கும் தேசம் என ஒன்றில்லை. எனவே மார்க்சியம் இங்கே பொருந்தாது, பெரியாரியலே இங்குப் பொருத்தமானது. செவ்வியல் மாதிரிகள் சாத்தியமில்லை சு.நி உரிமைக்கும் பிரிந்து போவதற்கும் வேறுபாடு கிடையாது. ரசியாவில் சு.நி. உரிமை வழங்கப்பட்டதில்லை.

**14. அருணன் (ம. க. இ. பாண்டிச்சேரி)**: அரசு எப்போதுமே மக்களுக்கு எதிரானதுதான் 80 கோடியிலிருந்து பிரிந்து ஆறு கோடி மக்களுக்கான அரசை உருவாக்கவே தேசியவாதிகள் போராடுகின்றனர். விடுதலை அடைந்த அரசின் அதிகாரம் எந்த அளவிற்குக் குறைவாக இருக்கும் என்பதே நாம் பேச வேண்டியது. புதிய அரசின் வடிவத்தைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

**15. பிரிட்டோ (ம.க.இ.திருத்துறைப்பூண்டி)**: தேசியம் வர்க்கத்திற்கு அப்பாற்பட்டது. எல்லா வர்க்கமும் தேசிய இனமாகவே கருதப்படவேண்டும். தேசியம் தவிர்க்க இயலாமல் பாசிசத்திற்கு இட்டுச் செல்லும் எனச் சொல்ல முடியாது

**16. ரவிக்குமார்**: பாசிசத்திற்கு இட்டுச் செல்லக்கூடிய தேசிய இனப்போராட்டச் சக்திகள் உணர்வுபூர்வமாக மார்க்சியத்தை விலக்குவதைப் பார்க்கமுடியும். நெடுமாறன் தேசிய இனப்பிரச்சினை பேசினாலும் கீழே உள்ளவர்களை விலக்கவில்லை என்கிறார். ஆனால் மார்க்சியத்தை விலக்குகிறார். எம். சி. பி. ஐ. சாய்வு ராஜராஜனை நோக்கி இருக்கிறது அ. மா. வின் கட்டுரையில் ஓரிடத்தில் இவர்களை அஸ்ஸாம் 'உல்பா' வுடன் இணைத்துப் பேசப்படுகிறது. இது எப்படிச் சரி?

www.padippakam.com



உல்பா ஆயுதப்போராட்டத்தை நிகழ்ச்சி நிரலில் வைத்துச் செயல்படும் இயக்கம். தி.மு.க விற்கு மாற்றாக சமரச சக்திகள் மாறமுயலும் வேளையில் யாருடன் கூட்டு நடவடிக்கை என்பது பார்க்கப்படவேண்டும். மார்க்சியம், ஆயுதப்போராட்டம் ஆகியவற்றைக் குறைந்த பட்ச நிபந்தனையாகப் பார்க்க வேண்டும்

**சுகுமாரன்:** தன்னுரிமை மாநாடு தடைசெய்யப்பட்டுச் சிறையிலிருந்தபோது தேசிய இன விடுதலையில் அடித்தட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் இணைக்கப்படுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமெனத் தோழர் பொழிலன் பேசியபோது அதனை நிபந்தனையாக்கக் கூடாது என 'எம்.சி.பி.அய்' கட்சித்தலைவர் வெங்கட்ராமன் பேசினார்.

17. **உஞ்சை ராசன் (ஆசிரியர். மனுசங்க):** மதமும் சாதியும் துடைத்தெறியப் படாமல் தேசிய இன உருவாக்கம் இல்லை. உயர்சாதிக்காரர்கள் வர்க்க நீக்கம் செய்து கொள்வதற்குக் கலாச்சார முன் நிபந்தனைகள் வைக்கவேண்டும். மாற்றுக் கலாச்சாரம் ஒன்றையும் உருவாக்கவேண்டும். அத்தகைய மாற்றுக் கலாச்சாரம் அடித்தட்டு மக்களின் கலாச்சாரமாகவே இருக்கும். தலித்துகளின் பிரச்சினை அகில இந்திய அளவிலானது. இவர்கள் அகில இந்திய அளவில் ஒன்றுபடுவதைத் தடுக்க தேசிய இனப்போராட்டத்தை முன்னெடுப்போர் இவர்களது பிரச்சினைகளை முன் நிபந்தனைகளாக வைக்கவேண்டும். மேல்தட்டினரின் உணர்வே இங்கு தேசிய இன உணர்வாக வடிவெடுக்கிறது.

**18 காளிமுத்து :** தாழ்த்தப் பட்டவர்களின் பிரச்சினைகள் அகில இந்திய அளவில் இருந்தாலும் ரத்தக் கலப்பு அகில இந்திய அளவில் இல்லை. தேசிய உணர்வு என்பதே இரத்த உறவு முறையில் அமையவேண்டும். ராஜராஜன் போன்றோரைத் தேசிய வீரர் எனப் பாரம்

www.padippakam.com



பரியங்களை உருவாக்கியவர்கள் புதிய பார்ப்பனர்களே- ஆதிக்க சக்திகளே. ஆயுதந் தாங்கிய போராட்டத்தை மையப்படுத்துவது அவசியம்.

**சாரு:** இளைஞர்களைக் கவருவதற்கு ராஜராஜன் போன்றோரைத் தேசிய வீரர்களாக உருவாக்க வேண்டும் என்று இங்கே ஒருவர் சொன்னார். அப்படியானால் ராமனை மதவெறியர்கள் 'ஹீரோ' ஆக்குவதும் சரிதானே!

**19. பிரேம்:** பிரச்சினைகளைத் தீர்த்தே ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அழிவிலிருந்து தப்பித்தே ஆக வேண்டும் என்பதிலிருந்தே நமது பார்வை தோன்றுகிறது. இனம் பற்றிய பிரச்சினையை நாம் மிகவும் கருத்துருவாகவே பார்க்கிறோம். தமிழினம் என்பது விஞ்ஞானப் பூர்வமாய் ஒரு கற்பிதம். அரசியல் ரீதியாய் இது ஆயிரக்கணக்கான இனங்களை ஒடுக்கிய ஒரு ஏகாதிபத்தியமே. தமிழ்மொழியும் இப்படி நூற்றுக் கணக்கான மொழிகளை ஒடுக்கி வந்ததே. தமிழ்க் கலாச் சாரம் பற்றி இதுவரை பேசியவர்கள் ஒடுக்கப்பட்டவர் களின் கலாச்சாரம் பற்றி சிந்தித்ததே இல்லை. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பதுதான் இங்கே பண்பாடாக விளங்கி இருக்கிறது. கல்வி / அறிவு என்ப தெல்லாம் அடிப்படை மனிதர்களுக்கானதாக இருந்த தில்லை. தமிழினம் என்பதற்கு மட்டுமல்ல உலகெங் குமே இப்படித்தான். இறுக்கமான வரையறை என்ப தெல்லாமே இங்கு அதிகபட்சமானவர்களை ஒடுக் கியதுதான். இப்படி உட்கார்ந்துப் பேசி விவாதித்து முடிவுக்கு சனநாயக அடிப்படையில் வருவது என்ப தெல்லாம் தமிழ்க் கலாச்சாரத்தில் இருந்ததில்லை. முதன் முதலாக பிரான்சில்தான் மக்கள் அரசதிகாரத்திற்கெதி

தே—7

படிப்பகம்

www.padippakam.com



ராகப் போராடி சனநாயகத்தை உருவாக்கினார்கள். அதற்கு முன் இதெல்லாம் ராஜதுரோகம். இந்த உரிமை பிரெஞ்சுப் புரட்சியின் கொடை. அதற்கு முன் அரசன் மட்டுமே மனிதன். சேவகம் செய்வதே நமது கடமை' ஒன்றிணைக்கப்பட்ட முறை என்பது முழுமையாக வன்முறை சார்ந்ததே. இனம்தனிமனிதனை நசுக்குகிறது. எனவே இந்த இனத்தின் அடிப்படையில் மனிதனை அடையாளம் காண முடியாது. ஒடுக்கப்பட்ட மனிதன் ஒலிக்கும் வீரியமான சொல் தமிழில் ஏது? பிராமணக் கலாச்சாரம் நம்மை ஒடுக்குகிறது என்பதெல்லாம் இருக்கட்டும். நம்மை அடிமைப்படுத்துவதற்கான கூறுகள் நம்மிடையே இருந்தன. ஒடுக்கும் மனிதன் ஒடுக்கப்பட்ட மனிதன் என்கிற வரையறையே இங்குச் சாத்தியம். பொதுவான இன வரையறையென்று ஒன்று கிடையாது. சுதந்திரம் என்பதெல்லம் சரிதான். பொருண்மையான அடையாளம் தேவை. தமிழன் யார் என்றால் அடையாளம் காட்டும் அளவீடு நம்மிடம் இருக்கிறதா? இரண்டாயிரம் ஆண்டுகாலச் சரித்திரம் என்கிறீர்கள். எங்களுக்குச் சரித்திரம் ஏது? ஒடுக்குபவர்களின் சரித்திரமே நீங்கள் சொல்கிற சரித்திரம். இன மனிதனின் பண்பை பொருண்மையாக வரையறுத்துக் கொண்டே அடுத்த கட்ட நடவடிக்கையை நாம் திட்டமிடவேண்டும். நீ எனக்குள் வந்தால் உனக்குப் பாதுகாப்பு. அதாவது எனது ஒடுக்குமுறையை ஏற்றுக் கொண்டால் உனக்குப் பாதுகாப்பு. இப்படித்தான் இனம் தோன்றியது. ஆனால் இனம் இன்று உன்னைக் காப்பாற்றுகிறதா? இனமானம்-பண்பாடு இந்தச் சொற்களுக்கெல்லாம் என்ன வரையறை? ஒடுக்கப்பட்டவர்களுக்கு இனமே கிடையாது. புதிய இனம் உருவாக வேண்டும். ஒரே வரியில் சொல்வதானால் இப்படிச் சொல்லலாம். தமிழர்களை ஒடுக்கியது தமிழ்க் கலாச்சாரம் தான். நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டியது பாட்டாளி வர்க்கக் கலாச்சாரமாகத்தான் இருக்க வேண்டும்.

www.padippakam.com



20 **வேல்சாமி** : பக்தி இலக்கியங்கள் தமிழின், தமிழனின் தனித்தன்மையைக் காட்டுகின்றன என ராமதாஸ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மற்ற அம்சங்களில் விஞ்ஞான பூர்வமான கருத்துக்களைக் கொண்டிருக்கும் தோழர்களுக்குக்கூட தமிழ் இனம் தமிழ்க் கலாச்சாரம் போன்றவை குறித்து இத்தகைய தவறான பார்வைகள் உள்ளன. இதற்கான காரணத்தை அறிய நாம் கடந்த இரு நூற்றாண்டுகளில் தமிழ், தமிழ் இனம், தமிழ்க்கலாச்சாரம் தொடர்பாக எழுதப்பட்ட நூல்களின் பின்னணி, அரசியல், ஆசிரியர்களின் சாதி ஆகியவற்றைப் பரிசீலனைக்குள்ளாக்க வேண்டும். எம். எஸ் பூரணலிங்கம் பிள்ளை முதல் வெள்ளை வாரணர் வரை அனைவருமே உயர்சாதி சைவ வேளாள மரபில் வந்தவர்கள்தான். குறிப்பாக தமிழ்க்கல்விப் பாரம்பரியத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, இடை நிலைச் சாதிக்கோ இடமில்லை. இடம்பெற்ற ஓரிரண்டு இடைநிலைச் சாதியினரும் மேற்குறித்தவர்களின் கருத்தியலை ஏற்றுக் கொண்டவர்களாகவே இருக்கின் றனர். பின்னணியாய் உள்ள அன்றைய அரசியலைப் பார்க்கும் போது இவர்களனைவரும் அன்று பார்ப்பனர் களுக்கு எதிராக இருந்தார்கள் என்றாலும் இவர்கள் அனைவரும் உயர்த்திப் பிடித்தது பார்ப்பனியமும் வருணாசிரமமும்தான். சத்திரிய அந்தஸ்து கோரி இக்கால கட்டத்தில் வெள்ளாளர் மற்றும் இடைநிலைச் சாதியின ரால் வெளியிடப்பட்ட நூல்களைப் பார்த்தால் உண்மை விளங்கும். தொல்காப்பியம் தொடங்கி தமிழக வரலாறு முழுமையையும் உற்று நோக்கினால் நிலவுடமையிலும், கருத்தியல் ஆதிக்கத்திலும் பார்ப்பனர்களும் சைவ வேளாளர்களும் வரலாறு பூராவிலும் இணைந்தே வந்துள்ளனர். சோழர் காலத்தின் பிற்பகுதியில் பார்ப் பனர்களைக் காட்டிலுங்கூட சைவ வேளாளர்கள் அரசியலதிகார ஆதிக்கமும் நிலவுடமை ஆதிக்கமும் பெற்றிருந்ததை நவீன ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

www.padippakam.com



பின்னாளில் இது வருணாசிரமத்தை உதறாத சைவ சித்தாந்தமாகவும் மடங்களின் ஆதிக்கமாகவும் இறுகியது. காலனி ஆதிக்கம் தொடங்கி இந்நிலைகளில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. அரசு எந்திரம் விரிவாக்கப்படுகிறது. அறிவுத் துறைகள் வளருகின்றன. ஆங்கிலக் கல்வியுடன் இவை இணைக்கப்படுகின்றன. பார்ப்பனர்கள் எளிதில் இவற்றைக் கைப்பற்றி அகில இந்திய அளவில் ஆதிக்க சக்திகளாக ஆகின்றனர். இதுநாள் வரை சம அளவிலும் கூடுதலாகவும் ஆதிக்கம் புரிந்து கொண்டிருந்த உயர்சாதியினர் இது நாள் வரை கருத்தியல் ஆதிக்கத்தையே முதன்மையாகக் கொண்டிருந்த பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்குக் கீழாக அரசியலதிகாரத்தில் மட்டுமின்றி சகல துறைகளிலும் வரவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையை எதிர்கொள்ளவே தமிழினத் தொன்மை, கலாச்சார மேம்பாடு, மொழி முதன்மை ஆகியவற்றை இலக்கியக் களத்திலும் அரசியல் களத்திலும் இவர்கள் முன் வைத்தனர். ஜஸ்டிஸ்கட்சி, தனித்தமிழ் இயக்கம், திராவிட இயக்கங்கள் ஆகியவற்றில் இந்தக் கூறுகளைக் காணலாம். வரலாறு பூராவிலும் தமிழ்க் கலாச்சாரம் எனத் தூக்கிப் பிடிக்கப்பட்டதெல்லாம் முற்றிலும் வருணாசிரமத்தை நீக்கியதல்ல என்பதையும், தாழ்த்தப்பட்டவர்களின் நலனையும் கலாச்சாரத்தையும் உள்ளடக்கியதல்ல என்பதையும், உயர்சாதி மேட்டுக்குடியினரின் நலனுக்கானதாகவே இருந்தது என்பதையும் நாம் இன்று மறந்துவிடக்கூடாது.

❀ ❀ ❀

www.padippakam.com



நான்கு மணி நேர முதற்கட்ட விவாதம் முடிவடைந்தவுடன் ஒரு மணி நேர இடைவேளைக்குப் பின் மீண்டும் விவாத அரங்கு தொடர்ந்தது. விவாதத்தின் போது பெரும்பான்மையாக அனைவரும் உடன்பட்ட அம்சங்களையும், விவாதத்திற்குரியனவற்றையும் ஒருங்கிணைப்பாளர் தொகுத்தளித்தார். கலந்து கொண்ட அனைவரும் ஒப்புதல் அளித்தனர்.

**கூட்டுக்குரல் (உடன்பட்டவை)**

i) தேசம் பற்றிய ஸ்டாலினிய வரையறையை இன்று அப்படியே பொருத்திப் பார்க்க முடியாது. சூழல், போராட்டங்களின் தன்மை எல்லாமே மாறியிருக்கிறது. ஆனால் வரையறையே தேவை இல்லை எனச் சொல்ல முடியாது.

ii) தேசியத்தை முதலாளியத்துடன் நேரடியாகப் பொருத்திப் பார்க்க முடியாது.

iii) தேசியம் வர்க்க ஆய்விற்கு அப்பாற்பட்டதல்ல.

iv) தேசியம் தவிர்கக இயலாமல் பாசிசத்திற்கே இட்டுச் செல்லும் எனச் சொல்ல முடியாது. கையாள்வதைப் பொறுத்தே பாசிசத்திற்கு இட்டுச் செல்லுமா இல்லையா எனச் சொல்ல முடியும்.

v) ராஜராஜன் போன்ற மாமன்னர்களைத் தேசிய வீரர்களாகப் பார்ப்பதும், பண்டைய "பொற்காலங்களை" விமர்சனமின்றிப் பார்ப்பதும், இந்து மதம் சார்ந்த பண்பாட்டு அம்சங்களை உயர்த்திப் பிடிப்பதும், மொழி முதன்மை வாதத்தில் அமிழ்வதும் மிகவும் ஆபத்தானது. பாசிசத்திற்கே இட்டுச் செல்லும்.

vi) இன்று நேரடியாகப் பொருத்திப் பார்க்கத்தக்க செவ்வியல் மாதிரிகள் கிடையாது. மேற்கோள்

www.padippakam.com



யுத்தம் சாத்தியமில்லை. ஆனால் வழிகாட்டும் நெறிகளைப் பேராசான்களின் எழுத்துக்களிலிருந்து பெற முடியும்.

vii) ஐஏஎஸ்/ஐபிஎஸ் தேர்வுகளை தமிழ் நாட்டிலேயே, தமிழிலேயே நடத்துவது. தமிழ் வழிக் கல்வி போன்ற குறிப்பான முழக்கங்களின் அடிப்படையில் தேசிய இன அணி திரட்டப்பட வேண்டும். தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையோர் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

viii) அகில இந்தியத் தேசியமும் இங்கே இருக்கத்தான் செய்கிறது. இந்தி பேசும் மாநிலங்களில் இது அதிகமாய் இருக்கிறது. இது எச்ச சொச்சமாய் பிற தென் மாநில மக்கள் சிலரிடத்திலும் கூடக் காணப்படுகிறது. இது ஆதிக்கத் தன்மையானதாக இருப்பதால் இது எதிர்க்கப்பட வேண்டியது.

ix) சுய நிர்ணய உரிமை ரசியாவில் சரியாக வழங்கப்பட்டதில்லை. ரசியாவில் இன்றைய தேசிய இனப் பிரச்சினைகட்கு இது ஒரு முக்கிய காரணம். விரிவான, தூலமான ஆய்வுகள் இது குறித்துத் தேவை.

x) பிரிவினையை உள்ளடக்கியதே சுய நிர்ணய உரிமைக் கோரிக்கை. தனிநாடு கோரிக்கை, சனநாயகக் கோரிக்கை அதனை முன் வைப்பவர்களை முற்போக்காளராய்ப் பார்ப்பதே சரி.

xi) ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் அஸ்ஸாம் நாட்டு விடுதலை இயக்கமாகிய 'உல்ஃபா' போன்றவற்றையும் ஆயுதப் போராட்டம், மார்க்சியம் ஆகியவற்றைப் புறந்தள்ளும் இதர தேசிய இயக்கங்களையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவசியம்.

www.padippakam.com



**ஒருமித்த கருத்து அடைய முடியாமல் மேலும் விவாதத்திற்குரியனவாகத் தொகுக்கப்பட்டவை:**

1. தேசிய முதலாளிகள் / தமிழ்த் தேசிய முதலாளிகள் இல்லை என்கிற கருத்தைக் கோச்சடை, சுகுமாரன் போன்றோர் ஏற்கவில்லை.

2. தேசிய இனத்தை வர்க்க ரீதியாய் வரையறுப்பதில் பிரிட்டோ போன்றோர் கருத்து மாறுபட்டனர். ஸ்டாலின் குறிப்பிடும் நான்கு பண்புகளுக்குப் பொருந்தி வருகிற அனைவரையும் தேசிய இனமாகவே பார்க்க வேண்டும் என்கிற கருத்தை இவர்கள் முன் வைத்தனர்.

3. மேற்கண்ட அடிப்படையில் உள்ளடக்கப்பட வேண்டிய வர்க்கங்கள் புறந்தள்ளப் படவேண்டிய வர்க்கங்கள் எனப் பார்க்க முடியாது என்கிற கருத்தும் முன் வைக்கப்பட்டது. அப்படியானால் பாரதிய ஜனதா, விசுவ இந்து பரிசத் போன்றவற்றையும் அகில இந்தியம் பேசுகிற தரகு முதலாளிகளையும் உள்ளடக்கிவிட முடியுமா என்கிற கேள்வியை வர்க்க ரீதியாய் வரையறுக்க வேண்டுமென்கிற கருத்தை முன் வைத்தவர்கள் எழுப்பினர். உள்ளடக்குவது புறந்தள்ளுவது எனப் பார்க்காமல் யாரை அணிதிரட்டுவது எனக் கேட்பதே பொருத்தமாக இருக்கும் என்றார் கல்யாணி. அந்த அடிப்படையில் ஒடுக்கப்பட்ட / தாழ்த்தப்பட்ட சிறுபான்மை மக்களை அணி திரட்டுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார் அவர்.

4 அடித்தட்டு மக்களின் கலாசாரத்தை ஏற்றுக்கொள்ளும் கலாச்சார முன் நிபந்தனை வைக்க வேண்டும் என்கிற கருத்தையும் மேலும் ஆழமாக விவாதிக்க வேண்டும் என்று சிலர் குறிப்பிட்டனர்.

www.padippakam.com



5. இந்தியாவிற்கு மார்க்சிய-லெனினியம் பொருந்தாது. பெரியாரியலே சரியாக இருக்கும் என்கிற கருத்தைப் பெரியார் மையத்தவர்கள் மட்டும் தொடர்ந்து வற்புறுத்தினர். எனவே மார்க்சியத்தை நிபந்தனை யாக்குவதையும் அவர்கள் மறுத்தனர்.

6. பார்ப்பனர்களைப் புறந்தள்ள வேண்டுமெனப் பெரியார் மையத்தவரும் தமிழக இளைஞர் பேரவை யும் குறிப்பிட்ட போது பார்ப்பனரல்லாத யாரையும் சேர்த்துவிட முடியுமா என்கிற கேள்வியை மற்றவர் கள் எழுப்பினர். இன உணர்வு என்கிற அடிப்படை யில் பார்ப்பனரல்லாத உயர் சாதி ஆதிக்கமும் கொடியதுதானே என்ற கேள்வியை பலரும் எழுப் பினர். பிரேம், வேல்சாமி போன்றோரின் கருத்துக் களைப் பலரும் வற்புறுத்தினர்.

7. இருளர், கோத்தர் போன்ற இனங்களை தமிழ்த் தேசிய இனத்தில் சேர்க்கிறோமே? அவர்களது எழுச் சிகளை எப்படிப் பார்ப்பது? இனக்குழு மக்களை எல்லோருந்தானே சுரண்டுகிறோம். அவர்களது தனிநாடு கோரிக்கையை நாம் எப்படிப் பார்ப்பது? என்பன போன்ற அம்சங்களிலும் நாம் கவனம் செலுத்த வேண்டுமென்றார் இராமசுந்தரம். 'போடோ' மக்களின் போராட்டம் குறித்த 'உல்பா'வின் கருத்துக்கள் அதில் வழிகாட்டியாக அமையும் என்றார் இராமதாசு.

சுமார் ஐந்து மணிநேரம் விவாதம் நடைபெற்றது மையமான சில அம்சங்களில் உடன்பாடு ஏற்பட்டது. எனினும் தேசிய இனம் என்பது கற்பிதம் செய்யப்பட்ட சமூகம் என்கிற கருத்தாக்கமும் இன உணர்வு என்கிற முழக்கம் இறுதியில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரா கவே அமைந்து போகிறது என்கிற கருத்தும் விரிவாக விவாதிக்கப்படாதது குறை. இது குறித்த தோழர்களின்

படிப்பகம்

www.padippakam.com



கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. பிரேம், உஞ்சை ராசன், கோச்சடை, ரவி, வேல்சாமி ஆகியோரின் கருத்துக்களிலிருந்து விவாதத்தை மீண்டும் தொடங்கலாம்.

**குறிப்பு:** விவாதத்தில் பதிவு செய்யப்பட்ட கருத்துக்களை யாரும் மறுக்கவில்லை. பெரியார் மையத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் ''மார்க்ஸ்-எங்கல்ஸ் எழுத்துக்களிலிருந்து,, வழிகாட்டும் நெறிகளைப் பெறமுடியும் என்கிற கருத்தை மறுத்து (1) பெரியாரின் கருத்துக்களே வழிகாட்டும் நெறிகளாக இருக்கமுடியும் எனவும் (2) ஸ்டாலின் வரையறையை ஏற்றுக் கொள்வது தங்களின் கருத்தில்லை, ஸ்டாலின் வரையறையிலுள்ள குறைகளைப் பெரியாரியல் கொண்டே நிறைவு செய்ய முடியும் என்பதுதான் தங்கள் கருத்து எனவும் (3) தொகுப்புரை இறுதியில் ஒரு சிலரின் பெயரைக்குறிப்பிட்டு அவர்களின் கருத்துக்களிலிருந்து விவாதத்தை மீண்டும் தொடங்கலாம் என எழுதியிருந்தது தொகுப்பின் சார்புத் தன்மையை வெளிப்படுத்துகிறது எனவும் கடிதம் எழுதியிருந்தனர். இக்கடிதம் முழுமையாக **நிறப்பிரிகை-3ல்** பக்கம் 62, 63இல் உரிய பதிவுடன் வெளியிடப்பட்டது.

நிறப்பிரிகை-3இல் வெளியிடப்பட்டுள்ள (பக்.64) இன்னொரு கடிதத்தில் திரு **அஸ்வகோஷ்** அவர்கள் ''மார்க்சியம்-தேசிய இனப் பிரச்சினை சிறிது கவனத்தில் எடுக்கவேண்டிய பிரச்சினைகள்'' -கட்டுரையில், ''மணியரசன் போன்றோர்'' எனக் குறிப்பிடுவதைக் கண்டித்திருந்தார். ''யார் பேசினாலும்'' எனப் போடுவதே சரிசாக இருக்கும் எனவும் குறிப்பிட்டிருந்தார் திரு. மணியரசன் அவர்கள் அவ்வாறு அடிக்கடி பேசி வந்ததன் விளைவாகவே அவ்வாறு குறிப்பிடப்பட்டது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

**–நிறப்பிரிகை–2.**

**(ஜனவரி 1991)**

www.padippakam.com

# 3. எதிர்வினையாக இரு கடிதங்கள்

கூட்டு விவாதத்திற்கும், தேசியம் ஒரு கற்பிதம் என்கிற கருத்திற்கும் எதிர்வினையாக நிறப்பிரிகையில் வெளியான இரு கடிதங்கள் கீழே. இரண்டையும் எழுதியவர் **டன்மார்க்** கில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர் **சிவா**. சிவாவும் அவரது தோழர்களும் நிறப் பிரிகையின் தொடர்ந்த வாசகர்கள். 'மார்க்சியம்-தேசிய இனப்பிரச்சினை...' கட்டுரையையும் கூட்டு விவாதத்தையும் சிறு பிரசுரமாக்கி விவாதத்திற்காகப் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் சுற்றுக்கு விட்டவர்கள் இவர்கள்.

**கடிதம் 1.** தேசிய இனப்பிரச்சினை குறித்த கட்டுரை மீதான விவாதத்தில் தோழர்- அறிவுறுவோன் எழுப்பிய கேள்வி தொடர்பாக:

*கரையார்களின் இயக்கமாக மட்டுமே இருப்பதால் தான் புலிகள் இயக்கம் பாசிசத் தன்மையோடு இருக்கின்றதா?*

**கரையார்:** அறிவுறுவோன் அவர்கள் குறிப்பிடும் ஈழத்தின் கரையார் எனப்படும் சாதியினர் தமிழ்க் கரையோரப் பகுதிகளில் குடியேறிய மக்களாவர். இவர்கள் தினம் தினம் கடலையே எதிர்கொண்டு போராடி வாழ்பவர்கள். இவர்களின் வாழ்க்கையும் போராட்டக் குணாம்சம் நிறைந்தது என்பதைமறுக்க முடியாது.

இந்தச் சமூக மக்கள் சமையலுக்கான மீனைத் தவிர வாழ்க்கைக்குத் தேவையான மற்ற எல்லா அத்தி

www.padippakam.com



யாவசியப் பொருள்களையும் கடலின் வருமானம் கொண்டே எதிர்கொள்பவர்கள். 1983 இல் இலங்கை சிங்களப் பௌத்த அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'கடல் வலையத் தடைச்சட்டம்' (கடலில் குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் மீன் பிடிக்கத் தடை) கொண்டுவரப் பட்டதால் இவர்களின் வாழ்வே ஒடுக்கப்பட்டது. இதனால் தமிழ் இயக்கங்களில் இந்த சமூகப் பிரிவின் கூடிய இளைஞர்கள் உள்வாங்கப்பட்டனர்.

கரையார் சமூகத்தின் உதவியின்றி எந்தவொரு தமிழ் இயக்கமும் வளர்ந்ததும் இல்லை. வாழ்ந்ததும் இல்லை(வேகப் படகோட்டிகள்). இந்த மக்களின் இயற்கையான போராட்டக் குணமும் தமிழ்த்தேசியத் தின் தேவையும் இணைவது சமூகவளர்ச்சிப் போக்கின் நியதி. இலங்கையில் புரட்சியைப் பேசிய மார்க்சியர் களிடம் (1976இன் பின்பு) போராட்டக் குணம் குறி தொடர்பான ஆய்வின்மைக்கு கரையார் சமூகமோ, வேறெந்தச் சமூகமோ பொறுப்பல்ல.

புலிகளின் இயக்கத்தில் கரையார் சமூகத்தில் இருந்து வந்த அங்கத்தவர்களும், தலைவர்களும் கூடுதலாக உள்ளார்கள் என்பது உண்மைதான். அப்படியிருந் தாலும் புலிகள் இயக்கம்+அரசியல் மரபு தொடர்பான பிரச்சினையாக கேள்வியை எழுப்பி இருப்பின் இவ் வாதம் தொடர்பாக புதிய கருத்துக்களை வந்தடைய உதவியாக இருக்கும். இதைவிடுத்து, சாதி தொடர்பான கேள்வியை எழுப்புவது பார்ப்பனிய வர்ணாச்சிரம சிந்தனையின் தாக்கம்தான். ஈழத்தில் அறுபதுகளில் தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களில்கூட கரையோரச் சமூக இளைஞர்கள், அறிவுஜீவிகள் (கா.சிவத்தம்பி) இருந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். கரையார் மட்டுமல்ல வெள்ளாளர், கோவியர், ஏன் சாதியப் பாதிப்பே இல்லாத முஸ்லீம் இளைஞர்களும், புத்தி

www.padippakam.com



ஜீவிகளும் பங்கு கொண்டனர். (பங்குஎன்பது வெவ்வேறு அளவுகளில்). தனித்து 'பஞ்சமர்' தான் போராடினார்கள் என்பது தவறு.

கரையார் சமூகத்தினருக்கு ஆலயம் தொடர்பாக பிரச்சினைகள் இருக்கவில்லை. அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கொண்டு இருந்தது ஒரு காரணம். ஆறுமுக நாவலர் வசன நடையாகக் கொண்டிருந்த சிவபுராணத்திலிருந்து வலைவீசிப் புராணத்தை அகற்றியது இங்கு குறிப்பிடவேண்டும். இருந்தும் அச் சமூகம் சுயமான குணாம்சம் உடையது. எவர் தயவிலும் தங்கி நிற்காத சமூகம்- கடலைத்தவிர கோவில் திருவிழாக்களில் தனியாக உற்சவ நாட்களைக் கூடப் பெற்றிருந்தனர். (வடமராட்சிப் பகுதிகளில்) மற்றைய சாதியினரின் திருவிழாக்களைக்கூட மிஞ்சும் அளவிற்கு செலவும் செய்வார்கள்.

தமிழ்நாட்டுச் சூழலில் 'மீனவ குப்பங்கள்' என ஒரு தாழ்வுநிலையில் பார்க்கப்படுவது போல ஈழத்தில் கிடையாது.

அறிவுருவோன் அவர்கள் நடைமுறை தொடர்பு ஆன பிரச்சினைகளை மறந்துவிடக் கூடாது. ஈழத்தின் பாராளுமன்றத்தில் ஈடுபடாத கம்யூனிஸ்டுகள் ஸ்டாலினின் நான்கு வரையறைகளில் ஒன்றான பொருளாதாரம் ஈழத் தமிழர்களுக்குக் கிடையாது என்பதற்காக தமிழ் இனத்தை தேசிய இனம் இல்லை என்ற முடிவுக்கு வந்ததும், போராட்டம் சாத்தியம் இல்லை என்ற முடிவுக்கு வந்ததும் தெரிந்ததே. இருந்தும் தமிழர்களின் போராட்டம் இன்று பதினைந்து வருடப் போராட்டப் பாரம்பரியம் கொண்டதாக வளர்ந்து வந்துள்ளது எல்லோரும் அறிந்ததே.

ஆனால் புலிகள் இயக்கத்தின் அரசியலில் பாசிசக் கூறுகள் தொடர்பாக இன்று ஐரோப்பிய சூழல்களில்

www.padippakam.com



(சஞ்சிகைகள் மத்தியில்) விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. இவ்விவாதங்களிலும் மலட்டு இடது களின் அடைப்பு விவாதங்களும் கருத்துரீதியில் வெளிப் படுவதைக் காணமுடிகின்றது. கரையோர சமூகம் அல்லது எந்த ஒரு சாதியின் அடிப்படையிலும் பாசிசத்தை வரையறுக்க முடியாது.

திராவிட இசம் பேசிக்கொண்டு ஆட்சிக்கு வந்த பிராமணியம் அம்பலப்பட்டுள்ளதும், திராவிடர் கழகங் களின் தமிழனத் துரோகங்களும் அம்பலப்பட்டுள்ளது. பாரம்பரிய பூமியிலிருந்து முஸ்லீம் மக்களை வெளியேற்றி யது, முஸ்லீம், சிங்கள, தமிழ் அப்பாவிப் பொதுமக்க ளைக் கொன்று குவிப்பது போன்ற நடவடிக்கைகளில் இலங்கை அரசும் புலிகளும் ஒருவொருக்கொருவர் சளைத் தவர்களல்ல. இவ்வேளை புரட்சிகர சக்திகள் தங்களை மீளாய்வு செய்துகொள்ள வேண்டும். அவ்வாறு செய்வ தன் மூலமே எதிர்காலம் புரட்சியாளர்களின் காலமாய் இருக்கும். இவ்வேளை நிறப்பிரிகை போன்ற இதழ்கள் புரட்சிகர சக்திகளின் மத்தியில் பொது நிலை நின்று நிறைய எழுத வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

—நிறப்பிரிகை : 6

(ஏப்ரல் 1993)

**கடிதம்—2**

தேசியம் என்பது கற்பிதம் செய்யப்பட்ட ஒரு சமூகம் என்கிறீர்கள். தேசியம் என்பது அன்றைய காலகட்டத் தேவை என்றே நான் விளங்கிக் கொள்கிறேன். ஈழத் தேசிய இனப் பிரச்சினையைப் பார்க்கும்போது இலங்கை பௌத்த சிங்கள பேரினவாத அரசின் ஒடுக்குமுறை களான திட்டமிட்ட குடியேற்றம் என்பது தமிழ் விவசாயி களின், நகர்ப்புற மக்களின் நிலம் சம்பந்தப்பட்ட பிரச் சினை ; தரப்படுத்துதல் தமிழ் மாணவர்களின் பிரச்

www.padippakam.com



சினை ; இன அழிப்பு இனக்கொலை என்பவை தமிழ் மக்களின் உயிர் தொடர்பான பிரச்சினை. மொத்தத்தில் ஈழத்தில் தமிழ் மக்களின் இருப்புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை கற்பிதம் என்று பார்ப்பதால் சமூக முன்னோட்டம் வேண்டி நிற்கும் உணர்வுகளின் உயிரோட்டம் அழிகிறது. மொத்தத்தில் இது மலட்டு மார்க்சியர்களுக்கு உதவுவதாகவே அமையும். இது அ. மார்க்ஸ் இன்னும் பழைய மரபு மார்க்சியத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இயலாமல் இருப்பதையே காட்டுகிறது.

—நிறப்பிரிகை : 7,
(சனவரி 1994)

**குறிப்பு :** 'தேசியம் ஒரு கற்பிதம்' என்பதும் 'தேசியம் ஒரு காலகட்டத்தின் தேவை' என்பதும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் அல்ல. இது குறித்த நிறப்பிரிகையின் கருத்துக்களை முன்னுரையில் காண்க. □

www.padippakam.com

# 4. தேசியம் - விமர்சன அரங்கு

(நிறப்பிரிகை முதல் நான்கு இதழ்கள் குறித்த ஆய்வரங்கு பாண்டிச்சேரி வணிக அவையில் 21—10—92 அன்று நடைபெற்றது. தேசிய இனப் பிரச்சினை தொடர்பான கட்டுரைகள்மீது திருச்சி **ஜவஹர்**— தன் கருத்துக்களை முன் வைத்தார்).

**ஜவஹர்:** 'மார்க்சியம்—தேசிய இனப்பிரச்சினை இன்று கவனத்தில் எடுக்க வேண்டிய படிப்பினைகள்' என்ற அ. மார்க்சின் கட்டுரையில் பல்வேறு தவறுகள் இருந்தாலும் அவற்றில் முக்கியமானவற்றை மட்டும் இங்கே பேசுவதுதான் சாத்தியமாக இருக்கும். பிரதானமாக அவர் குறிப்பிடுவது போலவே, தூலமான சூழல்களுக்கான, தூலமான ஆய்வில் அவர் செய்த தூலமான தவறுகளை இங்கே பார்ப்போம். அவருடைய தூலமான ஆய்வு அளிக்கும் முடிவுகள் :

i. இந்தியாவில் தேசிய முதலாளிகள் என்று ஒருவருமில்லை. அப்படி இருந்தாலும் அப்பெரு முதலாளிகள் தேசிய ஒடுக்குமுறையின் பின்புலமாகத்தான் இருக்க முடியும்.

ii. இங்கேயுள்ள எந்த தேசிய பிரச்சினையும் வளர்ந்துவரும் முற்போக்கான முதலாளிய வர்க்கத்தால் கட்டமைக்கப்படுவதாகக் கொள்ள முடியாது. எந்த ஒரு அம்சத்திலும் இன்றைய வளரும் முதலாளித்துவம் முற்போக்கானதாக இல்லை.

iii. தரகு முதலாளிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாக நாம் காங்கிரசைப் பார்க்க வேண்டியதில்லை.

www.padippakam.com



iv. இன்றைய நவகாலனிய சூழலில், தரகு முதலாளிகள், இந்து பெருமதவாத சக்திகள் நமது வரையறையிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்கள். விவசாயிகள், சிறு முதலாளிகள், மத்தியதரவர்க்கம், வேலை இல்லாதோர், மாணவர்கள், மதச் சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடியினர் நமது வரையறையில் உள்ளடக்கப்பட வேண்டியவர்கள்.

இத்தகைய கருத்துக்களின் அடிப்படையைத் தகர்த்து ஜே. பி. தீட்சித் ''இந்திய வரவாறு ஒரு புதிய பார்வை'', ''இந்திய தேசிய முதலாளிகளும் தரகு முதலாளிகளும்'' போன்ற புத்தகங்களில் பல்வேறு உதாரணங்களுடனும் ஆய்வுகளுடனும் விளக்கியுள்ளார்.

(அ) இந்திய தேசிய முதலாளிகள் வர்க்கம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் வர்க்கமாக 1947க்கு முன்னும் பின்னும் இருந்து வருகிறது. விவசாயம், கைவினைத் தொழில், சிறு உற்பத்தி ஆகியவற்றில் கருக்கொண்ட இந்திய தேசிய முதலாளித்துவம் தன் போக்கில் வளரவிடப்பட்டிருந்தால் காலப்போக்கில், நடுத்தர, கனரகத் தொழில் உற்பத்தியில் வளர்ந்து இன்று ஜனநாயக அங்கங்களுடன் கூடிய பல்வேறு தேசிய அரசுகளாகவும் உருவாகி ஒரு தளர்ந்த ஐக்கிய ஒன்றியமாகவோ (அ) சுதந்திர தனி அரசுகளாகவோ (ஆ) ஒரு நாடு பிற நாடுகளை ஒடுக்கும் ஒரு அரசமைப்பாகவோ இருந்திருக்கும். ஆனால், இது ஒரு வரலாற்றுக் கற்பனையே, நடந்ததோ, ஆங்கில ஏகாதிபத்தியம் இந்த முதலாளித்துவ வளர்ச்சியின் முதுகெலும்பை உடைத்ததே. ஆனால் இந்திய முதலாளித்துவம் முற்றிலும் ஒழிந்துவிடவில்லை. சூரத் காங்கிரஸில் தூக்கியெறியப்பட்ட தீவிரவாதிகளிலிருந்து, இன்று—பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் விவசாயப் போராட்டங்கள்வரை தொடர்ந்து ஏகாதிபத்தியத்தை எதிர்கொண்டு வருகிறது. இந்தியமுதலாளித்துவம், பணக்

www.padippakam.com



கார, நடுத்தர மற்றும் சிறு விவசாயிகளையும், வணிகர்கள், கைவினைஞர்களையும் தன் அங்கங்களாய்க் கொண்டுள்ள இந்த இந்திய முதலாளிகள், நலிவடைந்தும், சிதறியும், முன்னேறி வருவதாயும் உள்ளனர். எனவேதான் ஒரே அமைப்பாய் இவர்களால் எழமுடியவில்லை. ஐரோப்பிய முதலாளிகள் பின்னாளில் ஏகாதிபத்தியமாய் வளர்ந்து இந்தியா போன்ற காலனிய நாடுகளைச் சுரண்டுகையில் மதச்சார்பின்மை, சுதந்திரம் இன்னபிற முற்போக்குப் போர்வைகளை போர்த்திக் கொண்டு நம்மைக் கொள்ளையடித்தனர். அதை எதிர்த்து எழுந்த இந்திய தேசிய முதலாளிகள் தங்கள் தனித்துவத்தையும் ஒற்றுமையையும் காக்க மதம், இனம். மொழி போன்ற பிற்போக்குக் கொள்கைகள் வாயிலாய் மக்களைத் திரட்டினர், இதில் நாம் எதை முற்போக்கு என்பது ?

''தரகு முதலாளிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டதாக காங்கிரசை நாம் பார்க்க முடியாது''—அ. மார்க்சின் அரியகண்டுபிடிப்பு. ஹ்யூம் என்ற காங்கிரஸின் பிதாமகர் கூறுகிறார்; 'நாம் ஒரு பயங்கரமான கலகம் வெடிக்கின்ற பேரபாயத்தில் இருக்கிறோம் என்பதைச் சான்றுகள் எனக்கு அறிவுறுத்துகின்றன. ஏழு பெரும் புத்தகத் தொகுதிகள் எனக்குக் காட்டப்பட்டன. இவை சுமார் முப்பதாயிரம் செய்தியாளர்களிடமிருந்து பெறப்பட்டவை. இவை காட்டுவது தற்போதைய நிலைமைகளின் மீதான அவநம்பிக்கைதான் இந்த ஏழைகளின் நெஞ்சங்களில் நிறைந்துள்ளது. நிச்சயம் பட்டினியும், சாவும் தான் மிஞ்சும். எனவே ஏதாவது செய்யவேண்டும் என அவர்கள் நினைக்கிறார்கள்—அது வன்முறைதான். இலைமீது நிற்கும் நீர்த்துளிகள் ஒன்று சேர்வது போல அவர்கள் பெருங்கூட்டமாக ஒன்றுசேருவார்கள். படிப்பாளிவர்க்கம் இந்த இயக்கத்தின் தலைமையை ஏற்று



படிப்பகம்

www.padippakam.com



இதை ஒரு தேசிய எழுச்சியாக வழிநடத்தும்.'' ஆன்ட்ரூஸ் முகர்ஜி போன்றவர்கள் கூறுவதாவது: ''காங்கிரஸின் தோற்றத்திற்கு முந்திய ஆண்டுகள் 1857க்கும் பிந்திய காலத்தின் மிகவும் அபாயகரமான பகுதிகளாகும். படிப்பாளி வர்க்கத்தினரின் ஆதரவையும், அனுதாபத்தையும் பெற்றிருக்கக்கூடிய ஒரு உழவர் கலகம் தோன்றியிருக்கும். ஆனால் அதே நேரத்தில் புதிதாய் தோன்றிய வர்க்கங்களுக்கு ஒரு தேசிய மேடையாக புதிய இந்தியாவை உருவாக்கும் தளமாக காங்கிரஸ் அமைந்தது.'' காங்கிரஸ் இந்தியத் தரகு முதலாளிகளுக்காகவும், ஏஜண்டுகளுக்காகவும் உருவாக்கப்பட்டதொரு இயக்கமே என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

திலகர், சவர்க்கார் போன்றோரின் இந்துமத வாதம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஒரு நல்ல புரட்சிகர அம்சமாகும். ஆனால் காந்தியின் அஹிம்சை தத்துவம், மதச்சார்பின்மை போன்றவை பிரிட்டிஷ் எஜமானர்களுக்கு தொண்டூழியம் செய்ய கையாண்ட அடிவருடித்தனமான கொள்கைகளே. ஒரு கட்டத்தில் முஸ்லீம் லீக்கில் மௌலானா ஹஸ்ரத் மொஹானி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் கொரில்லா யுத்தம் உட்பட பலாத்கார முறைகளை ஆதரித்தார். இந்த சமயத்தில் நாம் இருவகையான முதலாளித்துவத்தைக் காணலாம். ஒன்று திலகர், சவார்க்கர், மௌலானா மொஹானி போன்றோரால் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவது; மற்றது காந்தியின் தலைமையிலானது.

தரகு முதலாளிகளை எதிர்த்தே தேசியம் வளர்க்கப் படவேண்டும். தரகு முதலாளிகளை நீக்கிவிடுவது என்று கூறுவது வெற்று தேசியம் என இல்லாத ஒன்றை கற்பனை செய்யும் கருத்து முதல்வாதத்திற்கும் தரகு முதலாளிகளை தப்பிவிடும் சதிக்கும் உடந்தையாகப் போகும்.

www.padippakam.com



**வேல்சாமி :** அ.மா. கூறியுள்ளதாக ஒரு சிலவற்றைப் பட்டியல் போட்டீர்கள். ஆனால் எதையும் உங்கள் கட்டுரையில் மறுக்கவில்லையே.

**ஜவஹர் :** தேசிய முதலாளிகள் உருவாகவே முடியாது என்பதை மறுக்கிறேன். எத்தகைய புதிய பொருளாதாரக் கொள்கைகள் நிறைவேற்றப்பட்டபோதிலும் முற்றிலுமாய் சிறு முதலாளி வர்க்கத்தை ஒழித்துவிட முடியாது.

**வேல் :** என்ன ஒரு சிறுதொழிலாக இருந்த போதிலும் வெளிநாட்டுத் தொழில்நுட்பம் அதில் ஊடுருவிக் கிடக்கவே செய்கிறது. அதன் மூலம் கட்டுப்பாடுகளும் நுழைந்து விடுகின்றன. அப்படி இருக்கும்போது அவற்றை தேசியத் தொழில் என்று எடுத்துக்கொள்வது எப்படி?

**ஜவஹர் :** இன்றைய சூழலில் எந்த நாடாக இருந்தாலும் தொழில்நுட்பம் உள்ளே வருவது என்பதைத் தவிர்க்க முடியாது. இந்த அடிப்படையில் தேசியத் தொழில்களே இல்லை எனச் சொல்லிவிட முடியாது.

**வேல் :** ஜப்பானை அப்படிச் சொல்ல முடியுமா? ஆரம்பம் முதல் அவர்கள் சுயமான தொழில்நுட்ப வளர்ச்சியையும் மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால் இங்கு அப்படி இல்லை. அத்தகைய முயற்சிகளை மேற்கொண்ட திப்பு சுல்தான் போன்றோரின் நடவடிக்கைகள் முறியடிக்கப்பட்டன.

**ஜவஹர் :** சுயமான முயற்சியில் இங்கும் முதலாளிகள் உருவாகித்தான் உள்ளனர். ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திராத இவர்களைத் தேசிய முதலாளிகள் எனலாம். பஞ்சாப் போராட்டத்தை நாம் அப்படித்தான் பார்க்க வேண்டும்.

www.padippakam.com



**வேல் :** தேசிய முதலாளிகள் என்பதற்கு என்ன வரை
யறையை நீங்கள் மேற்கொள்கிறீர்கள் என்பது புரிய
வில்லை. மத்திய அரசை எதிர்ப்பதாலேயே முதலாளிகள்
எனச் சொல்லிவிட முடியுமா?

**ஜவஹர் :** சிறிய முதலாளிகளைத் தேசிய முதலாளி
கள் எனலாம். தொழில்நுட்பத்தை வைத்து முடிவு கட்டி
விட முடியாது. பசுமைப் புரட்சியால் முன்னேறிய
பஞ்சாப் விவசாயிகளையும் இப்படிச் சொல்லலாம்.

**நாகா :** விவசாயம், பசுமைப் புரட்சி என்பதெல்லாம்
ஏகாதிபத்தியத்துடன் link ஆகிவிட்டன. கோதாவரி
டெல்டா, மேற்கு உத்தரப் பிரதேசம், கோவை, தஞ்சை,
செங்கல்பட்டு போன்ற பசுமைப் புரட்சி நிறைவேற்றப்
பட்ட இடங்கள் எல்லாவற்றிலுமே International structure
உடன் link ஆகிவிட்டன. Fertilizer Subsidy-யை, IMF,
World Bank தீர்மானிக்கின்றன. Germplasm மணிலாவில்
பாதுகாக்கப் படுகிறது. ஒரு 'பல்பா'வது நாம் கண்டுபிடித்
துள்ளோமா? Technolog/ வேண்டாம் என்று சொல்ல
வில்லை. ஆனால் சுயமான தொழில்வளர்ச்சி சாத்திய
மில்லை என்பது சரிதான்.

**ஜவஹர் :** நான் இவற்றை மறுக்கவில்லை. சுயமான
Research and Developement சாத்தியமில்லை. எல்லா
வற்றிற்குமே ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கியிருப்ப
தால் தான் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுகிறார்
கள். எனவேதான் தேசிய முதலாளிகள் என்கிறேன்.

**அ. மா. :** சமீபகாலமாய் சுதேசியம் பற்றி ஆர். எஸ்.
எஸ்., பாரதீய ஜனதா கட்சிகள் அதிகம் பேசுகின்றன.
தேசியப் பொருட்களை வாங்க வேண்டும் எனவும் ஏகாதி
பத்தியப் பொருட்களைப் புறக்கணிக்க வேண்டும் எனவும்
இயக்கமே தொடங்கியுள்ளனர். இதை எப்படிப் பார்ப்
பது? தேசிய முதலாளிகள் இயக்கமென்பதா? அப்படி

படிப்பகம்

www.padippakam.com



யானால் அரசின் பொருளாதாரக்கொள்கைகளை இவர் கள் வன்மையாக எதிர்க்காதது ஏன்? டாட்டாவையும் கோத்ரெஜ்ஜையும் இவர்கள் தேசிய முதலாளிகள் என்கி றார்கள். இதை நாம் ஏற்றுக் கொள்கிறோமா?

**ஜவஹர் :** இந்திய அரசை எதிர்ப்பதே ஏகாதிபத்திய எதிர்ப்புதான்.

**நாகா :** பஞ்சாப்பில் பசுமைப் புரட்சியால் பயனடைந்தவர், அடையாதவர் இருவருமே போராட்டத் தில் உள்ளனர். சுருக்கிப் பார்த்து விட முடியாது. Econcmic Demands-இல் தான்தொடங்குகிறது. பசுமைப் புரட்சியின் விளைவாக தண்ணீர் வேண்டும் எனப் போராட்டம் தொடங்குகிறது. பஞ்சாப்பை பொறுத்த மட்டில் Iceology முக்கியப் பங்கு வகிக்கிறது.

**பழமலய் :** நிதி மூலதனம் மற்றும் ஏகாதிபத்தியம் சாராத தேசிய முதலாளிகள் என நீங்கள் யார் யாரைச் சொல்கிறீர்கள்?

**ஜவஹர் :** வெளிநாட்டுப் பொருட்களைப் பயன் படுத்துவதாலேயே தரகு முதலாளிகள் எனச் சொல்லிவிட முடியுமா?

**ரவி :** தேசிய முதலாளி என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதுடன் அடையாளம் காட்டப்படுகிறது. இந்த அரசு ஏகாதிபத்தியம் சார்ந்த அரசு. எனவே இதனை எதிர்ப்பது தேசியம். தரகு முதலாளிகள் நேரடி யாக ஏகாதிபத்தியத்துடன் பிணைந்திருப்பதில்லை. இன்று நடைபெறும் தேசிய இனப் போராட்டங்களில் எவை எவை இந்த அரசின் எந்தெந்தப் பண்பை எதிர்க் கின்றன எனப் பார்ப்பது மிகவும் முக்கியம்.

**அருணன் :** சரத்ஜோஷி அரசில் பங்கு பெறுகிறார்

**ரவி :** பஞ்சாபிலும் அப்படித்தான் மான் ஆதரிக் கிறார்.

www.padippakam.com



**ஜவஹர் :** ஜோஷி அரசை எதிர்க்கிறார்; பின் அரசில் பங்கு பெறுகிறார். தலைவர்கள் அப்படி இருக்கலாம்; ஆனால் விவசாயிகள் தொடர்ந்து எதிர்ப்பாகத் தான் இருக்கிறார்கள். இந்திய முதலாளிகளுக்கு inherent ஆகவே ஒரு Backwardness இருக்கிறது. தேசிய முதலாளிகள் தவறுகள் செய்வார்கள். அவர்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதுதான் பாட்டாளி வர்க்கக் கட்சியின் வேலை. அவர்களுக்கென்று ஒரு பொருளாதாரத் திட்டமிருக்காது.

**கல்பாக்கம் ஸ்ரீதர் :** தேசிய முதலாளிகள் என்றால் தங்கள் Survivalக்கு எதிரான முயற்சிகளை அவர்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும். IPRக்கு எதிரான கடுமையான போராட்டங்கள் உருவாகவில்லையே ஏன்?

**கிராமியன் :** தலைவர்கள் திடீரென அரசில் பங்கு பெறும்போது அந்த இயக்கங்கள் அவர்களைத் தூக்கி எறிந்திருக்க வேண்டும். தொடர்ந்து துரோகிகள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றால் அந்த இயக்கங்களைத் தேசியத் தன்மையானதாய் எப்படிச் சொல்ல முடியும்?

**கோபால் :** தேசிய இனப் போராட்டங்களில் பங்கு பெறும் முதலாளிகளுக்கு ஒரே நேரத்தில் இருவிதமான பண்புகள் இருப்பதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். அகில இந்திய தளத்தில் வைத்துப் பார்க்கும் போது தரகு முதலாளியாக இருக்கக்கூடிய ஒருவர் மாநில அளவில் பார்க்கும் போது தேசிய முதலாளி எனச் சொல்லத்தக்க தன்மைகள் கொண்டிருக்கலாம்.

**அ.மா :** கோபால் எழுப்புகிற கேள்வி சில அடிப்படையான பிரச்சினைகளை எழுப்புகின்றது. இந்தியா போன்ற ஒரு பல தேசிய இன நாட்டில் ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்திற்குள் உள்ள ஒரு தரகு முதலாளியை எப்படிப் பார்ப்பது? ஒரே சமயத்தில் அவன் தேசிய இனப்போராட்டத்தை ஆதரிப்பவனாகவும் அமெரிக்க

www.padippakam.com



ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பவனாகவும் இருக்கிறான். பஞ்சாப், ஈழப் போராட்டங்கள் உட்பட இந்தப் பண்புகளை நாம் கவனிக்கலாம். எனவே, தரகு முதலாளி, தேசிய முதலாளி என்கிற கருத்தாக்கங்கள் குறித்த வரையறை பற்றிய அடிப்படையான கேள்வி எழுகின்றது. இவற்றை மாவோவோ இல்லை வேறு யாருமோ விஞ்ஞானபூர்வமாய்க் கறாராக வரையறுத்ததில்லை. மாவோவின் காலத்திற்கும் இன்றுள்ள நிலைக்கும், மாவோவின் காலத்திலேயே ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்குமிடையே முதலாளித்துவ அமைப்பிலும் அவை உலக முதலாளிய அமைப்புடன் கொண்ட உறவிலும் வேறுபாடுகள் இருந்துள்ளன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு உலக முதலாளிய அமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த பத்தாண்டுகளில், குறிப்பாக கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள அளவு மற்றும் பண்புரீதியான மாற்றங்கள் பிரமிக்கத்தக்கன. தேசிய முதலாளி, தரகு முதலாளி போன்ற வரையறைகள் ஒன்று காலாவதியாகியுள்ளன அல்லது புதிய அம்சங்களை உள்ளடக்கிப் புதிய வரையறைகளுக்காகக் காத்திருக்கின்றன. சுயமான மூலதனம், சுயமான தொழில் நுட்பம், சுயமான சந்தை ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேசிய முதலாளியை வரையறுக்க முடியுமென்றால் சட்டிப் பானைகள்செய்பவரைத் தவிர யார் இங்கு தேசிய முதலாளி? எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும்போதுதான் 'தேசியம் என்பது கற்பிதம்' என்பன போன்ற கருத்தாக்கங்களின் முக்கியத்துவம் நமக்கு விளங்குகிறது. தேசிய இனப்போராட்டங்களில் ஊடாடி நிற்கும் பாசிசக் கூறுகள், ஏகாதிபத்தியச் சார்பு ஆகியவை மிகக் கவனமாக ஆராயத்தக்கன. தேசிய இன உணர்வு உருவாக்கத்தில் கருத்தியலின் பங்கு அத்தகையக் கருத்தியலின் பிரதானமான கூறுகள் இவைகளெல்லாம் கவனிக்கத்தக்கவையாய் உள்ளன. தேசியம் என்பது கற்பிதம் என்கிற

www.padippakam.com



சிந்தனையை ஏற்றுக்கொள்வதன் மூலமே நாம் இந்த அம்சங்களைத் தொடமுடியும்.

**நாகா :** இந்தியா, மலேசியா போன்ற இடங்களில் ரப்பர் விளைகிறது. இதனை கையுறைகளாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறார்கள். திடீரென அமெரிக்கா சட்டம் போட்டு கையுறைகள் வேண்டாமென்கிறது. இந்தியாவில் சுமார் 62 தொழிற்சாலைகள்—அவற்றில் கிட்டத்தட்ட 58—தென்னகத்தில் உள்ளன. இதனால் ஒரே இரவில் சுமார் 5000 தொழிலாளிகள் தேவையற்றவர்களாகி விட்டார்கள். சமீபத்தில் இந்த முதலாளிகள் சென்னையில் கூடிப் பேசினார்கள். அமெரிக்கக் கொள்கையை எதிர்ப்பீர்களா என்று கேட்டேன். 'நாங்கள் ஏன் அதனை எதிர்க்க வேண்டும்? அதெல்லாம் முடிகிற காரியமா சார்' என்று திருப்பிக் கேட்டார்கள். Pragmatic calculation-இல் அவர்கள் இவற்றை அணுகுகிறார்கள். விவசாயத்தில் வேண்டுமானால் விரைவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு வரலாம். இந்த முதலாளிகளிடம் இந்தத் தன்மை வரவே வராது. மக்களைத் திரட்டுவது என்கிற கருத்தே இவர்களிடம் கிடையாது.

**ஜவஹர் :** எல்லா தேசிய முதலாளிகளுக்குமே தரகு முதலாளிகளாகத்தான் ஆசை. எப்போது அவர்களுக்கு ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடு வருகிறதோ அப்போது நாம் அதைப் பயன்படுத்த வேண்டும். சி.ஐ.ஏ. ஆதரவு பெறுகிற ஒரு அம்சத்தை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு இயக்கத்தைத் தரகு முதலாளி எனச் சொல்ல முடியாது. ஏகாதிபத்தியத்தின் முரண்பாட்டை அது பயன்படுத்துவதாகத்தான் பார்க்க வேண்டும்.

**நாகா :** தேசியம் என்றால் கற்பிதம்; ஆனால் சமயங்களில் அவசியமான கற்பிதமாக இருக்கிறது என்கிறது **நிறப்பிரிகை.** திலகர் ஒரு இந்திய தேசியத்தைக் கற்பித்தார். காந்தி வேறொரு இந்திய தேசியத்தை

www.padippakam.com



கற்பித்தார். இவர்களுக்கெல்லாம் கீதை ஒரு புதிய power source ஆக இருந்தது. அதன் மூலம் ஒரு புதிய moral order முன்வைக்கப்பட்டது. சரி, தப்பு என்றெல்லாம் நாம் எதையும் சொல்லமுடியாது. தேசிய வரையறையில் Ideology மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஜவஹர் வெறும் Economic Premiese இல் நின்று பேசுகிறார்.

**ஜவஹர் :** என்னைப் பொறுத்தமட்டில் concrete work என்பது Ideology அல்லது Textஐ பகுப்பாய்வு செய்வதல்ல. அரசியல் இயக்கத்தைப் பகுப்பாய்வு செய்வதுதான்.

**கிராமியன் :** நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. Text-ஐப் பகுப்பாய்வு செய்வதென்பதே political work தானே. அரசியல் இயக்கத்தைப்பகுப்பாய்வு செய்ய Text-ஐயும் பகுப்பாய்வு செய்துதான் ஆக வேண்டும்.

**ஜவஹர் :** இந்தியாவைத் தொடர்ந்து விற்று வந்தது காங்கிரஸ். பாரதீய ஜனதா அதனை எதிர்த்து வந்திருக்கிறது. நரசிம்மராவ் அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான ஓட்டெடுப்பில் பாரதீய ஜனதாவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் 158 பேர் முழுமையாக வந்து அரசை எதிர்த்து வாக்களித்தனர். தேசிய முன்னணி அப்படிச் செய்யவில்லை.

**ரவி :** நீங்கள் வைக்கிற அளவுகோல் வேடிக்கையாக இருக்கிறது. பாரதீய ஜனதா கட்சியினர் தேர்தலில் பங்கு பெற்று 158 பேர் பாராளுமன்றத்திற்கு வந்து ஓட்டு போட்டதால் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள், தேர்தலையே புறக்கணித்து அதனால் பாராளுமன்றத்திற்கு வந்து எதிர்த்து ஓட்டளிக்க இயலாமற் போனதால் நக்சல்பாரிக் கட்சியினர் ஏகாதிபத்திய ஆதரவாளர்களா?

www.padippakam.com



**கல்பாக்கம் ஸ்ரீதர் :** பாரதீய ஜனதா IMF-ஐ முழுமையாக எதிர்க்கவில்லை. IMF-நிபந்தனைகளில் சில மாற்றங்கள் செய்தால் போதும் என்றுதான் சொல்கிறார்கள். புதிய பொருளாதாரக் கொள்கைகளை அவர்கள் முழுமையாக எதிர்க்கவில்லை.

**ஜவஹர் :** நெருக்கடி நிலை வருவதாகக் கொள்வோம் அதனை R.S.S எதிர்த்தால் நாம் ஆர். எஸ். எஸ்சை ஆதரிப்பதா இல்லையா?

**அ.மா: Hypothetical** ஆகப் பேசக்கூடாது. இனி ஒரு முறை நெருக்கடி நிலை வந்தால் அது பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். ஆகியவற்றின் அருளாசியுடன்தான் வரும். இன்று தமிழ்நாட்டில் 'தடா' பிரயோகிக்கப்படுவது போல நரசிம்மராவ் அரசைப் பாரதீய ஜனதாவிலிருந்து முழுமையாகப் பிரித்துப் பார்க்க வேண்டியதில்லை. இந்தியாவைத் தொடர்ந்து காங்கிரஸ் விற்று வந்திருக்கிறது என்றால் ஆட்சியிலிருந்ததன் மூலம் அதற்கு அந்தவாய்ப்பு இருந்து வந்திருக்கிறது, பாரதீய ஜனதாவிற்கு அந்த வாய்ப்பில்லை என்பதுதான் பொருள். மற்றபடி ஏகாதிபத்தியத்துடனான அணுகல் முறைகளில் பாரதீய ஜனதாவிற்கும் காங்கிரசுக்கும் பெரிய வேறுபாடுகள் கிடையாது.

**சாருநிவேதிதா** (சாரு) **:** இந்த விவாதத்தில் பாதியில் தான் நான் வந்துகலந்து கொண்டேன். எமக்கு ஜவஹரை இதற்கு முன்பு தெரியாது. அவர் பேச்சுகள் எனக்கு வியப்பளித்தன. பக்கத்திலிருப்பவரிடம் பி.ஜே.பி. ஆளா என்று கேட்டேன் இல்லை, தீட்சித் என்று ஒரு ஆள் பம்பாய் பகுப்பாய்வுக் கழகம் என்று வைத்திருக்கிறார். ஆர்.எஸ். எஸ். போன்றவற்றை ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளாகப் பார்க்க வேண்டும் என்பது இவர்கள் கொள்கை. அந்த அமைப்பை ஆதரிப்பவர் ஜவஹர் என்று சொன்னார். எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. மதவாதத்தை

படிப்பகம்

www.padippakam.com



ஆர்.எஸ்.எஸ்.சை ஆதரிக்கவேண்டும் என்றெல்லாம்சொல்வது கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விசயம்.

**ஜவஹர் :** இப்படி முத்திரை குத்துகிற தன்மையை விட்டுவிட வேண்டும். இது என்னைப் புண்படுத்துகிறது.

**பழ :** ஜவஹர் சொல்வதில் ஒன்றை positive ஆகப் பார்க்க வேண்டும். தேசிய இனப் போராளிகள் ஏகாதிபத்தியச் சார்பாளர்களுடன் தொடர்பே வைத்துக் கொள்ளக் கூடாது என்றால் 'புரூக் பான்ட்' டீத்தூள் பயன்படுத்தும் கடையில் நாம் 'டீ' குடிக்கக்கூடாதா? இதற்கெல்லாம் என்ன முடிவு? யாரைத்தான் நாம் சார்ந்திருப்பது? இந்த வகையில் ஜவஹர் கிளப்புகிற பிரச்சினை சரியானதுதான்.

**நாகா :** சாரு சொல்வது போல பி.ஜே.பி.யை நாம் முழுமையாக வெளியே தள்ளிவிட்டு விவாதித்துக் கொண்டிருக்க முடியாது. Ideology-ஐப் பயன்படுத்தி மக்களை பெரிய அளவில் திரட்டி வருகிறது பி.ஜே.பி. கருத்தியல் பற்றி எனக்குக் கருத்தே இல்லை என்கிறார் ஜவஹர். அது எப்படிச் சரியாக இருக்க முடியும்? வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளால் மக்களைத் திரட்ட முடியாது. Leftist என்கிற பட்சத்தில் கருத்தியல் உருவாக்கத்தை நாம் பகுப்பாய்வு செய்தாக வேண்டும். இந்திய தேசிய போராட்டங்கூட ஏகாதிபத்திய எதிர்ப்பு இல்லாமல் இருந்திருக்க முடியாது. Popular Front ஒன்று மட்டுமே ஏகாதிபத்திய எதிர்ப்புடையதாக இருக்க முடியும். ஒரு கட்சி anti imperialist-ஆக இருக்க முடியாது. Ideological formulation ஐ study பண்ணாமல் பி.ஜே.பியை எப்படிப் புரிந்து கொள்வது? மார்க்ஸ் உடலை உழைப்புச் சக்தியாகப் பார்த்தார். ஆனால் இன்று தேசிய இயக்கங்களால் உடல்கள் அழிகின்றன; அழிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் தொடாமல் concreate analysis எப்படி? பொறுப்பான சிந்தனையாளர்கள் என்றால் ஜவஹரும் தீட்சித்தும் இவற்றை விட்டு விட்டுச் செல்ல முடியாது.

www.padippakam.com



ஜவஹர் : என்னுடைய Premises-இல் நின்று நான் பேசினேன். 'தேசியம் ஒரு கற்பிதம்' என்கின்ற கருத் தாக்கம் எனக்கு ஆர்வமளிக்கவில்லை. அதை முக்கியம் எனக் கருதி யாராவது விவாதத்தை initiate பண்ணினால் நான் பங்குபெறத் தயார். பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். என் றாலே அவற்றை எதிர்ப்பாகப் பார்க்க வேண்டியதில்லை. அவைகளுக்கெதிரான ரொம்பவும் emotional-ஆன எதிர்ப்பு இருக்கிறது.

பழ : பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். ஆக ஜவஹர் இல்லாதவரை அவற்றைப் பற்றிப் பேசுவதற்காக ஜவஹர் இத்தனை வருத்தப்பட வேண்டியதில்லை. அதனைப்பற்றி நாங்கள் பேசுகிறோம் என்றால் இன் றைய சூழல் அதனைத் தேவையாக்குகிறது.

சாரு : பாரதீய ஜனதா விஷயத்தில் உணர்ச்சி வசப் படாமல் எப்படி இருக்க முடியும்?

—நிறப்பிரிகை : 5
(அக்டோபர்-92)

www.padippakam.com

# ஆ

# தமிழ்த் தேசிய உருவாக்கம்: கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினை

படிப்பகம்

www.padippakam.com



தமிழின உணர்வை முன்னிறுத்தியும் செயல்படும் இயக்கங்களின் நடைமுறைகளைக் கூர்ந்து கவனிக்கும் போது அவர்கள் யாரும் மார்க்சின் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பொருட்படுத்தாததோடு இந்த எச்சரிக்கையை நினைவூட்டுபவர்களைக் கண்டு எரிச்சலும் ஆத்திரமும் அடைகின்றனர். புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தேசிய இன இயக்கங்கள் பலவும், தேசிய விடுதலைக்குப் பிந்திய அரசுகள் பலவும் பாசிசமாய் வடிவெடுத்துள்ள அவலங்கள்—இவை எவற்றிலிருந்தும் எந்தப் பாடமும் கற்றுக் கொள்ளத் தேவையில்லை. அதிகாரத்தைக் கைப் பற்றினால் போதும் என்கிற நோக்கோடு இயக்கங்கள் பலவும் செயல்படுவதை நாம் காணமுடிகிறது.

2. (அ) : தமிழ் இன விழிப்புணர்வில் ஏற்பட்டுள்ள புத்தெழுச்சியை வரவேற்று நாம் வைத்த விமரிசனங்களில் ஒன்று ''தமிழர்கள்'' என்றால் யார் என்கிற வரையறை நமக்குத் தேவை என்பது. தமிழர்கள் என்னும்போது ஒரு குறிப்பிட்ட புவியியற் பகுதியைச் சேர்ந்த மக்கட் பிரிவினர் என்று பொருள் கொள்கிறோமா? அப்படியானால் அந்த எல்லை எது? அது வட வேங்கடம் முதல் குமரிவரையிலான—கேரளத்தைத் தவிர்த்த இன்றைய தமிழ் மாநில எல்லையைக் குறிக்கிறதா? இந்த எல்லைக் குட்பட்ட அனைவரையும் தமிழக மக்கள் அல்லது தமிழர் என்கிறோமா? இவர்களில் 63 சதத்தினரே தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் எனும்போது இதர 37 சதத்தினரையும் 'தமிழர்' என்கிற வரையறையில் உள்ளடக்குகிறோமா? ஆரியர் — திராவிடர் என்கிற கருத்தியல்களின் அடிப்படையில் பார்ப்பனரை ஒதுக்கு கிறோமா?

2. ஆ. இந்தக் கேள்விகளுக்கு இப்போது என்ன முக்கியத்துவம்? இந்தப் பொதுவுடமையாளர்கள்

www.padippakam.com



எப்போதுமே இப்படித்தான். ஒன்று தேசிய இனப் பிரச்சினையையே மறுப்பார்கள் அல்லது அதனை ஏற்றுக்கொண்டு இப்படிக் கேள்விகளை உருவாக்கிக் குட்டை குழப்புவார்கள்; பாசிச பூதம் காட்டுவார்கள் என்கிற முணுமுணுப்புகள் காதில் விழுகின்றன. இவர்கள் நாம் சற்று முன் இடையிட்டுச் சொன்ன எச்சரிக்கைகள் தவிர இன்னொன்றையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது முக்கியம். இதுவரை மேற்குறித்த கேள்விகள் இவ்வாறு வெளிப்படையாக முன்வைக்கப்படாவிட்டாலும் கூட இங்கே திராவிடம்/தமிழ்த் தேசியம், பேசிய/பேசுகிற பலரும் வெளிப்படையாகவும் உள்ளுறையாகவும் சில வரையறைகளை மனதிற் கொண்டே வந்திருக்கின்றனர். சில எடுத்துக் காட்டுக்கள்.

2 (ஆ) (i) தமிழ்/திராவிட மீட்பு வாதங்களின் **தொடக்க கால முன்னோடிகளில்** ஒருவராக மனோன் மணியம் சுந்தரம் பிள்ளையைக் குறிப்பிடுவர். அவர் தனது இறுதிக்காலத்தில் எழுத இயலாமற் போன குறிப்புகளைத் தான் எழுதுவதாக முன்னுரைத்து அவரது முக்கிய சீடரான **வெ. ப. சுப்பிரமணிய முதலியார்** எழுதியுள்ள ''இராமாயண உள்ளுறையும் ஆரிய-திராவிடப் போராட்டமும்'' என்கிற நூலில் குறிப்பிடப்படுகிற கீழ்க்கண்ட வரையறையைத் தொடக்க கால முன்னோடிகளின் வரையறையாகவே கொள்ளலாம். முதலியார் குறிப்பிடுவார் :

''இந்து தேசத்தவர்களை, ஹிந்துக்கள், முகமதியர், கிறிஸ்தவரென்று மதம் பிரிப்பது போல தென்னிந்தியர்களைச் சாதிபற்றி ஆரியர், தமிழர் என்று பாகுபாடு செய்யலாம். அப்படிப் பாகுபாடு செய்வதில் பெரும்பான்மை காரணமாகத் தமிழர் என்ற பெயர்ப் பொருளில் தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் என்ற பெயர்ப் பொருள்களும் அடங்கும். ஹிந்துக்களும், மகமதியர்

www.padippakam.com



களும் வாழும் சென்னப் பட்டணத்திலே ஹிந்துக்கள் மகமதியர் என்று கூறவேண்டிய சமயங்களில் ''தமிழாள்'' ''துலுக்காள்'' என்று சாதாரண சனங்கள் சொல்வதுண்டு. இந்து வெகுஜன வழக்குச் சொற்றொடரில் 'தமிழாள்' என்பது 'தெலுங்காளை' உள்ளிட்டது கவனிக்கத் தக்கது.''

தொடக்க கால மீட்புவாதிகள் ஆரியரல்லாத அதாவது பார்ப்பனரல்லாத மக்கட் பிரிவினரை தமிழர்/த்ராவிடர் எனக் குறிப்பிட்டனர். இதில் தெலுங்கர்/கன்னடர்/மலையாளிகள் உள்ளடங்குகின்றனர். வெ.ப.சு. முதலியார் ''துலுக்காளை'' விலக்குகிறார். இவர் வரையறையில் தாழ்த்தப்பட்டவர் உள்ளடக்கப்படுகின்றனரா? தெரியவில்லை. இவர் சொல்லுகிற வெகுஜன வரையறையை ஏற்றுக்கொண்டால் குடியானவர்/பிராமணர்/துலுக்கர்/பள்ளுபறையர் என்றாகிறது. இதில் 'குடியானவர்கள்' எனப்படும் வேளாண் மக்களையே முதலியார் தமிழாளாக ஏற்றுக் கொள்வது புலப்படுகிறது. தவிரவும் மேற்குறிப்பிட்ட அதே நூலில் பிறிதோரிடத்தில், ''ஆரியரல்லாராயினும் இந்து மதத்தராய் **மாட்டு மாமிசம் தின்னாராயுள்ள** ஜாதி ஜனங்களோடிருந்து இன்னும் பொம்பாய் போன்ற வடதேசத்துப் பிராமணர் போசனஞ் செய்கின்றனர்'' (அழுத்தம் நம்முடையது) என்று குறிப்பிடுவதிலிருந்து இவர் மாட்டு மாமிசம் தின்பாராயுள்ள ஜாதி ஜனங்களை வரையறையிலிருந்து விலக்குவது குறித்து கவலைப்படாதவர் என்பது புரிகிறது.

2. ஆ (ii) **நீதிக் கட்சி:** தெலுங்கு / கன்னட / தமிழ் வேளாளர்கள், மலையாள நாயர் முதலானோர் முன்னின்று தொடங்கிய நீதிக் கட்சியின் 'திராவிட'வரையறை முதலியாரது வரையறையிலிருந்து பெரிதும் வேறுபட்டதில்லையாயினும் போகப் போக இக்கட்சி தேர்தல் சார்ந்த கட்சியாய் மாறியபோது (பார்ப்பனரல்லாத வரைத் திராவிடர் என வரையறுத்து வந்த) இக்கட்சி

www.padippakam.com



பார்ப்பனரையும் உறுப்பினராக்கிக் கொள்ளத் தீர்மானித்தது "நாங்கள் பார்ப்பனீயத்தைத்தான் ஒழிக்க விரும்புகிறோமேயொழிய பார்ப்பனரை அல்ல" என்கிற குரலை முதன் முதலாக ஒலித்தார் **குஞ்சிதம் குருசாமி.** கடைசி வரைத் தேர்தலைச் சாராது அரசியல் நடத்திய பெரியார் சமரசமில்லாமல் பார்ப்பனரை விலக்கி வந்ததையும் தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுத்த கட்சிகள் பார்ப்பனரையும்/பார்ப்பனீயத்தையும் பல்வேறு மட்டங்களில் உள்ளடக்க நேர்ந்ததும் கவனிக்கத்தக்கன.

2.ஆ (iii): **பெரியார்:** *அரசியற் சூழலுக்குஏற்ப கற்பிதம்* செய்யப்படுகிற தேசியத்தின் வரையறையும் மாறும் என்பதற்கு பெரியாரின் கருத்துகளும் செயல்பாடுகளும் சிறந்த சான்று. 1950-க்கு முன்பு வரை 'திராவிடர்' என்ற கருத்தாக்கத்திற்கு அழுத்தம் தந்து வந்த பெரியார் அதன் மூலம் ஆரியர் அதாவது பார்ப்பனர் தவிர்த்த ஏனைய மக்களை—முஸ்லிம்—கிறிஸ்தவர், சிறுபான்மை மொழியினரை உள்ளடக்கி—பொருள் கொண்டு வந்தார். ஆனால் 1950க்குப் பின்பு 'சுதந்திரத் தமிழ் நாடு' என்ற முழக்கத்தை முன் வைத்து இந்திய தேசியப் படத்தை எரித்தார். தமிழக எல்லைக்குட்பட்ட 'சுதந்திர' அரசே அவர் கோரியது. பார்ப்பனர் உள்ளிட்ட மாநில எல்லைக்குட்பட்ட மக்கள் அனைவருக்குமான அரசு. வடவர் ஆதிக்கத்திலிருந்து விடுபடுதலே பிரதானம். ஆனால் அது திராவிடக் கூட்டாட்சியாக இருக்கக் கூடாது. அப்போது தமிழர் சிறுபான்மையாகி விடலாம் என்கிற எச்சரிக்கையை அவர் முன் வைத்தார்.

"நம் நாட்டு ஆதிக்கம் நமக்கு வரவேண்டும் என்று கேட்கிறோம் என்றால், ஆட்சி நம் கைக்கு வரவேண்டும் என்கிற அவசியம் கூட இல்லை. நம் நாடு பிரிந்து



படிப்பகம்

www.padippakam.com



அதிகாரம் பார்ப்பான் கையில் இருந்தால்கூடப் பரவாயில்லை. டெல்லி ஆதிக்கம் போச்சு என்று தெரிந்தால் அப்புறம் பார்ப்பனர்களெல்லாம் நாம் சொன்னபடி கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.''

''முன்பு திராவிட நாடு கேட்டார். இப்போது அதை விட்டுவிட்டார். தமிழ் நாடு கேட்கிறார் என்று சிலர் சொல்லுவார்கள். இது பெரும்பாலும் குறும்புக்காகக் கேட்கப்படுகிற கேள்வியாகும், தமிழ்நாடு என்பதும் திராவிட நாடுதான். முன்பு தெலுங்கன், மலையாளி, கன்னடன் எல்லாம் நம்முடன் சேர்ந்து இருந்தான். அவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி நாம் திராவிட நாடு என்று சொன்னோம். இப்போது அவனவன் பிரிந்து தனித்தனி நாடு பெற்று இருக்கிறான். 'தமிழ்நாடு' என்று சொல்லும்படியாக இப்போது இருக்கிறது. ஆகவே தமிழ்நாடு என்று சொல்கிறோம்.''

''இப்போது திராவிட நாடுதான், மற்ற நாடுகளுடன் சேர்ந்ததுதான் வேண்டும் என்ற உணர்ச்சி உண்டா? ஏற்பட்டிருக்கிறதா? என்பது ஒரு புறம் இருக்கட்டும். அப்படியே திராவிட நாடு பிரிந்தால் நமக்கு என்ன லாபம்? இன்று எப்படி தமிழ்நாடு பார்லிமெண்டில் மற்ற 14 நாட்டுக்குப் அடிமையாக இருக்கிறதோ அதோபோல நாளை மற்ற மூன்று நாடுகளுக்கும் அடிமையாகத்தான் இருக்கவேண்டிவரும்.''

இவை பெரியார் மொழிகள். தவிரவும் திராவிட இயக்கத்தின் மூலம், தான் பார்ப்பனரைத் தவிர்த்த பிற்பட்ட இனத்தவரின் நலனைத்தான் மனத்தில் கொண்டுள்ளதாகவும் ஆதித் திராவிடரை விலக்கிப் பொருள் தருமாறும் பெரியார் பேசியுள்ளதைக் கோ. கேசவன் சுட்டிக் காட்டியுள்ளார் பெரியாரின் விளிப்பு

www.padippakam.com



பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்டவர்களை நோக்கியே அமைந்ததெனினும் அவர் கோரிய தமிழ்நாடு விடுதலை என்பது தாழ்த்தப்பட்டவர்களையும் தமிழகத்திலுள்ள பிறமொழி பேசும் திராவிடர்களையும் உள்ளடக்கியது தான் எனக் கருத இடமுண்டு.

2. ஆ. (iv) **ம. பொ. சிவஞானம்:** காங்கிரசிலிருந்து ராசாசி விலகியிருந்த 1944-'45இல் அவரது சீடரான ம பொ சி.யால் 'தமிழரசுக் கழகம்' தோற்றுவிக்கப் பட்டது. இந்திய யூனியனுக்குள் தமிழ்க் குடியரசு என்பது நோக்கம். ''திராவிடர் கழகம் வர்ணத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. தமிழரசுக் கழகம் தமிழ் மக்களின் தேசிய உணர்ச்சியை ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது'' என்பன ம.பொ.சி யின் வாசகங்கள். பார்ப்பனரை உள்ளடக்கி ஆனால் தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் போன்ற சிறு பான்மையினரை விலக்கி இவ்வரையறை முன்வைக்கப் படுவது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் ஆதரவு; தி.க. எதிர்ப்பு, ராசாசி ஆதரவு; காமராசர் எதிர்ப்பு ஆகிய ம.பொ.சி.யின் அரசியலோடு இவ்வரையறை இணைத்து நோக்கத் தக்கது.

2. ஆ.(v) **தி.மு.க. (அண்ணா):** **திராவிட** என்கிற புவியியற் எல்லைப் பரப்பின் அடிப்படையில் பார்ப்பனர் சிறுபான்மை மொழியினர் எல்லோரையும் உள்ளடக்கி திராவிட முன்னேற்றக்கழகத்தின் வரையறை அமைந்தது ''திராவிட உள்ளுணர்வுள்ள அனைவரும், அம்மண் ணுக்கு நன்றியுள்ள யாரும்'' என வரையறை செய்யப் பட்டது.

2 ஆ. (vi) **குணா:** தாழ்த்தப்பட்டவர்களின் தலைமை என்பதை வற்புறுத்தும் வகையில் மற்றவர்களிடமிருந்து வேறுபடும் குணா, தமிழ் நாட்டிலுள்ள சிறுபான்மை மொழியினரை நாயுடு, ரெட்டி போன்ற தெலுங்கு

www.padippakam.com



வேளாளச் சாதிகளை மட்டுமின்றி லம்பாடிகள், ஒட்டர் கள், சக்கிலியர் போன்ற அடி நிலையிலுள்ள உழைக்கும் வர்க்கங்களையும் 'தேசிய இன வரையறையிலிருந்து விலக்க வேண்டும் என்கிறார். தமிழ் நாட்டிலுள்ள இவர் களுக்கு நிலமில்லாத அடிப்படையில் 'பட்டா' அளிப்பது இட ஒதுக்கீடு அளிப்பது போன்றவற்றையும் இவர் எதிர்க்கிறார்.

2. ஆ. (vii): **ஈழத் தேசிய இயக்கங்கள்:** ஈழத்தேசிய இயக்கங்கள் வேளாளர், கரையாளர் போன்ற உயர்சாதி சைவ வேளாள மரபினாலேயே தலைமை தாங்கப் படுகின்றன என்கிற விமர்சனத்தையும், கே. டானியல் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள் இறுதி வரை தேசியஇயக்க நீரோட்டத்தில் கலந்து கொள்வதில் தயக்கம் காட்டி வந்தமையையும் அனைவரும் அறிவர். தொடக்க கால ஈழத்தேசிய இயக்கங்கள் குறித்து கா. சிவத்தம்பி அவர்களின் கீழ்க்கண்ட ஆய்வுரைகள் கவனிக்கத் தக்கன.

''தமிழ் என்ற சொல் அம்மொழியையும் அதனைப் பயன்படுத்துபவரையும் குறிக்கிறது. தென்னிந்தியாவில் இச் சொல்லின பயன்பாடு முஸ்லிம்களையும் குறிக்கிறது (பெரும்பாலும் அவர்கள் தமிழ் முஸ்லிம்கள் எனக் குறிக்கப்படுவதுண்டு). ஆனால் இலங்கையில் முஸ்லிம்கள் வேறான தனித்துவத்தைக் கொண்டுள்ளனர். எனவே 'சமஸ்டிக் கட்சி', ''தமிழ்பேசும் மக்கள்' என்ற சொற் றொடரைப் பிரபலப்படுத்த முயற்சி செய்தது. ஆனால் அது மிகச்சிறிய அளவே வெற்றி பெற்றது. இலங்கையின் சமய கலாச்சாரப் பாரம்பரியங்களும் வரலாற்று நிலைமைகளும் முஸ்லிம்களுக்கு ஒரு தனியான அரசியல் தனித்துவத்தை அளித்தன. எனவே இங்கு நாம் தமிழர் என்ற சொல்லின் மூலம் தமிழர்களை மட்டுமே கருத வேண்டியுள்ளது.''

படிப்பகம்

www.padippakam.com



''யாழ்ப்பாணத்தில் எல்லாம் தமிழ் என்பது அவ்வளவு சரியானதல்ல. **ஆதிக்கமுடைய வெள்ளாளச் சாதியினர்** (அவர்களுடைய குறித்த சில வர்க்கப்பண்புகளோடு) **தமது தேவைகளையும் கோரிக்கைகளையும் தமிழர்களுடைய கொள்கைகளாக வெளிப்படுத்தினர் என்பதையே காலம் மறுபடியும் நிரூபித்துள்ளது.** காராளசிங்கம் இதனை 'வெள்ளாள மேலாதிக்கம்' என்று குறிப்பிடுகிறார்'' **(அழுத்தம் நம்முடையது)**

''தமிழர் விடுதலைக் கூட்டணி தோன்றும்வரையிலான காலகட்டப் பகுதி வரை இருந்த தமிழ்த் தலைவர்களின் சமூகப் பின்னணியை நோக்கும்போது அவர்கள் அனைவருமே வெள்ளாள சாதியினர் என்பது தெரியவரும். அத்துடன் அவர்களில் சிலர் சாதிப்பிரச்சினையில் இரட்டை வேடமிடுபவராகவுமிருந்தனர். இதற்கு மிகச் சிறநத உதாரணமாக இருந்தவர் சேர். பொன்னம்பலம், இராமனாதன். அவர், வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதை, அது தாழ்ந்த சாதியினருக்கும் வாக்குரிமை வழங்கிவிடும் என்பதற்காக எதிர்த்தார். யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சகல சாதி மாணவர்களும் ஒன்றாக ஆசனம் பெறுவதையும் ஒன்றாகப் போசனம் செய்வதையும் கூட அவர் எதிர்த்தார்'' (அழுத்தம் நம்முடையது).

3. **ஒரு இடையீடு:** நமது சூழலிலிருந்து சில எடுத்துக் காட்டுக்கள் இங்கே தரப்பட்டுள்ளன. உலகில் வேறு பல எடுத்துக்காட்டுக்களையும் சொல்ல முடியும். **'தேசம் என்பது ஒரு கற்பிதம் செய்யப்பட்ட சமூகம்'** என்கிற கருத்திற்கு இவை அரண் சேர்க்கின்றன. இக்கருத்தாக்கம் அ. மா.வின் 'மார்க்சியம், தேசியம், கற்றுக்கொள்ள வேண்டிய சில பிரச்சனைகள் (நிறப்பிரிகை-1) என்கிற கட்டுரையில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் சில செய்திகள்:

www.padippakam.com



3. அ: ஒரு தேசிய அரசு நிறுவப்படுதலுக்குத் தேவையான **'எதார்த்தப் படைப்பாக்கம்'** குறித்து **டொனால்டு ஹார்னே** குறிப்பிடுவது சிந்தனைக்குரியது. ஒரு புதிய தேசிய அரசு கொண்டுள்ளதாகப் பல பண்புகள் சொல்லப்படும். அவற்றில் சிலவே நிலவும். புதிய தேசிய அரசு உருவாக்கத்திற்கு முன்பாக நிகழும் நிகழ்வுகளில் மிகப்பெரிய கற்பித உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றிலிருந்து புதிய தேசம் பிறக்கிறது. இத்தகைய நடைமுறையினூடாகச் செயல்படுகிற சமூகச் சக்திகளின் சமநிலையைப் பொறுத்து தேசியக் கருத்தியல் வேறுபடுகிறது. தேசியப் பண்புகள் என்பன இந்தப் பின்னணியிலேயே வரையறுக்கப்படுகின்றன. ஒரு தேசிய அரசைப் படைத்து ஆளுகிற ஆற்றல் படைத்தவர்கள் தேசியப்பண்பை வரையறுப்பதில் மிகுந்த செல்வாக்கு வகிப்பவர்களாக இருக்கிறார்கள். மேற்குறித்த 'எதாத்த உருவாக்கம்' என்பது உலகப் பொருளாதார/ அரசியல் நடவடிக்கைகளோடு இணைந்து வருகிறது.

எதார்த்தப் படைப்பாக்கம் என்பது புதிய தேசத்தின் தொடக்கத்தில் ஒரே ஒருமுறை உருவாகிற ஒன்றல்ல. மாறாக தேசிய அடையாளம் தொடர்ந்து உறுதி செய்யப்படுகிறது; கேள்வி கேட்கப்படுகிறது; மறுவரையறை செய்யப்படுகிறது. சில எடுத்துக்காட்டுகள்:

3. அ (i): **பெரியார்** அரசியற் சூழலுக்கேற்ப திராவிட நாட்டுப் பிரிவினை என்பதைத் தமிழ்நாட்டுப் பிரிவினையாக மாற்றிக் கொண்டதை முன்பே குறிப்பிட்டோம்.

3. அ (ii) **ஆஸ்திரேலியாவிலிருந்து** ஒரு எடுத்துக்காட்டு: 'பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து வந்த வீரசாகசமிக்க, ஆண்மை பொருந்திய வெள்ளை இனத்தவனாக, ஒரு ஆஸ்திரேலியனை அந்நாட்டு ஆளும்வர்க்கம் அடையாளம்

www.padippakam.com



காட்டி வந்தது. மாறிவரும் அரசியல்/பொருளாதாரச் சூழல்களில் தொடர்ந்து இந்த வரையறை செல்லுபடியாகவில்லை. உலக முதலாளியத் தேக்கம் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், இனம், மரபினம்,பால் அடிப்படையில் சமூகப் பிரிவாக்கங்கள் தோன்றியமை, அடித்தட்டு மக்களிடம் இக்கருத்தியல் போகாமை ஆகியவற்றின் விளைவாக மேற்படி வரையறை / பண்பாட்டு அடையாளம் காப்பாற்றப்பட இயலாதபோது— புதிய எதார்த்தங்களுக்கேற்ப- இருக்கிற தேசம் பற்றிய கருத்தியலைப் புதுப்பிக்க, **'கலாச்சாரப் பன்மை'** என்கிற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டது. இதன்மூலம் சிறுபான்மையினரின் தனித்துவங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டன; இருக்கிற வேற்றுமைகள் சீர்திருத்தப்படாமலேயே அப்படியே நிலவட்டும் என்கிற neoconservatism மனப்பான்மைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதற்கு எதிராகப் 'புதிய' வலதுகள் கலாச்சார ஒருமைவாதத்தை உயர்த்திப் பிடிக்கும் 'ஆங்கில மையக் கருத்தியலை' மீண்டும் உயர்த்திப் பிடித்து வருகின்றனர்.

3. அ. (iii) **இந்தியாவில்** ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்புக் காலகட்டத்தில் அகில இந்தியத் தேசியம் கற்பிதம் செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டது. பல்வேறு பண்பாடு, மொழி, மதத் தனித்துவங்கள் மிகுந்தமக்களை ஒன்றிணைக்க 'இந்துமதம்' என்கிற ஒற்றுமைக்காரணி கண்டுபிடிக்கப்பட்டது. **'வேற்றுமையில் ஒற்றுமை'** என்கிற முழக்கம் முன்வைக்கப்பட்டது. சாதி அடிப்படையிலான இந்துமதத்தில் இந்து மதக் கருத்தியல் மூலம் ஆதிக்கசாதியினரே பயன்பெறக்கூடிய சூழலில் இத்தகைய ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது பெரும்பாலும் ஆதிக்க சாதியினராலேயே தலைமை தாங்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட சாதியினர் விலகி நின்றது தவிர முஸ்லீம்களும் தொடர்ந்து விலக்கப்பட்டே வந்தனர். எந்த அளவிற்கு இன்று வளர்ந்து நிற்கிறதென்றால் ''மத அடிப்படையில்

படிப்பகம்

www.padippakam.com



தேசமக்களைப் பிரிப்பது சரிதான்; மதம் சாராத காரணி களின் அடிப்படையில் மக்களைப் பிரிப்பதை அனுமதி யோம்'' என மண்டல் குழுவை எதிர்க்கும் உயர்சாதியினர் (எச். எம். சீர்வை போன்றோர்) பேசுகிற அளவிற்குப் போயுள்ளது.

3. ஆ. தேசியம் என்பது அரசியல் நியாயப் பாட்டிற்கான ஒரு கோட்பாடு. அரசியலதிகாரத்தை நிலைநிறுத்தவும், புதிய அரசியலதிகாரத்தைப் பெறவும் இது முன்வைக்கப்படுகிறது. அதிகாரத்தை வைத்திருப் பவர்களுக்கும் மக்களுக்குமிடையேயான இடைவெளியைக் கருத்தியல் ரீதியாக நிரப்புகிற ஒன்றாக அரசியலதி காரத்தை நிலைநிறுத்தத் தேசியம் பயன்படுகிறது. தங்களது அரசியல் (அதிகார) எல்லையை இன அடிப் படையிலான எல்லை சிதைத்து விடக்கூடாது என்கிற அடிப்படையில் அகில இந்தியத் தேசியத்திற்கான புதிய வரைமுறைகளை இது மேற்கொள்ளும். அகில இந்தியத் தேசியம் இந்து மத அடிப்படையில் உருவாக்கப் பட்டதைச் சற்று முன் சொன்னோம். இன எல்லையை அங்கீகரித்து ஓரினத்தின் மேன்மையை வலியுறுத்தி மற்றதை அதற்குட்படக் கோரியும் ஒரு இனவாத அரசு தனது அரசியலதிகாரத்தை நிலை நிறுத்த தேசியத்தைப் பயன்படுத்தும். எ.டு: இஸ்ரேல்—பாலஸ்தீனம். ஆக, ஒரு ஆளும் குழுமத்தின் நலனுக்கான நோக்கில் இதரமக்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் தேசியம் கற்பிதம் செய்யப் படுகிறது. வரலாறு அதற்குரிய வகையில் எழுதப்படு கிறது. தேசிய வீரர்கள் உருவாக்கப்படுகின்றனர். பாலஸ் தீனியர்களின் உரிமைகளை மறுத்து இஸ்ரேலிய ஆளும் வர்க்கத்தால் உருவாக்கப்படும் வரலாறு (பார்க்க: நிறப் பிரிகை 3ல் எட்வர்ட்சேத்தின் கட்டுரை), ஆஸ்திரேலிய இரு நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் போது முன் வைக்கப்பட்ட 'இரு நூற்றாண்டு' வரலாற்றை உள் நாட்டு ஆதிக்குடிகள் எதிர்த்தமை, 1988ல் ரசிய வரலாறு

www.padippakam.com



மாறிய சூழலுக்கு ஏற்பத் திருத்தி எழுத வேண்டும் என்பதற்காக ஓராண்டு காலம் சீன பல்கலைக்கழகம் மாணவர்களை ரசிய வரலாற்று வகுப்பில் சேர்க்காதது போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாய்ச் சொல்லலாம்.

3. இ: ஆக தேசியப் போராட்டந்தான் தேசத்தை உருவாக்குகிறதேயொழிய தேசம் தேசியப் போராட்டத்தை உருவாக்குவதில்லை. இந்தத் தேசியப் போராட்டம் என்பது சமூக சக்திகளின் சமநிலையால் அவற்றில் செல்வாக்கு வகிக்கும் சக்தியின் நலன் நோக்கில் தீர்மானிக்கப்படுகிறது. தேசியம் என்பது ஒரு அரசியல் கோட்பாடு. அரசியல் ரீதியாக, வர்க்க ரீதியாக அது வரையறுக்கப்படுகிறது.

3. ஈ: ஒரு சனநாயகக்குடியரசு என்கிற வடிவிலான நவீன தேசிய அரசு பேரரசின் மீதான விசுவாசத்தின் அடிப்படையில் அமைய முடியாது. அதிகாரம் என்பது மக்களுக்குச் சொந்தமாக இருக்கிறது; அரசிடம் அது கையளிக்கப்படுகிறது என்கிற சொல்லில் ஏதேனும் பொருளிருக்குமானால் அரசின் மீதான விசுவாசத்தின் அடிப்படையில் அரசின் நியாயப்பாடு அமைய வேண்டிய தில்லை. நியாயப்பாடு என்பது மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலானது என்கிறபோது தவிர்க்க இயலாயல் மார்க்சியம் எழுப்புகிற 'எந்த மக்கள்?' என்கிற கேள்வியை நாம் எதிர்கொண்டே ஆக வேண்டியிருக்கிறது.

சில வர்க்கங்கள் உள்ளடக்கப்படுகின்றன; சில வெளியேற்றப்படுகின்றன. இது பிரெஞ்சுப் புரட்சி போல வெளிப்படையாக இருக்கலாம். அல்லது தமிழர் தேசிய எழுச்சி போல மறைமுகமாகவும் இருக்கலாம். மறைமுகமாக இருந்த போதிலும் தமிழ்த் தேசிய உணர்வின் தோற்றத்தைப் பகுத்தாய்ந்து பார்த்தால் தமிழ்த் தேசியத்

www.padippakam.com



தின் வர்க்க/ சாதியப் பின்புலத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

**4 தமிழ்த் தேசிய உணர்வின் தோற்றம்:** தமிழக வரலாறு முழுமையும் பார்ப்பன வேளாள எழுச்சி என்பதோடு **விவசாய மயமாக்கலும்** (peasantisation) அதற்கு எதிராக **மேல் நில மக்கள் மற்றும் இனக்குடி மக்களின் (Upland and Tribal People)** எதிர்ப்பும் இருந்து வந்திருப்பதைப் பார்க்க முடியும். பல்லவர் காலம் தொடங்கி இத்தகைய விவசாய மயமாக்கல் பெரிய அளவில் நடைபெற்று சோழர் காலத்தில் உச்சத்தை அடைகிறது. மதத் தளத்தில் இப்போராட்டங்கள் பக்தி இயக்கமாகவும் சைவ எழுச்சியாகவும் சமண/பௌத்த சமய ஒழிப்பாகவும் வெளிப்படுகிறது. விவசாயமயமாக்கல் அதிகமாக அதிகமாக அதுவரை சுதந்திரமாக ஆனால் சற்றே பிற்போக்கான உற்பத்தி முறையுடன் வாழ்ந்திருந்த மேல்நில இனக்குழு மக்கள் விவசாயச் சமூகத்திற்குள் சுரண்டப்பட்ட விவசாய உழைப்பாளிகளாகவும் சாதிய அமைப்பில் ஒடுக்கப்பட்ட மக்களாகவும் உள்வாங்கப் பட்டனர். சோழர் காலத்தில் பார்ப்பன வேளாளர் ஆதிக்கம் உச்சம் பெற்றது என்றோம். பிரம்மதேயங்களாக நிலங்கள் பெற்றது தவிர அரசு நிர்வாகமும் அவர்களிடமே இருந்தது. பார்ப்பனர்கள் வெறும் தெய்வீகத் தலைமையாக மட்டுமில்லை; அமைச்சர்களாகவும் இதர அதிகாரிகளாகவும் வேளாளருடன் அரசதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொண்டனர். எனினும் பிற்சோழர் காலத்தில் நிலத்தில் தனியுடைமையும் சமூக-அரசியல் அதிகாரம் என்பன 'நாடு', 'பெரிய நாடு' என்கிற நிர்வாக அலகு மட்டத்தில் மேலும் நிலம் வேளாளர் கரங்களில் குவிவதும் நிகழ்ந்தது. தாழ்த்தப்பட்டவர்களும் இதர ஒடுக்கப்பட்ட சாதியினருமே இவ்வமைப்பில் கொடுமையாகச் சுரண்டப் பட்டவர்களாகத் திகழ்ந்தனர். தமக்குள் அதிக முரண்பாடுகள் இல்லாமல்

www.padippakam.com



இணைந்து ஆதிக்கம் செலுத்துபவர்களாக பார்ப்பனரும் வேளாளரும் இருந்தனர். ஆதிக்கச் சாதிகள் தமது சுரண்டலுக்குத் தேவையான போது மட்டும் ஒடுக்கப் பட்டவர்களைக் கருத்தியல் தளத்தில் ஒன்றிணைக்க 'சேரவாரும் செகத்தீரே!' எனவும் 'ஆவுரித்துத தின்றுழ லும் புலையரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே' எனவும் இழுத்து அணைத்துக் கொண்ட னர். அதிலும் கூட 'ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்' என்பதை **வெ. ப. சு. முதலியார்** 'மாட்டுக்கறி தின்னாரராகவுள்ள' எனச் சொல்வதோடு இணைத்துப் பார்க்கலாம்.

4. (அ) தெலுங்கர் ஆட்சியில் நாயுடு, ரெட்டியார், போன்ற தெலுங்க வேளாளர்களும் ஆதிக்கத்தில் பங்கு பெற்றனர். தெலுங்க மன்னர்களோடு வந்து குடியேறிய சக்கிலியர், தோட்டி போன்ற ஒடுக்கப்பட்ட சாதியினர் இழிந்த தொழில்களுக்கு ஆளாகினர். தெலுங்கு ஆட்சியில் மீண்டும் பார்ப்பனர் ஒரு குறிப்பிட்ட அளவு கோட்டை அதிகாரிகள் (துர்க்கா தண்ட நாயகர்கள்) போன்ற அரசதி காரப் பணிகளைப் பெற்றனர். வேளாளர் தம் ஆதிக் கத்தை கருத்தியலளவில் பார்ப்பனர்களுக்குச் சமமாக நிலை நாட்ட சைவ மடங்களையும் சைவ சித்தாந்தத்தை யும் உருவாக்கினர்.

4. (ஆ): பார்ப்பனர்— வேளாளருக்கிடையேயான போட்டி என்பது தொடக்கத்திலிருந்து இன்றுவரை ஆதிக்க சாதிகளுக்கு இடையேயான போட்டியாகவே இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. யார் ஆதிக்கம் செய்வது என்கிற போட்டி அவ்வப்போது வெளிப்பட்டாலும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராக ஒன்றிணைவது என்பதும் கூடவே இருந்து வந்தது. கருத் தியல் தளத்தில் நடைபெற்ற போட்டி என்பதும் இத்தகைய சமரசக் கூறுகளை உள்ளடக்கியதாகவே

www.padippakam.com



இருந்து வந்தது. சைவசமயம், சைவ சித்தாந்தம், தமிழ் மேன்மை என்பன ஆரிய சமயம் ஆரிய வேதம் ஆரிய மொழி ஆகியவற்றிற்கு எதிராக உயர்த்திப் பிடிக்கப்பட்ட தெனினும் ஆரியத்திற்குச் சமமாகவே தமிழைப் போற் றும் பாரம்பரியத்தையும் இணையாகவே பார்க்கலாம். ஆரியத்திற்கு முன்பான தமிழ்த் தொன்மை, ஆரிய வேதங் களுக்கு முன்பான தமிழ் வேதம் (பக்தி இலக்கியங்கள்)— ஆரிய மதத்திற்கு முன்பான தமிழ்ச்சைவம் முதலிய வற்றை உயர்த்திப் பிடிக்கும் கருத்துக்கள் 17ஆம் நூற் றாண்டு தொடங்கி (காஞ்சிப் புராணம் —சிவஞான முனிவர்; நால்வர் நான்மணிமாலை —தாரமங்கலம் சிவப்பிரகாசர்) வெளிப்படுகிற தெனினும் பார்ப்பன வெறுப்பு அதிகமின்றி ஆரியத்திற்குச் சமமாகத் தமிழை ஏற்று அதே சமயத்தில் சங்க, சமண, பௌத்த இலக்கியங் களைத் தவிர்த்து பக்தி இலக்கியத்திலிருந்து தமிழின் வரலாற்றைப் பார்ப்பவர்களாகவே மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சிவஞான சுவாமிகள் (சோமேசர் முதுமொழி), சுவாமிநாத தேசிகர் (இலக்கணக் கொத்து) முதலியோரைப் பார்க்க முடிகிறது. எனினும் ஆங்கில ஆட்சியில் முரண்பாடு கூர்மையடைந்தன.

4. (இ): ஆங்கில ஆட்சி பல்வேறு விதமான அரசியல், பொருளாதார பண்பாட்டு மாற்றங்களை இங்கே உருவாக்கியது. வரி வசூல், பரவலான அரசு எந்திரம், ஓரளவு சனநாயகமான கல்வி முறை, ஆங்கிலக் கல்வி, கிறிஸ்துவ சமயம் ஆகியவை அறிமுகப் படுத்தப்பட்டன. நீதிமுறை மையப்படுத்தப்பட்டு தல பஞ்சாயத்து, சாதி மன்றங்கள் புறக்கணிக்கப்பட்டன. நீதி வழங்குவதில் தல மதத் தலைவர்களிடம் விளக்கம் கேட்பது நிறுத்தப்பட்டு பார்ப்பனிய வேத அடிப்படையிலான, வருணப் பிரி வினைக்கு அங்கீகாரம் அளிக்கிற 'இந்து-லா' உருவாக்கப் பட்டதைத் தொடர்ந்து அனைத்துச் சாதியினரும் உயர் வருண அங்கீகாரம் கோரி நின்றனர்; நூல்கள் எழுதினர்.

www.padippakam.com



வேளாளர் மட்டுமின்றி வன்னியர், நாடார், யாதவர் போன்றோரும் சத்திரிய நிலை கோரினர்.

4. (ஈ): பரந்த அளவிலும் (Macro Level) நுண்ணிய அளவிலும் (Micro Level) ஆதிக்க முறையில் பல்வேறு விதமான மாற்றங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு சாதியினரும் பல்வேறு அமைப்புக்களை உருவாக்கிதத்தம் நலனுக்காக அரசுடன் பேரம்பேசின. அவற்றில் சில:

1852— Madras Native Association-மெட்ராஸ் மகாஜன சபா.

1887— இந்திய தேசிய காங்கிரஸ். இவை பெரும்பாலும் பார்ப்பனரைப் பிரதிநிதித்துவப் படுத்தின.

1916— தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்-பார்ப்பனரல்லாத தெலுங்கு, தமிழ், கன்னட வேளாளர், நிலவுடைமையாளர் நலன் நோக்கில் உருவாக்கப் பட்டது.

1857— ஆதி திராவிட மகாஜன சபா- தாழ்த்தப்பட்டோர் நலன் நோக்கில் **பி.வி. சுப்பிரமணியப் பிள்ளையால்** உருவாக்கப் பட்டது. **M.C. ராஜாவின்** தந்தை **M.C. சின்னத்தம்பிப் பிள்ளை** முதல் பொதுச் செயலர்.

1930— களுக்குப்பின் தேர்தல் அரசியல் அறிமுகமாகிய போது இவை அனைத்தும் தேர்தல் அரசியலையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைந்தன. பார்ப்பன — பனியா— சத்திரிய மற்றும் சார்பு முதலாளிய சக்திகள் இந்திய தேசிய காங்கிரசிலும் வெள்ளாளர் (தமிழ், தெலுங்கு. கன்னட) மற்றும் செட்டியார் மூலதனச் சக்திகள் நீதிக் கட்சியிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின.

படிப்பகம்

www.padippakam.com



4. (உ): காலனிய மற்றும் ஆங்கில கிறிஸ்துவமிஷனரி நடவடிக்கைகள் மேல் நாட்டினரிடையே உருவாக்கிய பண்பாட்டு எதிர்வினைகளை இருவகைப் படுத்துவர். அவை:

4. உ: (1) **சீர்திருத்தவாதம்:** ராஜாராம் மோகன் ராயால் உருவாக்கப்பட்ட பிரம்ம சமாஜத்தை இதற்கு எடுத்துக்காட்டாய்ச் சொல்லலாம். அறிமுகமான சனநாயகச் சிந்தனைகளின் அடிப்படையில் சில மாற்றங் களை இவை கோரின.

(உ) 2. **மீட்பு வாதம்:** தயானந்த சரசுவதியால் உருவாக்கப்பட்ட ஆரிய சமாஜம், மறைமலை அடிகள் (நாகை வேதாசலம் பிள்ளை) போன்றோரால் உருவாக் கப்பட்ட தனித்தமிழ் இயக்கம் போன்றவை இதற்கு எடுத் துக்காட்டுகள். தற்கால வீழ்ச்சிக்கு சமகால மாற்றங் களைக் காரணம் காட்டி மாற்றங்களுக்கு முற்பட்டப் பொற்காலத்தைச் சுட்டிக் காட்டிப் பழைமைக்குத் திரும்பக் கோரும் தூய்மை வாதமாக இவை அமைந்தன. தமிழக வரலாற்றுப் பின்னணியில் தமிழ் மீட்பு வாதத் தின் தலைமையை வேளாளர் கைப்பற்றிக் கொண்டதும் அவர்கள் நலன்களுக்காகவே அது அமைந்ததும் எளிதில் விளங்கிக் கொள்ளத் தக்கன. வகை இனங்கள் எதுவுமே கறாராக இருக்க முடியாது என்கிற எச்சரிக்கையோடு இதனைப் பார்ப்பது அவசியம். பாரதி போன்ற சிலரிடம் இருகூறுகளுமே குறிப்பிட்ட அளவுக்கு நிலவின.

4. (ஊ): தமிழ் மீட்பு வாதமே பின்னர் தமிழ்த் தேசிய வாதமாகப் பரிணமித்தது. 1930களுக்குப் பின்பே இது தனிநாடு கோரிக்கை என்கிற அளவில் உருப் பெற்றது. தமிழ் மீட்பு வாதத்தில் வேளாள ஆதிக்கத்தை விரிவாய்ப் பார்ப்பது அவசியம். அதிலும் குறிப்பாக தொடக்க கால மீட்பு வாதத்தில் ஈழச் சைவ வேளாளரின் ஆதிக்கம் குறிப்பிடத் தக்கது. **சி வை. தாமோதரன்**

www.padippakam.com



**பிள்ளை** பற்றிக் குறிப்பிட வரும்போது **ஏ. வி. சுப்பிரமணிய அய்யர்** 'யாழ்ப்பாணக் குழாம்' எனக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. யாழ்ப்பாணத்திலும், தமிழ் நாட்டிலும் தமிழ்/சைவ மீட்பு நடவடிக்கைகளில் இணைவான போக்கொன்றைக் காணமுடியும். தமிழரின் நவீன மொழியுணர்வின் வெளிப்பாடாக இரண்டைச் சொல்வர். ஒன்று **சுந்தரம் பிள்ளை**யின் மனோன்மணியத் தமிழ் வாழ்த்துப்பாடல் மற்றது, சி. வை. தாமோதரன் பிள்ளை தாம் பதிப்பித்த 'கலித்தொகை', 'வீரசோழியம்' ஆகியவற்றிற்கு எழுதிய முன்னுரையில் முன் வைத்த 'திராவிடம்'/'தமிழ்' குறித்த உறுதியான கருத்துக்கள். சி. வை தா. ஒரு யாழ்ப்பாண வேளாளர். **தா. கைலாசப் பிள்ளை** யாழ்ப்பாணத்தில் தொடங்கிய தமிழ்ச் சங்கத்தின் மாதிரியிலேயே பாலவநத்தம் சமீன்தார் **பாண்டித்துரைத் தேவரால்** மதுரைத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப் பட்டது. நாவலரின் சீடரான **ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை**யால் தொடங்கப்பட்ட 'சித்தாந்த தீபிகை' இதழில் கட்டுரை எழுதிய சில ஈழச் சைவ வேளாளர்கள்: **பொன் அருணாசலம், பொன் இராமநாதன், எஸ். டபிள்யூ. குமாரசாமி, முத்துத்தம்பிப் பிள்ளை, வி. ஜே. தம்பிப்பிள்ளை, ரி. பொன்னம்பலப்பிள்ளை** முதலானோர்.

4. (எ) தமிழ் மீட்பு வாதத்துடன் இணைந்த இதர பண்பாட்டு நடவடிக்கைகளில் மிக முக்கியமானது சைவ சித்தாந்தப் புத்துயிர்ப்பு. இதன் முன்னோடியான ஈழத்து **ஆறுமுக நாவலர்** குறித்துக் **க. கைலாசபதி** குறிப்பிடும் கீழ்க்கண்ட கருத்துக்கள் முக்கியமானவை.

**''இவ்வாறு நாவலர் சமயத்துறையில் தமக்கிருந்த ஆர்வங்களுடன் சமூகத்திற்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட நடைமுறைச் செயற்பாடுகளை ஒன்றிணைத்தார். அவர் சமூக அரசியலையும் சமயத்தையும் ஒன்று கலந்தார். தமிழர் மத்தியில் ஏற்பட்ட கலாச்சார எழுச்சிக்கு மகத்தான பங்களிப்பாக இருந்தார்.''**

www.padippakam.com



''ஆறுமுக நாவலரால் தலைமை தாங்கப்பட்ட 'மறுமலர்ச்சி' இயக்கம் உண்மையில் பிரிட்டிஷ் விசுவாசத்தின் விளைவாக ஏற்பட்ட சமூக கலாச்சார மாற்றங்களை நன்கு அரண் செய்யப்பட்ட யாழ்ப்பாண இந்து சமுதாய அமைப்பிற்குள் மட்டும் எல்லைப்படுத்திய முயற்சியாகும். இதனால் நலம் பெற்றவர்கள் உயர்சாதி இந்துக்கள் மட்டுமே யாவர்''.

தமிழ் மீட்பு வாதத்தின் அடையாளமாகக் குறிப்பிடப் படும் இரு சஞ்சிகைகளுள் ஒன்று சைவ சித்தாந்தம் பற்றியதேயாகும். ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியான ஜே. எம். நல்லசாமிப்பிள்ளையை ஆசிரியராகக் கொண்ட 'சித்தாந்த தீபிகை'யே அது. மற்றது சூசையப்பர் கல்லூரிப் பேராசிரியராகவிருந்த டி.சவரிராயப் பிள்ளையை ஆசிரியராகக் கொண்ட 'Tamilian Antiquary'.

1992இல் யாழ்ப்பாண 'ரிட்ஜ்வே' மண்டபத்தில் செ. கனகசபைப் பிள்ளையின் தலைமையில் நடத்தப்பட்ட இலக்கிய மாநாட்டில் ''தமிழ் மொழியின் வளர்ச்சியைப் போன்ற சமாந்தரப் போக்கு தமிழரின் தேசிய சமயத் தத்துவமாகக் கொள்ளப்பட்ட சைவ சித்தாந்தத்திலும் காணப்படுகிறது'' என்கிற கருத்து முன்மொழியப் பட்டது.

ஆக, தமிழ் மீட்பு வாதத்துடன் சைவ சித்தாந்தமும் வேளாளர்களால் கூடவே புனர்நிர்மாணம் செய்யப் பட்டது. நாவலர் 'யாழ்ப்பாண சைவ பரிபாலன சபை'யை உருவாக்கினார். 1905இல் தமிழ்நாட்டில் நல்ல சாமிப் பிள்ளையின் முயற்சியால் 'சித்தாந்த சமாஜம்' உருவாக்கப்பட்டது.

தமிழகத்தில் நாகை. வேதாசலம்பிள்ளை (மறை மலை அடிகள்) வேளாளர் நாகரிகமே பழந்தமிழர் நாகரிகம் எனவும் சைவ சமயமே தமிழர் சமயம் எனவும் நூற்கள்

படிப்பகம்

www.padippakam.com



எழுதினார். **கா. சு. பிள்ளையும்** தமிழர் மதம் குறித்து எழுதினார். தமிழாய்வுகள் பதிப்புகள் என்பன பெரும் பாலும் வெள்ளாளரிடத்திலும் (**கனகசபைப் பிள்ளை, கே. என். சிவராஜப் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார்**) ஒரளவு பார்ப்பனரிடத்திலும் (**பி. டி. சீனிவாச அய்யங்கார், சேஷ அய்யர், சுவாமிநாத அய்யர்**) சிறிதளவு இதர பிற்பட்ட சாதியாரிடமும் (**சோமசுந்தர நாயகர்**) சிறைப்பட்டன.

4. (எ): தமிழ் மீட்பு வாதத்துடன் இணைந்த இதர பண்பாட்டு நடவடிக்கைகளாகப் பார்ப்பனருக்குப் போட்டியாக தமிழ் சஞ்சிகைகள் தொடங்குதல் (தமிழ் நாடு, குமுதம்), தமிழிசை முயற்சி முதலியவற்றைத் தொடங்கலாம். இவற்றில் செட்டியார் மூலதனத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. இதனைப் பின்னர் விரிவாகப் பார்க்கலாம். 1960 வரை நாட்டுப்புறக் கலைகள் இவர் களால் புறக்கணிக்கப்பட்டு வந்தது என்பதையும் முதன் முதலில் **ப. ஜீவானந்தம்** போன்ற பொதுவுடைமையாளரே இவற்றை முன்னிலைப் படுத்தினர் என்பதையும் இத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

5. அரசியல் தளத்தில் பார்ப்பன எதிர்ப்பு/திராவிட தேசியம் என்பனவற்றை நீதிக்கட்சியில் தொடங்கிப் பார்க்கவேண்டும். அரசுப் பணிகளில் பார்ப்பன ஆதிக்கத் திற்கு எதிராக அதனுடன் போட்டியிடத்தக்க அளவிற்கு ஆதிக்க சாதிகளாக இருந்த தெலுங்கு/கன்னட/தமிழ் வேளாள சாதியினரின் அரசியல் இயக்கமாக **தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்** தோற்றமெடுத்ததைப் பற்றி முன்பே குறிப்பிட்டோம். 1851 முதலே வெள்ளை அரசும் இட ஒதுக்கீடு பற்றிப் பேசத் தொடங்கியது. தாசில்தார்களில் பார்ப்பனரல்லாதோருக்கு இடஒதுக்கீடு அளிப்பது குறித்து வருவாய்த்துறை ஆணை பிறப்பிக்கப்பட்டது. இங்கு கவனிக்க வேண்டியது: நீதிக்கட்சி கேட்பது பார்ப்

தே—10

படிப்பகம்

www.padippakam.com



பனரல்லாதாருக்கான இடஒதுக்கீடே. சாதிவாரி இட ஒதுக்கீடு அல்ல. இதனால் பயனடைந்தது பார்ப்பனரல்லாத உயர் சாதியினரே. பிற்பட்ட சாதியினருக்கு இட ஒதுக்கீடு என்கிற கோரிக்கை 1940க்குப் பின்னரே எழுப்பப் பட்டு, 1947இல்தான் முதன் முதலில் பிற்பட்ட சாதியினருக்கு இட—ஒதுக்கீடு அளிக்கப்பட்டது.

5. (அ). பார்ப்பனரல்லாதோருக்கு இடஒதுக்கீடு தவிர நீதிக்கட்சி சைவ சமயத்தையும் நிலவுடைமையாளர் நலன்களையுமே முன்னிலைப்படுத்தியது. சட்டமன்றத்தில் பேசும் போது **சி. நடேசமுதலியார்**, ''திராவிடர்களது வரலாற்றுக்கு முந்திய சமயமாகிய சைவம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இருந்தது போலவே இன்று தனித்துவமாகத் திகழ்கிறது'' என்று குறிப்பிட்டார். **பி டி. தியாகராயர்**, ''இநத நாட்டில் நிலவுடைமையாளர்களாக இருந்தமெல்லாம் தமிழர்கள்தான். பார்ப்பனரல்லாதவர்களுக்கே எல்லா நிலங்களும் சொந்தமாக இருந்தன. பார்ப்பனரின் எழுச்சிக்குப் பின்பு வக்கீல்கள், பொது ஊழியர், ஆசிரியர் என்கிற புதிய வர்க்கம் உருவாக்கப் பட்டது'' என்றார் (1920). நிலவுடைமையாளராக இல்லாத தமிழர்கள் பிரச்சினை குறித்து அவர்களுக்குக் கவலை இல்லை.

5. (ஆ). நீதிக்கட்சி காங்சிரசுக்கு மாற்றான பார்ப்பனரல்லாதோரின் நலனை முன்னிலைப் படுத்துகிற ஒரு அரசியல் சக்தியாக வடிவெடுத்த பின்னர் அன்றைய தமிழகத் தொழில் துறையிலும் பர்மா-இலங்கை போன்ற வெளிநாடுகளில் வட்டித் தொழிலிலும் முக்கிய சக்திகளாக விளங்கிய மூலதன பலம் மிகுந்த நாட்டுக் கோட்டைச் * செட்டியார்களும் பிரிட்டிஷார் வருகை

---

* **செட்டியார் மூலதனம் குறித்துச் சில தரவுகள் : முத்தையா செட்டியார்— ஹார்வி மில், பாண்டியன்**

www.padippakam.com



யைப் பயன்படுத்தி கடந்த இருநூறாண்டுகளில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து சாதிப்படிநிலையிலும் மேலேறிய விருதுநகர் வணிகநாடார் சாதியின் முக்கிய பிரமுகர்களும் நீதிக்கட்சியில் இணைந்து ஆதிக்க சக்திகளாக மாறினர். நீதிக்கட்சியில் ஆதிக்கம் செலுத்திய

---

பாங்க், இன்சூரன்ஸ்; முத்தையா செட்டியார் + சங்கரலிங்க அய்யர்— இந்தியா சிமெண்ட்; எம். சி டி. சிதம்பரம் செட்டியார் + சி. ஆர். சீனிவாச அய்யர்— ஈஸ்ட் இந்திா சுகர்; பாங்க் ஆப் மதராஸ், இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சிஸ் வங்கி— செட்டியார்கள்; செட்டியார் + வி. எஸ். தியாகராச முதலியார்— பிரிமியர் இன்சூரன்ஸ், யுனைட்டட் இந்தியா இன்சூரன்ஸ். முருகப்பச் செட்டி—T.I. சைக்கிள் கம்பெனி; கருமுத்து தியாகராயசெட்டி— மீனாட்சி மில்/ ராஜேந்திரா மில்; ஏ. வி. மெய்யப்பச்செட்டி— சினிமா; அண்ணாமலை பல்கலைக்கழகம்— முத்தையா செட்டி. கிண்டி, காரைக்குடி கல்லூரிகள் —அழகப்பச்செட்டி, குமுதம்— அழகப்பச்செட்டி, தமிழ்நாடு (தினசரி)— தியாகராச செட்டி. பாரததேவி—ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டி, குமரன்— சொ. முருகப்பா, (சஞ்சிகைகள்) இவை தவிர தமிழிசை இயக்கத்திற்குச் செட்டியார்கள் அளித்த ஊக்கம்.

நாடார்கள் பற்றி ஒரு குறிப்பு: நீதிக்கட்சி மற்றும் சுயமரியாதை இயக்கத்தில் செல்வாக்கு வகித்த நாடார்கள் வெள்ளையர் வருகையை ஒட்டிய வணிக நடவடிக்கைகளில் மேல்நிலை பெற்ற விருதுநகர் நாடார்கள். கன்யாகுமரிப் பகுதியைச் சேர்ந்த மிகவும் ஒடுக்கப்பட்ட பனையேறி நாடார்களல்ல இவர்கள்.

www.padippakam.com



தலைவர்களின் பட்டியல் பார்த்தால் அதன் சாதியப் பின்புலம் விளங்கும்.

ஏ. வி. முத்தையா முதலியார், எல். மீனாட்சி சுந்தர முதலியார், பி. சி. மாணிக்கவாசக முதலியார், சி. என் அண்ணாதுரை (செங்குந்த முதலியார்கள்), பி. சிதம்பரம் (நாஞ்சில் நாட்டு வேளாளர்), எஸ். குருசாமி (தொண்டை மண்டல வேளாளர்) சி. ஏ. அய்யாமுத்து (வெள்ளாள கவுண்டர்), பெரியார் ஈ வே. ராமசாமி-எம்.கே. ரெட்டி, ஜெயராம் நாயுடு, ஜே. எஸ். கண்ணப்பர் (பலிஜா நாயுடு), டபிள்யூ. ஏ. சௌந்திரபாண்டிய நாடார் (ராமநாதபுரம் எஸ்டேட் சொந்தக்காரர்), V. V. ராமசாமி நாடார், S A. முத்து நாடார்.

ஒரு சிலரை மட்டுமே இங்கு குறிப்பிட்டாலும் இதர பலரும் இத்தகைய வகைப்பாட்டிற்குள்ளேயே அடங்குவர். பெரியார் தலைமையில் நீதிக்கட்சி சோசலிசம் பேசத் தொடங்கிய போதும், நீதிக்கட்சி படிப்படியாகப் பல மிழந்து காங்கிரஸ் வலுப்பெற்றபோதும், அகில இந்திய அளவிலான சந்தையைத் தமிழ் முதலாளிகள் பயன் படுத்தத் தொடங்கிய போதும், ஏகாதிபத்தியங்களின் நலன்களைச் சார்ந்து நின்ற முதலாளிகளின் நலனை முன் நிலைப்படுத்தி வெள்ளையரிடம் பேரம் பேசும் சக்தியாக காங்கிரஸ் வளர்ந்த போதும், தேர்தல் சார்ந்து அகில இந்திய நீரோட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் இணைந்து மைய நீரோட்ட அரசியலில் கலநதபோதும் தொழிலதிபர்கள் முதலானோர் படிப்படியாகப் பெரியா ரிடமிருந்து விலகி காங்கிரஸ், தி.மு.க. கட்சிகளைச் சரணடைந்தனர். தூத்துக்குடி சுயமரியாதைக் கூட்டத்தில் இயற்றப்பட்ட சோசலிசத் தீர்மானத்தை **ஜே. எஸ். கண்ணப்பர்** ஆதரித்தபோதும் பகத்சிங் ஆதரவுத் தீர்மா னத்தை ஏற்கவில்லை. ''கராச்சி காங்கிரஸ் சுயமரியாதைக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டதால் எல்லோரும் காங்கிரசில் சேரவேண்டும்'' என்று அறிவித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



விருதுநகர் சுயமரியாதைக் கூட்டத்திற்குப் பின்னர் (1931) **டபிள்யூ. ஏ. சௌந்திரபாண்டிய நாடார்,** ''கட்சிக்குள் நிறைய கருத்து வேறுபாடுகள் உள்ளன. காங்கிரசின் மத நடுநிலைக் கருத்துக்கள் சுய மரியாதை இயக்கத்துக்கு ஒரு அடியைக் கொடுத்து விட்டது'' என்றார். 1931இல் பெரியார் அய்ரோப்பா சென்றதைத் தொடர்ந்து பணக்காரர்கள் அளித்து வந்த பொருளாதார ஆதரவு குறைந்தது. **வி.வி ராமசாமி, டபிள்யூ ஏ. சௌந்திரபாண்டிய நாடார் எஸ். முருகப்பா, டி. வி. சோமசுந்தரம், கி. ஆ. பெ. விசுவநாதம்** ஆகியோர் விலக விருப்பம் தெரிவித்தனர்.

1934—பொதுவுடைமைக் கட்சி தடை செய்யப் படுகிறது. கடும் அடக்குமுறை.

1934—நீதிக் கட்சி பார்ப்பனரை அனுமதிக்கிறது.

1935—தேர்தலில் வருணாசிரம சுயராஜ்ய சங்கத்தலைவர் S. கிருஷ்ணமாச்சாரியாரை சுயமரியாதைக் கட்சி ஆதரிக்கிறது.

1935—திருத்துறைப்பூண்டி சுயமரியாதை மாநாட்டில் பெரியார் சோசலிச கருத்துக்களைக் கைவிடுகிறார்.

1944—சேலம் நீதிக் கட்சி மாநாடு 'திராவிடர் கழகம்' எனப் பெயர் மாற்றம். பகிரங்கமாய் ஏகாதிபத்தியத்தை ஆதரித்ததே தோல்விக்குக் காரணம் என சி.என். அண்ணாத்துரை பேசுகிறார், பி.டி ராசன், நெடும்பலம் சாமியப்பா முதலானோர் விலகல்.

1947—'சுதந்திர'த்தைப் பெரியார் துக்கநாளாய்அறிவிப்பு.

1948— சமீன் ஒழிப்பை திராவிடர் கழகம் வெளிப்படையாக ஆதரிக்கவில்லை. இனாம் ஒழிப்பை மட்டுமே ஆதரித்தது.

மொத்தத்தில் ஆதிக்க சாதியினரும் ஆதிக்க சக்திகளும் தலைமை தாங்கும் எந்த ஒரு இயக்கமும் இறுதிவரை

www.padippakam.com



மக்களுக்கானதாக இருக்க முடியாது என்பதற்கு தமிழ்த் தேசிய இயக்கத்தின் தொடக்க கால வரலாறு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு

5. (இ). ஒப்பீட்டளவில் நீதிக் கட்சியைக் காட்டிலும் சனநாயகப்படுத்தப்பட்ட திராவிட இயக்கங்களும்கூடப் பின்னாளில் பார்ப்பனர் அல்லாத உயர்சாதியினரைத் தவிர இடைநிலை பிற்பட்ட வகுப்பினரையே அதிகம் ஈர்க்க முடிந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் முழுமையாக இவற்றுடன் அடையாளம் காண இயலவில்லை.

6. தமிழ் திராவிட மீட்பு வாதம் மற்றும் அதன் அரசியல் வெளிப்பாடாகிய நீதிக்கட்சியின் உயர் சாதி ஆதிக்கம் என்பது தாழ்த்தப்பட்ட தமிழர்களின் மத்தியில் எத்தகைய எதிர்வினையை ஏற்படுத்தியதென்பதற்கு **ராவ்பகதூர் எம் சி ராஜா** அவர்களின் கீழ்க்கண்ட கருத்துக்கள் விளக்கம் பகரும் (ராஜாவின் சொற்கள் சில இடங்களில் சுருக்கித் தரப்பட்டுள்ளன).

''சூத்திரன் எனக் கூறிக்கொள்ளப் பிடிக்காத பிராமணரல்லாத சாதி இந்துக்கள் தங்களை 'திராவிடர்கள்' என்று அழைத்துக் கொண்டார்கள். 1895இல் தங்கள் இனத்துக்கு ஒரு பெயர் சூட்டிக் கொள்ள விரும்பிய இம்மக்கள் (தாழ்த்தப்பட்டோர்) 'திராவிடர்' எனப் பெயர் மாற்றிக் கொண்ட சூத்திரர்களிடமிருந்து தாங்கள் தனிப்பட்டவர்கள் என்பதை விளக்கும் வகையில் 'ஆதிதிராவிடர்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.''

''ஆங்கிலேயரின் வருகையோடு ஆதிதிராவிடர் அடிமைத்தளை அறுபட ஆரம்பித்தது. இந்த மக்கள் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டாமா? அதை விடுத்து, சாதி வெறி தன்னலம் கொண்ட சாதி இந்து, ஓட்டிற்காக ஒரே மரபு இனம் என்று கூறிக் கொண்டு நப்பாசையும் பேராசையும் கொண்டு தாழ்த்தப்

www.padippakam.com



பட்டோரின் உழைப்பை உறிஞ்சி, உழைப்புக்கேற்ற ஊதியம் தராத சாதி இந்து மக்களுக்கு எப்படிக் கடமைப் பட்டவர்களாக இருக்க முடியும்?''

''புறம்போக்கு நிலங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. கணக்குப்பிள்ளை, மணியகாரர், அதிகாரிகள் எல்லோரும் சாதி இந்துக்கள் என்பதால்.''

எடுத்துக்காட்டு ஒன்றையும் ராஜா இங்கு குறிப்பிடு கிறார். சிதம்பரத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக நந்த னார் இலவசப்பள்ளி ஒன்றை தொடங்குவதற்காக **சகஜா நந்தர்**, தரிசு நிலம் ஒன்றை ஒதுக்கக் கோரி அதிகாரிகளுக்கு விண்ணப்பம் அளித்தார். சாதி இந்து அதிகாரிகள் மறுத்த தைத் தொடர்ந்து சகஜாநந்தர் **பி. எல். குப்பி** என்ற வெள்ளை கலெக்டரிடம் மனு கொடுத்தார். 3 9-20 அன்று நேரடி விசாரணை செய்த குப்பி, **வி. வேலாயுதம் பிள்ளை** என்ற நிலச்சுவான்தாரே நிலம் வழங்கப்படா மைக்குக் காரணம் எனக்கூறி மறுப்பைத் தள்ளுபடி செய்து பட்டா வழங்கினார். தொடர்ந்து பேசுகிறார் **எம். சி. ராஜா.**

''நீதிக்கட்சி மூலம் சாதி இந்துக்கள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் தாழ்த்தப்பட்டோர் நலத்துறைகள் புறக் கணிக்கப்படுகின்றன. துறைகளே மூடப்படும் பீதியும் உள்ளது'

''சென்ற ஆண்டு இறுதியில் தாழ்த்தப்பட்ட மாண வருக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் ஒன்றை மேலவை யில் வழங்கினேன். ஆண்டுக்கு 67 இலட்சம் செலவாகும் எனக்கூறி மறுக்கப்பட்டது''

''சிதம்பரம் தாலுகா போர்டில் ஏன் ஆதிதிராவிடர் நியமிக்கப்படவில்லை என்று ஸ்தல ஸ்தாபன அமைச்ச ரைக் கேட்டேன். சாதி இந்து ஒருவரின் வீட்டில் அலுவ

www.padippakam.com



லகம் செயல்படுவதால் தாழ்த்தப்பட்டவரை நியமிக்க முடியவில்லை எனப் பதில் வந்தது''

''நீதிக்கட்சி பதவி ஏற்ற ஓராண்டுக்குள் தாழ்த்தப் பட்டோருக்கான நல மானியத்தில் ஒரு இலட்சத்தை வெட்டியது. தொடர்ந்து தாழ்த்தப்பட்டோர் நலத்துறை கள் மூடப்படுகின்றன. முக்கிய அதிகாரிகள் நீக்கப்படு கின்றனர்''

''நல்ல காலமாக நீதிக்கட்சியின் பதவிக் காலம் இரண் டாண்டுகளோடு முடிந்துவிட்டது. கடவுள் நம்மைக் காப்பாற்றினார்''

7. அ. மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் எம். சி. ராஜாவின் பேச்சுக்களிலிருந்து தொகுக்கப்பட்டவை. தாழ்த்தப்பட்டோர் எதிர்வினையின் ஆபத்தான அம்சங் களைக் கீழ்வருமாறு தொகுக்கலாம்.

7. அ. 1: தேசிய உணர்விலிருந்து அந்நியப் படல்.

7. அ. 2: ஏகாதிபத்திய ஆதரவு

7. அ. 3: பின்னாளில் காங்கிரஸ் ஆதரவு

7. அ. 4: அம்பேத்கரின் சீரிய சிந்தனைகளுக்கு மாறாக பார்ப்பனருக்கு ஆதரவு

8. தொகுத்து நோக்கும்போது கவனத்திற்கு வருவன: தமிழக மக்கள் விடுதலை என்பது தமிழ் பேசுகிற ஒருசில உயர் ஆதிக்க சக்திகளுக்கான அரசை உருவாக்குவது என்பதாக இல்லாமல் பெரும்பான்மை அடித்தட்டு தமிழர் களின் விடுதலையாக அமைவதற்கும், பாசிசக் கூறுகளைத் தவிர்ப்பதற்கும் **யார் தமிழர்? எத்தகைய விடுதலை?** என்கிற இரு கேள்விகளுக்குமான சரியான பதிலைப் பெற்றாக வேண்டும். விடுதலையை நோக்கிய செயற்பாடுகளினூ டாக இதற்குரிய விவாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். வரையறையை உருவாக்க வேண்டும். அதற்

www.padippakam.com



குரிய முழக்கங்களை முன்வைத்து இதுகாறும் புறக்கணித்து வந்த அடித்தட்டு மக்களை ஒன்றிணைக்க வேண்டும்.

8. 1: **ஒரு பின் குறிப்பு:** காரல் மார்க்சின் எச்சரிக்கையோடு தொடங்கினோம். பெரியாரை நினைவுகூர்ந்து இதனை முடித்துக்கொள்வோம். பெரியாரின் பல எச்சரிக்கைகளை இன்றைய திராவிட இயக்கங்களில் பல பிரிவுகள் மட்டுமல்ல, தமிழின விடுதலை இயக்கங்கள் பலவும் கூட புறக்கணித்துள்ளன என்பதுதான் உண்மை. பெரியாரின் பெயரை முன்னிறுத்தி அரசியல் லாபம் அடைவது மட்டுமே குறிக்கோளாக அமைந்துவிடக்கூடாது. தமிழ் மொழி, தமிழ்க்கலாச்சாரம் ஆகியனவ குறித்த அவரது கருத்துக்கள் கவனமாய்ப் பரிசீலிக்கப்பட வேண்டும். பல தவறுகளிலிருந்து நம்மை மீட்டுக் கொள்ள அது பயன்படும்.

—பிப்ரவரி 91இல் திண்டிவனத்தில் தமிழ்நாடு இளைஞர் பேரவை நடத்திய கலந்துரையாடலொன்றில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள்.

**நிறப்பிரிகை :6**
**ஏப்ரல்-'93.**

www.padippakam.com

# 6. பார்ப்பனரும் வேளாளரும் தமிழகமும்

*—ராஜ்கௌதமன்*

## I

ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக, மதம், நிலம், கூட்டுக்குடும்பம், பாரம்பரியம், தன்னிறைவுப் பொருளாதாரம் ஆகிய சமூகப் பொருளாதார— அரசியல் அமைப்பிற்குள் வாழ்ந்த இவ்வுலகத்தார், ஐரோப்பாவில் 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட புரட்சிகளால் நூறு அல்லது இருநூறு ஆண்டுகளுக்குள் தலைகீழ் மாற்றங்கள் எனக் கூறத்தக்க விதத்தில் மாற்றங்களை அடைந்தார்கள்.

முதன் முதலாக ஐரோப்பாவில் தொழிற்சாலைகளும், நகரங்களும், வியாபார முதலாளி வர்க்கமும், நடுத்தர வர்க்கமும், ஆலைத்தொழிலாளரும், கடற்பயணங்களும் நாடுகளும் நாட்டுப்பற்றும், தொடர்பு சாதனப்பெருக்கமும் ஏற்பட்டன. புதிய தொழில் உற்பத்திமுறைக்கு அபரிதமாகத் தேவைப்பட்ட கச்சாப் பொருட்களை அபகரிக்கவும் உபரியாக உற்பத்தியான பண்டங்களை விற்று இலாபம் ஈட்டவும் புதிய நாடுகளைக் கண்டறியும் பெரும் கடற்பயணங்களை ஐரோப்பியர் மேற்கொண்டனர். கீழைத்தேசங்களின் புராதனப் பொருட்செல்வங்களைப்பற்றி மாலுமிகள் கூறிய தகவல்கள் ஐரோப்பிய வணிக முதலாளிகட்குப் புதிய சந்தைகளைக் கைப்பற்றும் வெறியைத்

படிப்பகம்

www.padippakam.com



தூண்டிவிட்டன. நிலத்தை அபகரிப்பதைவிட, மூலதனத்தைத் திரட்டுவதே புதிய பொருளாதார ஆதிக்க முறையாக ஆகியது.

இந்தியத் துணைக்கண்டத்தின் கிழக்கு, மேற்குக் கடற்கரைகளில் வந்திறங்கிய ஐரோப்பிய நாடுகளின் கம்பெனிகள், இந்து, முகமதிய அரசர்களின் காலாவதியான சனாதன ஒடுக்குமுறைகளைக் கண்டறிந்தன. பிறப்பால் தீர்மானிக்கப்பட்ட சாதிமத அடிப்படையில் இயங்கிய புராதனமான சமுதாயக் கட்டமைப்பைக் கண்டன. டச்சுக்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும், இறுதியில் ஆங்கிலேயர்களும் இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடியிலிருந்த தமிழ்நாட்டிற்கு வந்த போது, இங்கு தெலுங்கு, தமிழ் பேசிய பார்ப்பனர்களும், வேளாளர்களும் சிறுபான்மைக் சத்திரியரும் ஆதிக்கச் சக்தியினராக இருந்ததைக் கண்டார்கள்

## II

இந்து மதத்திற்கும் சாதிய ஏறு வரிசைக்கும் தலைமை பூண்டவர்களாகப் பார்ப்பனரும், அரசியல் மற்றும் பொருளாதாரத்திலும் சக்தி பெற்றவர்களாக வேளாளர்களையும் இனம் கண்டார்கள். பார்ப்பனர்கள், தமிழகத்தில் பல்லவர் காலந்தொட்டே தெய்வீக அதிகாரம் பெற்றவர்களாக ஆகியிருந்தார்கள். வேளாளச் சோழர்கள் பின்னர் (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல்) தமிழகச் சத்திரியர்களாக ஆவதற்கு மிக முன்பே, கி.பி. 3ஆம் நூற்றாண்டு முதலாகவே, புராண-இதிகாசங்களையும், சுமிருதி தர்ம சாத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு இனக்குழு வழிபாடுகளை 'ஒருமுகப்படுத்திய பௌராணிக இந்து மதத்தைப் பார்ப்பனர்கள் தமிழகத்திலிருந்த பல்லவ அரசர்களையும் ஏனைய சத்திரிய அரசர்களையும் ஏற்கச் செய்தார்கள்.

www.padippakam.com



சோழநாட்டின் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பாண்டியநாட்டின் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதியும் இதற்குரிய பழைய எடுத்துக்காட்டுகளாவார் கள். 'பரிபாடல்' 'கலித்தொகை' ஆகிய பாண்டிநாட்டுப் பாடல்கள் வழியாகத் தென்பாண்டி நாடுவரைக்கும் பௌராணிக இந்துமதத்தின் ஊடுறுவலையும், அதற்குத் தலைமை வகித்த பார்ப்பனச் சாதியாரையும் பற்றி அறிய முடியும். பல்லவர் காலத்திற்கு முன்னிருந்த சோழர் காலந்தொட்டு, பல்லவர் பிற்காலச்சோழர், பாண்டியர், நாயக்கர் ஆட்சியாளர்களின் கருத்தியல் தலைவர்களாகப் பார்ப்பனர் செயல்பட்டு வந்துள்ளார்கள். பல்லவ-சோழர் காலக கல்வெட்டுகளில் வேளாள, சத்திரிய அரசர்கள், பார்ப்பனர்க்குத் தானமாக வழங்கிய 'பிரமதேய' கிராமங்கள் பற்றித்தான் அதிகமான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

பௌராணிக இந்து மதத்தின் தலைமைச் சாதியா ராக மேல்நிலை வகித்த பார்ப்பனரின் பொருளாதார வளத்திற்கு அரசர்கள் உத்திரவாதம் தந்தனர். பதிலுக்குப் பார்ப்பனர்கள், ஆட்சியதிகாரத்திலிருந்தவர்கட்கு வினைக்கோட்பாடு, சனாதன தர்மம், கோவில், சாமி, ஆசாரம் ஆகியவற்றின் வழியாக ஆளும் கருத்தியலை வழங்கி தங்களுடைய மேலாதிக்கத்தைப் பேணி வந்தார் கள். பின்னால், சோழர் ஆட்சிபோய் பிற்காலப் பாண்டி களின் உட்கட்சி மோதல்கள் மலிந்த ஆட்சி வந்த பிறகு, வடக்கிலிருந்து வந்த **மாலிக்காபூரும்,** அடுத்து மதுரையில் சிலகாலம் அரசாண்ட சுல்தானிய ஆட்சியாளரும் பார்ப் பனர்கள் பேணிவந்த இந்துக் கோவில்களையும் சூறை யாடினார்கள். (பார்க்க: இபின்-பதூதா எழுதிய குறிப்புகள்) இதனைத் தடுத்திட பார்ப்பனரையும் இந்துக் கோவில்களையும், இந்து மதத்தையும், தங்களையும் காத்துக் கொள்ள, தெலுங்கு நாயக்கர்கள் தமிழகத்தைக் கைப் பற்றி முந்நூறு ஆண்டுக் காலமாக

www.padippakam.com



சனாதனக் கொடுமைகளைக் கிராமங்கள் தோறும் செய்தார்கள்.

பொதுவாகவே தங்களுக்கு வேதம் ஓதி, சடங்கு சாஸ்திரங்களைச் செய்வதற்காக வளமான நிலங்களைத் தானமாகத் தந்த 'சூத்திர' பிரபுக்களையும், பல்லவ, சாளுக்கிய, இராட்டிரக்கூட, மராட்டிய, பாண குலச் சத்திரியர்களையும் அனுசரித்த பிராமணர்கள, நாயக்கர் ஆட்சிக் காலத்தில், ஆந்திர ஆரவீடு, சங்கம, சாளுவ, துளுவ நாயக்கர்களுடன் ஒத்துப்போனார்கள். ஐரோப்பியர்கள் வந்த பிறகு, உள்ளூரில் 'மாடுதின்னும் புலையரைத்' தீண்டாதார்கள் என ஒதுக்கிய அதே பார்ப்பனர்கள், அதிகாரம் ஐரோப்பிய பரங்கிகளிடம் சென்றபோது, அவர்கள் மாட்டுக்கறி தின்றாலும் பரவாயில்லை என்று அவர்களுடன் நெருங்கினார்கள். முதலில் இடைத்தரகர்களாக இருந்தார்கள். பிறகு 19ஆம் நூற்றாண்டில், இவர்களுடைய பிள்ளைகள் பிரமதேய கிராமங்களை விட்டுவிட்டு நகரங்களில் ஆங்கிலக் கல்வி கற்றுப் பட்டம் பெற்றுப் பதவிகளைப் பற்றிக் கொண்டார்கள்.

## III

ஆதிக்க வரிசையில் பார்ப்பனர் — *சத்திரியர்க்கு அடுத்து, நிலவுடைமை அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த வேளாளரும், இவர்கட்குக் கீழ்ப்பட்ட கைவினை, விவசாயச் சாதியினரும் இந்துமத ஆசாரங்கள் முன் வைத்த அநேகவித தீட்டுகட்கு ஆளாகியிருந்த உழைப்புச்

* தமிழக வரலாற்றில், 'சத்திரியர்' என்று தனிச் சாதியினர் இருப்பதாகத் தெரியவில்லை. வேளாளரில் பெருநிலவுடைமைக் குடும்பங்களும், படைத் தலைவர்களாக விளங்கிய மறவர்களும், நாயக்கர்களும் 'சத்திரிய'த் தொழிலான அரசாட்சித் தொழிலை மேற்கொண்டிருந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



சாதியார்களும் பெரும்பான்மைத் தமிழர்களாக வாழ்ந்து வந்துள்ளனர்.

பிற்காலச் சோழர் காலத்தின் (கி. பி. 9-13) தொடக்கத்தில, பிரமதேயமல்லாத ஊர்களில் ஆதிக்கச் சக்தியாக விளங்கிய 'வேளான்' 'அரையன்' 'உடையான்' 'ஆழ்வான்', 'கிழவன்' முதலிய பட்டங்களைப் பெற்றிருந்த வேளாளர்கள் அரச காரியங்களையும் நிலங்களில் ,காணி' உரிமைகளை நிறைவேற்றும் காரியங்களையும் பார்த்து வந்தார்கள். இச்சோழர் ஆட்சி முடிவுக்குவந்த 13ஆம் நூற்றாண்டில் இவர்கள் பெரும் நிலக்கிழார்களானார்கள்.

ஆந்திரர்கள் தமிழகத்தை 15ஆம் நூற்றாண்டு முதல் ஆளத் தொடங்கியபோது, வேளாளரின் நிலவுடைமைகளிலும், கிராம நிர்வாகத்திலும், ஆந்திர ஆட்சியாளர்களும், அவர்கட்குத் துணைபுரிந்த பிற உயர்குல ஆந்திரச் சாதியினரும் இடம் பிடித்தார்கள். இவர்கள் காலத்தில் கோவில்களுக்கு 'தேவதானங்களாக' வழங்கப்பட்டிருந்த ஏராளமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துப் பயிரிடும் வழக்கம் பெருகியது.

அன்றைய நிலவரத்தைப் பார்த்தால், அரசர்கள், சைவ-வைணவக் கோவில்கள், 'காணி' ஆட்சி புரிந்த சைவ, வைணவ வேளாளர்கள் (தமிழ்-ஆந்திர இனத்தார்கள்) ஆகியவர்களே பெரும் நிலக்கிழார்களாகத் தெரிய வருகின்றனர். நில விளைச்சலில் அரசர்கட்குரிய பாகங்களை வசூலித்துவிட்டுத் தங்களுக்குரிய பங்கினையும் வேளாளர்கள் வசூலித்தார்கள்.

தெலுங்கு விசயநகரப் பேரரசர்கட்கு உட்பட்ட ஆந்திர மண்டல ஈசுவரர்கள் தமிழகத்தை ஆண்டபோது, கிராம நிர்வாக முறை ஆந்திர முறைக்குத் திருத்தப் பட்டது. ஆட்சி நிர்வாகத்தில் புதிய பதவிகள்

www.padippakam.com



ஏற்பட்டன. தமிழக கிராம நிர்வாகத்தில், ஆந்திர மாவட்டங்களிலிருந்து வந்த 'சேனபோவர்,' 'கௌடா' அல்லது 'ரெட்டி', 'தலாரி' முதலிய உத்தியோகத்தினர் பங்கு பெற்று இவர்களே பின்னர் கர்ணம், மணியம், தலையாரி என்றானார்கள். ஆந்திர, கன்னட படைத் தலைவர்கள், வீரர்கள் ஆகியோருக்கு ஊதியம் தருவதற்கு 'படைப் பற்று' என்ற பெயரில் நிலங்கள் வழங்கப்பட்டன. புதிய நாயக்கமங்கலங்கள் தோன்றின. மத்திய ஆந்திர அரசுக்குச் சேனை திரட்டித் தந்த 'பாளையப்பட்டுகள்' உருவெடுத்தன

ஆந்திரர் ஆட்சியில் வழங்கப்பட்ட மானிய கிராமங்கள் மூவிதமாக இருந்தன. ஆந்திர ஆட்சியாளனுக்குரிய கிராமங்கள், 'பண்டாரவாடா' என்றும், அவனுக்குப் போர்க்காலச் சேவை புரிவதற்காக அமரநாயக்கர்களுக்கும், பாளையக்காரர்களுக்கும் விடப்பட்டவை 'அமர-கிராமங்கள்' என்றும், மற்றும் பல்வேறு சேவைகளுக்காகவும், தெய்வ காரியங்களுக்காகவும், பிராமணர்கள் எனப்பட்ட பார்ப்பனர்க்காகவும் வழங்கப்பட்ட மானியங்கள் 'மானியப்பூ' என்றும் வழங்கப்பட்டன.

இந்த ஆந்திர இனத்தாரோடு பூசலும் சமரசமும் செய்து கொண்டு, தமிழகத்தில் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் மறவர் சாதியைச் சேர்ந்த படைத் தலைவர்களும், நிலக்கிழார்களும், தென்காசியில் பழைய பாண்டிய மரபினர் எனச் சொல்லிக் கொண்டவர்களும் ஆட்சி புரிந்தார்கள்.

ஐரோப்பியக் 'கும்பெனிக்'காரர்கள் தமிழகத்தில் வந்திறங்கி கடலூர், தரங்கம்பாடி, சென்னப்பட்டினம் முதலான இடங்களில் கோட்டை கட்டி வியாபாரம் செய்யத் தொடங்கியபோது, தமிழகத்தின் ஆதிக்க வட்டத்தாராக வேளாளரும், பார்ப்பனரும், சிறுபான்

www.padippakam.com



மைச் சத்திரிய சாதியாரும் இருந்தார்கள். இவருள் ஆந்திர அரசர்களும், ஆந்திரப் பெருநிலக்கிழார்களும் அடங்குவார்கள். ஆந்திர வேளாளரில் சிலர், மூன்று நூற்றாண்டுத் தமிழ்வாசத்தால், தமிழில் தனிப் பாடல் களை இயற்றும் அளவிற்குத் தமிழர்களாக மாறவும் செய்தார்கள்.

பார்ப்பனருக்கு அடுத்த நிலையில் அரச-தெய்வ காரியங்கள், நிலவுடைமை ஆகியவற்றோடு அதிகத் தொடர்புடைய வேளாளர்கள், முன்னேறிய சாதி இந்துக்களாகவும், கைத்தொழில்கள், அதிகாரம் சாராத பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் பின்னேறிய இந்துக்களாகவும், இவர்கட்குக் கீழ்வரிசையில் வயல் களில் உழைத்தல், கால்நடை பராமரித்தல், துப்புரவு செய்தல் ஆகியவற்றைச் செய்த சாதியினர் தீண்டத் தகாதவர்களாகவும் வாழ்ந்து வந்துள்ளார்கள். மேலும், பல்லவர் காலந்தொட்டே கோவில்களுக்கும், அரசர்க் கும், அரசரின் உரிமை பெற்றவர்க்கும் அடிமைகள் வைத் துக் கொள்ளும் உரிமை இருந்திருப்பது தெரிகிறது. ''சந்திராதித்தர் உள்ளவரை'' ''யானும் எம் வம்சத் தாரும்'', ''வழியடிமை'' என்று எழுதிக் கொடுத்த வழக்கம் இருந்துள்ளது.

## IV

பிறப்பாலேயே பெரிதும் தீர்மானிக்கப்பட்ட சாதி, குடும்ப அதிகார அடையாளங்களும், ஆண் அல்லது தந்தை ஆதிக்கச் சமுதாயத்தின் கருத்தியலும், நூற்றாண் டுக்காலமாக நிலவிய தமிழகத்தில் ஐரோப்பியர் வந்த பிறகுதான் மேற்கத்திய பூர்ஷ்வா கருத்தியலும், அரசமைப் புக்களும், ஐரோப்பிய மறுமலர்ச்சிக் காலத்தின் அறிவுக் கூறுகளும் திட்டமிட்டுப் புகுத்தப்பட்டன. கிறித்தவ மதமும், மாதச் சம்பளம் தருகிற புதிய உத்தியோக

www.padippakam.com



முறையும், அதற்கான கல்வித் திட்டமும், அதன் மூன்றடுக்குக் கல்வி போதனையும், ஆங்கில மொழியும், பாடப் புத்தகங்களும், அவற்றை உற்பத்தி செய்த துரித அச்சு எந்திரங்களும், பதிப்பகங்களும், எளிதில் மாற்ற வியலாத தனிச்சொத்துடைமைப் பதிவுகளும், அவற்றைப் பாதுகாக்கும் புதிய தனிமனிதப் பாங்கான, சட்டம், நீதி அமைப்புகளும், போலிசும் அதையொட்டிய சிறைச் சாலையும், புகைவண்டி, தபால், தந்தி, பத்திரிகை முதலான தொடர்பு சாதனங்களும் புகுத்தப்பட்டன.

இவற்றால் புதிதாக ஏற்பட்ட சமூக-அரசியல் மாற்றங்களில், உத்தியோக வகுப்பாரின் முணுமுணுப்புகளும், சுதேசி முதலாளி வகுப்பின் குரல்களும், புதிதாகத் தோன்றிய அதிகாரத்துவ ஏறுவரிசைக்குள் மேலிடம் பிடிக்க முயன்ற சாதிய ஏறுவரிசையின் இறுக்கத்திலிருந்த பாரம்பரிய தமிழ் ஆதிக்க சாதிகளுக்குள் நிலவிய போட்டிகளும், அவற்றின் அரசியல் அணிவகுப்புக்களும், புதிதாக வெளிப்படலாயின.

இந்நிலையில், மரபான ஆதிக்க சக்திகளாகத் தமிழகத்திலிருந்த பார்ப்பனர்களும், சைவ-வைணவ வேளாளர்களும் எவ்வாறு புதிய மாற்றங்களை எதிர்கொண்டார்கள் என்பதைக் காணலாம். ஐரோப்பியர் வருவதற்கு முன், இவ்விரு சாதியார்களும், தமிழினமல்லாத வேற்றினத்தாரின் அரசாட்சிக் காலங்களில், இந்துமதம், அதன் சாதி ஆசாரங்கள், நிலவுடைமையின் தந்தை ஆதிக்க சமூகக் கருத்து மதிப்பீடுகள் ஆகிய விஷயங்களில், முற்றிலும் மாறுபட்ட பண்பாட்டு வடிவங்களை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் வாழ்ந்ததில்லை. வேற்றுமதப் பண்பாட்டைப் புகுத்திய முகமதியஆட்சியை இத்தமிழ்ச் சாதியினர் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலமாக எதிர்கொண்டார்கள் எனினும், அவ் ஆட்சி



படிப்பகம்

www.padippakam.com



குறுகிய வலுவற்ற - தொடர்தாக்கங்களை உருவாக்காத இடையீடாகத்தான் இருந்தது. வேற்றினத்தவரான ஆந்திரர்கள், தமிழகத்தை ஆண்டபோது, பெருவாரி யாகக் குடியேறினார்கள். ஆந்திரத்தில் இவர்கள் எத்தகைய சாதி ஏறுவரிசையில் வாழ்ந்தார்களோ அதே வரிசையைத் தமிழகத்திலும் பின்பற்றினார்கள். ஆரவீடு அரசர் சாதி முதல், சக்கிலியத் தொழிலாளச் சாதி வரையிருந்த சாதி ஏறுவரிசையை தமிழகத்திலும் பேணி வாழ்ந்தார்கள்.

பிரிட்டிஷாரின் ஆட்சி முறை பைபிளோடும் துப்பாக்கி யோடும் தமிழகத்தில் நுழைந்தபோது, இந்து மத-சாதி - சம்பிரதாயங்களுக்குச் சற்றும் ஒவ்வாத, ஆசாரக் கேடுகள் மலிந்த 'பரங்கிப் பண்பாடு' நுழைந்தது. இது பார்ப்பன, வேளாளர்களிடம் எதிரும் புதிருமான விளைவுகளைத் தோற்றுவித்தது.

இந்துமதப் புனித அதிகாரம் பெற்றிருந்த பார்ப்ப னருக்கு பரங்கியர் பண்பாட்டுப் பரவலானது ஈரடியான நிலையைத் தோற்றுவித்தது. மாட்டுக்கறி தின்று சாதி ஆசாரம் பாராமல் பழகிய பரங்கியரின் பண்பாடு, பார்ப் பனர்க்கு முதலில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் அதே சமயம், அவர்கள் உருவாக்கிய புதிய வகைப் பொரு ளாதார அரசியல் அமைப்பின் அதிகாரத்துவத்தில் நாக்குப் போடுவதென்றால் அவர்களுடன் கலந்து அவர்கள் பண் பாட்டை ஏற்கவேண்டிய இக்கட்டான சூழலும் ஏற் பட்டது. வேத வித்துக்கள் எனப் போற்றப்பட்ட பார்ப் பனர்க்கு, புதிய அதிகாரத்தைப் பெறுவதற்கு வழிகோலிய ஆங்கிலக் கல்வியில் தூக்கலாக இருந்த மதச்சார்பற்ற குணம் இடித்தது. அதேவேளையில் ஆங்கிலக் கல்வியில் மித மிஞ்சியிருந்த இலக்கிய உள்ளடக்கமானது கற்பதற் குச் சுளுவாகவும் இருந்தது.

17, 18ஆம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய வியாபாரி களுக்குச் சரக்குகளை உள்நாட்டிலிருந்து திரட்டித்தரும்

www.padippakam.com



இடைத்தரகர்களாகச் சிறுபான்மை பார்ப்பனர்கள் (வேளாளரும் அடங்குவர்) செயல்பட்ட நிலை, 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து பெரிதும் மாறத் தொடங்கியது. இனிமேல் பருப்பு வேகாதென்று உணர்ந்த பார்ப்பனர்கள், முந்நூறு வருடங்களுக்கு முன் 'சூத்திர' ஆட்சியாளர்கள் தானமாக வழங்கிய பிரமதேய கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்து, ஆங்கிலக் கல்வி கற்று உத்தியோகம் பார்த்துச் சம்பாதிக்கவும், அரசு அதிகார அமைப்புக்களில் இடம் பிடிக்கவும் சென்னை முதலான பெரிய, சிறிய நகரங்களுக்குச் சென்றார்கள். பாரம்பரிய, அதிகாரத்தைக் கிராமங்களில் இவர்கள் விட்டுவிட்டு வந்தாலும், பி.ஏ., எம் ஏ.,பி.எல், முதலான பட்டங்கள் பெற்று உதவி கலெக்டர், தாசில்தார், முன்சீப் என்ற வடிவில் பன்மடங்கு அதிகாரம் பெற்றவர்களாக ஆனார்கள். பழைய சனாதனத் தலைமையோடு, புதிய சமூகத் தலைமைப் பதவிகளும் பார்ப்பனர்க்கு வந்து சேர்ந்தன.

ஐரோப்பிய முதலாளிய - தாராளவாதக் கருத்தாக்கங்கள், புதிய பொருளாதார உற்பத்தி அமைப்பிற்கு ஏற்ற விதமாகப் பழைய நிலவுடைமைச் சமுதாயத்து ஆட்களை ஒழுங்குபடுத்தி மறு உற்பத்தி செய்தன. இந்தியச் சமுதாயத்தின் சாதி, மத ஆசாரங்களை உடைத்தாலொழிய, புதிய எந்திர வகை உற்பத்திக்கு ஏற்ற சக்திகளைத் திரட்ட முடியாதென்பதை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் உணர்ந்திருந்தனர். கல்விமுறை, நீதி வழங்கும் முறை, தனிமனிதனை மையமிட்ட சட்டமுறை, அரசு நிர்வாகத்துறையில் ஏற்பட்ட புதிய வேலை வாய்ப்புகள், பெண்ணின் திருமண வயதை உயர்த்தும் சட்டம்; கிறித்தவ மதமாற்றம், நகரநாகரிகம் போன்றவற்றால் இந்துச் சாதி மத ஆசார இறுக்கங்கள் நெகிழத் தொடங்கின. மரபான சாதி வரிசையில் பிறப்பால் தீர்மானிக்கப்பட்ட தொழிலைச் செய்வதைத் தவிர வேறு போக்கற்றிருந்த கீழ்நிலை.

படிப்பகம்

www.padippakam.com



இடைநிலைச் சாதியினர்க்கு, புதிய வேலைகளை ஏற்று மேல்வரிசைக்கு உயரும் பாதைகள் திறந்து விடப்பட்டன. இந்நிலையை உணர்ந்த பார்ப்பனர்கள், புழுத்துப் போய்க் கொண்டிருந்த பௌராணிக இந்து மதத்தின்மீது ஆசார சீர்திருத்தம் என்ற புனுகினைப் பூசினார்கள். பிணம் அறுக்கும் வைத்தியப் படிப்பிலும், பெங்களூர் தோல் கிடங்குகளிலும் இறங்குவதற்குக் குண்டல தீக்ஷிதர் ஆத்துப் பிள்ளைகள் தயங்கவில்லை.

மேலும், தனிச் சொத்துடைமையின் வளர்ச்சிக் காரணமாக வழக்கறிஞர் தொழிலுக்கு நிரம்பத் தேவை எழுந்தது. ஆங்கிலேயரின் புதிய தனிநபர் அடிப்படையி லான சட்ட வரைவுகள் காரணமாகவும், கூட்டுக் குடும் பங்கள் சிதையத் தொடங்கியதன் காரணமாகவும், ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் வேறுபட்ட உத்தியோ கங்களையும், சம்பாத்தியங்களையும் அடைந்ததன் காரணமாகவும், கிராம நிலவுடைமைகளில் மாற்ற முடியாத பதிவு முறைகளும், சட்டப்படியான சொத்து மாற்றங்களும் ஏற்பட்டதன் காரணமாகவும், போலீஸ், நீதிமன்றங்கள் பரவலானதன் காரணமாகவும், பி.ஏ, பி.எல். பட்டதாரிகளுக்கு வழக்கறிஞர்களாகவும், நீதிபதி களாகவும் தொழில் புரிந்து கொழுத்த வருமானம் பெறும் வாய்ப்பு திறந்துவிடப்பட்டது (இவர்களே, பின்னர் சுதேசி அரசியலில் அதிகம் ஈடுபடலானார்கள்). இந்த வழக்கறிஞர் தொழிலில் நூற்றுக்குத் தொண்ணூறு சத விகித இடத்தை பார்ப்பனர்கள் பிடித்தனர்.

புதிய சூழலில் பார்ப்பனர்கள் எளிதில் கரைந்துபோக முடியவில்லை. பழைய கிராமியக் கூட்டுக் குடும்ப முறை, வைதீகத் தலைமை, பிற சாதியாரிடமிருந்து தங்களை இரு பிறப்பாளர்களாக்கிய கேனத்தனமான ஆசார- அனுட்டானங்கள் ஆகியவற்றை எளிதில் கைவிட முடிய வில்லை. புதிய அமைப்பிற்குள் நுழைவதற்கு இத்தயக்கம்

www.padippakam.com



படித்த பார்ப்பனர்க்கு அகநிலைத் தடைகளாக எழுந்து எச்சரித்தன. பாரம்பரிய அதிகாரத்திற்கு வைதிகம் தேவைப்பட்டது போல, புதுக்காலத்தின் அதிகாரத்திற்கு வைதீகத்தை விடுத்துச் சில சமரசங்கள் செய்வது தேவைப் பட்டது. வீட்டிற்குள் வைதீகம் பார்த்துக் கொண்டு, வெளியில், அலுவலகங்களில், கல்லூரிகளில், நீதிமன்றங் களில் மாநாடுகளில், சீர்திருத்தச் சங்கங்களில், பத்திரிகை எழுத்துக்களில், புனைகதைகளில் வைதீகத்திற்கு எதி ராகச் செயல்பட்டார்கள். இதன் காரணமாகப் புதுக் காலக் கருத்துக்களின் முன்னோடிகளாகவும் ஆனார்கள். மத அதிகாரத்தை மட்டுமே பெற்றிருந்த பார்ப்பனர்கள், ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் அரசியல், பொருளாதார வகைப்பட்ட பெரும் ஆதிக்கத்தைப் பெறத் தொடங்கி னார்கள்.

## V

இந்நிலையில், தமிழக வேளாளரின் நிலைபாடு வேறொரு விதமாக இருந்தது. கிராமிய நிலவுடைமை யாளர்களாகவும், வியாபாரத் தொழில் புரிபவர்களாகவும் வாழ்ந்த இவர்கள், வயல்களையும், வேசைகளையும், கவி ராஜ பண்டிதர்களின் கொக்கோகப் பாட்டுகளையும், தேவார—திருவாசகங்களையும், அறுசுவை உண்டிகளை யும், தர்மகர்த்தா பதவிகளையும், சீரணமாவதற்குரிய லேகியங்களையும் தங்களுக்கு வைத்துக் கொண்டு, தங்க ளுக்குக் கீழிருந்த பின் தங்கிய நானாவிதச் சாதியாரையும், தீண்டாத உழைப்பாளர்களையும் ஆதிக்கம் செய்து வந்தார்கள். இந்த வேளாளப் பிரபுக்கள் முடியாட்சிக் காலச் சுகங்களிலிருந்து விழித்து வந்த போது, ஆங்கிலத் துரைத்தனத்தாரின் அரசாட்சி முறையில் கிட்டிய அதி காரம் ஏற்கெனவே பார்ப்பனர்களால் பங்கு போடப் பட்டதை அறிந்தார்கள். கத்தியை எடுக்காமலேயே புதிய 'பாளையக்காரர்'களாகும் வழி தெரிந்தபோது, அவ்

www.padippakam.com



வழியில் நடக்கலாயினர். இவருள் சிலர், கிறித்தவ மதம் மாறி, உயர் பதவிகளை யடைந்தார்கள்.

ஆங்கிலேயர் புகுத்திய புதிய நிலைமைகளை வேளாளர் வேறுவேறு வடிவங்களில் எதிர்கொண்டனர். பரங்கித் துரைத்தனத்தாரின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு அதே வேளையில் பரங்கிப் பாதிரிகளையும், அவர்கள் போதித்த கிறித்தவ மதத்தையும் தூற்றும் ஒரு பிரிவு வேளாளர்க்கு யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகம்பிள்ளை என்ற ஆறுமுக நாவலர் தலைமை வகித்தார். முருகனைக் கடவுளாகக் கொண்ட சைவமதத்தைக் கிறித்தவ மதத்தின் தாக்குதலிலிருந்து காப்பதைக் கடமையாகக் கொண்டார். குறிப்பாக, சைவமதப் பெருமை போற்றும் வேளாளச் சாதி கௌரவத்தைக் காப்பதில் தீவிர வேகம் காட்டினார் எனலாம். ஆங்கிலக் கல்வி கற்ற சாதி இந்துக்களும், பார்ப்பனர்களும் சாதி, குல ஆசாரங்களை மீறுவதை இவரால் ஏற்கமுடியவில்லை. சைவராகவும், வேளாளராகவும் இருந்தும், சமரச சன்மார்க்கம் பற்றி உரைத்த **இராமலிங்க சாமிகளை**, நாவலர் கடுமையாக எதிர்த்தார். அவர் பாடல்களை 'மருட்பா' என்று வழக்குத் தொடுத்தார். அவருடைய மனைவி நடத்தை கெட்டவள் என்றார். அவருக்குப் போதிய இலக்கண அறிவு இல்லை என்றார். **ஆறுமுக நாவலர்** ஆங்கில அரசை ஏற்றுக் கொண்ட சைவ சனாதனி என்பதைக் கீழ்வரும் கூற்று புலப்படுத்தும் :

''...நம்முடைய சைவ சமயங்களுள்ளே சிலர் அன்ன வஸ்திரம் புத்தகம் கல்வி முதலியவற்றின் பொருட்டுத் தாங்களே தங்கள் கைப்பணத்தை இறுத்தும், தங்கள் பிள்ளைகளைப் பாதிரிமார் வீட்டிலே கீழ்ச்சாதியாரோடும் போசனஞ் செய்வித்துச் சாதியாசாரத்தையுஞ் சமயாசாரத்தையும் இழப்பித்து அவர்களோடு தாங்கள் கலந்து அவ்விரண்டையும் இழக்கிறார்களே... தாங்கள் சைவ சமயிகளென்றும்.

www.padippakam.com



உயர்ந்த சாதிமான்களென்றும் சிறிதும் நாண மின்றித் தலையெடுப்புடனே பாராட்டத் தொடங்கு கின்றார்களே ! சீச்சீ!...''

('பிரபந்தத் திரட்டு' 1955. பக் 53-54)

சைவமதம், வேளாளச்சாதி ஆகிய இரண்டையும் தூக்கிநிறுத்துவதே இவருடைய நோக்கமாக இருந் துள்ளது. இதற்குத் தமிழகத்திலிருந்த சில சைவ மடங்கள் துணைபோயின. இவரைப் போன்றவர்களை, அழிந்து கொண்டிருந்த வைதீக மரபின் எச்சம் என்று கொள்ள வேண்டும்.

வேளாள எதிர்வினையில் தலையாய போக்கு பார்ப் பனரை எதிர்த்துக் குரலிட்ட போக்காகும். இதனையே வேளாள அரசியல் எனலாம். இதில் **மறைமலையடிகள்**, **ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள்**, **ஈ. வெ ராமசாமி** பெரியார் ஆகிய மூன்று தரப்பார்கள் தலைமை வகித்த மூன்று போக்குகள் இருந்தன.

1. அரசியல் கிளர்ச்சியை முற்றாக மறுத்த **மறைமலை**, ஆங்கிலேயரின் ஆட்சியையும், அவர்தம் ஆங்கிலக் கல்விமுறையையும் வரவேற்றவர். சமூக-பண்பாட் டுத்தளத்தில் வைத்துப் பார்ப்பனரை, எதிர்த்துப் போராட சைவமதத்தையும்; தனித்தமிழையும் கருத்தாயுதங்களாக ஏந்தியவர் இவர். 'வேளாள நாகரிகம்', 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்', 'தமிழர்மதம்' ஆகிய தலைப்புகளில் தமிழகத்திலும், ஈழத்திலும் பிரச்சாரம் செய்தவர். இவர் வழியாக, வேளாளரின் மதம் சைவமதம் என்றும், தமிழரின் நாகரிகம் வேளாள நாகரிகம் என்றும் ஒரு கருத்தியல் பரவலாக்கப்பட்டது. தமிழ கத்திலும், யாழ்ப்பாணத்திலும் இக்கருத்தியலைப் பரப்புவதற்கு சைவ சித்தாந்த மகா சமாஜங்களும் சைவசபைகளும், சைவசித்தாந்த சங்கங்களும்,

www.padippakam.com



கழகங்களும், சைவபிரகாச சபைகளும் தோன்றிச் செயல்பட்டன. இவற்றின் புரவலர்களும், இவற்றில் சொற்பொழிவாற்றியவர்களும் வேளாளர்களாகவே இருந்தார்கள்.

சைவம், தமிழ், வேளாளர் ஆகிய மூன்றையும் இணைக்கும் வேலை மும்முரமாக நடந்தது. பழைய மாணிக்கவாசககர், திருநாவுக்கரசர் முதலான சைவ அடியார்கள், வேளாளப் பெருமையின் சின்னங் களாயினர். வேளாளத் தமிழ்ப்பண்டித மரபையும், சைவமதத்தையும் வாழ்விக்கச் செய்வதற்காசச் சைவ மடங்களும், கரந்தைத் தமிழ்ச்சங்கமும், பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ச்சங்கமும், 'செந்தமிழ்ச்செல்வி' (பத்திரிகை), 'சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்' (பதிப்பகம்) ஆகியவைகளும் முனைந்து செயல்பட்டன.

2. பிரிட்டிஷ் ஏகாதியபத்திய ஆட்சியினால் தமிழ் நாட்டில் உருவான நடுத்தர பூர்ஷ்வா சமூக வகுப்பில் பார்ப்பனர்கள் பெருவாரியாகவும், ஆனால் மொத்த சமூக அமைப்பில் வேளாளரைத் தலைமைச் சாதி யாராகவுமுடைய மக்கள் பெருவாரியாகவும் இருந் தார்கள். இந்தச் சமூகப் பெரும்பான்மையை அரசி யலாக்கி, புதிய அதிகாரத்தைக் கைப்பற்றுவதற் காகத் 'திராவிடர்' என்ற புதிய கருத்தாக்கம் தமிழ் வேளாளர்க்கும், ஆந்திர, மலையாள உயர் சாதியார்க்கும் கை கொடுத்தது. தமிழ், தமிழன், வேளாளன், சைவம் என்பவை பின்னுக்குச் சென்று திராவிடர், பார்ப்பனர் அல்லாதார் ஆகியவை முன் வைக்கப்பட்டன. பொப்பிலி, பனகல் அரசர்களும், ராவ்களும், ராஜுக்களும், தெலுங்குச்செட்டிகளும், மலையாள நாயர்களும், தமிழக வேளாளர்களும், படித்த சில 'ஆதிதிராவிடர்களும்' 'ஜஸ்டிஸ் கட்சி' என வழங்கப்பட்ட 'தென்னிந்திய நல உரிமைச்

www.padippakam.com



சங்கம்'என்ற அரசியல் கட்சியை ஏற்படுத்தினார்கள். பிரிட்டிஷ்காரர்கள் ஏற்படுத்திய 'இரட்டை ஆட்சி முறையில்' சொத்துடைமை உள்ளவர்க்கே வாக்குரிமை வரையறுக்கப்பட்டிருந்தாலும், சாதிமத எல்லைகளைத் தாண்டி வெகுசன இயக்கமாகிக் கொண்டிருந்த இந்தியத் தேசிய காங்கிரஸ் புறக்கணித்ததாலும். தேர்தலில் பங்குபெற்று வெற்றி பெற்றது ஜஸ்டிஸ்கட்சி. தொடர்ந்து 1920-21, 1923-26' 1930-32 1932-37 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தில், ஆந்திர திராவிடர்களே முதலமைச்சர்களாக வீற்றிருந்தார்கள்.

3. மூன்றாவது பார்ப்பன எதிர்ப்பியக்கமான பெரியாருடைய'சுயமரியாதை' இயக்கத்தைப் பற்றிக் காணலாம். 1927 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கன்னட வேளாளரான **பெரியார் ஈ.வே. ராமசாமி** தலைமையில், சைவம்-தமிழ் என்ற கருத்தாக்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, நாத்திகம் திராவிடம் என்ற கருத்தாக்கம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. பார்ப்பனரின் தலைமைக்குப் புராணமயமான இந்துமதமே ஆதாரம்; அதனை உடைத்தால்தான் பார்ப்பனியத்தையும் அதன் ஆதிக்கத்தையும் உடைக்கமுடியும் என்ற கருத்தில் பெரியார் செயல்பட்டார். ஆரிய இனத்தாரான பார்ப்பனரைத் திராவிட இனம் வீழ்த்தவேண்டுமானால், திராவிட இனம் தன்னுடைய சுயமரியாதையை மீட்க வேண்டுமானால் நாத்திகத்தைக் கருத்தாயுதமாக ஏந்தவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது; புதிய பூர்ஷ்வா அமைப்பில் கொள்கையளவில் சாதி, மத மேலாதிக்க நிலை ஏற்கப்படாவிடினும் தமிழக மொத்த சமூக அமைப்பில் நடைமுறையில் இந்துமதத்தின் வருணாச்சிரமத்தாலும், கோவில் வழிபாடுகளாலும் திருமணம், இறப்பு போன்ற குடும்ப நிகழ்ச்சிகளில்

www.padippakam.com



கலந்திருந்த சடங்காசாரங்களாலும் பார்ப்பனருக்குத் தலைமையிடம் வழங்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்ததுதான் 'சுயமரியாதை' இயக்கமாகும். இவ்வியக்கத்தில் படித்த வேளாளரின் புதிய தலைமுறையினரும், இவர்கட்குக் கீழ் சாதி வரிசையில் இருந்த இடைநிலை மற்றும் பிற்பட்ட சாதியினரும் முனைப்பாகச் செயல்பட்டார்கள்.

## VI

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன்பாகத் தமிழுக்கும் வேளாளர்க்குமுள்ள சம்பந்தத்தையும், வேளாள இயக்கத்தால் தமிழுக்குக் கிடைத்த கொடைகளையும் காணலாம். வரலாற்றுக் காலந்தொட்டே, தமிழகத்தில் பார்ப்பனர்கள் பெரிதும் வேதபாராயணம், வேள்வி, சமஸ்கிருதக்கல்வி ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தார்கள். சில அரசர்களை சமஸ்கிருதப் பண்பாட்டைப் பின்பற்ற வைத்தார்கள். பல்லவர், சோழர் காலங்களில் தமிழ்நாட்டை ஆண்ட பெரும்பாலான அரசர்கள் சமஸ் கிருதப் பண்பாட்டை ஏற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இது மேல்மட்டத்தில் நடந்துகொண்டிருக்கப் பெரும்பான்மை மக்களிடம் பூர்வ குடிகளின் பண்பாடும், இந்துக் கோவில்கள் வழியாகப் பரப்பப்பட்ட சமஸ்கிருதப் பண்பாட்டுக் கூறுகளும் காணப்பட்டன.

தமிழ்க் கல்வி, இலக்கியம் என்று எடுத்துக்கொண்டால் சம்பந்தர், சுந்தரர் சில ஆழ்வார்கள் ஆகியோரைத் தவிர, பெரும்பாலான புலவர்களும், பக்தர்களும் பார்ப்பனரல்லாதாராக குறிப்பாக வேளாளராக இருந்துள்ளதைக் காணலாம், ஒட்டக்கூத்தனின் பரம்பரையினர் என்று செங்குந்த முதலியார்களும், கம்பனின் பரம்பரை என்று வேறு சில வேளாளர்களும், உரிமை கொண்டாடி

www.padippakam.com



வந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும், தமிழகத்தில் நிலவிய ஆசிரிய- மாணவப் பரம்பரைகள், பிள்ளை, செட்டி, முதலியார் ஆகிய வேளாளப் பரம்பரைகளே. காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியார், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சோமசுந்தரம் பிள்ளை, முத்துவீர உபாத்தியாயர், கூழைத் தம்பிரான், நாவேலி சங்கர பண்டிதர் ஆகியோர் பிரபலமான வேளாளப் பண்டித ஆசான்களா வார்கள்.

இந்த வேளாளப் பண்டிதர்கள் சுமார் இருநூறு அல்லது முந்நூறு ஆண்டுகளாகச் சைவக் கடவுள் களையும் பெண் தெய்வங்களின் தடித்த மார்புகளையும் அவர்களோடு ஆண் தெய்வங்கள் புரிந்த லீலா விநோதங் களையும் வேளாள சத்திரிய வள்ளல்கள், படைத் தலைவர்கள், சமீந்தார்களையும் அவர்கள் பவனி வந்த போது பெண்டிர்க்கு உஷ்ணம் உண்டாகி மார்பகங்களில் பூசிய சந்தனம் பொரிந்ததையும் கச்சு அறுந்ததையும் தேமல் படர்ந்ததையும் வருணித்து வயிறு வளர்த்தார்கள். இநத நாற்கவிராயர்கள் வழிவந்த தமிழ்தான், இருபதாம் நூற்றாண்டில் பார்ப்பனனை எதிர்க்கும் கருவிகளில் ஒன்றாக மாற்றப்பட்டது. இவ்வாறு ஆகியபோது, வேளாள இயக்கத்தால், தமிழில் பழம்பெருமை பேசுகிற மீட்பியக்க ஆக்கங்களே நடைபெற்றன. புத்திலக்கிய ஆக்க முயற்சிகளில் படித்த பார்ப்பனரே பெருவாரியாக ஈடுபட்டனர். இதனைப் பின்னர்க் காணலாம்.

வேளாள இயக்கத்தில் ஈடுபட்ட பேரா. **சுந்தரம் பிள்ளை** சைவ அடியார் வரலாற்றை ஆராய்ந்தார். **வேதாசலம் பிள்ளை** (மறைமலையடிகள்) மாணிக்க வாசகரை ஆய்ந்தார். பழந்தமிழ்ப் பெருமைகளை ஆங்கிலத்தில் எழுதினார். ஆங்கிலக் கல்விமுறை புகுத்தப் பட்டபோது எழுந்த பாடநூல்களின் தேவை கருதி,

www.padippakam.com



படித்த வேளாளப்பிரபுக்கள் பழந்தமிழ் ஓலைச் சுவடிகளிலிருந்த காவிய புராண, சைவப் பாடல்களையும், இலக்கணங்களையும் அச்சில் ஏற்றினார்கள். பாடப்புத்தக வெளியீடாகத் தொடங்கிய இம்முயற்சி, தமிழ் மீட்பு வாதத்திற்குப் பெருந்துணை புரிந்தது. வேளாளக் கவிராயர் குடும்பங்களிலும், சைவ மடங்களிலும் செல்லரித்துக் கிடந்த பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைப் பதிப்பித்ததால் பணமும், புகழும் கிடைத்தன. பல பதிப்பகங்கள் தோன்றின. பழந்தமிழ்ச் சுவடிகள், புதிய கல்விச் சந்தையில் இலாபம் தரக்கூடிய பண்டங்களாக ஆயின. பதிப்பகங்களும், நூல் விற்பனை நிலையங்களும் பரம்பரை வியாபாரிகளான செட்டியார்களுக்கே பெரிதும் சொந்தமாயின.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற தொகுதிகளாக அச்சானபிறகு, வேளாள திராவிட அரசியலுக்குப் பெரிய உத்வேகம் கிடைத்தது. தமிழர்கள் அதாவது வேளாளரின் பொற்காலக் கனவை இது வளர்த்தது. மற்றொருபுறம், இக்கருத்தானது ஏகாதிபத்திய எதிர்ப்புக்காகப் **பாரதி, திரு. வி. க.** ஆகியவர்களால் பயன்படுத்தப்பட்டாலும் வேளாள மீட்பு வாதத்திற்கே இது பெரிதும் பயன்பட்டது எனலாம்.

வேளாளர் கைகளில் தமிழானது மீட்புவாதத்திற்குப் பயன்பட்டுக் கொண்டிருந்த அதேகாலகட்டத்தில், புதிய முதலாளிய தொடர்பு சாதனங்களில் ஒன்றான பத்திரிகையில் வெளிவந்த எளிய, புதிய தமிழ்க் கதைகளும் கட்டுரைகளும், செய்திகளும் எழுதுபவன் வாசிப்பவன் என்பவர்க்கிடையிலான உறவை மரபிலிருந்து மாற்றியமைத்தன. பண்டிதத் தமிழ்க் கல்வி மரபில், குறிப்பிட்ட வள்ளலிடம் நேரடியாகவோ, சீட்டுக் கவிதை (கடிதம்) மூலமாகவோ, கட்டளைக் கலித்துறை, வெண்பா, விருத்தம் முதலான

www.padippakam.com



செய்யுள் யாப்புக்களில் பாடியது மலையேறியது. ஒரு ஆசிரியன், வெகுசன வாசகர்களுக்காக,பதிப்பகத்தாரிடம் எழுதி விற்கும் புதிய வணிக ஒழுங்கு முறை தோன்றியது. ஆசிரியனிடமிருந்து முகம் தெரியாத வாசகனுக்குப் போகும் வழியில் பெரும் முதலீடுகளில் உருவான அச்சகம், தாள், பதிப்பகம், வெளியீட்டு முறை, விளம்பரம், விநியோக முகவர், புத்தக விற்பனைக் கடைகள், நூல் நிலையங்கள் ஆகிய இடைநிலைக் கேந்திரங்கள் செயல் பட்டன. இப்புதிய முறையை உடனடியாகக் கைக்குள் போட்டுக் கொண்டவர்கள் படித்த பார்ப்பனர்களாவர். தமிழில் வெகுசன புனைகதை இலக்கியமாகட்டும்; இலக்கியத்தரம் பார்க்கும்அறிவாளர் இலக்கியமாகட்டும், அனைத்திலும் படித்த பார்ப்பனரே முன்னோடிகளா வார்கள். வழிவழியாக தமிழ் இலக்கியத்தில் வேளாளர் வகுத்த தலைமை இப்போது பார்ப்பனரிடம் ஒன்று சேர்ந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயங்கிய 'விவேக சிந்தாமணி' இந்து, இருபதாம் நூற்றாண்டில் பிரசித்திப் பெற்ற 'விவேக சிந்தாமணி', **எஸ். எஸ். வாசனின்** 'ஆனந்த விகடன்', **கிருஷ்ணமூர்த்தியின்** 'கல்கி' ஆகியவை உள்ளிட்ட நவீன பத்திரிகை உலகில் பார்ப்பனரே ஆதிக்கம் செலுத்தினர். வெகுசன எழுத்தின் மூலம் புகழும், செல்வமும் குவித்த கல்கியும், வெகுசன சினிமா மூலம் பெரும் செல்வம் குவித்த விளம்பர வியாபாரியான வாசனும், இன்று போணியாகிக் கொண்டிருக்கிற **சுஜாதா, சிவசங்கரி, பாலகுமாரன்** வகையறாக்களும், தொலைக் காட்சியில் பங்குபெறும் நடிக, நடிகையர், தயாரிப்பாளர் முதலானவர்களும் பார்ப்பனர்களே என்பதை அனை வரும் அறிவார்கள். சுருங்கக்கூறினால் எங்கெல்லாம் அதிகாரமும், அதையொட்டிய புகழும், செல்வமும், குவிந் துள்ளனவோ அங்கெல்லாம் தலைமை பெற்றவர்கள் பார்ப்பனரே ஆவர். இவர்களை முன்னுதாரணமாகக்

www.padippakam.com



கொண்டுதான் ஏனைய வேளாளர் மற்றும் இதரர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை, தமிழ்நாட்டில் வரலாற்றுக் காலகட்டங்களில் பார்ப்பனரும், வேளாளரும் எவ்வாறெல்லாம் அதிகாரத்தில் பங்குபெற்றார்கள் என்றும், இவர்களைப் பின்பற்றிய பெரும்பான்மைத் தமிழர்கள் எவ்வாறு தங்களுக்கான அரசியல் ஏதுமின்றி அதிகாரம் செலுத்தியவர்களின் அரசியலைத் தம்முடையதாக ஏற்று வந்துள்ளார்கள் என்றும் ஓரளவு காணமுடிந்துள்ளது. இன்றைய பிரச்சினைகளை விளக்கமாகப் புரிந்து கொள்ளுவதற்கு, தமிழ்நாட்டு மக்கள், தங்களை ஆதிக்கம் செய்து வந்த பார்ப்பன - வேளாளச் சாதிகளின் சொருபத்தை அறிய வேண்டும். அதற்கான ஒரு முன்னுரையாக இக்கட்டுரை அமையும் எனலாம்.

**இக்கட்டுரை ஆக்கத்திற்குப் பயன்பட்ட சில நூல்கள்:**

1. ஆறுமுக நாவலர், **''பிரபந்தத் திரட்டு''** (1954)
2. மறை திருநாவுக்கரசு, **'மறைமலையடிகள் வரலாறு'** (1959)
3. ம. பொ. சிவஞானம், **'தமிழகத்தில் பிறமொழியினர்'**
4. அ. மாதவையா, **'பத்மாவதி சரித்திரம்'** (1898, 99, 1924-25)
5. மயிலை. சீனி வேங்கடசாமி, **'பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்'** (1962)
6. Noboru Karashima, ''South Indian History and Society'' (1984)
7. Dr. A. Krishnaswami, 'The Tamil Country under Vijayanagar' (1964).

***நிறப்பிரிகை–4:***
**(பிப்ரவரி-92)**

www.padippakam.com

இ-

மொழியாக்கங்கள்:-

இன ஒடுக்குமுறையும்-

போராட்டங்களும்:-

வேறுபட்ட உலக அனுபவங்கள்:-

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# 7. பாலஸ்தீனப் பிரச்சினையும் அறிவுத்துறை அயோக்கியத்தனமும்

—எட்வர்டுசேத்

ஒரு நாடு கைப்பற்றப்பட்டு மக்கள் அடிமையாக்கப் பட்டவுடன் அம் மக்களை இழிவானவர்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும், வரலாறு அற்றவர்களாகவும் ஆக்குவது வென்ற இனம் தொடர்ந்து கடைப்பிடிக்கிற நடைமுறை. வளமான எண்ணெய் வயல்களுக் கிடையே மத்திய கிழக்கில் தமக்கொரு கங்காணி வேண்டுமென்பதற்காக **இஸ்ரேல்** என்றொரு நாட்டை உருவாக்கி அங்கே உலகெங்கிலுமுள்ள யூதரை ஏகாதிபத்தியங்கள் குடியேற்றியுள்ளன. இஸ்ரேலும், தான் பெறுகிற கூலிக்கு விசுவாசமாக அரபு நாடுகளின் எழுச்சிகளைத் தடுத்தும் பாலஸ்தீனியர்களை முகமிழந்தவர்களாகச் சிதைத்தும் வருகிறது. வலிமை மிக்க ஏகாதிபத்தியங்களின் பிரச்சார சாதனங்கள் பாலஸ்தீனர்கள் குறித்து உருவாக்கும் ஏகாதிபத்தியப் புனைவுகளைக் கட்டவிழ்த்துப் பாலஸ்தீனர்களின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் பாலஸ்தீனிய நாட்டை விடுதலை செய்யவுமான அறிவுத்துறைப் பணிகள் அளவிலும் தரத்திலும் அதிகரித்து வருவதை இக்கட்டுரை விளக்குகிறது. ஒடுக்குமுறைக்கு எதிரான

தே—12

படிப்பகம்

www.padippakam.com



போராட்டங்களை பொருளியல் / அரசியல் / ராணுவக் களத்தில் மட்டுமல்ல அறிவுக்களத்திலும் மேற்கொண்டாக வேண்டியுள்ள உண்மையைப் பாலஸ்தீனியப் போராளிகள் ஏற்றுக்கொண்டு செயல்பட்டு ஏகாதிபத்தியங்களின் அறிவுத்துறை அயோக்கியத் தனங்களைத் தகர்த்தெறிவதில் குறிப்பிடத்தக்க வெற்றிகள் ஈட்டியிருப்பது கவனிக்கத் தக்கது.

இக் கட்டுரையை எழுதியுள்ள **எட்வர்டுசேத்**-கொலம்பியப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் மற்றும் ஒப்பிட்டு இலக்கியத்துறைப் பேராசிரியர். அமைப்பியல் சிந்தனைகளில் ஆர்வமுள்ள இவர் அண்மையில் எழுதியுள்ள நூல்: ''இறுதி வானின் பின்னால்: பாலஸ்தீனிய உயிர்கள்'' (இலண்டன், ஃபேபர் & ஃபேபர், 1986).

**சி. இச்சன்ஸ்** மற்றும் **ஈ. சேத்** தொகுத்துள்ள ''பலியானவர்களைப் பழித்தல்: ''பாலஸ்தீனப் பிரச்சினையும் அறிவுத் துறை அயோக்கியத்தனங்களும்'' (வெர்சோ, லண்டன்) என்ற நூலின் முன்னுரையாக எழுதப்பட்டது இக் கட்டுரை. 'Race and class'—Winter 1988 இதழிலிருந்து மொழியாக்கியவர் **பேரா. சே. கோச்சடை**)

## I

பாலஸ்தீனப் பிரச்சினை பல வழிகளில் அசாதாரணமான ஒன்று. பாலஸ்தீனம் ஒரு புராணத் தலம்; சமய சித்தாந்தங்களும் பண்பாட்டு முக்கியத்துவமும் மண்டிய இடம். பல தலைமுறை மக்களாலும் மரபுகளாலும் அதற்கு அரசியல் அர்த்தங்கள் சேர்ந்திருக்கிறது. கடந்த நூற்றாண்டில் யூத வெறி இயக்கத்தினருக்கும் தங்களை (இசுலாமிய அல்லது கிறிஸ்தவ) பாலஸ்தீனிய அராபியர் என அழைத்துக் கொண்ட பாலஸ்தீன மண்ணின் மக்களுக்குமிடையேயான கடும் சச்சரவுக்களமாக அது

படிப்பகம்

www.padippakam.com



இருந்து வந்திருக்கிறது. மத்திய கிழக்கிலிருந்து வெகு தொலைவிலுள்ள பன்னாட்டு அரங்கிலும் இப் போராட்டம் தீவிரமாக இருந்து வருகிறது. இந்த அரங்கு என்பது சர்வதேச உறவுகள், வானொலி, அச்சு, தொலைக்காட்சி, அறிவுத்துறை (வரலாறு, சமூகவியல், பண்பாட்டு ஆய்வுகள், அரசியல், பொருளாதாரம், மானுடவியல், தத்துவம், தொல்லியல் முதலியன) மற்றும் பிரச்சாரம் ஆகியவற்றில் நிரம்பியது. 1948இல் இஸ்ரேல் ஒரு அரசாக நிறுவப்பட்டது யூத வெறியர்கள் பாலஸ் தீனத்தின் பெரும் பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது ஓரளவிற்கு இதற்குக் காரணமெனில் பன்னாட்டு அரங்கில் கருத்துப் போராட்டக் களத்தில் அவர்கள் அரசியல் வெற்றியடைந்திருந்தது ஒரு முக்கிய காரணம் என்றால் மிகையாகாது.

அது முதல் இஸ்ரேல் தன்னை வலிவிலும் பரப்பிலும், விரிவுபடுத்தி இருக்கிறது. 1967இல் இது ராணுவ ரீதியாக பாலஸ்தீனத்தின் பரந்த அளவிலான அராபிய மண்ணை யும் மக்களையும் கைப்பற்றி இன்னமும் தன் வசமே வைத்திருக்கிறது. இருபதாண்டுகளாக இந்நிலை நீடிப்ப தென்பது வெளி ஆதரவில்லாமல் சாத்தியமில்லை. பாலஸ்தீனத்தின் மீதான ஆதிக்கப் போராட்டதின் களமாக இரண்டாம் உலகப்போர்வரை அய்ரோப் பாவும் அதன்பின் அமெரிக்காவும் விளங்கி வருகிறது. அமெரிக்காவில் எதிர்ப்பே இல்லாத பெரிய அளவு ஆதரவை இஸ்ரேல் பெற்றுள்ளது. மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் வேறெந்த அயல் நாட்டை யும் விட மிக அதிகமாக அமெரிக்க உதவி பெறும் நாடு இஸ்ரேல்தான். ஒவ்வொரு இஸ்ரேலியனுக்கும் ஆண் டொன்றுக்கு ஏறத்தாழ 1400 டாலரை அமெரிக்கா மானியமாக வழங்கி வருகிறது. இஸ்ரேலியப்படை வீரன் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்குச் சுமார் 9750 டாலரை அமெரிக்கா செலவிடுகிறது. (இந்த அளவு

www.padippakam.com



பொருள் தொகையைத் தனது குடிமக்களில் பலருக்குக் கூட அது செலவிடுவதில்லை.) இந்தப் பண உதவிக்குச் சமமான முக்கியத்துவமுடைய அரசியலாதரவையும் அமெரிக்கா வழங்கி வருகிறது. பன்னாட்டு அரங்குகளில் இஸ்ரேலுக்கு நிபந்தனையற்ற ஆதரவு அளித்தல், போர்த் தந்திர ரீதியில் ஒருங்கிணைவிற்கான ஒப்பந்தம் வேட்பாளர்களாக அமெரிக்காவில் போட்டி இடுபவர்கள் கூட இஸ்ரேலுக்குத் தான் நிபந்தனையற்ற ஆதரவளிப்ப தாகச் சொல்ல வேண்டிய நிலை ஆகியவை இதனை விளக்கும். இந்த ஆதரவின்றிச் செயல்பட இயலாத அளவிற்கு இஸ்ரேல் இன்று அமெரிக்காவைச் சார்ந்திருக் கிறது.

இந்த உண்மைகள் வியப்புக்குரியவை; உடனடியாக விளங்கிக் கொள்ள இயலாத அளவிற்குச் சிக்கலுடை யவை; யூதவெறிக்குப் பலியாகிற பாலஸ்தீனியர்கள் மீதான வன்முறைக்கு ஆதரவளித்து வலுவூட்டப்படு கிறது. 'நமது நட்பு நாடு' என்றும் ''மத்திய கிழக்கின் ஒரே சனநாயக நாடு'' என்றும் அமெரிக்க காங்கிரஸ் இஸ்ரேலைப் புகழ்கிறது. ஆண்டுதோறும் இஸ்ரேலுக்கு அளிக்கும் உதவியை அதிகரிக்கிறது. இது ஆக்கிரமிப்புப் பிடி இறுக வழிவகுக்கிறது. ஆக்ரமிக்கப்பட்ட **மேலைகரை** மற்றும் **காசா** பகுதிகளில் மேலும் மேலும் ஆழமாக வெறுப்பேற்றக்கூடிய சட்ட விரோதக் குடியேற்றங்களை இஸ்ரேல் அரசு நிறுவ அனுமதிக்கிறது; மேலும் மேலும் அதிகமான பாலஸ்தீனியர்கள் சிறையிடப் படவும், கொல்லப்படவும், நாடு கடத்தப் படவும் அனுமதிக்கிறது. மேலும் மேலும் அதிகமாக பாலஸ்தீன வாழ்க்கை கடின மாவதற்கும் அனுமதிக்கிறது. இன்னொன்று; இஸ்ரேல் ஆதரவு நிறுவனமயமாக்கப்பட்டுள்ளதன் விளைவாக 'பயங்கரவாதம்' 'கம்யூனிசம்' ஆகியவற்றை எதிர்ப்பது என்ற பெயரால் மட்டுமின்றி 'யூத எதிர்ப்புக்கு (anti-semitic) எதிர்ப்பு' என்ற பெயரால் இஸ்ரேலை ஆதரிக்கும்

www.padippakam.com



போக்கு அமெரிக்காவில் உள்ளது. இந்நிலையின் விளைவாக அமெரிக்க நாளிதழ்கள், தொலைக்காட்சி, வணிக சினிமா போன்றவற்றில் பாலஸ்தீனியர்கள் என்றால்— இஸ்லாமிய வெறியர், அப்பாவிகளை வன்கொலை செய்பவர், விரக்தியடைந்த காட்டுமிராண்டி- என்கிற ஒரே அச்சுப்பதிவுகளாகக் குறுக்கப்பட்டுச் சித்திரிக்கப் படுகின்றனர்.

இந்நிலை என்பது இயல்பானதுமல்ல தவிர்க்க இயலாததுமல்ல. கடினமான முயற்சி மற்றும் உழைப்பின் விளைவாக இத்தகைய இஸ்ரேல் ஆதரவு உருவாக்கப் பட்டுள்ளது. ஆனால் இன்று இதனை குறிப்பிடத்தக்க எதிர்ப்புகளுடனும் அதிகரித்து வரும் நெருக்கடியின் மத்தியிலுமே நிறைவேற்ற முடிகிறது. யூத வெறியின் அரசியல் வெற்றிக்கெதிரான அரசியல் மற்றும் பண்பாட்டுத் தள எதிர்ப்பு இது. தங்கள் மண்ணுடனுள்ள தொடர்பைக் கட்டிக் காக்கவும், தம் உயிருக்கெதிரான வெறிமிகு கொலைகாரத் தாக்குதல்களிலிருந்து தப்பவும் பாலஸ்தீனர்கள் செய்யும் முயற்சியே இந்த எதிர்ப்பின் தோற்றுவாய். உலகின் வேறு பகுதிகளில் நடைபெற்றக் காலனியக் குடியிருப்பு இயக்கங்கள் கிழக்கத்திய சரண் டற்பாத்திரத்தை உள்ளூர் மக்களுக்கு அளித்தன; யூத வெறியர்களோ பாலஸ்தீனியர்களைத் தங்களுக்கு அடங்கியவர்களாக மட்டுமல்ல அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையே அவர்களுக்குத் தேவையில்லை எனவும் கருதினார்கள். சொந்த மண்ணைப் புறக்கணித்து அலைந்த நாடோடி களாக அவர்கள் கருதப்பட்டனர். இஸ்ரேல் என்பது அந்நாட்டுக் குடிமக்களின் அரசாக அன்றி **யூதர்களுக்கான** அரசாக நிறுவப்பட்ட பிறகு பாலஸ்தீனியர்கள் **யூதரல்லாதவர்** என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். எனவே 1948இல் இஸ்ரேல் நிறுவப்பட்டபின் முதல் இருபதாண்டு களில் துரத்தி அடிக்கப்பட்ட 7,80,000 பாலஸ்தீனியர்கள் நாடு கடத்தப்பட்டதாகப் பொருள்கொள்ளப் பட்டது.

www.padippakam.com



எப்படியோ மிஞ்சியிருந்த 1,20 000 பேர் கேவலமான இழிநத வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது இந்த வாழ்க்கையின் கோரமான விவரங்களை முதன் முதலில் உலகிற்கு வெளிப்படுத்திய நூல்கள் இரண்டு. அவை: சப்ரிஜியின் 'இஸ்ரேலில் அராபியர்கள்' (1976), எலியா சுராய்க்கின் 'உள்நாட்டுக் காலனியாதிக்கம் பற்றிய ஆய்வு' (1979) இந்த இரு ஆசிரியர்களுமே பாலஸ்தீனச் சிறு பான்மையினர். அந்தக் கொடிய வாழ்க்கையின் விளை பொருட்கள். இந்த இரண்டோடும் ஒப்பிடத்தக்க இன்னொரு உயிரோட்டமுள்ள நூல், ஃபௌசி அல்அஸ்மரின் 'இஸ்ரேலில் அராபியராக இருத்தல்' (1975) என்பதாகும்.

சற்றுப் பின்னோக்கிச் செல்வோம். 1948 இல் இஸ்ரேல் அரசு உருவாக்கப்பட்ட நொடி முதல்-இதற்கான தயாரிப்புகள் இதற்கு வெகுகாலத்திற்கு முன்பே செய்யப்பட்டன. உண்மை என உறுதியாய் நம்பப்படும் அளவிற்கு தொடர்ந்து பல பொய் விவரணங்களும் படிமங்களும் மேல் நாடுகளில் பெரு வெள்ளமெனக் கொட்டிக் குவிக்கப் பட்டன அதற்கு முன் பல ஆண்டுகளாக யூதர்கள் குடியேற்றப் பட்டுங்கூட 1948இல் பாலஸ்தீனியர்கள் சனத் தொகையில் 67 விழுக்காடாகவும் நிலப்பரப்பில் 90 விழுக் காட்டிற்குச் சொந்தக்காரர்களாகவும் இருந்தார்கள். யூதர்களுக்கு ஏற்பட்டப் பேரழிவுக்குப் பின்னும்கூட மக்கள் வசிக்காதக் 'காலிப் பிரதேசங்களில்' யூதர்கள் குடியேற்றப் படுவதற்கு காட்டுமிராண்டித்தனமாக எதிர்ப்புக் தெரிவிக்கும் உள்ளூர் மக்கள் குறித்தக் கட்டுக் கதைகளை உலகம் கேள்விப்பட்டது. அதன் பின் இந்தப் புனைவுகள பலகிப் பெருகி மேல்நாடுகளில் மறுக்க இயலாத அளவிற்கு ஒரு அமைப்பாக இறுகி விட்டன. தங்கள் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிய பாலஸ்தினர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். ஏற்கெனவே இட்லருடன் அணி சேர்ந்திருந்தபடியால் அராபியர்கள் யூதர்களின் அரசைத் தகர்த்தழிக்க இருந்தனர். அவர்கள்

www.padippakam.com



இஸ்ரேலை எதிர்ப்பது சாராம்சத்தில் இனவாதமே; பாசிசமே. இஸ்ரேல் ஒரு சனநாயக நாடு. அது நிலைத்திருக்க விரும்புவது நீதிப்படி சரியானது (ஏனெனில் வேறு எவரும் யூதர்களைக் காட்டிலும் அதிகமாகத் துன்புற்றதில்லை). இஸ்ரேலின் உருவாக்கம் வரலாற்று ரீதியாய்த் தவிர்க்க இயலாதது. (ஏனெனில் உலகம் முழுவதுமே அய்ரோப்பாவிலிருந்து வந்த இந்த அறிவுமிக்க யூதத் தாராளவாதிகளுக்குப் பாலஸ்தீனக் காலியிடத்தை அளிப்பதாக உறுதி கூறியது) எல்லாவற்றுக்கும் மேலாக யூதர்களாக இருந்த முன்னோடிகள் திறமை மிகுந்த அரசியலறிஞர்கள், அச்சமற்ற மனிதாபிமானிகள் மற்றும் கண்ணியமிக்க போராளிகள்! தமது எதிரிகள் மீது 1948க்கு முன்னும் பின்னும் நடத்திய பயங்கரவாதச் செயல்களைக் காட்டிலும் அளவிலும் கொடுமையிலும் யூதர்களின் மீது மிக மிக அதிகமாகப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. இஸ்ரேல் முன்னேற்றத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் நிற்கிறது. அதே வேளையில் அதன் அராபிய எதிரிகள் முஸ்லிம் மதவெறியர்கள்,பகுத்தறிவற்ற கொலைகாரர்கள், வெறுக்கத்தக்க பாசாங்குக்காரர்கள் என்றெல்லாம் இட்டுக்கட்டப்பட்டன. இந்த மையமான கற்பிதங்களோடு வேறு சிலவும் மேற்கொள்ளப்பட்டன. பாலஸ்தீனியர்கள் இப்போது இல்லை; ஜோர்டான்தான் உண்மையில் பாலஸ்தீனம்; யூதர்களை வெறுப்பதற்கான ஒரு காரணமாக பாலஸ்தீனியர்களை அராபியர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்தக் கற்பிதங்களின் தலையாய நோக்கம் இஸ்ரேலுக்கு ஆதரவு ஈட்டுவது மட்டுமல்ல, இஸ்ரேலின் வெற்றிக்கு மனித விலையாகக் கொடுக்கப்பட்ட பாலஸ்தீனியர்களின் மலைக்கச் செய்யும் எண்ணிக்கையை மறைப்பது மாகும். இவற்றில் பெரும்பாலான கற்பிதங்களை மறுப்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

www.padippakam.com



அங்கே ரத்தமும் சதையுமாய் பாலஸ்தீனியர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளும் நிலவுரிமைப் பதிவுகளும், நேரில் கண்ட சாட்சிகளின் அறிக்கைகளும் 1948க்கு முன்னும் பின்னும் பாலஸ்தீனத்தில் மெய்யான அராபிய வாழ்க்கையின் சுவடுகளும் இருந்ததை தங்கள் தலைவர்கள் சொன்னதால்தான் பாலஸ்தீனியர்கள் ஓடி விட்டார்களா என்பதைக் கண்டறிய ஆர்வமுள்ள எவரும் பதிவேட்டைப் புரட்டிப் பார்த்திருக்கலாம். அராபியர்களின் பயங்கரவாதம் **ஸ்டெர்ன் காங், ஹகனா, இர்குன்** பயங்கரவாதங்களோடு ஒப்பிடத் தக்கது தான் எனச் சோதித்து அறிவது சாத்தியம்தான். ஒரு நாட்டு மக்களுக்குச் சொந்தமான நிலத்தை இன்னொரு மக்களுக்கு வாக்குறுதி அளித்து ராணுவ ரீதியாய்ப் பறித்துத் தருவது வரலாற்று ரீதியாய் தவிர்க்க இயலாததா? நியாயமானதா? என்பதையெல்லாம் சோதித்து அறிவது சாத்தியமே.

சமயங்களில் கற்பிதங்கள் தமக்கென ஒரு வாழ்வையும் வளர்ச்சியையும் கொண்டுள்ளன. இஸ்ரேலின் முதல் பிரதமரான **டேவிட்பென்குரியனைப்** பற்றி 'நியூயார்க் டைம்சில்' (அக் 5,1986) **ஷிமோன்பெரேஸ்** எழுதுகிற ஒரு புகழ்ச்சிக் கட்டுரையைப்பாருங்கள். வரலாற்றையும் ஐம்பது லட்சம் பாலஸ்தீனியர் வாழ்ந்திருந்ததையும் புறக்கணித்து விட்டு ஏதோ வந்தேறிய யூதவெறியர்களே பாலஸ்தீனத்தைக் கண்டு பிடித்தது போல **பெரெஸ்** எழுதுகிறான்:

> அவர்கள் வந்தடைந்த மண், அது உண்மையில் புனித மண்ணாக இருந்த போதிலும் பாழடைந்தும் ஆளரவமற்றும் இருந்தது. அம்மண் தரிசாக நீர்வேட்கையோடு கிடந்தது. சதுப்பு நிலமும் மலேரியாவும் நிறைந்திருந்தது. அம்மண்ணில் வேறொரு மக்களும் வாழ்ந்திருந்தனர். (பெரெஸ் அம்மக்களின் பெயரைச் சொல்வது கூடத் தேவை எனக் கருதவில்லை.) அவர்கள்

www.padippakam.com



அங்கே வாழ்ந்திருந்தாலும் அம்மண்ணைப் புறக்கணித்திருந்தனர். யூதர்கள் அம்மண்ணுக்குத் திரும்பியது என்பது அங்கிருந்த சிறிய அராபிய மக்களுடனான முடிவற்ற வன்முறைப் போராட்டங்களுடன் இணைந்திருந்தது(மே 1948இல் இஸ்ரேல் நிறுவப்படும் வரை அராபியர்கள்தான் அறுதிப் பெரும்பான்மையாகப் பாலஸ் தீனத்திலிருந்தனர். அதன் பின்னரே அவர்கள் வன்முறையாக வெளியேற்றப்பட்டனர் என்கிற உண்மையை நினைவுகொள்க) அந்த நேரத்தில் இஸ்ரேல் என்ற நாடே இல்லை என்ற உண்மையை மீறி பெரெஸ் பாலஸ்தீனத்தை விட்டு விட்டு இஸ்ரேல் பற்றிப் பேசுகிறான். அத்தகைய போராட்டங்களை அராபிய அரசுகள் தூண்டி விட்டன.

பாலஸ்தீனியர்களை அராபிய அரசின் வெறும் கருவிகளாகவும் அராபிய அரசுகளால் தூண்டப்பட்டதாலேயே அவர்கள் போராடினார்கள் என்பதாகவும் கூறப்படுவதைக் கவனிக்க.

பாலஸ்தீனியம் என்கிற எதார்த்தம் மேற்கத்தியப் பார்வையாளர்களுக்கு ஒரு எளிய இரட்டை அமைப்பாகக் (binary system) குறுக்கப்பட்டது. ஒரு பக்கம் 'நம்'மைப் போன்ற வீரமிகு யூதர்கள்; மறுபக்கம் நம்மோடு அடையாளம் காணமுடியாத உள்ளூர் மக்கள். நல்லது, உண்மையானது, அழகானது ஆகிய படிமங்கள் தவிர, காட்டுமிராண்டித்தனத்திலிருந்து நாகரிகத்தைச் செதுக்கி எடுக்கும் வெள்ளைக் குடியேறிகளின் படிமத்துடன் யூதர்கள் தொடர்புப்படுத்தப்பட்டனர். அமெரிக்கத் தூய்மை வாதத்திலிருந்தும் ஆப்பிரிக்கா மற்றும் லத்தின் அமெரிக்காவை வெற்றி கொண்டது பற்றிய அய்ரோப்பியர்கள் சொன்ன வீர பராக்கிரம வருணனைகளிலிருந்தும் நவீன காவிய நாயகர்களின் பிம்பங்களிலிருந்தும்

www.padippakam.com



பண்பாட்டு ஊற்று மூலங்களைக் கொண்ட படிமம் அது. **எக்சோடஸ்** (வெளியேற்றம்) போன்ற பிரபலத் திரைப் படங்கள் எண்ணற்ற துன்ப துயரங்களுக்கு உள்ளாகிய இஸ்ரேலியர்கள் பற்றிய ஏராளமான கிளைக்கதைகள் நிறைந்தவை. இது போன்ற கதைகள் ஏற்கெனவே மேலை நாடுகளில் நிலவி வந்தன. இஸ்ரேலிய யூதர்கள் தான் உண்மையில் பலியானவர்கள்; அவர்கள் நல்ல மனதுடைய வர்கள்; அறிவுத்திறம் மிக்கவர்கள்; 'கடலில் தூக்கி எறி வோம்' என்ற அராபியர்களின் அச்சுறுத்தல்களை கடும் முயற்சிகளால் முறியடித்தவர்கள் என்பன போன்ற திகைக்க வைக்கும் கருத்துக்களுக்கு இப்படங்கள் வலு வூட்டின. உண்மையில் பெய்ரூட்டை விட்டு விரட்டப் பட்ட பாலஸ்தீனியர்கள் தான் கடலுக்குள் விரட்டப் பட்ட வர்கள். அகதி முகாம்களில் கொலை செய்யப்பட்ட வர்கள்.

இஸ்ரேலில் யூதர்களின் சாதனைகள் குறித்த கதை தொடர்ந்து துடிப்போடு பரவி வருகிறது. மேற்கு நாடு களில் நியாயமாகவே பிரபலமாகியுள்ள மாபெரும் மனிதர்கள் சிலர் (**ஐன்ஸ்டீன், ஃப்ராய்டு, சாகல், ருபென்ஸ்டீன்** போன்ற யூதர்கள்) இதற்குப் பயன்பட்டனர். இந்தக் கதைகளைப் பேசுகிற மக்கள் ஒரு சாதாரண மேற் கத்தியரின் உலகைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இத்தகைய வரலாறுகள் இன்று கிட்டத்தட்ட அதிகார பூர்வமானதாகவே ஆகிவிட்டது. இதனால் சங்கடப்படக் கூடியவர்கள் உள்ளூர் 'பயங்கரவாதிகள்தான்'! தங்கள் வரலாற்றைப் பேசுகிற பாலஸ்தீனியர்கள் மேற்கு நாட் டாருக்கு நெருக்கமானவர்களல்ல. அவர்களது மொழி அரபு; மதம் இசுலாம் அல்லது கீழைக் கிறிஸ்தவம். அவர்களது பண்பாடு உறுதியாக மேலைப் பண்பாடு இல்லை.

பாலஸ்தீனியர்கள் கஷ்டங்களுக்கு உள்ளான போதி லும் பைத்தியம் பிடிக்கும் அளவிற்குக் கொடூரமான

www.padippakam.com



காலங்களைச் சந்திக்க வேண்டியிருந்ததெனினும் அவர்கள் அழிந்து விடவில்லை. இடைக்காலத் தோல்விகளின்போது அரற்றி அழியவுமில்லை; பாலஸ்தீனியர்களாக வாழ்வதிலிருந்து பின்வாங்கவுமில்லை. இஸ்ரேலை விட்டு அகலாமல் அங்கேயே இருந்தவர்கள், இஸ்ரேலிலிருந்த முற்போக்கு இயக்கங்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு பாலஸ்தீனியப் பண்பாட்டையும் மரபுகளையும் எதிர்ப்புக்கிடையே வளர்க்க முயன்றார்கள். இஸ்ரேலை விட்டு வெளியேறிவர்களோ அரபு உலகில் நாசரிசத்தோடு இணைந்துகொண்டார்கள்; 'பாசிஸ்டு'களாகவோ, பொதுவுடைமையாளர்களாகவோ மாறினர்; அல்லது தலைமறைவாகி பாலஸ்தீனிய விடுதலை அமைப்புக் களைத் தொடங்கினர். இவை அரபு அரசுகளுடனும் இஸ்ரேலுடனும் ஒரே சமயத்தில் சண்டையிட நேர்ந்தது. 1948க்குப் பிந்திய பாலஸ்தீனிய இலக்கியம் 1960 களில் மெல்ல மெல்லத் தோன்றிவளரலாயிற்று. **மஹமுத்தார்வீஷ், காசன் களா:பானி, ஜப்ரா ஜப்ரா, காமி அல் காசிம்** மற்றும் பலர் முன்னோடிகளாக விளங்கினர். ஜூன் 67 போருக்குப் பிந்திய மாபெரும் மக்கள் எழுச்சிகளின் ஆழத்தை இப்போதுதான் நாம் காணத் தொடங்குகிறோம். 1967 என்பது பாலஸ்தீனியர்களைப் பொறுத்த மட்டில் இஸ்ரேலியர்கள் மேற்குக் கரையையும் காசாவையும் வென்றதையே—வரலாற்று ரீதியான பாலஸ்தீனம் முழுவதையும் இழந்ததையே—குறிக்கிறது. எனினும் பாலஸ்தீன தேசிய இயக்கத்தின் எழுச்சியை 1967 விரைந்து தூண்டியது. தவிரவும் பண்பாடு மற்றும் சித்தாந்தத் துறைகளில் முழு வளர்ச்சி பெற்ற பாலஸ்தீனிய விவாதத்தைத் தொடங்கி விட்டது 1964இல் பாலஸ்தீன விடுதலை இயக்கம் (P.L.O. பா.வி.இ ) நிறுவப்பட்டது. இது பிராந்திய/பன்னாட்டு அரசியலில் ஒரு பாரிய சக்தியாக 1967க்குப் பிறகு கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது **(ஜோர்டான், லெபனான்** போன்ற) ஆதரவு அரசுகளுடனும்கூட மோதல் தொடங்கிய பின்பு உள்நாட்டுப் போர், அழிவு, ஆத்திரம்

www.padippakam.com



என்கிற ஒரு சோகப் பாரம்பரியத்தை பா.வி.இ. கொண்டிருந்த போதும் பல்வேறு வகைகளில் சிதறுண்டு கிடந்த பாலஸ்தீனியர்களை வரலாற்றில் முதன் முதலாக ஒன்றிணைக்கும் பணியைஅது செய்துமுடித்தது. 1974இல் நடந்த ராபாத் அரபு உச்ச மாநாட்டில் பா.வி.இ. மட்டுமே பாலஸ்தீனியர்களின் சட்டப்பூர்வமான பிரதிநிதி என அறிவிக்கப்பட்டது. மேலும் பதினைந்து ஆண்டுகள் சீரழிந்து சின்னாபின்னப்பட்ட பிறகு மக்களின் ஒப்புதலையும் முன் எப்போதும் கண்டிராத ஆதரவையும் வென்றெடுத்தது. இன்று அமெரிக்கா, இஸ்ரேல் தவிர உலகெங்கிலுமுள்ள நூற்றுக்கு மேற்பட்ட அரசு பா.வி.இ.யை அங்கீகரித்துள்ளன.

ஜூன் 67 சண்டை 1973 அக்டோபர் சண்டைக்கு வழி வகுத்தது. கேம்ப் டேவிட் ஒப்பந்தங்களுக்கும் (1979), லெபனான் ஒப்பந்தங்களுக்கும் (1979; 82) வழி வகுத்தது. முதல் உலகப் போருக்குப் பின் காலனியப் பேரரசுகள் உருவாக்கிய இரண்டு அரசு அமைப்புக்களும், மத்திய கிழக்கை ஆள்வதற்கு மேலை நாடுகள் பயன்படுத்திய அரசியலும் சிதைவிற்கோ எல்லைச் சச்சவிற்கோ வழி வகுக்கும் என்ற 1967இன் எச்சரிக்கையை ஈரானில் நடந்த இசுலாமியப் புரட்சியும் ஈரான்-ஈராக் போரும் நிறுவின இசுலாமிய ஈரானும் யூதவெறி இஸ்ரேலும் தேசியங்கடந்த வல்லரசுகளாக வளர்ந்து விட்டன. அவை மேலைநாட்டுப் பொருளாதாரத்தை விரும்பிச் சார்ந்திருந்தன; தனித்தும் செயல்பட்டன. அதேபோல் பாலஸ்தீன இயக்கமும் ஆசிய / ஆப்ரிக்க / லத்தின் அமெரிக்க நாடுகளின் மாபெரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களாக உருவெடுத்த விடுதலைத் தேசியம் என்பதோடு தொடர்புடைய பன்னாட்டுப் பரிமாணத்தையும் பெற்றது. அரபு நாடுகளைப் பொறுத்தமட்டில் பெருமளவில் ஊழல் மிக்க எதேச்சாதிகார ஆட்சிகளைப் பெற்றிருந்தன. அவற்றால் தம் எல்லைகளைக் காத்துக் கொள்ள முடியவில்லை; உள்

படிப்பகம்

www.padippakam.com



நாட்டு மக்களை ஒடுக்குகிற, சனநாயக உரிமைகளைப் பறிக்கிற உள்நாட்டு ராணுவங்களையே அவை நம்பி யுள்ளன. தம் எண்ணெய் வள வருவாயையோ, சரியும் மூலவளங்களையோ சரியாகக் கையாள முடியவில்லை. அமெரிக்கச் சார்பில் ஊன்றி நிற்கின்றன. அமெரிக்காவோ இஸ்ரேலுக்குச் சார்பாக இருக்கிறது.

1967க்கு முன்னால் இஸ்ரேலும் அதன் ஆதரவாளர் களும் தம் முன்னேற்றத்துக்குத் தற்செயலாக நேர்ந்த முட்டுக்கட்டைகளில் ஒன்றாகப் பாலஸ்தீனியர்களை ஒதுக்கித் தள்ள முடிந்தது. 1967க்குப் பிறகு அதிகார பூர்வ இஸ்ரேலிய மற்றும் யூதவெறி மறுப்புக்கள் என்பன அறிவுத்துறை அயோக்கியத்தனங்களாகவும் திருத்தி யெழுதப்பட்ட வரலாறுகளாகவும் வடிவெடுத்து முழங்கு கின்றன. இவை எதார்த்தத்திற்குப் புறம்பான போலிக ளாகவே உள்ளன. இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர் களுக்கும் இறுதியாக நடந்த மோதல் ஒரே நேரத்தில் இரண்டு மட்டங்களில் நடந்தது. அடிப்படையில் இது காலனியத்திற்கும் தேசிய ஆயுத எழுச்சிக்கும் இடையிலான போட்டியாக உள்ளது. இரண்டாவது மட்டம்; சித்தாந்த/ அரசியல்/ பண்பாட்டுச் சொற்களில் சொல்வதானால் பொருளியல் சார்பு, காலனிய ஆக்ரமிப்பு, அதிகரித்து வரும் இராணுவ மயமாக்கல் ஆகிய முடிவில்லாப் பிரச் சினைகளில் புதைந்து போன ஒரு இயக்கத்திற்கும் எல்லா வகைகளிலும் விழிப்புணர்வு பெற்றுத் தன் சொந்த வரலாற்றை அறிந்து கொண்டுள்ள எண்ணற்ற மூன்றாம் உலக விடுதலை இயக்கங்களுடன் நேரடியாக இணைப் புற்று வளர்ந்து வரும் புரட்சிகர அமைப்பிற்குமிடையே யான போராட்டமாகவும் உள்ளது.

இந்த அடிப்படையை மாற்றிக்கொள்ளாமலேயே நான் தயக்கத்தோடு இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒட்டுமொத்தமான மோதற் சூழலின்

படிப்பகம்

www.padippakam.com



கொடுமையையும் மீறி 1967க்குப் பிறகு சகவாழ்வு குறித்த மனிதாய மாதிரிகளைத் தட்டுத் தடுமாறித் தேடிய சிந்தனைமிக்க சில இஸ்ரேலியரும் பாலஸ்தீனியரும் இணைந்தனர். தொடக்க காலக் காலனியவாதிகளைப் போலவே யூதவெறியர்களும் நடந்து கொண்ட போதிலும் இஸ்ரேலியர்கள் வெள்ளை ஆப்பிரிக்கரோ இல்லை பிரெஞ்சு அல்ஜிரியர்களோ அல்லர் என்பதைப் பலர் புரிந்து கொண்டனர். இஸ்ரேல் என்பது ஒரு உண்மையான சமூகத்தின் ஒரு உண்மையான அரசு. இருதரப்பு மக்களும் ஒரே நிலப் பரப்பிற்காகத்தான் பயங்கரமான போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் திட்டமிட்ட பயங்கரமான ஒடுக்கு முறைக்கும் அழித்தொழிப்பிற்கும் ஆளாகியிருந்த ஓர் இனம் இப் போது மற்ற தரப்பு மக்களை ஒடுக்கும் நிலையில் உள்ளது. இம்மக்களின் ஒருங்கிணைவையும் விரக்தியையும் இந்த ஒடுக்குதல் துரிதப்படுத்தியிருக்கிறது. பாலஸ்தீனியர் மற்றும் இஸ்ரேலியர்களின் ஒரு தலைமுறை முழுவதுமே ராணுவ ஆக்ரமிப்பை மட்டுமே அறிந்துள்ளனர் என்பதையும் நாடற்ற பாலஸ்தீனியர்களைப் பொறுத்தமட்டில் நாடற்ற அகதி வாழ்வுக் கொடுமைகளையும் பகைவர்களின் கொலைகார நோக்கை மட்டுமே அறிந்தவர்களாக உள்ளனர் என்பதையும் எண்ணிப் பாருங்கள்

## II

மேலைநாட்டுச் கலாச்சாரச் சொல்லாடலில் ஆதிக்கம் செலுத்துகிற யூதவாத நோக்கினைச் சற்று விவரமாய்ப் பார்த்தோம். அதே நேரத்தில் இத்தகைய போலித்தனமான சொற்புரட்டல்களுக்கும் அறிவுத்துறை அயோக்கியத் தனங்களுக்கெதிரான ஊக்கமுள்ள பாலஸ்தீன எதிர்ப்பு வளர்ந்து வருவதையும் சுட்டிக்காட்ட வேண்டும். அதிகாரபூர்வமான யூதவாத நிறுவனங்களுக்கும் அதிகார பூர்வமற்ற யூதவாத நடைமுறைக்குமிடை

www.padippakam.com



யேயுள்ள வேறுபாடுகளை முதலில் குறிப்பிட்டாக வேண்டும். 1980 களின் மத்தியில் தோன்றிய டாம் செகோவ், பென்னி மோரிஸ் போன்ற சில இளம் இஸ்ரேலியத் திரிபுவாத வரலாற்றாசிரியர்கள் யூதவாதிகளாக இருந்தபோதிலும் அவர்களது படைப்புகள் கடந்த காலத்தை அறிய வேண்டுமென்ற மெய்யான ஆர்வத்தோடு செய்யப்பட்டவை. பொய் சொல்லவும் கடந்த காலத்தை மறைக்கவும் விரும்பாமல் 1948இன் பயங்கரங்கள் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். ஆனால்நிறுவனமயமாகிவிட்ட அவர்களது சக வரலாற்றாசிரியர்கள் பழைய மயக்கத்துடனேயே எழுதுகின்றார்கள். தம்மை எதிர்த்தால் பாலஸ்தீனியர்கள் பயங்கரவாதிகள், இல்லாவிட்டால் அவர்கள் எடுபிடிகள்.? 1948ன் பழைய கற்பிதங்களை எப்படியும் காப்பாற்றுவது அவர்களது நோக்கம்.

இதைவிட அதிகமாகக் கவனத்தில் படுவது அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய யூதர்களுக்கிடையிலான சொல்லாடல்களிலுள்ள முரண்பாடு தான். அமெரிக்க யூதவாதிகளிடையே உள்ளதைக் காட்டிலும் அதிகமான விவாதங்களும் கலந்துரையாடல் சுதந்திரங்களும் இஸ்ரேலியர்களிடம் உள்ளது. அமெரிக்கர்கள் வெட்கங்கெட்ட முறையில் இஸ்ரேலைப் பொய்யாய்ப் புகழ்ந்து தள்ளுகிறார்கள். 1980களில் ரீகனின் ஆட்சிக்காலத்தில் உலகெங்கிலும் உள்ள சர்வாதிகார அரசுகளுக்கும் வலதுசாரி ஆயுதக் கிளர்ச்சிக் காரர்களுக்கும் இழிவான முறையில் உதவிகளைச் செய்தனர். அமெரிக்க யூதவாதிகள் வலது எல்லையில் நின்று இஸ்ரேலை ஆதரித்தனர்.

1970களின் மத்தியில் அமெரிக்க யூதவாத இஸ்ரேலிய ஆதரவாளர்கள் அமெரிக்க அரசியலரங்கில் ஒழுங்கமைக்கப்பட்டு பிரமாதமான செயல் தந்திரத்துடன் வெளிப்பட்டனர். அமெரிக்க காங்கிரசில் சட்டங்கள் இயற்றும் நடைமுறையிலேயே இவர்களால் செல்வாக்குச் செலுத்த-

www.padippakam.com



முடிந்தது. செனட்டிலும் காங்கிரசிலு மிருந்த முக்கிய புள்ளிகள் பலரும் **கிரான்ஸ்ஸடன், இனௌவை, ஸ்பெக்டர், கேஸ்டன், லீஹி, சான்போர்டு, ஃபாசல், லெவின் ஒபெ, ஃபெய்கான், ஓல்ப்** போன்றோர் 'யூத பொது விவகாரக் குழு'விடமிருந்து நிதியூதவி பெற்றவர்கள். கென்னடி, மொய்னிஹான், டி, அமெட்டோ, டாட், கேலார்ஸ், கூமோ, பிடென், கெம்ப்டோல் போன்றோர் முழுமையாக வலதுசாரி யூத வாதிகளோடு தொடர்புடையவர்கள். இஸ்ரேல் செய்வதை யெல்லாம் நியாய மென ஆதரிப்பவர்கள்; ஆனால் உலகில் வேறெங்காவது இத்தகைய ஆக்கிரமிப்பு நடந்தால் அதனைத் தாக்குபவர்கள். ஜஸ்ஸி ஜாக்சன் மற்றும் சில விரல்விட்டு எண்ணக் கூடிய நேர்மையான கறுப்பு அதிகாரிகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

சிவில் சமூகத்திலும் இது குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது. 1967க்குப் பின் இந்த யூத ஆதரவுக் குழுவினர் தமது செயல்பாட்டை அதிகரிக்க அதிகரிக்க எதிர்ப்புகளும் அதிகரித்தன 'அமெரிக்க இஸ்ரேலிய பொது விவகாரக்குழு', 'அவதூறு எதிர்ப்பு அணி' போன்ற அமைப்புக்கள் அமெரிக்கப் பொது வாழ்வில் இஸ்ரேல் மீது தோன்றும் மாற்றுக் கருத்தை நசுக்க எவ்வளவு முயன்றனவோ அவ்வளவுக்கு எதிர்ப்புகளும் தோன்றின. கருத்துகளையும் விவாதங்களையும் கட்டுப் படுத்தும் யூதவாத அமைப்புகளின் முயற்சிகளின் மீதான முன்னோடி ஆய்வு நூல் ஆல்ப்ரெடு லிலியன்தால் எழுதிய 'யூதத் தொடர்' என்பதாகும் (1978). இஸ்ரேல் ஒரு குற்றங்குறையற்ற லட்சிய அரசு என்கிற கருத்துக்கு எதிரான சிந்தனைகள் எதையும் வெளிப்படுத்த விடாதபடி பதிப்பகங்கள், இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி முதலியவை எவ்வாறு தடுக்கப்பட்டன என்பதை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியது இந்நூல். லிலியன் தாலுடைய நூல் உண்மையான பெயர்களையும் விபரங்

www.padippakam.com



களையும் சுட்டிக்காட்டியபோதும் பெரிய பத்திரிகைகள் அதனைப் புறக்கணித்தன. எனினும் லிலியன்தால் புறக் கணிக்கப்பட்டதைக் கண்டு மற்றவர்கள் அஞ்சி எழுது வதை நிறுத்தவில்லை. அப்படி எழுதுவோருடைய எண் ணிக்கை கணிசமான அளவில்அதிகரித்துள்ளது. சமீபத்தில் வெளிவந்துள்ள இரு குறிப்பிடத்தக்க நூல்கள், நோம் சோம்ஸ்கியின் The Fateful Triangle' (1983) மற்றும் பால் ஃபின்ட்லேயின் 'அவர்கள் பேசத் துணிந்தனர்' (198?).

இஸ்ரேலிய ஆதரவாளர்கள் விமர்சிப்பவர்கள், உருவாக்கப்பட்ட கற்பிதங்களைக் கட்டவிழ்ப்பதைத் தம் முதற் பணியாகவும் பின்னர் உண்மை ஆதாரங்களை எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு நடுநிலையாக முன் வைப்பதையும் மேற்கொள்கிறார்கள். பாலஸ்தீனத்தைப் பற்றிய எதுவும் நிருபணங்கள், மறுப்புக்கள், எதிர்ப்புக் கள் இல்லாமல் அமெரிக்க சிவில் சமூகத்தில் பரவ முடி யாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். பாலஸ்தீனிய வரலாற்றைச் சொல்வது கூட சகிக்க முடியாததாகவும் திருப்பித் திருப்பி அழுத்திச் சொல்லப் பட வேண்டியதாகவும் மாறிவிடுகிறது. பாலஸ்தின அடை யாளம் குறித்த கருத்தாக்கத்திற்கு எதிரான கடுமையான தாக்குதலுக்குச் சிறந்த உதாரணம் **ஜோன் பீட்டர்** எழுதிய 'நினைவுக் கெட்டாத காலத்திலிருந்து' என்ற நூல். இந்நூல் அமெரிக்காவில் வெகுவாகப் பாராட்டப்பட்ட தெனினும் இஸ்ரேலில் சீந்துவாரில்லை. பாலஸ்தீனியர் உண்மையில் அக்கம் பக்கத்து அரபு நாடுகளைச் சேர்ந்த வர்கள்; யூத நாட்டின் செழுமையால் கவரப்பட்டு 1946-48 காலகட்டத்தில் பாலஸ்தீனத்திற்கு வந்தனர் என்பது **பீட்டரின்** வாதம். 'யூத புத்தக சங்கத்தால்' பரிசளிக்கப் பட்ட இந்நூல் மகத்தான வரலாற்றுச் சாதனை என **பார்பாராடச்மேன்** போன்ற தொழில்முறை வரலாற்றாசி ரியர்களாலும் **சால்பெல்லோ** போன்ற முக்கிய பிரமுகர்

தே—13

www.padippakam.com



களாலும் தூக்கிப் பிடிக்கப்படுகிறது. அப்புத்தகத்தில் திரிக்கப்பட்ட புள்ளி விவரங்களும் மிகுந்துள்ளன என நிறுவப்பட்ட பின்னரும் கூட இவ்வாறு போற்றப் பட்டது.

பீட்டரின் நூலும் சரி பயங்கரவாதம் பற்றி வந்துள்ள இதர நூல்களும் சரி லெபனானை இஸ்ரேல் ஆக்ர மித்ததை (1982)யே வரலாற்று மூலமாகக் கொள்கின்றன. பெய்ரூட் முற்றுகையின் கொடுமைகளை தொலைக் காட்சி செய்திகள் தோலுரித்துக் காட்டியதால் முதல் முறையாக இஸ்ரேலும் அதன் ஆதரவாளர்களும் அதிர்ச்சி யடைந்தனர். தொடர்ச்சியாக சபராவிலும் ஷாட்டில்லா விலும் நடந்த படுகொலைகள், அமெரிக்க லெபனான் கொள்கையில் ஏற்பட்ட படிப்படியான முறிவு, வியக்கத் தக்க வகையில் பாலஸ்தீனியர்கள் சூழலுக்கு ஏற்ப மாறிக் கொண்டமை, பெகின் தோல்வி அடைந்தது ஆகிய அனைத்தும் யூத வெறி அமைப்புகளின் அரசியல் மற்றும் பண்பாட்டு அத்துமீறல்களைக் கிளறிவிட்டன. யாருடைய விமர்சனங்கள் அதிகக் கவனம் பெறுகின் றனவோ அவர்களை எதிரிகளின் பட்டியலில் வைத்து AIPAC/ADL போன்ற யூத வெறி அமைப்புகள் சிறு நூல்களை வெளியிட்டுள்ளன. லெபனான் போரைப் பற்றிய செய்தி அளிப்பில் செமிட்டிக் எதிர்ப்புக் குரல் ஒலிப்பதாக வாஷிங்டன் போஸ்ட், என். பி. சி போன்ற செய்தி நிறுவனங்களை யூத வெறிக்குழுக்கள் தாக்கின. யூத வெறிப் பிரச்சாரங்களில் இரண்டு அம்சங்கள் முன் னிலைப்படுத்தப்பட்டன. முதலாவது, இஸ்ரேலை விமர் சிப்பதென்பது செமிட்டிக் எதிர்ப்பு வளர்வதன் வெளிப் பாடே. மற்றது, இஸ்ரேலை ஆயுதங்கள் தாங்கியோ இல்லை பண்பாட்டு முனையிலோ எதிர்ப்பது சாராம் சத்தில் பயங்கரவாதமின்றி வேறில்லை.

ஆனால் யூதவெறி அமைப்புகளின் வாய்ச் சவடால் களை நம்புகிற கூட்டத்தின் அளவு குறைந்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



தென்னாப்பிரிக்காவுடனும், **ஷாவின்** ஈரானுடனும், **சோமேசாவின்** நிகரகுவாவுடனும் மூன்றாவது உலகிலுள்ள ஒவ்வொரு பிற்போக்கான ஆட்சியுடனும் உளவாடுகிற அமெரிக்காவுடன் சேர்ந்து ஒதுக்கப்படவேண்டிய சர்வதேசியத் தீண்டத்தகாத நாடாகவே இஸ்ரேல் இன்று கருதப்படுகிறது. இஸ்ரேலை ஆதரிப்பதில் முற்போக்காக இருப்பதாகக் காட்டிக் கொள்பவர்கள் வேறெப்போதைக் காட்டிலும் இப்போது அதிகமாக இஸ்ரேலின் நல்ல குறிக்கோள்களைப் பற்றிய புனைவுகளைக் காப்பாற்றுவதற்காக அதிகம் கத்தித் தீர்க்க வேண்டியிருக்கிறது. **மிசேல் வால்சர்** போன்றோர் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இதர நாட்டு ஒடுக்குமுறைகளை எதிர்த்துக் கொண்டே இஸ்ரேலில் அவை கையாளப்படும்போது அவற்றை ஆதரிப்பது இவர்களது நடவடிக்கையாக இருக்கிறது.

பயங்கரவாதம், மதஆர்வம் ஆகியவற்றைக் கையாள்வதிலும் இதைப்போன்ற நெளிவு சுளிவே மேற்கொள்ளப்படுகிறது. இஸ்ரேல் வெளிப்படையாகவே மதக் கருத்துகளின் அடிப்படையில் ஆளப்படுகிற ஒரு அரசு. இசுலாமிய அடிப்படைவாதத்தைத் தாக்கிக் கொண்டே யூத மத அடிப்படை வாதத்தை மன்னிப்பது மேற்குறிப்பிட்டோரின் செயல் தந்திரமாகியுள்ளது. **ரபிகானே** இவர்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. 'பயங்கரவாதம்' என்பதையும் ஒரு வாய்ப்பான கருவியாக அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். 'லெமோன்டே டிப்ளமாட்டிக்' இதழில் எழுதும் போது (பிப்,85) **அம்னோன் கெப்லியோக்** குறிப்பிடுவதாவது : பாலஸ்தீனியத் தேசியம் 1970களின் நடுவில் வட்டார அளவிலும் பன்னாட்டளவிலும் நம்பிக்கையைப் பெற்றது. அப்போது இஸ்ரேலிய அதிகாரிகள் நன்கு தெரிந்தே அதனைப் 'பயங்கரவாதம்' என வகைப்படுத்தும் கொள்கையை மேற்கொண்டனர். அங்கே குற்றவன்முறை நிலவியதென்பதையோ அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பது கடும்

www.padippakam.com



குற்றம் என்பதையோ யாரும் மறுக்க மாட்டார்கள். பிரச்சினை என்னவெனில் வலியோரைக் காப்பாற்றும் அரசியல் ஆயுதமாகப் 'பயங்கரவாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி அப்பாவி மக்கள் மீது அதிகாரபூர்வமான ராணுவ நடவடிக்கையைச் சட்டப்பூர்வமாக்குவதே யாகும். (முன்னாள் பயங்கரவாதிகளான **பெகின், ஷாமிர்** போன்றோர் இன்று இஸ்ரேலை ஆளுகின்றனர் என்கிற உண்மை நினைவிலிருந்து துடைத் தழிக்கப்படுகிறது.) 'நியூயார்க் டைம்ஸ்' இதழில் (1987 ஜூலை 11) **ஸ்டீபன் எங்கெல் பெர்க்** எழுதிய செய்தி குறிப்பிடத் தக்கது **பெஞ்சமின் ரோட்டான்யாகு** பயங்கரவாதம்பற்றித் தொகுத்துள்ள நூல் (1985) தம்மீது அதிகம் தாக்கம் செலுத்தியுள்ளதாக அதிபர் ரீகன் சொன்னது அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நூலில் 'பயங்கரவாதம்' என்பது இசுலாம், பாலஸ்தீனியர்கள் மற்றும் கே ஜி.பி-யுடன் தொடர்புப் படுத்தப்பட்டுள்ளது. காங்கிரசின் ஒப்புதலைக்கூடப் பெறாமல் எப்படி இதர அதிபர்கள் பாலஸ்தீனியர்களுக்கெதிரான தன் மூப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்ற விவரங்களும் அந் நூலில் உள்ளன.

இஸ்ரேலின் யூதவாதக் கொள்கை எதிர்ப்பாளர்களின் விமர்சன நூல்களைப் பற்றி இப்போது காணலாம். அமெரிக்க மற்றும் மேற்கு நாட்டுச் சொல்லாடல்களில் ஆதரவு பெற்று வரும் யூதவாத நோக்கு நிலையை பாலஸ்தீனர்கள் எப்போதுமே எதிர்த்து வந்துள்ளனர். இந்த எதிர்ப்பு அதிக அளவில் வெளியே தெரியாதிருந்திருக்கலாம், ஆனால் யூத வாதத்தின் குருட்டுத்தனம், சித்தாந்த பல வீனம், வெட்கங்கெட்ட பொய்மையாக்கம் ஆகியவற்றிற்கெதிரான பாலஸ்தீனியரின் தாக்குதல் அதிகரித்துக் கொண்டே வந்தது. இங்கே நாம் அறிவுத்துறையையும் கவர்ச்சி வாதத்தையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். மத்திய கிழக்கு குறித்த மேலை அறிவுத்துறை குறிப்பாக

www.padippakam.com



அமெரிக்க அறிவுத்துறை எழுத்துக்கள் என்பன, பிராந்திய அரசியலில் ஒரு பகுதியாகவே இருந்து வந்துள்ளன. இன்று மையக் கிழக்கின் ஏதாவது ஒரு அம்சத்தைப் பற்றி ஆராய் பவர்கள் எல்லோருமாக இல்லாவிட்டாலும் பலர் யூத-பாலஸ்தினச் சச்சரவால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ள னர். பெரும்பாலான மரபுவழி கீழைத்தேயவியலா ளர்கள் யூதவாத நோக்கால் கவரப்படுகிறார்கள். இஸ்ரே லிய ராணுவ ஆக்ரமிப்பின் அரபு அதிகாரிகள் இஸ்ரேல் மற்றும் மேலை நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் கீழைத் தேயத் துறையில் பயின்றவர்களாக உள்ளனர். எனவே பாலஸ்தீனியர்களுக்கு அனுதாபம் காட்டுகிற அராபியர்களின் மனித உரிமைகளை மதிக்கிற நூல்களும் கட்டுரைகளும் மேலை நாட்டில் மிகவும் அபூர்வமாகும். சில விதிவிலக்குகள் சொல்வதானால் வரலாற்றாசிரியர்கள் **திபாவி, ஆல்பர்ட் அவ்ராணி** (இங்கிலாந்து, **பிலிப்இட்டி** (அமெரிக்கா) ஆகியோரது படைப்புகளைக் குறிப்பிட **லாம்.**

1967க்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டன. அரபி யில் எழுதப்பட்ட மூலாதாரங்கள் திடீரென இலண்டன், பாரிஸ் அல்லது நியூயார்க்கில் கிடைக்கத் தொடங்கின வா என்கிற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். ஒரு அரபுக் கவிஞரோ, புதின ஆசிரியரோ தனது படைப்பை ஆங்கி லத்தில் மொழி பெயர்ப்பது இன்னும் கடினமாகவே இருக் கிறது. பெரும்பான்மையான மேலை வெளியீட்டா ளர்கள் அரபியை ஒரு 'பிரச்சினைக்குரிய' மொழியாகவே கருதுகின்றனர். அரபி அறிவுத்துறை மற்றும் இதழியல் துறைப் 'படைப்புகளும்' இவ்வாறே ஒதுக்கப்படுகிறது. 1967க்கு முன்பு பாலஸ்தீனியர்கள் பற்றிய சில படைப் புக்கள் மட்டுமே ஆங்கிலத்தில் கிடைத்தன. பாலஸ்தீனிய விவாதத்தின் மையமாகிய 1948 நிகழ்வுகள் குறித்த அராபியக் கண்ணோட்டத்திலான நூல்கள் மேலை ஆவணக் காப்பகங்களில் எளிதில் கிடைப்பதில்லை.

www.padippakam.com



எனினும் 1967க்கு முன் அதிகம் பயன்படுத்தப்படாத சில நல்ல நூல்களும் கட்டுரைகளும் இருக்கத்தான் செய்தன. எடுத்துக் காட்டாக **ஜார்ஜ் அன்டோனியஸ்** எழுதிய 'அரபின் விழிப்பு', சாமி ஹடாவி எழுதிய 'கசந்த அறுவடை' ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம். 1967க்குப் பின் எழுதப்பட்ட சிறந்த புலமைத் தெளிவுள்ள இரண்டு நூல்களையும் சுட்டலாம். அவை: **இப்ரஹீம் அப்லுவோத்** தொகுத்தளித்த '1967ன் அரபு - இஸ்ரேலிய தகராறு' (1967). இரண்டாவது: பலர் சுவைபடத் தொகுத்த 'பாலஸ்தீனிய உருமாற்றம்' (1971).

1967க்குப் பின் அரபு மற்றும் பாலஸ்தீனியக் கண்ணோட்டத்தை மேலை நாட்டுப் பண்பாட்டில் மேலும் அதிகமாகக் கொண்டு செல்வது என வெளிப்படையாக அறிவித்துக் கொண்ட பல அரபு - அமெரிக்க அமைப்புகள் உருவாயின. இதனால் அரபிலும் ஹீப்ருவிலிருந்தும் மொழியாக்கப்பட்ட மூல நூல்கள் இறுதியாக வெளிவரத் தொடங்கின. இஸ்ரேலியர்களால் அதுவரை அமுக்கி வைக்கப்பட்டிருந்த பல நூல்கள் அப்போது வெளிவரத் தொடங்கின. இதர வகைகளிலும் கருத்து மாறுபாடுள்ள மரபு மீறியப் படிப்பாளிகள் ஒருவருக்கொருவர் சந்திக்கவும் பேசவும் களம் அமைத்துக் கொடுத்தது போலாயிற்று. 'அரபு அமெரிக்கப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் சங்கம்' என்பது அவற்றில் தலையாயது. இவை மேலை நாடுகளிலிருந்து நாடற்ற அராபியர்களை அமைப்பாக்கி, அராபியர்களையும் பாலஸ்தீனர்களையும் முதன் முதலாக மதச்சார்பற்ற வரலாற்றுப் பாத்திரங்களாக மேலை நாடுகளில் சித்தரிக்கும் அறிவுததுறை மற்றும் வெகுமக்கள் படைப்புக்களை ஆதரிக்க உதவின. இம் முயற்சிகளின் விளைவாக **மஹ்முத் தர்விஷ், எமில்ஹபீபி, தௌபிக் சையத், காசன் கனாஃப்னி, எமில் தௌமா, சாக்கர்கலிஃபே, சாடெக் அல் அசம், எலியாஸ் கௌரி** மற்றும் பல பாலஸ்தீனிய மற்றும் அரபு எழுத்தாளர்களின் தலைமுறையொன்று

www.padippakam.com



மேற்கில் அறிமுகமானது. அரபு ஆய்வுக் காலாண்டிதழ், பாலஸ்தீன ஆய்விதழ், AAGV செய்தி மடல், MERIP அறிக்கைகள், மையக் கிழக்குஆய்வுகள், கஜெல் (இங்கிலாந்து), தி லிங்க்-இவையெல்லாம் யூத வாதத்தைப் பொதுவாக விமர்சனம் செய்பவைகளில் ஒரு சில. இவை அரபு மற்றும் பாலஸ்தீன எதார்த்தங்களின் மீதான புதிய நேர்மறையான விமர்சனப் படைப்புகளுக்கான மேடைகளாக விளங்கின. மேலும் **ஜீடா மேகூனலைப் பின்பற்றி எல்மர் பெர்கர், இஸ்ரேல் ஷஹாக், நோம் சோமஸ்கி, மாக்சிம் ரோடின்சன் விவியா ரோகாச், அய். எம். ஸ்டோன்** போன்ற யூதவாதத்திற்கெதிரான யூதர்களின் மாபெரும் விமர்சன முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இவர்களில் பலர் அரபு முயற்சிகளால் மேலை நாடுகளிலிருந்து ஆய்வுகள் மேற்கொள்ள உதவியளிக்கப் பட்டவர்கள். அதுவரை யூத ஆவணக் காப்பகத்தில் வெளியே தெரியாமலிருந்த ஆவணங்கள் பற்றிய ஆய்வுகள் பல தகவல்களை வெட்ட வெளிச்சமாக்கின. யூதவாதத்தின் கள்ளங் கபடமின்மை பற்றிய புனைவுகளைத் தகர்த்தெறிந்தன.

ஒரு கட்டத்தில் இந்த ஆய்வுகள் விவாதங்களை எதிர்கொள்ள நேர்ந்தன. 'மறுபக்கத்துடன் விவாதத்திலீடுபடலாம் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. பாலஸ்தீன விடுதலை இயக்கம் பெய்ரூட்டில் ஒரு வலிய தளத்தைப் பெற்றிருந்த வரையிலும், பாலஸ்தீனப் பிரச்சினையானது மையக் கிழக்கு நாடுகளின் எதிர்காலம் பற்றி மேலை நாடுகளில் நடைபெற்ற கொள்கை விவாதங்களின் மையமாக இருந்த வரையிலும் இந்த விவாதங்கள் தேவைப்பட்டதெனலாம். 1982இல் ஈரான்-ஈராக் போர் தொடங்கியது முதல், ரீகன் தலைமை ஏற்று அமெரிக்காவிற்கு மிகவும் பிடித்த கொள்கை இலக்காகப் 'பயங்கரவாதம்' நிறுவப்பட்ட பிறகு இந்த விவாதங்களில் ஒரு பின்னடைவு நேர்ந்தது. விவாதங்கள் புறக்கணிக்கப்பட்டன. உரையாடல்கள் தடை செய்யப்பட்டன.

www.padippakam.com



'பாலஸ்தீனிய தேசிய ஒப்பந்தம்' அல்லது 'பாலஸ்தீனியத் தேசியக் குழுவின் தீர்மானங்கள்' ஆகியவற்றை வரிக்கு வரி அலசி ஆராய்வதை ஒரு காலத்தில் யூத அமைப்புகள் ஊக்குவித்தன. இப்போதோ பாலஸ்தீனியர்களுடன் தவிர்க்க இயலாமல்அறிவுத்துறை விவாதங்களில் ஈடுபட்ட போதெல்லாம் 'பாலஸ்தீனியப் பயங்கரவாத அமைப்பு' என்பன போன்ற முழக்கங்களால் அவை எதிர்கொள்ளப் பட்டன. விவாதத்திற்குப் பதிலளிக்க முடியாத போதும் உண்மைத் தகவல்களை மறுதலிக்க இயலாத போதும் 'அவன் ஒரு பாலஸ்தீனியன், அல்லது சொந்த இனத் தையே வெறுக்கும் யூதன்' என்பது போன்ற அவரது சிறுபான்மை இன அடையாளத்தையோ 'அவன் ஒரு வெளிப்படையான இடதுசாரி' என்பது போன்ற அவரது அரசியல் அடையாளத்தையோ தாக்குகின்றனர்.

காலனியத்திற்குப் பிந்திய தலைமுறையின் சாதனை களை மறுதலித்து அராபிய உலகம் எவ்வாறு குறுங் குழுவாதம் மற்றும் பிராந்திய தேசிய வெறியில் வழுக்கி விழுந்தார்கள் என்பதைச் சொல்லாமல் 1982க்குப் பிந்திய விவரணம் முழுமையடையாது. பன்னாட்டரங்கில் அரபு உலகம் கலகலத்துக் கிடக்கிறது. பல அரசுகள் முது கெலும்பற்ற கோழைகளாய் அமெரிக்காவிற்கு அடங்கி நடக்கின்றன. எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக நிகர குவாவின் **கோண்ட்**ராக்குகளுக்கு சவூதி நிதியளிப்பதைக் குறிப்பிடலாம். பெரும்பாலான அரபு ஆட்சிகள் அரபு ஒற்றுமை என்ற கருத்தையே சுத்தமாக விட்டுவிட்டன. இதனால் பாலஸ்தீனத்திற்குப் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுவிட்டன. சில சமயங்களில் அவை பாலஸ்தீனத் திற்கு எதிராகவே நடவடிக்கையும் எடுத்துள்ளன (எகிப்து, ஜோர்டான், டுனிசியா, மொராக்கோ). இன்னுஞ் சில நாடுகள் இஸ்ரேலுடனும் மத வலதுசாரி களுடனும் நேரடியாகக் கைகோர்த்துக் கொண்டுள்ளன. பாலஸ்தீனிய அராபிய தேசிய வாதத்திற்கும் அராபிய

www.padippakam.com



அரசுகளின் பிராந்திய வாதத்திற்கு மிடையேயான நெருக்கடி என்பது 1982க்குப் பின்பு அதிகமாகியுள்ளது என்றே நினைக்கிறேன். ஒரு சிறுஎடுத்துக்காட்டு: 1983இல் அய்.நா. அவையின் திட்டப்படி தொகுக்கப்பட்ட 'பாலஸ் தீனிய மக்கள்' என்கிற கட்டுரை பல அரபு நாடுகளால் எதிர்த்துத் தடுக்கப்பட்டது. ஏனெனில் அக்கட்டுரையில் மேற்குக்கரை மற்றும் காசா பகுதியையும் தாண்டி பாலஸ்தீனியர்கள் பகுதி குறிக்கப்பட்டுள்ளதாம்!

ஆனால் பாலஸ்தீன வாழ்க்கையின் சிக்கலான எதார்த்தங்களை இன்று உலகம் தவிர்க்க இயலாமல் ஏற்றுக் கொண்டுள்ளது. அதிகாரபூர்வ இஸ்ரேலிய நிலை தர்மசங்கடத்திற்குள்ளாகியுள்ளது. பனிப்போரும் மறு உருவாக்கம் செய்யப்பட்டக் கருத்தியலும் பன்னோக்கிலான பதிலிகளைச் சிந்தனைக்குப் படைத்துள்ளது. எனினும் இவை எல்லோரது வழியையும் அடைத்து விடவில்லை ஒரு புதிய தலைமுறை அறிஞர்கள் பொருத்த மான மொழிகளைக் கற்றனர்; பிரதிகளை வாசித்தனர்; மத்திய கிழக்கு அராபிய மக்களைப் பற்றி ஆர்வங் காட்டினர். கீழை வரட்டுக் கோட்பாடுகள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் கடுமையாகத் தாக்கப்பட்டன. புதிய விமர்சன முறைகளும் அவற்றை ஒட்டிய அரசியல் அணுகு முறைகளும் 'அராபிய மனம்', 'இசுலாமிய சமூகம்' போன்ற வெட்டி வெற்றுரைகளைத் தகர்த்தெறிந்து விட்டன. மார்க்சியம், பெண்ணிலை வாதம், பொருள் கோலியல் (hermeneutics), கட்டவிழ்ப்பு, கலாச்சாரக் கொள்கை ஆகியவை பழையனவற்றைக் காலத்திற் கொவ்வாதவையாக்கி விட்டன. மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளில் நவீன கட்டமைப்புக்கள் தோன்றலாயின. இறுதியாக அறிவிற்கும் அதிகாரத்திற்கு மிடையேயான இணைவு என்பது எதிர்கொண்டு ஆராயப் படவேண்டிய ஒன்று என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



எழுச்சியூட்டும் இச் சூழலில் பாலஸ்தீனியப் பிரச்சினைதான் மையமாக இருந்தது. உதாரணத்திற்கு ஒன்று: அமுக்கப்பட்ட கதையாடல்கள்' மற்றும் சட்ட விரோதமாக்கப்பட்ட விளிம்பு மக்களின் கண்டெடுக்கப் பட்ட வரலாறு பற்றிய பொது விவாதமாகக் கோட்பாட்டுத்தளம் ஆனபோது பொது விவாதத்திற்கும் அதனுடைய ஒரு எடுத்துக்காட்டிற்கும் இடையேயான நேரடியான உறவைப் பலரும் சுட்டிக்காட்டினர். இவ்வாறு கோண்ட்ராக்களை எதிர்த்து சாண்டினிஸ்டாக் களை ஆதரித்தோரும், அணு ஆயுதப் பரவலுக்கு எதிராக வும் ஆயுதக் குறைப்புக்கு ஆதரவாகவும் அணி திரட்டிய வர்களும் தென்னாப்பிரிக்காவிற்குப் பொருளாதாரத் தடைவிதிக்கக் கோரியவர்களும் பாலஸ்தீனியப் பிரச் சினையில் அமைதி காப்பதில் தர்மசங்கடத்திற்குள்ளா யினர்.

இவ்வாறாக இது தொடர்பான கவனமான விவாதம் மெல்லத் தொடங்கலாயிற்று. எதிர் நிறுவன மையங் களாகவும் எதிர்ப்பு வடிவங்களாகவும் அவை வெளிப் பட்டன பல்கலைக்கழக மேடைகள், கோவில் அரங்குகள், பிரக்ஞைபூர்வமான எதிர் நிறுவன வெளியீடுகள் ஆகியவை இதற்குப் பயன்படுத்தப்பட்டன. மைய நீரோட்ட தொடர்புச் சாதனங்களிலும் அதிகாரப் பூர்வமான பண்பாட்டுத் தளங்களிலும் சாத்திய மில்லாதபோது இத்தகைய மேடைகளைப் பயன் படுத்துவது அவசியமாயிற்று. நான் முன்பே சொன்னபடி பாலஸ்தீனியர்களுக்கு அவர்களது வரலாற்றை மீட்டுத் தருவது என்பது இந்நடவடிக்கைகளின் முக்கியக் குவி மையங்களிலொன்றாக இருந்தது இந்த அற்புதமான அறிவுத்துறைச் சாதனையின் இன்னும் ஒரு முக்கியமான குறைபாடு இருக்கிறது. இத்தகைய சொல்லாடல்களில் அராபிய ஆதாரங்கள் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாக உள்ளதே அக்குறைபாடாகும். 1948க்கு முன்னும் பின்னும்

www.padippakam.com



பற்றிய எண்ணற்ற தரமான ஆவணச் சான்றுகளும் இலக்கிய ஆதாரங்களும் கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஏராளமாகப் பல்கியுள்ளன. பாலஸ்தீன ஆராய்ச்சி மையம் என்றும் ஒன்று உள்ளது. அங்கிருந்த பழைய ஆவணங்கள் எல்லாம் இஸ்ரேலியப் படையினரால் கொண்டு செல்லப்பட்டு (1982 செப்.) பின்னர் திருப்பித் தரப்பட்டன. அம் மையம் 1948க்கு முந்திய பாலஸ்தீன சமூகம் பற்றிய சகல துறைத் தரவுகளையும் திரட்டித் தொகுத்துள்ளது. **'ஷுன் பாலஸ்தீனியா'** என்கிற அதன் இதழ் பாலஸ்தீனிய வரலாற்றில் பல்வேறு பாத்திரங்களை மேற்கொண்டவர்களது செழுமையான பேட்டிகள், நினைவலைகள், வாய்மொழிச் சான்றுகள் போன்றவற்றைத் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளது. அரபியிலுள்ள இத்தகவல்களில் மிகமிகச் சில பகுதியே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலை நாட்டுச் சான்றுகளை மட்டுமே நம்பத் தகுந்த ஆதாரங்களாகக் கருதுகிற இப்போதைய ஆய்வு முறைகளை நாம் கேள்வி கேட்கவேண்டியுள்ளது.

ஒரு மிகப் பரந்த அளவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறிப்பிடத் தக்கவை. 19ஆம் நூற்றாண்டுப் பிற்பகுதி அரபு-பாலஸ்தீனம் பற்றி இப்போது மிகவும் அதிகமாகத் தெரிந்துள்ளது. **ஆட்டோமன், பிரிட்டிஷ்** மற்றும் யூத ஆவணங்களைத் திறம்படப் பயன்படுத்தியதன் மூலம் பாலஸ்தீனத்தில் செழுமையானதும் ஒப்பீட்டளவில் அரசியல் மையப்படுத்தப்பட்டதுமான ஒரு சமுதாயம் இருந்ததை உறுதி செய்ய முடிகிறது. யூதவாதத்துடனான மோதலின் விளைவாகவே பாலஸ்தீன தேசம் உருவாக்கப் பட்டது என்கிற பழைய கருத்து நீண்ட காலமாகவே அமுக்கப்பட்டுவிட்டது. அதுபோலவே பாலஸ்தீனிய அடையாளம் என்பது ஆட்டோமன் பேரரசின் ஒரு கூறு தானேயொழிய வேறொன்றுமில்லை என்கிற கருத்தும் நொறுக்கப்பட்டுவிட்டது. பாலஸ்தீனியப் பிரச்சினை

www.padippakam.com



என்பது அராபிய அரசுகள் தங்கள் நலனுக்காக எழுப்புகிற ஒரு முழக்கம்தான் என்கிற ஒரு கருத்திற்கு மாறாக அராபிய உலகில் பாலஸ்தீன பிரச்சினை எப்போதுமே முக்கியமாகத்தான் இருந்திருக்கிறது என்பதை வெளிப் படுத்துகிற வகையிலும் நல்ல ஆராய்ச்சிகள் நடந் துள்ளன. உண்மையில் பாலஸ்தீனப் பிரச்சினை என்பது வலுவற்ற அரசுகளின் மீது அவற்றின் விருப்பத்திற்கு மாறாகக் கீழிருந்து மக்கள் கொடுத்த அழுத்தத்தின் விளை வாகத் திணிக்கப்பட்ட மக்கள் பிரச்சினையாகும். யூத வாதிகள் குடியேறுவதற்கு முன்பே பல தலைமுறைகளாக பெரும்பான்மை அரபுக் குடியிருப்புக்கள் தொடர்ந்து இருந்து வந்ததும் இவ்வாராய்ச்சிகளால் நிறுவப் பட்டுள்ளன.

மேற்கு நாட்டு மையங்கள் குறித்து ஆய்வுகளையும் பாலஸ்தீனியர் முன் முயற்சி எடுத்து மேற்கொண்டிருப் பதும் குறிப்பிடத்தக்கதாகும். வாஷிங்டனிலுள்ள 'பாலஸ் தீன ஆராய்ச்சி நிலையம்' **லீலு பிரியன்** எழுதியுள்ள கனமான நூலொன்றை வெளியிட்டுள்ளது. அமெரிக்க யூத அமைப்புகளை அது நுட்பமாக ஆராய்கிறது. அவ்வாறே வாஷிங்டனிலுள்ள 'ஆராய்ச்சி மற்றும் பொதுக் கொள்கை பற்றிய பன்னாட்டு மையம்' பாலஸ் தீனச் சிக்கல் பற்றியும், இஸ்ரேலிய அராபியம் பற்றியும், இஸ்ரேலிய அரசு பயங்கரவாதம் பற்றியும் அரிய ஆராய்ச்சித் தொடர்களை வெளியிட்டுள்ளது. பாலஸ் தீனியர்கள் பற்றி மேலும் மேலும் தெரியத் தெரிய இஸ்ரேலைப் பற்றியும் மென் மேலும் புதிய செய்திகள் வெளிக்கொணரப்படுகின்றன. **ஜேன் ஹன்டரின்** மாதாந் திர வெளியீடான 'இஸ்ரேலிய வெளியுறவுகள்' என்பதும் அவைகளில் ஒன்று. **சிமச்சா ஃப்ளாப்பின்** 'இஸ்ரேலின் பிறப்பு புனைவுகளும் உண்மைகளும்' என்னும் நூலும் (1987) **பெஞ்சமின் பெய்ட்- அல்லாமியின்** 'இஸ்ரேலியத் தொடர்பு' என்னும் நூலும் சமகால வரலாறு குறித்த முக்கிய நூல்கள்.

www.padippakam.com



இன்னும் பெருமளவில் பணி காத்திருக்கிறது. மேற்குக் கரையையும் காசாவையும் இஸ்ரேல் ஆக்ரமித்து இருபதாண்டுகளாகிவிட்டன. அவற்றை விடுவிப்பதற்கு அதிக அளவு முயற்சிகளை இடைவிடாது செய்ய வேண்டும். நாம் நினைவில் பதிக்க வேண்டியது இது தான்: **காலனியம் நிறுவியுள்ள 'உண்மை' உட்பட எதுவும் மாற்றப்பட்ட முடியாத தல்ல.** பல இஸ்ரேலியர் மற்றும் அவர்களுடைய மேலை நாட்டு ஆதரவாளர்களின் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் குறித்த உற்சாக மூட்டும் அறிகுறிகள் இப்போது தென்படுகின்றன. அராபியர்களும் யூதர்களும் ஒரே சமுதாயமாய் இணைந்து வாழ்வதற்கான அரசியல் மற்றும் அமைப்பு வேலைகளை 1974 முதற்கொண்டே பாலஸ்தீனியர் செய்து வருகின்றனர். தொடர்ந்த ராணுவ மயமாக்கல், முடிவற்ற போர் ஆகியவற்றிற்கு எதிராக மேற்குறித்த கருத்தின் நியாயத்தை மேலும் மேலும் அதிக யூத வாதிகளும் கண்டுணரத் தொடங்கியுள்ளனர். இரு இனத் தாரும் இணைந்து செய்கிற அரசியல் மற்றும் அறிவுத் துறைப் பணிகள் மேலும் அதிகமாக வேண்டும்.

**—நிறப்பிரிகை–3,**

**ஏப்ரல் 1991.**

www.padippakam.com

# 8. காஸா:
# 'இது கலகமல்ல - ஒரு போர்'

— மக்ரம்கூரி மகூல்

(ஹாயிர்-Ha'ir- 18.12.87 இதழில் வெளிவந்த இக்கட்டுரையின் ஆங்கில மொழிபெயர்ப்பு Race & Class (Spring 1988) இதழில் வெளிவந்தது. ஆங்கில மொழிபெயர்ப்பு: இஸ்ரேல்ஷஹாக், சுருக்கித் தமிழில் தருவது: **சாருநிவேதிதா**)

ஹாயிர் பத்திரிகையின் நிருபரான **மக்ரம் கூரி மகூல்** காஸாவுக்குச் சென்று அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை நேரில் அறிந்து வந்திருப்பவர். அங்குச் சென்றிருந்தபோது துப்பாக்கிச் சூட்டினிடையே சிக்கிக் கொண்டு முகத்தில் காயமடைந்தார். அங்கு நடந்த 'கலவரங்களின்' தலைவர்களுள் ஒருவரைச் சந்தித்தார். இதே தினத்தன்று தான் இஸ்ரேலின் முன்னால் பாதுகாப்பு அமைச்சரான **ஷரோன்** ஜெரூசலத்தில் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதியில் தான் காட்டிய புதிய வீட்டை ஹனுக்கா (Hanukka) மெழுகுவர்த்தி ஏற்றி சமர்ப்பணம் செய்தார். காஸாவில் நடந்தது (நடப்பது) என்ன என்பது பற்றி இங்கே விவரிக்கிறார் **மக்ரம கூரி மகூல்:**

ஒரு நீண்ட கதை. முடிவு தெரியாத ஒரு நீண்ட கதை. காஸா போகும் டாக்ஸிக்காக ஜாஃபா ஸ்டேஷனில் நான் நின்று கொண்டிருந்த போது துவங்கியது அந்தக்

www.padippakam.com



கதை. முழுசாக ஒரு மணி நேரம் காத்திருந்தும் ஒரு டாக்ஸியைக் கூட பார்க்க முடியவில்லை. ஜாஃபாவில் மாட்டிக் கொண்டுவிட்ட காஸாவைச் சேர்ந்த டாக்ஸி டிரைவர் ஒருவர் என்னை அழைத்துப்போக மிகவும் தயங்கினார். நாங்கள் காஸாவை நோக்கி போய்க் கொண்டிருந்தபோது கூட அங்கே போவதைப் பற்றி தயக்கத்துடனேதான் பேசிக்கொண்டு வந்தார்: 'இன்றைக்கு காஸாவுக்குப் போவது அவ்வளவு சரியென்று தோன்றவில்லை. எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் ஒன்றே ஒன்றுதான்: இஸ்ரேலின் அரபிப்பிரிவு வானொலி, ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைதி நிலவுகிறது என்ற சொன்னால் அங்கே நிலைமை சரியில்லை என்று அர்த்தம்.'

நான், பெய்ட் ஹானூனில் (காஸா ஸ்ட்ரிப்)இறங்கிக் கொண்ட போது காலை மணி ஒன்பதைக் கடந்திருந்தது. காஸாவில் நான் சந்திக்க வேண்டிய தலைவரைக் காண்ப தற்கு இன்னும் ஒரு மணி நேரம் இருந்தது. தெருக்கள் காலியாகக் கிடந்தன. சற்று நேரத்திற்குப்பிறகு மூன்று ராணுவ ஜீப்புகளை சாலையின் ஒரு பக்கத்தில் பார்த்தேன். அந்த ஜீப்புகளின் அருகாமையில் நின்றுகொண்டிருந்த பத்துக்கு மேற்பட்ட சிப்பாய்கள் பக்கவாட்டுத் தெருக்களை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். அந்த சிப்பாய்களைத் தாண்டி நடந்து கொண்டேயிருந்த நான் கடைசியில் யாரும் சொந்தங்கொண்டாட முடியாத ஒரு பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தேன். ஒரு பக்கத்திலிருந்து மொலட்டோவ் காக்டெயில்ஸையும் (Molotov Cocktails) கற்களையும் வீசிக்கொண்டு நூற்றுக்கணக்கான ஆர்ப் பாட்டக்காரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். எனக்குப் பின்னாலிருந்து இஸ்ரேலிய சிப்பாய்கள் ஆர்பாட்டக் காரர்களை நோக்கி சுட்டுக் கொண்டிருந்தனர். சிப்பாய் கள் தமக்கு முன்னால் இருப்பவர்களை நோக்கி நேருக்கு நேராகச் சுட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.-

படிப்பகம்

www.padippakam.com



காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும் தோட்டக்களின் சப்தத்தை என்னால் கேட்க முடிந்தது. அங்கிருந்து எப்படி வெளியேறுவது என்று நான் யோசிப்பதற்குள்ளாகவே ஒரு தோட்டா என் முகத்தைத் தாக்கியது. நான் வலியை உணரவில்லை. ஒரு பாட்டில் ரத்தத்தை என் தலையின் மீது யாரே ஊற்றிவிட்டது போல் தோற்றமளித்தேன். என் பையிலிருந்து கஃப்ஃவியாவை (Keffiyeh-அராபியர் தலைக்கு அணிந்து கொள்ளும் கைக்குட்டை) எடுத்து தலையைச் சுற்றி கட்டிக் கொண்டேன். இதற்கிடையில், துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்த இடத்தைவிட்டு விலகி வந்துவிட்டேன். அப்போது அந்த வழியாகச் சென்று கொண்டிருந்த டாக்ஸி ஒன்று என்னை காஸாவிலுள்ள எல்-ஷிஃபா மருத்துவமனையில் கொண்டு சேர்த்தது. போகும் வழியெல்லாம் துப்பாக்கிச் சூட்டின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

ஆபரேஷன் அறையிலிருந்து மருத்துவமனை முற்றத்திற்கு வந்தேன். காயமடைந்தத் தனது நண்பர்களைக் காணவரும் இளைஞர் களை அங்கு நின்று கொண்டிருந்த ஏழு இஸ்ரேலிய சிப்பாய்கள் கைது செய்து கொண்டிருந்தார்கள். இவ்வளவுக்குப் பிறகும் நான் அந்தச் சந்திப்பை சாத்தியமாக்கும் ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன். அந்தச் சந்திப்பின் போது மற்றொருவர் என்னை வந்து பார்த்து அதன் பிறகே தலைவரிடம் அழைத்துச் சென்றார்.

அவருடைய பெயரோ அல்லது அவரைப்பற்றிய வேறு எந்த விவரங்களோ எனக்குத் தெரிவிக்கப்படமாட்டாது என்பதுதான் சந்திப்புக்கான நிபந்தனை. பிறகு நான் அவரை அவரது செயல் களத்தில்—ராணுவத்திற்கெதிராக ஆயிரக்கணக்கான மக்களைத் தலைமையேற்றுச் செல்வதையும், உத்தரவுகளைக் கொடுத்துக் கொண்டும், புதிய தகவல்களைப் பெற்றுக் கொண்டும் இருந்ததையும்

www.padippakam.com



பார்த்தேன். இரண்டுமுறை இஸ்ரேலிய சிப்பாய்கள் பின் வாங்கிச் சென்றார்கள். மிகச்சரியான இலக்கண சுத்த மான அரபி பேசியதோடு, ஹீப்ருமொழியிலும் நன்றாகப் பேசினார் அவர். தகவல்களோடும், புள்ளிவிவரங் ளோடும், மிகவும் தீர்க்கமாகப் பேசினார். காஸா ஸ்ட்ரிப்பில் நடந்து கொண்டிருப்பவைகளைப் பற்றிய அப் போதைக்கப்போதைய தகவல்களை ஒவ்வொரு முப்பது நிமிடங்களுக்கும் ஒருமுறை அவரது தோழர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேயிருந்தார். அவரைச் சுற்றியிருந்த ஐந்துபேர் அவரிடம் தகவல்களைத் தந்து கொண்டிருந் தனர்.

காஸாவின் அராபியர்கள் அவருடன் என்னைப் பார்த்தபோது நான் அங்கே என்ன செய்து கொண்டிருக் கிறேன் என்று கேட்டார்கள். இதுபற்றி தலைவர் சொன்னார்: 'அந்நியப் பத்திரிக்கைகளை நம்பக் கூடா தென்று எங்கள் மக்களுக்கு நாங்கள் சொல்லியிருக் கிறோம். ஏனென்றால் அந்நியப் பத்திரிக்கைகளுக்குப் பின்னால் நின்று கொண்டிருப்பவர்கள் காஸாவைக் கைப் பற்ற நினைக்கும் ஆக்கிரமிப்பாளர்களும் ராணுவமும் தான்!'' இப்படிப்பட்ட நிலையிலும் அவர் ''முற்போக் கான யூதப் பத்திரிகையாளர்கள்தான் இஸ்ரேலின் தலை சிறந்த மிகச்சரியான பத்திரிக்கையாளர்கள்'' என்று குறிப்பிட்டார்.

என் முகத்திலிருந்த கட்டு சில சந்தேகங்களை நீக்க உதவியது. 'இவையெல்லாம் உண்மையில் ஆர்ப்பாட்டங் கள் அல்ல; கலகம் அல்ல' என்று சொல்லிய தலைவர் மேலும் விளக்கினார். 'இது ஒரு போர்'. ஒரு நாளின் இரு பத்து நான்கு மணி நேரங்களிலும் நடந்து கொண்டிருக் கும் ஒரு போர். நாங்கள் முறைவைத்துக் கொண்டு இரவு பகலாக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். துப்பாக்



படிப்பகம்

www.padippakam.com



கிக் குண்டுகளை எதிர்கொள்ள வேண்டியது இளைஞர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பணி. அவர்களும் அதில் தயக்கம் காட்டுவதில்லை. ராணுவத்தின் பிரதான வழியை அவர்கள் இப்படி அடைத்து விடுகிறார்கள். இப்படி நடப்பது வரலாற்றில் இதுதான் முதல் முறை. காஸாவின் முகாம்களுக்குச் சென்று அவர்கள் செய்ய வேண்டியவைகளைப் பற்றிய விவரங்களைத் தருகிறேன். சிறுவர்கள் மட்டுமல்லாமல் அத்தனைபேரும் எல்லா வயதினரும்-இந்தப் போரில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதோ ஒரு பெண்—ஐம்பத்தைத்து வயதான பெண், போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு சிப்பாய்களால் அடித்து நொறுக்கப்பட்டாள். ஆனாலும் இவர்கள் பயந்துவிடவில்லை. காஸாவிலுள்ள தொண்ணூறு சதவிகித மக்களுக்கு யாருடைய தூண்டுதலும் தேவையில்லை. ஆக்கிரமிப்பின் கீழும், அடக்கு முறையின் கீழும் வாழும் ஒருவரைத் தூண்டிவிட வேற்று மனிதர் ஒருவர் தேவையில்லை.

''உங்களுக்குப் பயமில்லையா?''

''நாங்கள் எதைப் பற்றியும் பயப்படக் கூடாது. யாராவது இறந்துபோனால் சடலத்தை ராணுவமே எடுத்துக் கொண்டு பிறகு இரவில் மட்டுமே இறுதிச் சடங்கிற்கு அனுமதி தருவதன் மூலம் பிரச்சினையை அமுக்கி விடலாம் என்று நினைக்கிறார்கள் ஆக்கிரமிப்பாளர்கள். ஆனால் அந்த நிலையையெல்லாம் நாங்கள் எப்போதோ தாண்டியாகிவிட்டது. இப்போதைய புதிய முறை என்னவென்றால்—சடலங்களை நாங்கள் மருத்துவமனையிலிருந்தே கடத்திக் கொண்டு வந்து புதைத்து விடுகிறோம். இது வெளித் தூண்டுதல் இல்லாத இயல்பானதொரு ஆர்ப்பாட்டத்திற்கு வழிவகுத்து விடுகிறது. சடலங்களை ராணுவத்திடம் ஒப்படைக்கக் கூடாதென்று மருத்துவர்களை நாங்கள் தடுத்திருக்கிறோம். எப்படியிருந்தாலும் நிலைமை அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் இல்லை.''

படிப்பகம்

www.padippakam.com



6,50,000 மக்கள் தொகை கொண்ட காஸாவில் 47000 பேரை இதுவரை இஸ்ரேலிய அதிகாரிகள் கைது செய்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட ஒவ்வொருவருமே இப்போது தலைவர்கள்தான். அவர்களைத் தலைவர்களாக மாற்றியிருப்பது சிறை. நாங்கள் மக்களது உணர்வை அரசியல் நிதியாக்குகிறோம். அதை அவர்கள் விரும்புகிறார்கள். ஏனென்றால் அது அவர்களுக்குத் தேவையாயிருக்கிறது. இதையெல்லாம் சில அந்நிய சக்திகள்தான் தலைமையேற்று நடத்திச் செல்கிறது என்ற பொய்யை நம்பத் தேவையில்லை. இப்போது இந்த மக்கள் சார்ந்திருக்கும் அமைப்புகள்தான் எதிர்காலத்தில் ஒரு அரசை ஸ்தாபிக்கக் கூடிய அரசியல் கட்சிகளாக மாறப் போகின்றன. இந்த அமைப்புகள் எதையும் சாராத மக்கள் கூட எமது பொதுவான போராட்டத்தில் பங்கேற்றுக் கொண்டு தானிருக்கிறார்கள்.

''சுதந்திரமான செயல்பாடுகளுக்குக் காஸா புகழ் பெற்றிருப்பதற்கான காரணம், ஒரு வேளை இதுவாகத் தானிருக்கக் கூடும். அறுபதுகளின் இறுதியில் பாலஸ்தீனிய அமைப்புகளின் போர்வையில் தலைமறைவு இயக்கங்கள் இயங்கி வந்தபோது வெளியிலுள்ள தலைமையுடன் அவர்கள் தொடர்புகொண்டிருந்தாலும் கூட அதைக் கட்டிக் காப்பதென்னவோ மிகவும் சிரமமானதாகத்தான் இருந்தது. இயக்கம் பற்றி காஸாவிலேயே முடிவு செய்யப்பட்டு ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் மக்கள் பொதுவாகத் தாங்களாகவே தருவித்துக் கொண்டார்கள். சமீப காலமாக ஆயுதமேந்திய குழுக்களுக்கும் 'அரசியல் ரீதியானவை' எனக் கருதப்படும் செயலாளிகளுக்கும் இடையிலான வித்தியாசத்தில் அவர்கள் கவனமாக இருக்கிறார்கள். எந்தச் சமயத்திலும் ஆர்ப்பாட்டங்களின்போது ராணுவத்திற்கெதிராக ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதில்லை; ஏனென்றால் அது ஒரு பயங்கரமான ரத்தக்களரியில் நம்மை மூழ்கடித்துக் சொள்ளும் நிலைக்கே இட்டுச் செல்லும்.''

படிப்பகம்

www.padippakam.com



இந்த வரையறையை அந்தந்தப் பகுதி தலைவர்களே வகுத்துக் கொள்கிறார்கள். "ஒவ்வொரு பகுதியும் அந்தந்தப் பகுதியில் பிரபலமான முக்கிய தலைவர்களைக் கொண்டுள்ளது. சிறந்த அரசியல் உணர்வு கொண்டிருக்கும் இந்த மக்களை அவர் அதிக மன மாற்றம் செய்ய வேண்டிய அவசியமிருக்காது. அதையெல்லாம் அந்தந்தச சூழ்நிலையே செய்து முடித்து விடுகிறது. அவர் செய்ய வேண்டியதெல்லாம் குறிப்பை உணர்த்த வேண்டியது தான். பெரிய பகுதிகளில் இரண்டு அல்லது மூன்று தலை வர்கள் இருப்பார்கள். கைது செய்யப்படுகிறவர்கள் ஏதேனும் ஒரு அரசியல் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். மாறாக அவர்கள் ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களாக மட்டுமே இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு குறிப்பிட்ட தருணத்தில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யக் கூடிய ஒரு ஒருங்கிணைந்த மக்கள் திரளை ஒவ்வொரு தலைவரும் உருவாக்குகிறார்கள். உண்மையில் இஸ்ரேலிய ராணுவம் எங்களுக்குத் தேவை. ராணுவம் இல்லாவிட்டால் நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தமாட்டோம், எப்படியாவது மோதலை உண்டாக்குவதற்கு இங்கு ராணுவம் தேவை."

மருத்துவமனையை அடுத்து ஒரு பகுதி இருந்தது. அங்கே சென்ற தலைவர் வாசலில் தனது தோழர்கள் பலரை நிறுத்தி வைத்து விட்டு மைக் மூலம் தனது மக்களை அழைக்கிறார். பெய்ட் ஹனூனைச் சேர்ந்த இளைஞனின் மரணச் செய்தி பரவி நூற்றுக்கணக்கான மக்கள் மருத்துவமனையை நோக்கி வருகிறார்கள். ஒரு மணி நேரத்தில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பதின்மூன்று பேர் கொண்டுவரப்படுகிறார்கள்.

கிழக்குத் திசையிலிருந்த கட்டிடமொன்றின் உச்சியில் நின்று கொண்டிருந்த ஒரு இளைஞனை நோக்கி சிப்பாய்கள் சுட ஆரம்பிக்கின்றனர். குண்டு மழையிலிருந்து

www.padippakam.com



தப்பிக்க எண்ணி அவன் முற்றத்தில் குதிக்கிறான். சிப்பாய்கள் மருத்துவமனையினுள் நுழைகிறார்கள். அந்த இளைஞன் தப்பிக்க நினைத்து ஓட ஆரம்பித்த போது அவனுக்கு நேர் எதிரே ஒரு சிப்பாய் வந்து சேர் கிறான். இளைஞன் ஓடுவதை நிறுத்திவிட்டுச் சிப்பாய்க்கு எதிரே நின்று தன் சட்டையைக் கழற்றித் தன் வெற்று மார்பைக் காட்டி 'சுடு' என்று கத்துகிறான். நாற்பது அடி தூரத்திலிருந்து அந்த சிப்பாய் தன் துப்பாக்கியால் அந்த இளைஞனின் நெஞ்சுக்கு நேராகக் குறிபார்த்து சுடுகிறான்.

ஒவ்வொரு சாயமடைந்த மனிதருக்கும் அல்லது ஒவ்வொரு சடலத்திற்கும் இன்னும் நூற்றுக் கணக்கில் மக்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள். மருத்துவமனை யில் அவர்கள் மொலட்டோவ் காக்டெயில்ஸைத் (Molotov Cocktails) தயாரிக்க ஆரம்பித்தார்கள். ஒரு சிறுவன், தரையில் கிடந்த பெரியபாட்டில் ஒன்றை எடுத்து தன் பாக்கெட்டுக்குள்ளிருந்த கந்தல் துணி மற்றும் டர்பன் டைன் அடங்கிய ஒரு சிறிய பிளாஸ்டிக் பாட்டிலை அந்தப் பெரிய பாட்டிலுக்குள் போட்டு மூடி, அதைப் பற்றவைத்து தூக்கி எறிந்ததைப் பார்த்தேன். முற்றத் திற்குள் வீசப்பட்டதும் அங்குக் கிடந்த டயர்கள் பற்றி எரிய ஆரம்பித்தன. தலைவர் அதையும் என்னிடம் சொல்லியிருந்தார். கற்கள் மற்றும் மொலட்டோவ் காக்டெயில்ஸ் (Molotov cocktails) தவிர அவர்கள் பழங் கால முறை ஒன்றையும் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந் தார்கள்–தாவீதைப் போல ஒரு கல்லும் ஒரு கவணும்

மருத்துவமனைக்கு மிக அருகாமையில் வந்து விட்டி ருந்த சிப்பாய்கள் எரிந்து கொண்டிருக்கும் டயர்களுக்கும், மறுபக்கம் அவர்களைச் சூழ்ந்து வளைக்க ஆரம்பித்து விட்ட நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மிடையே மாட்டிக் கொண்டார்கள். தப்பிக்கவும் முயற்சி

படிப்பகம்

www.padippakam.com



செய்தார்கள். ஆனால் அவர்களுள் ஒருவனை ஆர்ப்பாட்டக்காரர்கள் பிடித்துவிட்டனர். அவனுடைய நணபர்கள் அனைவரும் தப்பி விட்டனர். பிடிக்கப்பட்ட சிப்பாயை ஆடைகளைக் களையச் செய்தனர். அவனுடைய கோட்டும் பையும் மற்றும் அவனுடைய எல்லா பொருட்களும் அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்தனைக்கும் அவர்கள் அவனைத் தொடவே இல்லை. வெறும் கிழிந்து போன கால் சராயுடன் அவன் விடுவிக்கப்பட்டான். அவர்கள் அவனைக் கொன்றிருக்க முடியும். அவர்கள் அவனது பையைத் திறந்து கைக்குண்டுகள் எங்கே என்ற கேட்டனர். அவனுடைய வெடி மருந்துகளையும் குண்டுகளையும் ஒரு கையில் வைத்துக்கொண்டு, மற்றொரு கையால் V என்ற வெற்றிக் குறியைக் காட்டிக்கொண்டு நடனமாட ஆரம்பித்து விட்டார்கள். அந்த சிப்பாயின் கோட்டின் மீதும் சட்டையின் மீதும் ஏறி மிதிக்க ஆரம்பித்தார்கள். நான் அவர்கள் எதைக் கொண்டாடுகிறார்கள் என்று கேட்டபோது ‘ஆக்கிரமிப்புக்கு நாங்கள் கொடுக்கும் மிகப் பெரிய அவமானம் இது’ என்று சொன்னார்கள்.

என் காயம் திரும்பவும் பிரச்சினையை தர ஆரம்பித்து விட்டது. மருத்துவர்கள் என்னிடம் ஓடி வந்து சிகிச்சை அளிக்க ஆரம்பித்தார்கள். தலையில் காயமடைந்த மற்றொரு ஆள் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டார். சற்று நேரத்தில் அவர் இறந்து போனார். அவருடைய சடலம் ரகசியமாக எடுத்துச் செல்லப்பட்டது. மருத்துவமனை முற்றத்தில் மீண்டும் சிப்பாய்கள் நுழைந்தார்கள். கட்டிடத்திற்குள் துப்பாக்கிச் சூடு நடப்பதைக் கேட்க முடிந்தது. கட்டடத்தில் மக்கள் தங்களுக்குள் தாங்களாகவே மனித வேலிகளை அமைத்துக் கொண்டார்கள். பலர் காயமடைந்து வீழ்ந்தார்கள். யாரையும் யாரும் கவனிக்க இப்போது நேரமில்லை. துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்தும்கூட

www.padippakam.com



பெண்கள் வெளியே வந்து காயமடைந்தவர்களை எடுத்துச் சென்று கவனிக்கும்படி கத்தினார் தலைவர். ஒவ்வொரு காயமடைந்தவருக்காகவும் ரத்தம் தர இருபது பேர் படுகாயத்துடன் கொண்டு வரப்பட்டார்கள்—அதில் ஒருவர் மாலை ஏழு மணி அளவில் இறந்து விட்டார்.

மாலை நான்கு மணிக்கு ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டது. இருள் கவியத் தொடங்கியது. மின் இணைப்பை ராணுவம் துண்டித்துவிட மக்கள் மெழுகு வர்த்திகளை ஏற்றினார்கள். ஜெருசலத்தின் முஸ்லீம்கள் வசிக்கும் பகுதியொன்றில் **ஷரோன்** ஒரு ஹனுக்கா மெழுகு வர்த்தியை தனது புதிய வீட்டில் ஏற்றிக்கொண்டிருப்பார்.

வீட்டின் மேல் தளத்தின் மீது ஏறினேன். எல்லா இடங்களிலும் மக்கள் திரண்டு கொண்டிருந்தார்கள். டயர்கள் எரிந்துகொண்டிருந்தன. சிப்பாய்கள் காணாமல் போய்விட்டார்கள். இருட்டுதான் ஆக்கிரமிப்புக்கெதிரான வலுவான ஆயுதம் என்று சொன்னார்கள் இங்குள்ள மக்கள். தெருக்களில் மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டிருந்தார்கள். ஊரடங்கு உத்திரவு என்றால் இப்படித்தான் இருக்கும் போலும்! இங்கிருந்து வெளியேறுவதற்கான வாய்ப்பைத் தேடி, எனது பத்திரிகை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டேன். வெளியே போய்ச் சுற்றிப் பார்த்து விட்டு வந்த இரண்டு பேர் பிரதான சாலை அடைக்கப்பட்டு விட்டதாகச் சொன்னார்கள். தனது இல்லத்திலேயே நான் அந்த இரவைக் கழிக்கலாம் என்று சொன்னார் மருத்துவர். இரவு ஒன்பது மணிக்கு மின் இணைப்பு மீண்டும் தரப்பட்டது. 'இனி தெருக்களில் கற்களின் ராஜ்ஜியம் தான்' என்று என்னை எச்சரித்தார் மருத்துவர். 'இப்போது வெளியே போவது ரொம்பவும் ஆபத்தானது' என்றார் அவர். இருந்தாலும் நான் வெளியே போவதென்றே முடிவு செய்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



நான் காவல் நிலையத்தைச் சென்றடையும் வரை ஒரு கிலோமீட்டர் தூரம் காலியாகக் கிடந்த தெருக்களின் வழியே நடந்தேன். கேட் மூடப்பட்டிருந்தது. போலீஸார் என்னை நோக்கி தங்கள் துப்பாக்கிகளைக் குறி வைத்து, பின்னர் என் அடையாளக் காகிதங்களைப் பரிசோதித்த பிறகே என்னை உள்ளே அனுமதித்தார்கள். என்னை எரஸ் (Erez) சந்திப்பில் கொண்டு விடுவதற்கு ராணுவ வண்டி வந்தபோது, காவல் நிலையத்திலிருந்து கார் நிற்கும் இடம் வரைக்குமான சிறிதளவு தூரத்தைக் கடக்கும் போது எனக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகப் பல போலீஸ்காரர்கள் காவல் நிலையத்தின் மேல்தளத் திற்குச் சென்று நின்று கொண்டார்கள்.

இந்தச் சம்பவங்களெல்லாம் நடந்து கொண்டிருந்த இடத்திலிருந்து பத்து கிலோ மீட்டர் தூரத்திற்கும் குறை வாகவே இருக்கும். எரஸ் (Erez) சந்திப்பில் 'ரிஸர்வ்' சிப்பாய்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். காஸா வில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றும் எப்படி நான் காயமடைந்தேன் என்றும் கேட்டார்கள். ஹீப்ரோன் மற்றும் காஸா குழுவினருக்கிடையேயான கூடைப் பந்தாட்டப்போட்டி ஒன்றுக்கு நடுவராக அழைக் கப்பட்டிருந்தேன் என்றும் அவர்களிடம் சொன்னேன். நடுவரின் மீது கோபமடைந்த கூட்டம் தாக்குதலில் இறங்கி விட்டது என்றும் சொன்னேன். அந்தச் சிப்பாய் களுள் ஒருவன் தானும் ஒரு கூடைப் பந்தாட்டக்காரன் என்றும், கூடைப் பந்தாட்டத்தில் அராபியர்களின் திறமை எப்படியென்றும், போட்டியில் வென்றது யார் என்றும் கேட்டான்.

***—நிறப்பிரிகை–2.***

www.padippakam.com

# 9. டொப்ரிஞ்சா முற்றுகையின் பத்தொன்பதாம் நாள்

**—ஒரு பெயர் தெரியாத போஸ்னிய எழுத்தாளர்**

### டொப்ரிஞ்சா முற்றுகையின் பதினாலாம் நாள்

**ஆதெம் கரிமான்** ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருந்தார். அவர் வசிப்பது ஐந்தாவது மாடியில்; நான் இருப்பது நான்காவது மாடியில். எங்களது சன்னல்களின் வழியாகப் பார்த்தால் **சரயேவோ** விமான நிலையமும் **இக்மான்** மலைகளும் தொலைவில் தெரியும். அந்த மலைகள் தொடர்ந்து நிறம் மாறிக் கொண்டேயிருக்கும். இரவுபகலாக, எப்போதும் அழகாக, **ட்ரெஸ்காவிசா** மலையின் பனி போர்த்திய சிகரம் மூடுபனிக்கூடாக சிலசமயம் தெரியும். ஆதெமுக்கு பனியென்றால் பிரியம். அவருக்கு ஐம்பத்திரெண்டு வயது கடந்த காலத்தில் நடந்துவிட்ட குற்றங்களைத் தடுத்து நிறுத்தப்போகிற ஒரு புத்தகத்தை அவர் எழுத விரும்பினார்.

ஆதெம்கரிமான் என்னமாதிரி மனிதர்? அவர் பிறந்தது சரயேவோவில். அப்படிச் சொல்வது கொஞ்சம் குழப்பக்கூடியதுதான். சரயேவோவில் எப்படி ஒருவர் பிறக்க முடியும்? அவர் நல்ல நிறமாக இருக்கவில்லை. ஆனால், அதுவும்கூட சரியானதல்ல. இப்படிச் சொல்வது பொருத்தமாக இருக்கலாம்: சாம்பல் நிற தலைமுடி; மீசையோ தாடியோ கிடையாது, சாதாரணமான உருவம்; தனியான அடையாளம் எதுவுமில்லை.

www.padippakam.com



மனிதன் என்பவன் இரண்டு கால்கள் உள்ள இறகுகள் இல்லாத ஒரு உயிரி என்று **பிளாட்டோ** சொன்னார். தமாஷாகச் சொன்னால் இந்த விவரிப்பு ஆதெம்கரிமானுக்குப் பொருந்தும். ஆதெமின் உயிர்ப்பு அவரது உடலின் மேல்பகுதியில் தான் இருந்தது. அவரது இதயத்தில், அவரது தலையில். அவருக்கு ஒரு ஆன்மாவும் இருந்தது, அவர் நுட்பமான உணர்வு கொண்டவர், நேர்மையானவர். ஒரு மனிதனை அவன் பேசுவதற்கு முன்பே புரிந்துகொள்ளும் திறமையும், வரப்போகிற தீங்குகளை முன்பே உணர்ந்து கொள்ளும் ஆற்றலும் அவருக்கிருந்தது. தனிமையில் இருக்கும்போது மக்களைப் பற்றிய எண்ணம் ஆதெமைக் கிலி கொள்ளச் செய்யும். எல்லா மிருகங்களுமே ஆதெமுக்கும் புரிந்து கொள்ள முடியாதவை தான். ஆனாலும், அவற்றைக் கவனித்துக் கொண்டிருப்பதில் அவருக்குப் பிரியம். ஆதெம் கரிமான் என்னமாதிரி எழுத்தாளர் என விவரிப்பது ஒரு விதத்தில் எளிதானது: நல்ல எழுத்தாளர், ரொம்ப நல்ல எழுத்தாளர். ஆனால் யாருக்குமே தெரிந்திராத எழுத்தாளர். ஆதெமின் புத்தகத்தில் முதல்வரி இதுதான்; 1942இல் சேத்னிக்குள் ஃபோஸாவைச் சேர்ந்த **ஹாஜிதஹிரோவிச்சின்** முதுகுத்தோலை உரித்தார்கள். அந்தத் தோலை அவனது தலைமேல் இழுத்து மூடிவிட்டு ஒரு சீட்டை அதில் செருகி விட்டுப் போனார்கள். அந்த சீட்டில் இப்படி எழுதியிருந்தது. ''முக்காடு போட்ட முசுலீம் பெண்''.

சேத்னிக்குகள் ஹாஜிதஹிரோவிச்சின் தோலை ஏற்கெனவே உரித்துவிட்ட பிறகு எப்படி அதை ஆதெம்கரிமான் தடுக்கப் போகிறார்?

ஆதெம் அவரது புத்தகத்தை இந்த வருடம் ஏப்ரலில் எழுதத்தொடங்கினார். அதே மாதத்தில்தான் அதுவும் நடந்தது. ஒரு ஆள்— அவரும் புத்தகங்கள் எழுதுபவர் தான். ஒரு பேராசிரியர், அவர் **தபாஸி** என்ற கிராமத்தில்

www.padippakam.com



ஒரு மனிதத்தலையை உதைத்து உருட்டினார், தற்செயலாக, தபாஸியும் ஃபோசாவைச் சுற்றியுள்ள மலைகளில் உள்ள ஒரு ஊர்தான்.

அந்தப் பேராசிரியர் அவராக அந்தத் தலையை உதைக்கவில்லை. போஸ்னிய அரசின் அமைச்சர் ஒருவர் அங்கிருந்தார்— அல்லது, யாரோ ஒருத்தர் ஏதோ ஒரு சமயத்தில் அந்தத் தலையை உதைக்கத்தான் போகிறார்கள்; அதைத் திருப்பி உதைத்து விளையாட இன்னும் யாரோ இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படி உதைத்து விளையாடிய பிறகு அவர்கள் தங்களது ஷூக்களை கழுவிக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். பேன்ட்களை சுருட்டிவிட்டுக் கொண்டிருந்தால் ஆச்சரியம்தான்.

அந்த போஸ்னிய அமைச்சர் உதைத்துப் பேராசிரியர் பக்கம் தள்ளியதும் அவர் திருப்பி உதைத்து அமைச்சர் பக்கம் தள்ளியதுமான அந்த மனிதத்தலை, ஒரு காலத்தில் அந்த கிராமத்தின் விவசாயி ஒருவரது கழுத்தில் இருந்தது. அந்த விவசாயிக்கு ஒரு ஆட்டுமந்தை இருந்தது அவரது ஆடுகளின் செழுமை அந்த வட்டாரத்துக்கே தெரியும் அவர்கள் அவரை நேரடியாக சிரச்சேதம் செய்துவிடவில்லை. முதலில் அவரிடம் பத்து ஆட்டுக்குட்டிகள் கேட்டார்கள். அப்புறம் பிராந்தி கேட்டார்கள். நிறைய பிராந்தி—அப்புறம் முப்பது ஆடுகள் கேட்டார்கள். அவர்கள் எல்லோருமே அந்த விவசாயி வீட்டு மேசைக்கு எதிரே மர பெஞ்சுகளில் வட்டமாக உட்கார்ந்திருந்தார்கள்—அந்த அமைச்சர், அந்த பேராசிரியர் அப்புறம் ஏழு சேத்னிக்குகள். அந்த விவசாயி ஆடுகளைத்தர மறுத்துவிட்டார். அவர்கள் பணம் தருவதாகச் சொன்னார்கள். மறுபடியும் அவர் மறுத்துவிட்டார். ஆகவே, மூன்று சேத்னிக்குகள், அவரது வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்துக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். அங்கேதான் அவரை அவர்கள் கொன்றது.

www.padippakam.com



அதற்கு இன்னொரு காரணமும்கூட இருந்தது; அவர் ஒரு செர்பியர் இல்லை. அந்த **ட்ரினா ஆறு**—அந்த விவசாயி எந்த ஆற்றங்கரையில் வசித்துவந்தாரோ அந்த ட்ரினா ஆறு—செர்பியர்களுக்கு மட்டுமே சொந்தம். **பெல்கிரேடில்** உட்கார்ந்து கொண்டு புத்தகங்கள் எழுதிக் கொண்டிருக்கும் மனிதர்கள் குறைந்தபட்சம் இப்படித் தான் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

**டொப்ரிஞ்சா முற்றுகையின்**

**பதினைந்தாம் நாள் :**

''ஏற்கெனவே நடந்துவிட்ட குற்றங்களை தடுத்து விடலாமென்று எப்படி நினைக்கிறீர்கள்?'' நான் **ஆதெம் கரிமானைக்** கேட்டேன்.

''நான் எழுதத் தொடங்குகிறேனே அந்தப் புத்தகத் தால்'' என்றார் ஆதெம்.

''ஆனால் அது சாத்தியமில்லை.''

''அந்த முதல்வரியை நீ படித்தாயா?''

''ஆமாம், படித்தேன்''

''ஹாஜிதஹிரோவிச்சின் தலைவிதியைப்பற்றி அதைப் படிப்பதற்கு முன்பு உனக்குத் தெரியுமா?''

''இல்லை, எனக்குத் தெரியாது''

''சரி, உனக்கு இப்போது தெரிகிறதா?'

''ஆமாம் தெரிகிறது''

''உனக்கு அவனைப் பார்க்க முடிகிறதா?''

''ஆமாம், பார்க்க முடிகிறது''

''அவனைப் பிணமாகவா பார்க்கிறாய்?''

'இல்லை, அந்தக் கொடூரமான சூழ்நிலையில் உயிரோடுதான் பார்க்கிறேன்.''

www.padippakam.com



''அதுதான்!'' என்றார் ஆதெம். ''இப்போது நான் செய்ய வேண்டியமதெல்லாம் அவனது தோலை உரித்து விடாதபடி அவர்களைத் தடுக்க வேண்டியது, அவ்வளவு தான்''

''ஆனால் எப்படி?''

''அது சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆனால் குறைந்தபட்சம் நான் முயற்சியாவது செய்கிறேன்'' என்றார் ஆதெம் கரிமான்.

அதே நாளில், சேத்னிக்குகள் ரோகாடிஸாவுக்கு மேலேயுள்ள ஒரு கிராமத்தில் புகுந்து அங்கிருந்த ஆண்களையெல்லாம் இழுத்து வந்து ஒரே இடத்தில் நிறுத்தினார்கள். பிறகு அவர்களையெல்லாம் உயிரோடு எரித்துக் கொன்றார்கள்.

**குறிப்புகள் :**

**சேத்னிக் :** படைகளைக் குறிப்பிடப் பயன் படுத்தப் படும் 'சேடா' (CETA) என்ற சொல்லிலிருந்து உருவாக்கப் பட்ட வார்த்தை. சேத்னிக்குகளுக்குப் பல குணாம்சங்கள் உள்ளன. அவர்கள் பொய்சொல்வார்கள், அவர்கள் செர்பியர்கள், அவர்கள் போஸ்னியர்களை அழிப்பார்கள். அப்படி அழிப்பதன் மூலமாக—அதாவது துண்டுதுண்டாக வெட்டிக்கொல்லுதல், கொலை செய்தல், தீயிட்டுக் கொளுத்துதல், பெண்களைக் கற்பழித்தல், கொள்ளை யடித்தல் மூலமாக—போஸ்னியாவைவென்றுவிடலாமென சேத்னிக்குகள் நம்புகிறார்கள். அந்த சேத்னிக்குகள் செர்பி யர்களின் நலன்களை பாதுகாப்பவர்கள். செர்பியர்களின் நலன்களென்றால்—செர்பிய ஆண்கள், பெண்கள், பறவைகள், மீன்கள், தாவரங்கள், இன்னும் சொன்னால் செர்பியக்காக்கைகள் என்றும்கூட அர்த்தமாகும். **டாக்டர் ஸ்வெதிஸ்லாவ்ஸெக்** என்பவர் தனது, ''செர்பிய இயற்கை பற்றி' (on Serbain Nature, Zemum-1938) என்ற

www.padippakam.com



நூலில் தெரிவித்துள்ள கவலையைக் கவனியுங்கள்: ''கடந்த முப்பது ஆண்டுகளில் செர்பியக் காக்கைகள் பறப்பதற்கு மிகவும் சோம்பல் படுகின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த மாதிரிப் போக்கு நீடித்தால் இன்னும் நூறு ஆண்டுகளுக்குள் சொர்பியக் காக்கைகள் பறப்பதையே நிறுத்திவிடும்.'' அது காக்கை என்பது அல்ல பிரச்சனை, அது செர்பியக் காக்கை என்பதுதான் கவலைக்குரிய விசயம்.

**சரயேவோ :** போஸ்னியாவின் தலைநகர், மசூதிகள், திருச்சபைகள், தேவாலயங்கள் நிரம்பிய இடம். (பாடகர்களையும், நடிகர்களையும் பற்றி சொல்லத் தேவையில்லை). அந்த நகரம் மலைகளால் சூழப்பட்டது; அதன் வழியேதான் **மில்ஜாக்கா** ஆறு ஓடுகிறது. உயரமான வெள்ளை மதில்களால் சூழப்பட்டு இடையிடையே நீர் வீழ்ச்சிகளும், பாலங்களும் கொண்ட நகரம். பாலங்கள் ஒவ்வொன்றும் அரண்மனைகளின் நுழைவாயில்கள் போல அவ்வளவு அழகாயிருக்கும், சரயேவோ என்ற சொல் துருக்கிய வார்த்தையான 'சராஜ்' (SARAJ) என்பதிலிருந்து உண்டானது, சராஜ் என்றால் அரண்மனை என்று பொருள், சரயேவோ என்ற சொல் 1507இல் தான் முதன் முதலில் புழக்கத்துக்கு வந்தது.

16 7இல் **யூகேன் சாவோஜ்கி** சரயேவோவை சூறையாடித் தீயிட்டான். அடுத்து வந்த முன்னூறு ஆண்டுகளில் சரயேவோ ஐந்து முறை தீக்கிரையாக்கப்பட்டது. இப்போது **த்ரெபெவிச்** மலைகளுக்கு அப்பால் **டொம்ரிஞ்சா** வரை இந்த நகரம் விரிவடைந்துள்ளது. நானும் ஆதெம் கரிமானும் வசிக்கின்ற டொப்ரிஞ்சா வரைக்கும்

**போஸ்னியா :** ஒரு நல்ல நாடு.

**போஸ்னியா ஹெர்ஸ்கொவீனா :** அதே போலத்தான் ஹெர்ஸ்கொவீனாவில் உள்ள மலைகள் வெறுமையாய் இருக்கின்றன என்பது தவிர.

www.padippakam.com



**ட்ரீனா :** அழகிய குளிர்ந்த ஆறு, அதுதான் செர்பியாவிலிருந்து போஸ்னியாவைப் பிரிப்பதும், இணைப்பதும். சொர்க்கத்தின் உதாரணங்கள் என நான் நம்புகின்ற அழகிய தோட்டங்கள் அந்தஆற்றின் கரையெங்கும் உள்ளன. அதற்கு அப்புறம் உள்ள மலைகள் உயர்ந்து, கம்பிரமாகக் காட்சி தருகின்றன, மெல்லிய தென்றல் அவற்றிலிருந்து வீசும்.

**டொப்ரிஞ்சா முற்றுகையின்**
**பதினாறாவது நாள் :**

''ஹாஜிதஹிரோவிச் இன்னமும் வலியில் கதறுகிறானா?'' நான் கேட்டேன். எனக்குக் கவலையாக இருந்தது.

''கதறுகிறான்'' கரிமான் பதில்சொன்னார், ''இதைப் படி'' என்றார்.

1942 மார்ச் மாதத்தின் கடைசி வியாக்கிழமை அதிகாலையில் சேத்னிக்குகள் **'மிலிசி'**க்கு சில கிலோ மீட்டர் தொலைவில் உள்ள **விர்சிஞ்சே** கிராமத்தில் நுழைந்தார்கள். கண்ணுக்குத் தென்பட்ட மனிதர்களையெல்லாம் ஒரு இடத்துக்கு இழுத்து வந்தார்கள். அவர்களையெல்லாம் ஒரு மஸ்ஜீதுக்குள் தள்ளிப் பூட்டினார்கள். அதைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். அந்த காலையில், உயிரோடு நூற்று எண்பத்து மூன்று மனிதர்கள் **விர்சிஞ்சேவில்** இறந்தனர். தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர். அந்த நூற்று எண்பத்து மூன்று பேர்களில் அந்த ஊரின் முவல்லிம், **ஹீசைன் எஃபின்டி தலோவிச்** என்பவரும் அவருடைய குடும்பத்தினரும் அடக்கம்- அவரது மனைவி, அவரது நான்கு மகன்கள், ஒரு மகள்.

www.padippakam.com



''உங்களால் இதைத் தடுக்க முடியாவிட்டால்'' நான் கேட்டேன். ''இதில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை'' முன்பே நிகழ்ந்துவிட்ட குற்றங்களை ஆதெம் தடுக்கப் போகிறார் என்பதுதான் மொத்த திட்டமும்.

''மழை'' ஆதெம் அமைதியாகச் சொன்னார். ''பலத்த மழை தீயை அணைத்துவிடும்! அவர்கள் காப பாற்றப்படுவார்கள்!''

''ஆமாம்! ஆனால் அது உங்கள் புத்தகத்தில் மட்டும் தான் நடக்கும்''

''எல்லாம் ஒன்றுதான்'' ஆதெம் சொன்னார்.

திடீரென ஆதெம் என் கைகளைப் பிடித்து இழுந்துத் தரையில் வீழ்த்தினார். அவரும் பதுங்கிக் கொண்டார். வெளியில் துப்பாக்கி வெடிக்கும் சப்தங்களை நாங்கள் கேட்டோம். குண்டுவீச்சு மீண்டும் தொடங்கிவிட்டது லூகாவிஸா தளத்திலிருந்து டொப்ரிஞ்சாமீது குண்டு வீசப் படும் பதினாறாவது நாள் இது. நாங்க... கூடத்துக்குத் தவழ்ந்த போனோம். அதுதான் நாங்கள் பாதுகாப்பாக உணரும் பகுதி.

''குண்டுவீசத் தொடங்கிய புதிதில்...'' ஆதம் கிசு கிசுத்தார். ''சிட்டுக்குருவிகளின் சப்தத்தை நீகேட்டிருக் கவே முடியாது—கவனித்தாயா? அவை மொத்தமும் பாடு வதை நிறுத்திவிட்டன. ஒரு வாரம் போனதும் அவை திரும்பவும் பாடத் தொடங்கின. துப்பாக்கிகள் வெடிக் கும் சப்தங்களுக்கு இடையே நீ கேட்டிருக்கலாம். இப் போது அவை தொடர்ந்து பாடுவதை நீ கேட்கலாம். வேட்டுச் சப்தங்கள் கேட்டாலும் சரி, கேட்காவிட்டாலும் சரி.''

**குறிப்புகள் :**

**விர்சிஞ்சே :** சில குடிசைகள். சில வீடுகள், ஒரு பள்ளிக்கூடம் ஆகியவை கொண்ட ஒரு கிராமம். சுற்றி

www.padippakam.com



லும் அராபியாவில் உள்ளது போலவே மலைகள், ஆனால், இவை பசுமையாக இருக்கும். இன்னும் சரியாகச் சொன்னால் விர்சிஞ்சேவில் உள்ள மலைகள் குளிர் காலத்தில் வெண்மையாக இருக்கும். அராபியாவில் அப்படி இருக்காது. அராபியாவில் குளிர் காலத்தில் பனி பெய்வதே இல்லை.

மஸ்ஜீத் : கோபுரம் போன்ற அமைப்பும் வேறு சில அமைப்புகளும் இல்லாத மசூதி, எவையெவை இருக்காது என்பதை நான் இங்கு பட்டியலிடப் போவதில்லை. ஏனெனில் பிறகு அதை நான் விளக்கவேண்டியதிருக்கும். மசூதியில்தான் 183 பேர்களை சேத்னிக்குகள் எரித்துக் கொன்றது. அந்த 183 ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சேத்னிக்குகளால் தான் எரித்துக் கொல்லப்பட்டார்கள். கம்யூனிஸ்டுகளால் அல்ல என்ற போதிலும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக விர்சிஞ்சேவின் மக்கள் அந்த மசூதியை மீண்டும் கட்டிக் கொள்வதற்கு கம்யூனிஸ்டுகள் அனுமதிக்கவே யில்லை.

முவல்லிம் : மதகுரு

பார்டிசான்கள் : டிட்டோவின் வீரர்கள்

**குறிப்புகளைப் பற்றிய குறிப்புகள்**
**ஜோஸப் ஃப்ராஸ் டிட்டோ :**

1945இல் சேத்னிக்குகளையும் **உஸ்தஷாக்களையும்** தோற்கடித்த பார்டிசான்களின் தலைமைத் தளபதி அவர்தான். 1980இல் அவர் இறந்த பிற்பாடு அவரது நாடு பிளவுபட்டது. செர்பிய சேத்னிக்குகள் அவரது ராணுவத்தின் அத்தனை ஆயுதங்களையும் கொண்டுபோய் விட்டார்கள். இரண்டாவது உலக யுத்தத்தின் துவக்கத்தில் பாசிஸ்டுகளை எதிர்த்த போரின் போது பார்டிசான்-



படிப்பகம்

www.padippakam.com



களோடு சேரும்படி சேத்னிக்குகளை டிட்டோ இரண்டு முறை அழைத்தார். அவர்கள் சம்மதித்தார்கள், பொய்யாக.

ஒரு வசந்தகால காலை நேரத்தில், **க்ரெபோல்ஸ்கோ** மலையின் சரிவில் பார்டிசான்களின் குழு ஒன்றும், சில செர்பியர்களும் **முஸ்தபா தொவாட்ழியா** என்ற பெயருடைய ஒரு முசுலீமும் நின்று கொண்டிருந்தனர்.

''அன்புத் தோழரே, எங்களோடு வந்து சேர்ந்து கொள்.'' செர்பிய பார்டிசான்கள் வாஞ்சையோடு அழைத்தனர்.

முஸ்தபா எந்தவித சந்தேகமும் கொள்ளாமல் அவர்களோடு போனார். சற்று நேரத்திற்கெல்லாம் அந்த பார்டிசான்கள் சேத்னிக்குகளாக மாறிவிட்டார்கள். முஸ்தபாவை உயிரோடு கழுவிலேற்றினார்கள். அது நடந்தது 1942 மே மாதம் இரண்டாம் தேதியில்.

நோபல் பரிசு பெற்ற நமது எழுத்தாளர் **இவோ ஆன்ட்ரிக்** அதை இப்படித் தான் விவரித்தார் :

''இரண்டரை மீட்டர் நீளமுள்ள ஓக் மரக் கம்பம் ஒன்று தரையில் நடப்பட்டிருந்தது. அதன் முனையில் இரும்பாலான கூர் நுனி பொருத்தப்பட்டிருந்தது. அவர்கள் முஸ்தபாவை தரையில் படுக்கச் சொன்னபோது அவர் தலையை கவிழ்த்துக் கொண்டார். பிறகு சேத்னிக்குகள் அவரை அணுகி அவரது கோட்டையும், சட்டையையும் கழற்றினார்கள். எதுவும் பேசாமல் அவர் குப்புறப்படுத்துக் கொண்டார். அவர்கள் அவரது கால்களைக் கயிற்றால் பிணைத்தார்கள். அவரது கால்களை இரண்டு சேத்னிக்குகள் விரித்துப் பிடித்துக் கொண்டார்கள். அதே சமயத்தில் யோவான் என்கிற இன்னொரு சேத்னிக் அந்தக் கம்பத்தை இரண்டு மரத்துண்டுகளுக்கு எதிரே வைத்து அந்தக் கம்பத்தின் கூர்நுனி முஸ்த

www.padippakam.com



பாவின் கால்களுக்கிடையில் இருக்கும்படி அமைத்தான். 'பெல்ட்'டிலிருந்து சின்ன அகன்ற கத்தியொன்றை எடுத்தான். கிடத்தப்பட்டிருந்த முஸ்தபாவின் கால்சட்டையில் சூத்துப்பக்கமாக கிழித்து அந்தக் கம்பத்தின் முனை நுழையுமளவுக்கு ஓட்டை போட்டான். கட்டப்பட்டிருந்த அவரது உடல் அந்தக் கத்தியின் சின்னக் குத்து விழுந்ததும் உதறியது, எழுந்திருக்கும் விதமாக மேல் பகுதியை உயர்த்தியது. ஆனால் திரும்பவும் தரையில் விழுந்து மோதியது. அந்த குரூரமான வேலையின் ஒரு பகுதி முடிந்தது. யோவான் பின்பக்கமாக தாவி எழுந்தான். ஒரு மர சுத்தியலை எடுத்து அந்தக் கம்பத்தின் அடிப்பகுதியில் மெதுவாக ஒரே சீராக அடிக்க ஆரம்பித்தான். நிறுத்திவிட்டு, அந்தக் கழுமரம் கிழித்துக் கொண்டு உள்ளே நுழைந்து கொண்டிருக்கும் உடலைப் பார்த்தான், கயிறுகளை ஒரே சீராக மெதுவாக இழுக்கும்படிக் கூறும்விதமாக பக்கத்திலிருந்த இரண்டு சேத்னிக்குகளைப் பார்த்தான். செருகப்பட்டிருந்த அந்த மனிதனின் உடல் ஒவ்வொரு அடிவிழும்போதும் இறுகியது. அவரது முதுகெலும்பு வளைந்து குனிந்தது. ஆனால் இழுத்துப் பிடிக்கப் பட்டிருந்த கயிறுகள் இறுக்கி அவரை மீண்டும் நிமிர்த்தின. அந்த சபிக்கப்பட்ட மனிதர் எப்படி தனது தலையை தரையில் மோதிக் கொண்டார் என்பதை ஒருவர் கேட்டிருக்கலாம், அந்த வினோதமான சப்தத்தையும் கூட. அது ஒரு அலறலோ, அழுகையோ அல்லது மரணக்கூச்சலோ அல்ல; அது ஒரு மனிதசப்தமோ கூட அல்ல. கழுவேற்றப் பட்ட, சித்ரவதை செய்யப்பட்ட அந்த உடலிலிருந்து வந்த சப்தம் ஒரு 'கிறீச்' ஒலி, அல்லது ஒரு வெடிப்பு, யாரோ வேலி அடைக்க மரக்கட்டைகளில் முளைகளை வைத்து அடிக்கும்போது உண்டாவதைப் போல. ஒவ்வொரு முறை அடித்ததும் யோவான் இப்போது அந்தக் கழுவேற்றப்படும் உடலை அணுகிப் பார்த்தான் தடி சரியானபடி போகிறதா என ஆராய்ந்தான், முக்கியமான பாகங்கள் சேதம் ஆகாமல் இருக்கின்றனவா என

www.padippakam.com



உறுதி செய்து கொண்டான். மீண்டும் தனது பணியைத் தொடர்ந்தான், ஒரு கணம் அடிப்பது நிறுத்தப்பட்டது. வலது தோள் பட்டையின தசை இறுகிப் போயிருப்பதை யும், தோல் மேலே கிழித்துக் கொண்டு வருவதையும் யோவான் பார்த்து விட்டான். உடனே அந்த உடலை அணுகி உப்பிக் கொண்டுவந்த பகுதியைக் குறுக்காகக் கத்தியால் கிழித்தான். வெளிறிப்போன ரத்தம் முதலில் கசிந்தது, அப்புறம் பீச்சியடித்தது. மெதுவாக கவனமாக இரண்டு மூன்று முறை அடிக்கப்பட்டதும் அந்த கம்பத்தின் இரும்பு கிழிக்கப்பட்ட பகுதி வழியாக நீட்டிக் கொண்டு வந்தது. அந்த இரும்பு நுனி வலது புறக் காதுக்கு அருகில் வரும்வரை மேலும் சில முறை அடித்தான். வாட்டுவதற்காக கழியில் கோத்துத் தயாராக வைக்கப்பட்டிருக்கும் ஒரு ஆட்டுக்குட்டியைப் போல அந்த மனிதன் கழுவேற்றப்பட்டான். ஒரேயொரு வித்தியாசம். கழியின் நுனி அவன் வாய்வழியே வருவதற்குப் பதில் முதுகுப் பக்கமாக வந்து விட்டது. அவனது உள் உறுப்புகளை- இதயமோ, நுரையீரலோ எதுவுமே பாதிக் கப்படவில்லை. சுத்தியலைத் தூர எறிந்து விட்டு தரையில் கிடந்த அந்த மனிதனை நோக்கிச் சென்றான். யோவான், அந்த உடலை சோதித்துப் பார்த்தான், கம்பத்தின் நுனி வெளியே வந்திருந்த இடத்திலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. ஒரு குளம் போல ரத்தம் கீழே தேங்கி யிருந்தது. அந்த இரண்டு சேத்னிக்குகளும் விரைத்துப் போன அந்த உடலை மல்லாக்கப் புரட்டினார்கள். அந்த உடலின் கணுக்கால்களை அந்தக் கம்பத்தோடு வைத்துச் சேர்த்துக் கட்டினார்கள். அதே சமயம், அந்த மனிதன் உயிரோடிருக்கிறானா என யோவான் சோதித்துக் கொண்டிருந்தான். அவரது முகத்தைப் பார்த்தான். அது திடீரென்று வீங்கி உப்பிப்போயிருந்தது, கண்கள் விரிந்து துடித்துக் கொண்டிருந்தன. ஆனால் பார்வை அசை யாமல் நிலைகுத்தியிருந்தது, உதடுகள் வலிப்பு வந்தது போல இறுகியிருந்தன, கிட்டித்துப்போன பற்கள் உதடு

www.padippakam.com



களுக்குப் பின்னே பின்னிக் கொண்டிருந்தன. அவரால் முகத்தின் தசையில் சில பகுதிகளைக் கட்டுப் படுத்த முடியவில்லை. அவரது முகம் ஒரு முகமூடியைப் போல காட்சியளித்தது. வேகவேகமாக மூச்சுவிட்டதில் அவரது நுரையீரல்கள் அடித்துக் கொண்டன. சமைப்பதற்கு எடுத்துச் செல்லும் விலங்கைத் தூக்குவதுபோல அந்த இரண்டு சேத்னிக்குகளும் அவரை மெதுவாகத் தூக்கினார்கள். ஜாக்கிரதையாகத் தூக்கும்படியும், கவனமாக நிமிர்த்தும்படியும் யோவான் அவர்களை நோக்கிக் கத்தினான். அவனும் உதவி செய்தான். அந்தக் கம்பத்தின் அடிப்பகுதியை அவர்கள் தரையிலிருந்த குழிக்குள் நட்டார்கள். பின்புறமாக ஒரு கட்டையால் முட்டுக் கொடுத்து அதை அந்தக் கம்பத்தோடு சேர்த்து ஆணி அடித்தார்கள்.

அந்த மூன்று சேத்னிக்குகளும் அங்கிருந்து விலகிக் குழுவின் மற்றவர்களோடு சேர்ந்து கொண்டனர். அந்த வெற்றிடத்தில் **முஸ்தபா தோவாட்ழியா** அந்தக் கம்பத்தில் தனித்து இருந்தார், தரையிலிருந்து ஒரு மீட்டர் மேலே. மார்பு பிளந்து, இடுப்பு வரை நிர்வாணமாக. தொலைவிலிருந்து பார்க்கும்போது, அந்தக் கம்பம் அவரது உடலின் வழியே செருகப்பட்டிருப்பதையோ, அவரது கணுக்கால்கள் அத்துடன் பிணைக்கப் பட்டிருப்பதையோ அவரது கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருப்பதையோ யாரும் அனுமானிக்க முடியாது.

சித்ரவதைக்கு ஆளான அந்த மனிதரை சேத்னிக்குகள் நெருங்கிப் பார்த்தார்கள். கம்பத்தின் வழியே மெலிதாக ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவர் இன்னமும் உயிரோடிருந்தார், நடப்பது என்னவென்ற உணர்வோடு. அவரது உடலின் பக்கவாட்டுப் பகுதிகள் உயர்ந்து, தாழ்ந்து கொண்டிருந்தன. அவரது கழுத்து நரம்புகள் புடைத்துக் கொண்டிருந்தன; அவரது விழிகள் மெதுவே

படிப்பகம்

www.padippakam.com



சுழன்று கொண்டிருந்தன? ஆனால், அவரால் பார்க்க முடிந்தது. கிட்டித்துப் போன அவரது பற்களுக்கிடையி லிருந்து ஒருவகையான இழுப்பும், உறுமலும் வெளியில் சிதறிக் கொண்டிருந்தன. அதிலிருந்து ஒரு சில வார்த்தைகளை மட்டும்தான் ஒருவர் புரிந்து கொள்ள முடியும்: ''சேத்னிக்குகளே... சேத்னிக்குகளே'' அவர் விம்மினார். ''நீங்கள் நாய்களைப்போல சாகவேண்டும்... நாய்களைப் போல சாகவேண்டும்!''

அது 1992இன் ஜூலை பதினொன்றாம் தேதி டொப்ரிஞ்சா முற்றுகையின் பதினேழாவது நாள். வானத் தின் ஒரு பகுதியை, மலையின் ஒரு பாகத்தை, அடுத்த கட்டிடத்தின் ஒரு பகுதியை நாங்கள் பார்த்தோம். டொப்ரிஞ்சாவுக்கு பக்கத்தில் ரஸ்னிகா குடியிருப்பில் சேத்னிக்குகள் ஒரு மழலையர் பள்ளியைக் குண்டுவீசித் தாக்கினார்கள்; நான்கு குழந்தைகளைக் கொன்று பத்து குழந்தைகளைக் காயப்படுத்தினார்கள்.

**டொப்ரெஞ்சா முற்றுகையின்**
**பதினெட்டாம் நாள்**

ஆதெம் சொன்னார் : முதலில் அவர்கள் டாங்குக ளால், எந்திரத் துப்பாக்கிகளால், விமான எதிர்ப்பு பீரங்கி களால் குடியிருப்பைத் தாக்கினார்கள். அப்புறம் கட்டி டத்துக்குள் நுழைந்தார்கள். நீ உயிரோடு கிடைத்தால் உடனே மரணம். அவர்கள் உனது குரல் வளையை அறுப் பார்கள் உனது வீட்டைக் கொள்ளையடித்து விட்டு அதைத் தீயிட்டுக் கொளுத்துவார்கள். நீ மாட்டிக் கொள் ளாதே. நீ டொப்ரிஞ்சாவுக்குள் நழுவிவிடலாம் ஒருநண்ப ருடனோ தெரிந்தவர்களுடனோ தங்கலாம். ஆனால் சேத்னிக்குகள் உன்னைப் பின் தொடர்ந்து வருவார்கள். நீ நிலவறைக்குள் பதுங்கலாம்— தவறா? இப்போது

www.padippakam.com



அவர்கள் குண்டுவீசி அங்கேயே உன்னை இருத்தி விடு வார்கள். வெளிச்சம் கிடையாது, தண்ணீர் கிடையாது, உணவு கிடையாது. உன்னால் தாக்குப்பிடிக்க முடியாமல் போகும்போது நீ வெளியே வருவாய், கீரைகளைப்பறித்து சமையல் செய்யலாமென. நீ பதுங்கு குழியிலிருந்து சுடப் படுவாய், காயமுற்று, கொல்லப் படாமல்.

டொப்ரிஞ்சாவைக் காத்து நிற்பவர்கள், உன்னைப் பதுங்கு குழியிலிருந்து சுட்டவனைப் பிடிப்பார்கள். அப்புறம் என்ன நடக்கும்? சேத்னிக்குகள், பிடிபட்ட வனை ஒப்படைக்கச் சொல்லிக் கேட்பார்கள். டொப்ரிஞ் சாவும் சரயேவோவின் பிறபகுதிகளும் அவர்களால் முற்றுகையிடப்பட்டுள்ள நிலையில் ஒரு ஆம்புலன்ஸை ஆஸ்பத்திரிக்கு அனுமதிப்பதற்கு மாற்றாகப் பிடிபட்ட வனை விடுவிக்கச் சொல்வார்கள். ஆகவே, நீ அவனை —உன்னை சுட்டுக்காயப்படுத்திய அதே ஆளை—ஒப்படைப் பாய். அதே நாளில் நகரின் இன்னொரு பகுதியில், 'மொய்மிலோ' என்று வைத்துக் கொள்ளேன், அங்கே இன்னொரு சேத்னிக் ஒரு நர்சை சுட்டுக் கொல்வான். ஆக, கடைசியில் உன் புண்ணுக்கு மருந்து போட்டுக் கொள்வதற்காக ஆஸ்பத்திரிக்கு நீ போகும்போது அங்கே மருந்தும் இருக்காது, சாப்பாடும் இருக்காது. ஒரு நர்ஸ் தான் கிடப்பாள்—பிணமாக. ஆக இன்னொரு ஆஸ்பத் திரிக்கு நீ மாற்றப்படுவாய், கூட்டம் நெரியும். இன்னொரு ஆஸ்பத்திரிக்கு; வறுத்த பன்றிக் கறியைத் தின்றுவிட்டு பிராந்தி குடித்துவிட்டுத் தங்களது பாடல்களைப் பாடிய படி சுற்றிலுமுள்ள மலைகளிலிருந்து சேத்னிக்குகள் குண்டு வீசிக் கொண்டிருக்கும் இன்னொரு ஆஸ்பத்திரிக்கு அப்புறம், அந்த ஆம்புலன்ஸ் திரும்பிச் செல்லும்— தடை யைக் கடந்து செல்ல சேத்னிக்குகள் அனுமதித்த அந்த ஆம்புலன்ஸ்—சேத்னிக்குகள் அதன் டிரைவரைக் கொன்று விட்டு அதைத் திருடிச் செல்வார்கள். இதற்கிடையில் நீ பட்ட காயத்தினால் ஆஸ்பத்திரியில் செத்திருப்பாய்,

www.padippakam.com



உன்னை சுட்டானே அந்த காயத்தினால், ஆம்புலன்ஸ் வருவதற்காக உன்னால் திருப்பி ஒப்படைக்கப்பட்டானே அவன் சுட்டதனால் உண்டான காயத்தினால், இப்போது அவர்களால் திருடிச் செல்லப்பட்டதே அந்த ஆம்புலன்ஸ், ஆஸ்பத்திரியில் இருப்பவர்கள் உனக்காகப் பக்கத்துத் தோட்டத்தில் ஒருகுழி வெட்டுவார்கள். ஆனால் சேத்னிக்குகள் உன் சவப்பெட்டிமீது சுடுவார்கள். முசுலீம் மத குருவை சுடுவார்கள். உன்னை அடக்கம் செய்ய விரும்பிய துணிச்சல்மிக்க அந்த சில நல்லவர்கள் மீதும் சுடுவார்கள். இரவு கவியும்போது மலைகளிலிருந்து அவர்கள் உனது புதைகுழியின்மீது குண்டுவீசுவார்கள்.

''இந்த யுத்தத்தை என்னவென்று நீ சொல்வாய்?''

''ஹாஜிதஹிரோவிச்சின் காயங்கள் அவனை இன்னும் இம்சிக்கின்றன, அவனது வேதனை சகிக்க முடியவில்லை'' நான் சொன்னேன். ''ஆமாம்'' ஆதெம் மெதுவாகச் சொன்னார். ''எனக்குத் தெரியும். ஆனால் விர்சிஞ்சாவைச் சேர்ந்த அந்த முல்லாவும், அவரது நான்கு மகன்களும், மனைவியும், மகளும் இன்னும் நூற்று எழுபத்தாறு பேர்களின் உயிர்களும் எரிக்கப்பட்ட அந்த மசூதியிலிருந்து காப்பாற்றப்பட்டன.''

''ஆமாம்'' நான் சொன்னேன்.

''நேற்று ரோகடிஸாவுக்கு அருகில் ஆயிரம் வீடுகளை சேத்னிக்குகள் கொளுத்தினார்கள். ஏராளமான வீடுகள்!'' ஆதெம் கரிமான் சொன்னார். ''எனது உள்ளத்தில் ஒளி யூட்டக்கூடிய வார்த்தைகள் ஐந்தே ஐந்துதான் உள்ளன'' என்றேன் நான். ''போஸ்னியா ஹெர்ஸகொர்வீனாவின் பாதுகாப்பு ராணுவப்படை.''

**டொப்ரிஞ்சா முற்றுகையின்**
**பத்தொன்பதாம் நாள்**

'உங்கள்' புத்தகத்தின் ஆரம்பப் பகுதியைத்தான் நான் படித்தேன். ஆனால், ஏற்கெனவே பல விசயங்கள்

www.padippakam.com



பார்க்க முடியாதபடி ஆகிவிட்டன. விளக்கங்கள், விளக்கங்களுக்கு விளக்கங்கள் என நீங்கள் கொடுத்த போதிலும் பார்க்க முடியவில்லை.

''என்ன பார்க்க முடியவில்லை?'' ஆதெம் கேட்டார்.

''டொப்ரிஞ்சாவைப் பார்க்க முடியவில்லை வீடுகளை, மக்களை, சந்துகளை, நாய்களைப் பார்க்க முடியவில்லை. எதையெல்லாம் பார்க்க முடியவில்லையென்று கணக்குப்போடக்கூட என்னால் முடியவில்லை'' என்றேன்.

''இது ஒரு புத்தகம், சினிமா கிடையாது'' என்றார் ஆதெம். புன்னகைத்தபடியே சொன்னார் ''ஒரு புத்தகமென்றால் புத்தகம் தான்''

''ஆனால் வாசிப்பவர்கள் எரிக்கப்பட்ட மகுதியில் அந்த நூற்று எழுபத்தாறு உயிர்களைப் பார்க்கவில்லையே'' நான் வலியுறுத்தினேன்.

''என்னுடைய புத்தகத்தை நீ எழுத விரும்புகிறாயா?'' ஆதெம் கேட்டார்.

''இல்லை. ஆனால் எரியும் மகுதியிலிருந்து அந்த மக்கள் வெளியேறுவதை நீங்கள் பார்க்கக்கூட இல்லை. அவர்கள் எப்படி அந்த மகுதியிலிருந்து வெளியேறினார்கள் என்பதை நீங்கள் காட்ட முடியாதா?'

''அவர்கள் மெதுவாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றார் ஆதெம்.

''அப்படியா சங்கதி'' என்றேன், கடைசியில் திருப்தியுற்ற உணர்வோடு. சற்று யோசித்து சொன்னேன்: ''சரி, என்னைப் பொறுத்தவரை,நான் சாட்சி சொல்லமுடியும், விர்சிஞ்சேவின் அந்த முல்லாவையும், அவரது நான்கு மகன்களையும், மகளையும் உயிரோடு நல்லபடியாக பார்த்ததாக, அதை நான் பார்த்தேன்.''

www.padippakam.com



''நன்றி'' என்றார் ஆதெம்.

அது 1992 ஜூலை பதினேழாம் நாள், **விசே கார்டுக்கு** அருகில் **வுஸின்** என்ற இடத்தில் எண்பது ஆண்களையும் பெண்களையும் ஒரு நிலவறைக்குள் தள்ளி அடைத்து சேத்னிக்குகள் தீ வைத்தது அதே நாளில்தான். நான் அதை ஆதெம் கரிமானிடம் சொல்லவில்லை. அவனுக்கும் அது தெரியும் என்பது எனக்குத் தெரிந்திருந்த போதிலும்.

டொப்ரிஞ்சாவிலிருந்து நூற்றுஎண்பத்து மூன்று பேர்களை ஆதெமால் காப்பாற்ற முடியும்போது எண்பது பேர்களை ஏன் என்னால் காப்பாற்ற முடியாது என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் என்னால் முடியவில்லை. என்னால் அவர்களைக் காப்பாற்ற முடியாது. ஆனால் ஐரோப்பாவால் அவர்களைக் காப்பாற்ற முடியாதா—அல்லது மற்றபடி அது தயாராக இல்லையா, என்னால் அவர்களைக் காப்பாற்ற முடியாது. ஆனால் அமெரிக்காவாலும் முடியாதா—அல்லது அதற்கு விருப்பமில்லையா? என்னால் முடியாது. ஆனால் இந்த மொத்த உலகும் கூடவா அவர்களைக் காப்பாற்ற முடியாது, அல்லது அதற்கும் கூட விருப்பமில்லையா?

○

ஆங்கிலத்தில் : **செழாத் இப்ரிசிமோவிச்**

தமிழில் : **ரவிக்குமார்** 01-12-1993

**மொழி பெயர்ப்பாளரின் குறிப்புகள் :**

**போஸ்னியா ஹெர்ஸகொவீனா :**

முன்னாள் யூகோஸ்லேவியக் குடியரசின் ஆறு உறுப்பு நாடுகளில் ஒன்று. 51280 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், சுமார் 45 லட்சம் மக்கள் தொகையையும் கொண்டது. மொத்த மக்கள் தொகையில் 43%செர்பியர்கள், 35% முசுலீம்கள், 22% க்ரோஷியர்கள், நாட்டின்

www.padippakam.com



பாதிப் பகுதி காடுகளாலும், மற்றவை மேய்ச்சல் மற்றும் விவசாய நிலங்களாலும் ஆனவை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கே **இல்லிரியன்** என்ற ஆதிவாசி மக்கள் வாழ்ந்துள்ளதாகத் தெரிகிறது. போஸ்னியா என்ற பெயர் அவர்களால் வைக்கப்பட்டதென கூறப்படுகிறது.

நாட்டின் ஆட்சி மொழியாக இருக்கும் **செர்போ-க்ரோஷிய** மொழி, **லத்தீன், கிரில்லிக்** ஆகிய இருமொழிகளின் எழுத்துக்களால் எழுதப்படுகிறது.

'யூகோஸ்லேவியாவின் இதயம்' என்று அழைக்கப்பட்ட இந்த நாடு, ஆஸ்திரிய நாட்டின் தலைமைப் பிரபு **ஃப்ரான்ஸ் ஃபெர்டினன்ட்** என்பவரை **கேவ்ரிலோ ப்ரின்ஸிப்** என்ற போஸ்னிய மாணவர் சரயேவோவில் வைத்து 1914 இல் கொலை செய்ததால் முதல் உலகப்போர் மூள்வதற்குக் காரணமாகி உலக அரங்கில் பிரபலம் பெற்றது.

கி. பி. முதல் நூற்றாண்டுக்குப் பின் இந்த நாட்டின் ஆட்சி, பைசன்டீனியர்கள், க்ரோஷியர்கள், ஹங்கேரியர்கள், ரோமானியர்கள், செர்பியர்கள் என மாறி வந்துள்ளது. **ஓட்டோமான் பேரரசு** அமைக்கப்பட்ட பின் 1400 முதல் 1878 வரை துருக்கியர்களால் ஆளப்பட்டு 1918 இல் யூகோஸ்லேவியாவின் பகுதியாக மாற்றப்பட்டது.

2. இந்தப் பிரதி அச்சாகும் நேரம் போஸ்னியாவை மூன்றாகப் பங்கிட்டு 'அமைதித் தீர்வு' ஏதும் எட்டப்பட்டிருக்கலாம். கடந்த இருபது மாதங்களாக நடந்து வந்த சண்டையில் என்ன நடந்தது... என்ன நடக்கவில்லை...என்பதை இதுபோன்ற பதிவுகள் சொல்லிக்கொண்டேயிருக்கும். கதை, கட்டுரை, வரலாறு, செய்தி அறிக்கை இவற்றுக்கு இடையிலான எல்லைகளை அழித்து அழிவின் வெப்பத்தைக் கடத்தி வந்து நமக்குள்

www.padippakam.com



பரவவிட்ட இந்தப் பிரதியை எழுதியவர் ஒரு போஸ்னிய எழுத்தாளர், வேறு விவரம் தெரியவில்லை.

நன்றி :

ஆங்கிலத்தில் வெளியிட்ட—GRANTA 42,
WINTER 1992, LONDON

அமெரிக்காவிலிருந்து அனுப்பிய—கோ. ராஜாராம்

படிக்கக் கொடுத்த—ராஜன் குறை.

—நிறப்பிரிகை-இலக்கிய இணைப்பு-1
(ஜனவரி 94

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்